# MACMILLAN'S EASY SELECTIONS FROM TAMIL POETRY.

## பாலநீதிச் செய்யுள் திரட்டு.

ஔவையார், அதிவீரராம பாண்டியன முதலிய முற்கால வித்வசிரோமணிகள் எழுதிவைத்த அருமையான நீதிநூல்கள் சிறுவர்கள் மனத்திலும் பதியக் கூடியவாறு தெளிவான எளிய நடையில் மனப்பாடம் பண்ணுவதற்கு அனுகூலமான செய்யுள் வடிவில் அமைந்திருக்கின்றன. ஆதரிப்பாரில்லாமல் அந்நூல்கள் இப்பொழுது பாடசாலைகளில் அதிகமாகப் போதிக்கப்படவில்லை. தங்களைக் கல்விமான்கள் என்று மதித்திருக்கும் பல தமிழ்மக்கள் கூடத் தங்கள் முன்னோர்களுக்கு அரிச்சுவடிப் பாடமான இவ்வரிய நூல்களைக் கண்ணாலும் கண்டறியாதவர்களா யிருக்கிறார்கள். இது தமிழ் நாட்டிற்கும், தமிழ் மொழிக்கும் மிகவும் மானக் கேடான விஷயமன்றோ? இக் குறைபாட்டை நிவர்த்திக்கக் கருதி அவ்வரிய நீதிநூல்களைச் சிறுவர்களும் பிறரும் படிப்படியாய்க் கற்று அறிந்துகொள்வதற் கேற்றவாறு பல பகுதிகளாகப் பிரித்து பதவுரையுடன், நல்ல கடிதத்தில் தெளிவான எழுத்துகளால் அழகாக அச்சிடலாயிற்று. அந் நீதிநூல்களின் பகுப்பும் அடக்கமும் வருமாறு :—

முதற்படி (ஜூனியர்-Junior) — அ. பை.

பகுதி 1. உலகநீதி, ஆத்திசூடி — 1 6
(2-வது வகுப்புக்கு ஏற்றது.)

,, 2. கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை ... — 2 0
(3-வது வகுப்புக்கு ஏற்றது.)

,, 3. வாக்குண்டாம், நல்வழி ... ... — 2 0
(4-வது வகுப்புக்கு ஏற்றது.)

இடைப்படி (இண்டர்மீடியேட்-Intermediate)

பகுதி 1. நீதிவெண்பா — 2 [illegible]
(5-வது வகுப்புக்கு ஏற்றது.)

2. நன்னெறி, இனிது 40, இன்னா 40. — [illegible] 2 [illegible]
(6-வது வகுப்புக்கும் 1-ம் பாரத்துக்கும் ஏற்றது.)

உயர்படி (ஸீனியர்-Senior)

SELECTIONS FROM

# TAMIL LITERATURE

S. Varagunapandian

# தமிழ் இலக்கியத் திரட்டு

PART I—பகுதி 1


COMPILED BY

**Diwan Bahadur S. BAVANANDAM PILLAI,**

F. R. G. S. (Lond.) & M. R. A. S. (Lond.)

திவான் பகதூர் ச. பவானந்தம் பிள்ளை அவர்கள்

எப். ஆர். ஜீ. எஸ். (லண்டன்.) எம். ஆர். ஏ. எஸ். (லண்டன்.)

தொகுத்தது



MACMILLAN & CO., LIMITED

CALCUTTA AND LONDON

கேடில் விழுச்செல்வம் கல்வி: ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

திருக்குறள்

THE wealth everlasting, the wealth to be coveted, i
wealth of learning: all other kinds of wealth do
yield to a man true prosperity.

*Tirukkural.*

# முகவுரை.

அறிவிற் சிறந்த புலவர்கள், மனத்தைக் கவரத்தக்க வகையில் சொற்களைப் பொருள்பெறப் பொருத்திச் செய்த நூல்கள் இலக்கியம் என வழங்கப்படும்.* மனத்தைக் கவரும் பொருளுடையன வேறு பலவும் இருக்க, நூல்களை மட்டும் இலக்கியம் என வழங்கி வரும் வழக்கு நம் முன்னோர்கள் நூல்கள்மீது வைத்திருந்த சிறந்த பற்றையும் உயர்ந்த மதிப்பையும் காட்டுகிறது. நூல்களை அவர்கள் அலக்ஷியமாய்க் கருதியவர்கள் அல்லர். அம்மட்டு மன்று. நூல்கள் தவிரப் பிறவெல்லாம் தங்களுக்கு லக்ஷியமல்ல என்னும் கருத்தால் இலக்கியம் என்னும் தமிழ்ச் சொல்லை நூல்களுக்கே உரிமை யாக்கி, லக்ஷியம் என்னும் வடசொல்லைப் பலவற்றுக்கும் பொதுவாக வைத்துக்கொண்டார்கள்.

நாம் இவ்வுலகில் உடலோடு கூடி உயிர் வாழ்வதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது உணவு. எல்லா உயிர்களுக்கும் இயற்கையாய் உண்டாகும் பசிப் பிணியை ஒழிக்க வல்லது உணவு ஒன்றுதான். ஒருவன் பொருளாக மதித்திருக்கும் மானம் குலம் கல்வி வண்மை முதலியன வெல்

---

இலக்கியம் என்பது மனத்துக்கு இலக்காவது. இலக்கு என்பது குறி. எனவே, நம் மனத்தாற் கவரப்படுவது, அதாவது குறிக்கொள்ளப்படுவது, எதுவோ, அது இலக்கியம் எனப்படும். இதனை வடமொழியில் லக்ஷியம் என்பர். இதற்கு எதிர்மறை அலக்ஷியம். இவ்விரண்டு வடசொற்களும் சாதாரணமாய்த் தமிழ் வழக்கிற் பயிலக் காண்கிறோம். 'இது ஒரு லக்ஷியமா?' 'அலக்ஷியமாய்ச் சொன்னான்' என்பன சர்வ சாதாரணமான வழக்கு. [இ]வற்றையே தூய தமிழிற் சொன்னால், 'இது ஒரு பொருட்டா' [பொ]ருட்படுத்தாது சொன்னான்' என வரும். இங்கே லக்ஷியம் [என்]பது பொருட்டு எனப் பொருள்படுகிறது. பொருட்டு என் ...ருளை உடையது' எனப் பொருள்படும். பொருள் உடை ... என்று எதை நாம் கருதுகிறோமோ அதுவே நம் மனத்தாற் ...ப்படுவது இயல்பு. ஆதலால், மனத்தைக் கவரும் பொருளு...யது எதுவோ அதை இலக்கியம் என்று கொள்ளலாம்.

லாம் பசிவந்திடப் பறந்துபோம். ஆதலால், அப் பசி நோயைத் தீர்க்கும் உணவு மற்றவை அனைத்தினும் சிறந்த தாகக் கருதப்படல் வேண்டும். ஆயினும், ஒப்புயர்வற்ற நம் தமிழ்வேதமாகிய திருக்குறளிலே, நூல்களை உணவி னும் மேலாகக் கொண்டு, உண்ணுங்காலங்கள் ஒழிய மற்றக் காலங்களில் நூல்களைப் படிக்கவேண்டும் அல்லது கேட்க வேண்டும் என்னுமல், படிக்க அல்லது கேட்க நூல்கள் கிடைக்காத காலத்தில் சிறிது உண்ணவேண்டும் என்னும் பொருள்பட ஆசிரியர் திருவள்ளுவ நாயனுர்,

> 'செவிக்குண வில்லாத போழ்து, சிறிது
> வயிற்றுக்கும் ஈயப் படும்'

என்று கூறியிருக்கிருர். இதனுலும் நம் முன்னோர்கள் நூல் கள் மீது வைத்திருந்த மதிப்பு இப்படிப்பட்டது என்பது புலப்படும்.

மேற் கூறிய குறளில் நூல்களை உணவாகக் கொண்டு நூல் கேட்டலைச் செவிக்கு உணவிடுவதாகக் கூறியிருக்கி ருர் ஆசிரியர். உணவு ஆவது, நல்ல பதார்த்தங்களைக் கொண்டு அல்லன நீக்கிச் சுவைபெற ஒருவரால் ஆக்கப்படு வது. நூல்களும் அவ்வாறே நல்ல பதார்த்தங்களை, (அதா வது பதங்களையும் அர்த்தங்களையும்) கொண்டு அல்லன நீக் கிச் செவிக்கு இன்பம் பயக்கப் புலவர்களால் ஆக்கப்படுதல் ஒப்புமை நோக்கிச் செவியுணவு எனப்பட்டன. உணவு உடலை வளர்ப்பதுபோல நூல்கள் அறிவை வளர்க்கும்.

ஆக்கப்பட்ட உணவைக்கொண்டு அது ஆனவகையை யும் அதனை ஆக்கியவருடைய தன்மை முதலியவைகளையும் அறிதல் கூடும். அவ்வாறே ஒரு நூலைக்கொண்டு அது ஆன வகையையும் அதனை இயற்றியவர் தன்மை முதலிய வைகளையும் அறிதல் கூடும். அங்ஙனம் அறிதலே இலக் கிய ஆராய்ச்சி எனப்படும். இலக்கிய ஆராய்ச்சி இன்பமும் பயனும் ஒருங்கே அளிக்க வல்லது. ஆதலால், தமிழ் மாண வர்கள் அவ் வாராய்ச்சியை நோக்கமாகக் கொண்டு நம் தமிழ் இலக்கிய வகைகளிற் பழகுவது நலம். அந் நலத் தைக் கோரியே இந் நூல் அமைக்கப்பட்டிருக்கிறது.

# பொருளடக்கம்

# CONTENTS

## வசனபாகம்—POETICAL SELECTIONS.


1. தமிழ்—மாயூரம்-வேதநாயகம்பிள்ளை. பக்கம்-PAGES.
Tamil—Vedanáyagam Pillai of Máyavaram ... 1

2. இராஜபக்தி—ராவ்பஹதூர்-பூண்டி. அரங்கநாதமுதலியார்.
Loyalty—Professor Rao Bahadur P. Ranganátha Mudaliar, M. A. ... ... ... 3

3. அறிவு வளர்ச்சி—ராவ்பஹதூர் - பொ. சுந்தரம் பிள்ளை, எம். ஏ.
Advancement of Knowledge—Professor Rao Bahadur Sundram Pillai, M.A. ... ... 7

4. வீதிவிடங்கன்—சிதம்பரம்-இராமலிங்க சுவாமிகள்.
Veethividangan—Ramalinga Swamigal ... 8

5. கல்வி—(சுருக்கம்)-தி. செல்வக்கேசவராய முதலியார், எம். ஏ.
Learning (abridged)–Professor T. Chelvakesavaroya Mudaliar, M.A. ... ... ... 10

6. சீதாகலியாணம்—திவான்பஹதூர் - ச. பவானந்தம் பிள்ளை.
Sitá's Wedding—Diwan Bahadur S. Bavánandam Pillai ... ... ... ... ... 16

பக்கம்-PAGES.

7. மெய்ப்பொருணாயனார்—நல்லூர்-ஆறுமுகநாவலர்.
Maipporul Náyanár—Arumuga Navalar ... 25

8. சகுந்தலை—திவான்பஹதூர்-ச. பவானந்தம்பிள்ளை.
Sakuntalá—Diwan Bahadur S. Bavánandam Pillai ... ... ... ... ... 28

9. யானையை வென்ற முயல்—(பஞ்சதந்திரம்) - வித்வான், தாண்டவராய முதலியார்.
The Hare that outwitted the Elephant (Panchathanthram) — Vithvan Thandavaroya Mudaliar ... ... ... ... ... 53

10. இராமர் கொலுவிருக்கை.
Rama's Durbar .. ... ... ... 55

11. தெய்வ நம்பிக்கை—ஜனவிநோதினி.
Faith in God—Janavinodhini ... ... ... 59

12. காலம்—ஜனவிநோதினி.
Time—Janavinodhini ... ... ... ... 63

13. அடக்கமும் உழைப்பும்—ஜனவிநோதினி.
Humility and Exertion—Janavinodhini ... 64

14. அரிச்சந்திரன் — திவான்பஹதூர் - ச. பவானந்தம் பிள்ளை.
Harischandra—Diwan Bahadur S. Bavánandam Pillai ... ... ... ... ... 66

15. பச்சையப்ப முதலியார் சரித்திரம் — திவான்பஹதூர்-வி. கிருஷ்ணமாசாரியார்.
Biographical sketch of Pachayappa Mudaliar—Diwan Bahadur V. Krishnamachariar. ... 69

பக்கம்-PAGES.

16. மனோன்மணீயம்-ராவ்பஹதூர்-பொ. சுந்தரம்பிள்ளை, எம். ஏ.
Manonmanyam—Professor Rao Bahadur P. Sundram Pillai M.A. ... ... ... ... 85

## செய்யுள் பாகம்—POETICAL SELECTIONS.

1. தமிழ்—(மனோன்மணீயம்)
Tamil (Manonmanyam) ... ... ... 100

2. நளவெண்பா—புகழேந்திப்புலவர்.
Nalavenba—Pugalendi Pulavar. ... ... 102

3. இராமாயணக் கருப்பொருள்—ஒட்டக்கூத்தர்.
Ramáyana Karupporul—Ottakuthar ... ... 107

4. பாரதம்—வில்லிபுத்தூராழ்வார்.
Bhárathan—Villiputhoorálwar ... ... 111

5. குசேலோபாக்கியானம்—வல்லூர்-தேவராஜபிள்ளை.
Kuchelopakyanam—Devaraja Pillai ... ... 116

6. நீதிச் செய்யுள்கள்—(திரட்டு)
Moral Pœms (Selections) ... ... ... 122

7. கபிலர் அகவல்.
Kapilar's Agaval ... ... ... ... 125

8. புலவர் வறுமை—(திரட்டு)
Pœts' Poverty (Selections) ... ... ... 126

9. இந்திய மாதா—(பிரதாப சந்திரவிலாஸம்) - பி. வி. ராமசாமி ராஜு. (எப். ஆர். எச். எஸ்.) (எம். ஆர். ஏ. எஸ்.) லண்டன்.
Mother India (Prathapachandravilasam)—P. V. Ramasami Raju, B.A. (F.R.H.S. & M.R.A.S.) London ... ... ... ... ... 127

பக்கம்-PAGES.

10. அருஞ்செய்யுள் திரட்டு.
Select Poems ... ... ... ... ... 130

11. தோத்திரமாலை.
Songs of Praise (Selections) ... ... ... 138

12. சதகச் செய்யுள் திரட்டு.
Selected Poems from Sathagams ... ... 147

செய்யுள் முதற்குறிப் பகராதி ... ... ... 150

அனுபந்தம் ... ... ... ... ... (153—184)

1. வசனபாகத்தில் வரும் செய்யுட்களின் அரும்ப உரை ... ... ... ... ... ... 153

2. செய்யுள்பாகத்தின் அரும்பத விளக்க உரை ... 157

3. வசனபாகத்தின் அரும்பதவிளக்க அகராதி ... 178

4. ரகர றகர பேதங்கள் ... ... ... ... 179

# தமிழ்

# இலக்கியத் திரட்டு

## வசன பாகம்

### 1. தமிழ்

ஆரியத்தின் மடியிலே வளர்ந்து, ஆந்திரம் முதலிய பாஷைகளின் தோழமைபெற்று; * சங்கப் புலவர்களுடைய நாவிலே சஞ்சரித்து, வித்துவான்களுடைய வாக்கிலே விளையாடி, திராவிடதேசம் முழுவதும் ஏகசக்ராதிபத்தியஞ் செலுத்திவந்த தமிழ் அரசியை இப்போது இகழலாமா? நம்மைப்பெற்றதும் தமிழ். நம்மைத் தாலாட்டித் தூங்கவைத்ததும் தமிழ். நம்முடைய மழலைச்சொல்லால் நமது தாய்தந்தையரைச் சந்தோஷிப்பித்ததும் தமிழ். நாம் குழந்தைப் பருவத்திற் பேச ஆரம்பித்தபோது முந்தி உச்சரித்ததும் தமிழ். நம்முடைய அன்னையும் தந்தையும் நமக்குப் பாலோடு புகட்டினதும் தமிழ். தாய், தந்தை, குரு முதலானவர்கள் நமக்கு ஆதியில் உபதேசித்ததும் தமிழ். ஆதிகாலம் முதல் நம்முடைய முன்னோர்கள் எல்லோரும் பேசின பாஷையும் எழுதிவைத்த பாஷையும் தமிழ். இப்போது நம்முடைய மாதாபிதாக்களும் பந்துஜனங்களும் இஷ்டமித்திரர்களும் இதரர்களும் பேசுகிற பாஷையும் தமிழ். நம்முடைய வீட்டுப் பாஷையும் தமிழ்; நாட்டுப் பாஷையும் தமிழ். இப்படிப்பட்ட அருமையான பாஷையை விட்டுவிட்டுச் சமஸ்கிருதம் லத்தீன் முதலிய அந்நிய பாஷைகளைப் படிக்கிற

---

* 'ஆரியபாஷை, திராவிடபாஷை இரண்டும் வெவ்வேறான தனிப் பாஷைகள்; தமிழும் அதனடியாகப்பிறந்த ஆந்திரம் கன்னடம் முதலியவும் திராவிட பாஷைகள்' என்பது தற்கால பாஷா நூற் புலவர்கள் ஆய்ந்தறிந்து கூறிய உண்மை.

வர்கள், சுற்றத்தார்களை விட்டு விட்டு அந்நியர்களிடத்தில் நேசஞ் செய்கிறவர்களுக்குச் சமானமா யிருக்கிறார்கள். ஆபத்துக்காலத்தில்சுற்றத்தார் உதவுவார்களேயல்லாது அந்நியர்கள் எப்படி உதவமாட்டார்களோ, அப்படியே எந்தக் காலத்திலும் நமக்குச் சுயபாஷை உதவுமேயல்லாமல் அந்நிய பாஷைகள் உதவுமா? ஆனால், சமஸ்கிருதமும் லத்தீனும் அதிக சிறப்பும் அழகும் அலங்காரமும் பொருந்திய பாஷைகள் என்பதற்குச் சந்தேகமில்லை. அவகாசமுள்ளவர்கள் சொந்தபாஷைகளோடுகூட அந்தப் பாஷைகளையும் படிப்பது அதிக விசேஷந்தான். ஆனாலும் சொந்தபாஷைகளை நன்றாகப் படிக்காமல் அந்த அந்நியபாஷைகளிலே காலமெல்லாம் போக்குவது அகாரியமென்றுதான் நாம் ஆக்ஷேபிக்கிறோம்.

இங்கிலீஷ் பிரெஞ்சு முதலிய ராஜபாஷைகளைப் படிக்க வேண்டாமென்றும் நாம் விலக்கவில்லை. ஏனென்றால் நாம் நடக்கவேண்டிய சட்டங்களும் ஒழுங்குகளும் நியாயப்பிரமாணங்களும் ராஜபாஷைகளிலே இருக்கிறபடியால் அந்தப் பாஷைகள் நமக்குத் தெரியாவிட்டால் அந்த ராஜாங்கத்தில் நாம் எப்படி நிர்வகிக்கக்கூடும்? அன்றியும் சன்மார்க்கங்களைப்பற்றியும் உலகத்துக்கு மிகவும் உபயோகமான பல விஷயங்களைப்பற்றியும் அந்த ராஜபாஷைகளில் அநேக அருமையான கிரந்தங்கள் இருக்கிறபடியால் அவைகளைப் படிக்கப்படிக்க அறிவு விசாலிக்குமென்பது திண்ணமே. ஆனால் மாதா வயிறெரிய மகேசுவரபூஜை செய்வதுபோல் சொந்த பாஷைகளைச் சுத்தமாக விட்டுவிட்டு ராஜபாஷைகளைமட்டும் படிப்பது அநுசிதமல்லவா? அநேகர் தங்கள் சுயபாஷைகளில் தங்களுடைய கையெழுத்துகளைக்கூடப் பிழையில்லாமல் எழுத அசக்தர்களா யிருக்கிறார்கள். சிலர் தமிழ்ப்பாஷை தெரியாமலிருப்பது தங்களுக்குக் கௌரவமாகவும் அந்தப் பாஷையை அறிந்திருப்பது தங்களுக்கு அகௌரவமாகவும் எண்ணுகிறார்கள். சுயபாஷா ஞானம் தங்களுக்கு எவ்வளவு குறைவா யிருக்கிறதோ, அவ்வளவுக்கு ராஜபாஷைகளில் தங்களைச் சமர்த்தர்களென்று சகலரும் எண்ணுவார்களென்று நினைத்துச் சுயபாஷைகளை முழுதும் அலக்ஷியஞ்செய்கிறார்கள். அவர்களுக்குத் தமிழ்ப் புத்தகங்க

ளைக் கையிலே தொடுகிறதாயிருந்தால் பாம்பின் புற்றுக் குள்ளே கையை விடுவதுபோலிருக்கும். அவர்களுக்குத் தமிழ்ப்பாஷை பேசுகிறது வேப்பிலைக் கஷாயம் குடிப்பது போலிருக்கும். தமிழ் வார்த்தைகளைக் கேட்பதும் அவர்களுக்குக் கர்ண கடோரமாயிருக்கும். அவர்கள் தமிழ்ப் பாஷையைப் பேசினாலும் முக்காற்பங்கு இங்கிலீஷும் காற் பங்கு தமிழுமாகக் கலந்து பேசுவார்கள். அவர்களுக்குத் தேசாபிமானமும் இல்லை; பாஷாபிமானமும் இல்லை. யானை முதல் எறும்புகடையாக உள்ள சகல ஜீவ ஜந்துக்களுக்கும் தனித்தனியே ஒவ்வொரு பாஷை சொந்தமாயிருக்கின்றது. அந்தந்த ஜந்துக்களுக்குரிய பாஷைகளை அவைகள் ஒரு காலத்திலும் மறவாமல் எப்போதும் உபயோகித்துக்கொண்டுவருகின்றன. இங்கிலீஷ்காரர்முதலிய ஐரோப்பியர்கள் தங்கள் தங்களுடைய சொந்த பாஷைகளை எவ்வளவோ கௌரவமாகப் போற்றிவருகிறார்கள் என்பதை இந்த வித்தியார்த்திகளே அறிவார்கள். இவர்கள்மட்டும் தங்கள் ஜன்ம பாஷையாகிய தமிழையுந் தமிழ் வித்துவான்களையும் அவமதிக்கலாமா? தமிழ் நூற்களையே பாராத இவர்கள் அவைகளுக்கு எப்படிப் பழுது சொல்லக்கூடும்? திருவள்ளுவருடைய குறளை அவர்கள் ஜன்மாந்தரத்திலும் பார்த்திருப்பார்களா? கம்பனுடைய கற்பனையைக் கனவிலுங் கேட்டிருப்பார்களா? நாலடியார் செய்தவர்களுடைய காலடியையாவது கண்டிருப்பார்களா? ஔவையாருடைய நீதிநூலைச் செவ்வையாக அறிவார்களா? அதிவீரராம பாண்டியனை அணுவளவும் அறிவார்களா? இன்னும் எண்ணிக்கையில்லாத தமிழ்ப்புலவர்களுடைய பிரபந்தங்களை இவர்கள் எக்காலத்திலும் பார்த்திரார்கள்.

## 2. இராஜ பக்தி

நீங்கள் துரைத்தனத்தாரோடு சம்பந்தப்பட்டிருக்கிற விஷயத்தில் நான் உங்களுக்குப் புதிதாகச் சொல்லுவதற் கொன்றுமில்லை; நான் அதைப்பற்றிச் சொல்ல வருவதெல்லாம் சாமானியமாக விருந்தாலும், அத்தனை முக்கியமானதைப்பற்றிநான் ஒன்றுஞ்சொல்லாதுவிட்டுவிடுவதுகூடாது,

பிரிட்டிஷ் துரைத்தனத்தார் நமக்களித்திருக்கின்ற நன்மை கள் இன்ன இன்னவென்பது எல்லார்க்கும் நன்ருய்த் தெரிந்திருக்கின்றதனுல், நான் மிகவும் சுருக்கமாய்ச் சொன்னுல் அவ்வளவேபோதுமானது. இந்த ராஜாங்கத்தில் உங்களுக்கும், உங்கள் பொருளுக்கும் அபாயமில்லை; உங்கள் முன்னோர்கள்காலத்தில் இப்படி இருந்ததில்லை; பிரிட்டிஷ் நாட்டில் வழங்கிவருகின்ற விலையில்லா மாணிக்கங்களாகிய இலக்கிய இலக்கணங்களையும், மேல்நாட்டுச் சாஸ்திரங்களையும் வெகுமதிகளாகப் பெற்றிருக்கிறீர்கள்; சுபாவசக்திகளைக் கொண்டு மனிதன் தன் சாமர்த்தியத்தினுலும் விடாமுயற்சியினுலும்தனக்குவேண்டியவற்றையெல்லாம்எளிதிற்செய்துகொள்ளும்படியாகக் கண்டுபிடித்திருக்கின்றகணக்கற்றவழிகளையெல்லாம் நீங்கள் எளிதில் அறிந்துகொள்ளலாம்; இவ்வாருன பெரும்பாக்கியங்களை நீங்கள் பெற்றிருப்பதுமல்லாமல், நீங்கள் நினைத்தபடி உங்கள் கருத்தை வெளியிடவும், வர்த்தமான பத்திரிகைகள் மூலமாக எழுதிப் பிரசுரஞ்செய்யவும் உங்களுக்குத் தாராளமாய் இடங் கொடுக்கப்பட்டிருக்கின்றது; உங்களை ஆளுகின்றவர்கள் இவ்வாருன சுவாதீனங்களைத் தாங்கள் பெறுதற்பொருட்டுப் பல நூற்ருண்டுகளளவும் எவ்வளவோ வருந்திப் போராட வேண்டியதாயிற்று. உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற இந்தநன்றிக்காக நீங்கள் நன்றியறிதலுடையவர்களாயிருக்கவேண்டும். நான் சொல்லுவதை நன்ருய் நிதானித்துப்பாருங்கள்; என்னுடைய அபிப்பிராயத்தின்படி, நீங்கள் இதை மறந்து அளவு கடந்து ஏதாவதொன்றைச்சொன்னுலும் அல்லது செய்தாலும், அது, உங்களுக்கு அந்தரங்கமான ராஜபக்தி இல்லையென்பதைக்காட்டுமென்றறியுங்கள். உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறவைகளைக்கொண்டு பூரணமான திருப்தியுண்டாகாமலிருக்கவுங்கூடும். ஆயினும், நாம் இதற்குமுன் இருந்த இருப்பையும், நம்மை முன்னுக்குக் கொண்டுவரும்படி கருணையேவடிவமாகக்கொண்டநமதுதுரைத்தனத்தார் பட்ட பிரயாசத்தையும் நினைத்துப் பார்ப்பீர்களாஞல், நமக்குக் கிடைத்திருக்கிற இத்தனை நன்மைக்கும் காரணம் அவர்களென்று உங்களுக்குப் புலப்படும். இன்னும் உங்களுக்கு என்ன என்ன வேண்டுமோ அவற்றையெல்லாஞ்

கேட்கலாம்; ஆனால் அப்படிக்கேட்கும்போது உங்களிடத்தி லுள்ள ராஜபக்திக்குக் குறைவு வராமலும், நெடுங்காலமாக வழங்கிவருகிற விதியைக் கடந்து நடவாமலும் சௌசன் னியமாகக் கேட்கவேண்டும். நீங்கள் இன்னும் அதிகமான வற்றைக் கேட்பதற்கு முன்பே, அப்படிக்கேட்கப்போகின் றவைகள் அவசியம் வேண்டுமா? அவையில்லாவிட்டால் சரிப்படாதா? என்று நீங்களே பார்த்துக்கொள்ளவேண்டும். நமக்கு இத்தனை நன்மைகளைச் செய்தவர்கள், இன்னம் என்னென்ன செய்தால் நன்றாகுமோ அவற்றையெல்லாம் செய்ய உடன்பட்டிருக்கிறார்கள். நன்றாய்க்கற்று வல்லவர்க ளாகிய நீங்கள் உங்கள் நாட்டாருக்கு இவையெல்லாம் நன் றாய்ப் படும்படி சொல்லவேண்டும். துரைத்தனத்தார்க்கும் குடிகளுக்கும் இடையே நின்று இருவருக்கும் ஒற்றுமையை உண்டாக்குவது உங்களுடைய கடன். அப்படிச் செய்யும் போது, துரைத்தனத்தார் குடிகளின் நன்மையை நாடிச் செய்வனவனைத்தையும் குடிகளிடத்திலும், அவ்வாறே குடி களுக்கு என்ன என்ன செய்யப்படவேண்டுமோ அவற்றை யெல்லாம் துரைத்தனத்தாரிடத்திலும் நீங்கள் அணுவளவும் பிறழாது உள்ளதை உள்ளபடி சொல்லவேண்டும்.

நமது இந்துதேசத்தைப்போன்ற தேசங்களை ஆளுவ தில் எவ்வளவோ வருத்தமும் சங்கடமும் உண்டு. ஆதலி னால், நீங்கள் மனமறிந்து தப்புந்தவறுமாகச்சொல்லி, அதில் இன்னும் அதிக வருத்தமுண்டாகும்படி செய்யாதொழிக. நமது மதத்தின்படியும், நீதிகளின்படியும் பார்க்குமளவில் நாம் ராஜபக்தியும் விசுவாசமு முடையவர்களாய் இருக் கவேண்டுமென் றேற்படுகிறது; நமக்குண்டாகவேண்டிய க்ஷேமங்களுக்கும் இதுவே காரணமாகும். துரைத்தன காரி யங்களில் உபயோகமாகும்படி எவை கிரமமோ, அவற்றை யெல்லாம் நீங்களும் பெறவேண்டுமென்பது நியாயமே; நீங் களோவெனின், ஆதிகாலந்தொட்டுப் பரம்பரையாக நாகரி கம் பெற்றிருக்கிறீர்கள். ஆதலினால், உங்களுக்குப் பய னுண்டாகாத காரியங்களிலே நீங்கள் தலையிட்டுக்கொள்ள லாகாது. அவ்வாறுசெய்வீர்களேயானால், அதனால்பொறாமை அதிருப்தி முதலிய தீக்குணங்கள் அதிகமாகும். சுய அர சாட்சியைப்பற்றிச் சில வருஷங்களாகப் பேசுவதும் எழு

துவதும் அதிகப்பட்டு வருகின்றன. இவ்வாறு பேசப்படுவதனாலும் எழுதப்படுவதனாலும் பெரும்பான்மையாகத் தப்பெண்ண முண்டாகின்றது. சிலர், இந்துக்கள் தங்களைத் தாங்களே ஆளுவதற்கு ஒருபொழுதும் அருகராகாரென்று சொல்லுகிறார்கள்; மற்றவர்கள் இந்துக்களுக்கு அரசாள வேண்டிய குணங்களெல்லாம் உண்டென்றும், பொறாமை கொண்ட சில அதிகாரிகள் பிறராக்கம் பொறுக்கமாட்டாமல் வீண்வாதம் பேசுகிறார்களே தவிர வேறல்லவென்றுஞ்சொல்லுகிறார்கள். நான் இதுவிஷயத்தைப்பற்றி உங்களுக்கு ஒன்று சொல்லுகிறேன் ; அதைக் கருத்தாகச் சிந்தித்துப் பாருங்கள். சுய அரசாட்சி என்பதற்கு ஒரு தேசத்தார் தங்களைத் தாங்களே ஆளுவதென்பது சாதாரணமான பொருள் ; ஒருவன் தன்னைத்தானே அடக்கிக்கொண்டு ஆளுவதற்கும் இதுவே பொருளாகும். தங்களைத் தாங்களே அடக்கி ஆள வல்லவர்கள் தங்கள் நாட்டாரைத் தாங்களே ஆள வல்லவராவார்கள். சொன்னவண்ணஞ் செய்யப் பழகியவர் தாம் பிறரை ஏவுவதற்கேற்றவராவார். ஒரு ஜாதியாரைச் சேர்ந்தவர்களில் பெரும்பான்மையோர் தாம் செய்யப்புகுந்த கருமத்தைச் செய்வதிலே சோர்வுடையவர்களும், நியாயாநியாயம் தெரியாதவர்களும்,வழக்கமே பிரதானமானதென்று பிடிவாதமுடையவர்களும், இதந் தெரியாதவர்களுமாயிருந்தால், அப்படிப்பட்டவர்கள் ஒன்றுசேர்ந்துதங்கள்நாட்டை நலம்பெறச் சீரும்சிறப்புமாக ஆள வல்லவர்களென்று எதிர்பார்ப்பது கூடுமோ? ஆதலினால், நீங்கள் முந்திச் செய்ய வேண்டியது இன்னதென்பது நிச்சயமாயிற்று. உங்களில் ஒவ்வொருவரும் தனித்தனியே பெருமை பெறவேண்டும் ; எவ்வாறுசெய்தால் மனிதருக்கு நன்மையுண்டாகி அவர்கள் மேன்மேலும் அபிவிருத்தியடைவார்கள் என்பதைநன்றாய்க் கற்கவேண்டும்; நீங்கள் குற்றமற்றவர்களாய் வாழ்ந்திருக்க முயலவேண்டும் ; காமக்குரோத முதலிய தீக்குணங்களை ஒழிக்கவேண்டும்; சுயநலத்தை மட்டுப்படுத்தி, பிறர்க்குப் பயனுனவற்றைச் செய்வதையே பெரிதென்றெண்ணிச்செய்யப் பயிலவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு உங்களிடத்தில் அறிவும் நற்குணமும் மிகுந்திருக்குமோ அவ்வளவுக் கவ்வளவு நீங்கள் அரசாள வல்லவராவீர்களென்று துணி

யுங்கள். சரித்திரங்களிலே சொல்லப்பட்டிருக்கிறபடி, உங்களுக்கு நல்ல திறமை இருக்குமேயாயின் சீக்கிரத்தில் பெரிதான அதிகாரங்கள் தாமே உங்களுக்குக் கிடைக்கும்.

## 3. அறிவு வளர்ச்சி

ஆராய்ச்சி செய்து நம்மால் அறியத்தக்கவைகள் அளவற்றவைகள். அவற்றுள் அநேக விஷயங்களை ஹிந்துதேச வாசிகளாகிய நம்முடைய முன்னோர்கள் வருந்தி உணர்ந்தவரே என்பது அவர்கள் வடமொழி தென்மொழிகளில் செய்திருக்கும் நூல்களில் சிறிதேனும் ஊடாடின யாவர்க்கும் தெரியவரும். நன்றாய் அந்நூல்களை உய்த்துணர்ந்த வித்துவான்கள் நமது பூர்வீகர்களுடைய புத்தி நுட்பத்தையும் விஷயங்களின் உண்மையை அறிய உழைத்திருக்கும்உழைப்பையும் அவற்றால் விளைந்திருக்கும் பிரயோசனத்தையும் குறித்துப் புகழ்ந்து பேசுவதோடு, தற்காலத்திலுள்ள ஹிந்துக்கள் பெரும்பாலும் நூதன பாஷைகளையும் நூதன சங்கதிகளையும் அதிக வருத்தமின்றிக் கற்றுத் தேர்ச்சி அடைகிறதற்கு, அம் முன்னோர்களுடைய கல்விப் பயிற்சியால் ஜனித்த தேசவாசனையே, பன்னூற்றாண்டாயும் மாயாது நின்று உதவி செய்கின்றதென்றும் துணிகின்றார்கள். இம் மதிப்பு மேன்மேலும் வளர்ந்தோங்குக என்றே வாழ்த்தத் தக்கதாயும் இருக்கின்றது.

ஆயினும் ஹிந்துதேசம்போல பூமியில் வெகு தேசங்கள் உளவென்றும், மதிநுட்பமும் விஷயங்களை அறியவேண்டியதற்குரிய இச்சையும் உழைப்பும் மனிதர்களுக்குப் பொதுவான குணங்களே ஒழிய ஒரு நாட்டிற்றனே உற்பத்தியாகிற சாதனங்கள் அல்லவென்றும் உணர்ந்தவர்கள் அந்நிய தேசவாசிகள் வழியாயும் நாம் அறியத்தக்கவை பலவும் இருக்கும் என்று ஒப்பாதொழியார். அப்படி ஒப்புதல் நமது முன்னோர்மேல் வைக்கத்தக்க பக்திக்கு இழுக்கும் அன்று. குழந்தைகள் தங்களுக்கு எட்டாத உயரமான ஒரு பொருளைச் சுட்டி அது அண்ணனுக்கு எட்டும், அப்பாவுக்கு எட்டும், எட்டாதென்ற வாக்குவாதத்தில்

"ராஜாவுக்குக்கூட எட்டாது, எட்டும்" என்ற மழலை மொழியோ உண்மையான இராஜபக்தியை விளக்கும்? கேவலம் மதிநுட்பத்தால் மாத்திரமன்றித் தூரதேச சஞ்சாரத்தாலும், கருவி விசேஷத்தாலும் விளைகிற அனுபவப்பெருக்கால் அறியத்தக்கவைகள் பூமியின் பாலியகாலமாகிய பழையகாலத்தில் அறியப்படவில்லை என்று கூச்சம் இன்றிக் கூறுவதில் குறைவென்னை? ஒரு தேசத்தார் விஷய ஆராய்ச்சி விட்டு யாதேனும் ஒரு காரணத்தால் ஓய்வடைந்தாராயின், மற்றெல்லாத் தேசத்தாரும் அப்படியே ஓய்வடைந்தவர் ஆகவேண்டிய தில்லையே. வித்தியாரூபிணியாகிய கலைமகள் நாடோறும் தூக்கமின்றிக் கல்வி பயிலுகிறாள் என்பதின் பொருள்தான் என்னை? ஆதலால், பூர்விகர்கள்மேல் உண்மையான பக்தியும் தேசாபிமானமும் உடையோர், முன்னோர் நூல்களை அன்போடு ஆராய்வதோடு, நூதனமாக அந்நிய தேசத்தாரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் நூல்களையும் கற்றறிந்து கலந்து 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்னும் முதுமொழியை மறவாது, அவர் அவர்களால் கூடிய அளவும் நம் முன்னோர் உழைத்தபடி உண்மை அறிய உழைத்து, ஜனசமுதாய அறிவை வளர்க்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றார்கள்.

## 4. வீதிவிடங்கன்

காவிரி என்னும் நதியினால் எந்தக்காலத்திலும் குறைவுபடாத நீர்வளப்பம் உள்ளதாய், வாழைச்சோலை, பலாச்சோலை, மாஞ்சோலை, தென்னஞ்சோலை, கமுகஞ்சோலை, கருப்பஞ்சோலை முதலாகிய பலவுள்ள சோலைகள் அணியணியாக் ஒன்றையொன்று சூழ்ந்தோங்கப் பெற்றதாய், சிதம்பரம், பஞ்சநதம், மத்தியார்ச்சுனம், சம்புகேச்சுரம் முதலான திவ்விய க்ஷேத்திரங்களை இடையிடையில் உடையதாய் விளங்குகின்ற சோழதேசத்திலே, திருவாரூர் என்கிற நகரம் ஒன்றுண்டு. அந் நகரத்திலே மூன்று சுடர்களிலும் முதற்சுடராகி, மேன்மையடைந்த சூரியகுலத்திற் பிறந்து

அரசாட்சி செய்துவந்த சோழராஜர்களில் சிறந்தவராய், எல்லா உயிர்களுக்கும் இதம்செய்கின்றவராய், வேதம்ஓதுதலும், யாகம் செய்தலும், இரப்பவர்க்கு ஈதலும், பிரஜைகளைக் காத்தலும் ஆயுதவித்தையில் பழகுதலும், பகைவரை அழித்தலும் என்னும் ஆறு தொழில்களும் உடையவராய், வழக்கை அறிவிப்பவரையும் தங்களுக்குள்ள குறைகளைச் சொல்லிக்கொள்பவரையும் இலேசிலே தமது சமுகத்துக்கு அழைப்பித்து அந்த வழக்கைத் தீர்த்தும் அக்குறைகளை முடித்தும் கொடுப்பவராய், பாலோடு பழஞ்சேர்ந்தாற்போல முகமலர்ச்சியோடு இனிய வசனம் சொல்பவராய், தருமமே உருவாகக்கொண்டுநடுநிலையிலிருந்து மனுநீதிதவறாது விளங்கிய மனுச்சோழன் என்னும் பெயரையுடைய சக்கரவர்த்தியானவர் செங்கோல் செலுத்தி அரசாட்சி செய்துவந்தார். அக்காலத்தில், அவரது ஆக்கினையே பெருங்காற்று, பெருவெள்ளம், பெருமழை, தீப்பற்றல், இடிவிழுதல் முதலான உற்பாதங்கள் சிறிதும் இல்லாமல், சுகுணமான காற்றும், மிதமான வெள்ளமும், பருவமழையும் தவறாமல் உண்டாகும்படி செய்வித்து வந்தது. அவரது ஒப்புயர்வில்லாத அரசாட்சியிலே பூவே பறிபடுவது, புனலே சிறைபடுவது, காற்றே அலைபடுவது, கல்லே கடினமுடையது, மாவே வடுபடுவது, வாழையே குலைபடுவது, வண்டே மதுவுண்பது, பந்தே அடிபடுவது, பரியே கட்டுண்பது, நெல்லே குத்துண்பது, நெற்கதிரே போர்படுவது, வயலே வளைபடுவது, தரித்திரமே தரித்திரப்படுவது, துக்கமே துக்கப்படுவது, பொய்யே பொய்படுவது; இவையல்லாமல் பொருள் பறிக்கப்படுவோரும், சிறைச்சாலையில் வைக்கப்படுவோரும், பகைவரால் அலைக்கப்படுவோரும், கடினமுள்ளவர்களும், வடுபடுவோரும், குலைபடுவோரும், மதுவுண்போரும், அடிபடுவோரும், குத்துண்போரும், போரிற்படுவோரும், கட்டுண்போரும், வளைபடுவோரும், தரித்திரப்படுவோரும், துக்கப்படுவோரும், பொய்படுவோரும், வேறே இல்லாமையால், அந்நாட்டில் மேன்மையே விளங்கியிருந்தது.

இந்தப்பிரகாரமாக மந்திரிமுதலான அங்கங்களுடன் அரசாண்டிருந்த அம்மனுச்சோழன் என்னும் சக்கரவர்த்தியானவர் புத்திரப்பேறில்லாமல் மனம் வருந்தி அப்பேற்

றைப் பெறும்படி அறுபது வருஷ காலமாக அநேக தானங்களும், தருமங்களும், யாகங்களும், விரதங்களும் செய்து புத்திரசம்பத்தை அடைந்தார். சில வருஷங்களுக்குள்ளே, வீதிவிடங்கன் என்னும் அப்புத்திரனானவன் வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள், ஸ்மிருதிகள், இதிகாசங்கள் முதலான கலைகளில் ஆசிரியனைப்பார்க்கிலும் எண்மடங்கு வல்லமையுள்ளவனாகி, யானையேற்றம், குதிரையேற்றம், ரதாரோகணம், வில்வித்தை, வாள்வித்தை, இந்திரஜாலம், மகேந்திரஜாலம் முதலான சமஸ்த வித்தைகளையும் குறைவறக் கற்றுக்கொண்டு, ஆதிசேடனைப்போல் அறிவும், காமனைப்போல் அழகும், ஆண்சிங்கம்போல் ஆண்மையும், மதயானைபோல் நடையும், மார்த்தாண்டன்போல் வாய்மையும், கற்பக விருட்சம்போல் கொடையும் உடையவனாய், பொறுமை, அன்பு, ஆசாரம், ஒழுக்கம், ஊக்கம், சாந்தம் சற்சன நேயம் முதலான நற்குணங்களுடன்; உயிர்க்கு முடிவு நேரிடுமாயினும் உண்மையே பேசுவதும், உறுதியே சொல்லுவதும், இன்சொல்லே கூறுவதும், இதமே செய்வதும், பயனுள்ள காரியங்களையே பாராட்டுவதுமாகிய நற்செய்கைகளை உடையவனாய், மாதா பிதாக்களது மனக்குறிப்பறிந்து அவர் இச்சையின்வழி நடந்து மகிழும்படி செய்து இளமைப் பருவத்திற்றானே எல்லாம் அறிந்தவன் என்று கண்டோர் கொண்டாடவும், கேட்டோர் மனங்களிக்கவும் இளவரசுப் பட்டத்துக்குத் தகுந்த பருவமடைந்திருந்தான்.

## 5. கல்வி

விஷயங்களை ஆராய்ந்தறியும் ஞானமே 'கல்வி' என்றும் 'வித்தை' என்றும் வழங்கப்பெறும். மனிதன் அறியலாவனவற்றையெல்லாம் வடமொழிவாணர் அறுபத்து நான்கு கலைகளாக வகுத்திருந்தனர். தமிழில், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள்களை அறிவிக்கும் நூல்களும், அந்நூல்களை அறிதற்குக் கருவிகளான நிகண்டு இலக்கணம் கணக்கு முதலிய நூல்களும், கற்றற்குரிய நூல்களென்றும்; கற்றற்குரிய அந்நூல்களைக் கற்றலே கல்வியென்றும் கொள்வது இயல்பு.

கற்றற்குரிய விஷயங்களை உரைப்பது நூல். சான்றோர் செய்த நூல்கள் பொதுவில் இலக்கியம் எனப்பெறும். எதைக் குறித்து இலக்கணம் உரைக்கப்படுகின்றதோ அது இலக்கியம். இலக்கியத்தின் அமைதியை விளக்குவது இலக்கணமாம்.

கல்வி என்பது ஒருவாறு தொழிற்பண்புப் பெயராயினும், அதனைச் செல்வப்பொருளோடு ஒப்புமையாகக் கல்விப்பொருள் என்பது தமிழ்வழக்காக இருக்கின்றது. 'கல்வியுடைமை பொருளுடைமை என்றிரண்டுசெல்வமுஞ்செல்வமெனப்படும்.' 'கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.' எனெனின், கைப்பொருள் போனாலும் கல்விப்பொருள் போகாது. கைப்பொருள் அறமும் இன்பமும் பயக்கும். கல்விப்பொருளோ 'அறம்பொருளின்பமும் வீடும் பயக்கும்.' பொருட்செல்வம் பொருந்தியிருப்பினும், 'கல்வியில்லாச்செல்வம் கற்பில்லா அழகே.' 'மன்னனுக்குத் தன் தேசமல்லாற் சிறப்பில்லை.' வித்துவானுக்கு எது பாதேசம்? 'கற்றோர்க்குச்சென்ற இடமெல்லாம்சிறப்பு.' 'கற்றோர்க்குக் கல்வியழகேயழகு.' தோழனுவது துலங்கிய கல்வி.' 'வித்துவான் தனவான்.' 'புத்திமான் பலவான்.' கல்விகற்றவர் தம்மளவில் சொற்சுவை பொருட்சுவைகளை அனுபவித்தலாலும், புகழும் பொருளும் பூசையும் பெறுதலாலும், முத்திநெறியை அடைபவராதலாலும், இடையறா இன்பம் பெறுபவராவர். அறியாத பல அரிய விஷயங்களையெல்லாம் இவர்களையடைந்து அறிந்தோமென உலகத்தவர் பலரும் அவரிடம் அன்புடையவராவார். வாலிபனேயாயினும் கல்வியுள்ள வாலிபன் கனகிழவனே.

ஒவ்வொருவரும் நல்லாசிரியர்களிடத்திலே கல்வியை ஐயந்திரிபறக் கற்றல்வேண்டும். கல்வியிலே தேர்ச்சியடைய விரும்புவோர், ஒருநாள் ஊக்கமாகவும் மற்றொருநாள் சோம்பலாகவும் இராமல், தங்கள் தங்கள் சக்திக்கேற்ப, எப்பொழுதும் ஒரேவிதமாய், கல்வியிலே இடைவிடாது பயிலல்வேண்டும். 'நாறுநாள் ஓதி ஆறுநாள் விடத்தீரும்.' ஆகையால்சோர்வடையாமல் நாடோறும் சிறிதாயினுங் கிரமமாகக் கற்பவர்கள் எப்படியும் அறிவுள்ளவராவர். 'பாடமேறினும் ஏடது கைவிடேல்' என்பதைப் பாராட்டாமல, தஙகள யதவும

சூக்ஷ்மகிராகிகள் எனக் கருதி ஒவ்வொரு வேளையில்மாத்திரம் கற்கின்றவர், அதிகமாகத் தேர்ச்சி அடையமாட்டார்.

'தொட்டனைத் தூறும் மணற்கேணி: மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.'

ஆகையால் கல்வியைச் சிறிது கற்றவளவில் அமையாது மேலுமேலுங் கற்றலே தகுதி.

முற்காலத்தில் ஓலைகளில் எழுதிய புத்தகங்களே வழங்கியிருந்தன. காகிதஞ்செய்யும் வித்தை விசேஷப்பட்ட பிறகு அச்சுவித்தை விசேஷப்படுவதாயிற்று. ஒவ்வொருவனும் தனக்குவேண்டிய புத்தகங்களை எழுதிப்படிப்பதென்றால், தனிகரல்லாதவர் பல நூல்களைப் படிப்பது இயலுமா? ஆயினும் நூல்களைத் தாங்களே எழுதிப் படிப்பதனால், படித்த நூல் படித்தவரவில் அழுத்தமாக மனதிற் பதிந்திருக்கும் அநுகூலம் ஒன்றுமாத்திரம் இருந்தது. முற்கால வித்துவான்களுக்கு ஞாபக சக்தி விசேஷித்திருந்ததற்கு முக்கிய காரணம் இதுவே. கற்ற கற்ற விஷயங்கள் எல்லாவற்றையும் மறவாமைப் பொருட்டே, இலக்கணம் மருத்துவம் சோதிடம் முதலிய சாஸ்திரங்கள் சூத்திரமுஞ் செய்யுளுமாக எழுதப்பட்டுவந்தன.

காலங்கண்ட தமிழிலக்கியங்களை வகைப்படுத்திப் பரிசோதிக்கையில், நீதிநூல்களும், நவரசாநுபவ ஜநிதமான காவியங்களும், ஸ்தலமகாத்மியமாய்ப் பெரும்பாலும் மொழிபெயர்ப்புக்களான புராணங்களும், சமய சித்தாந்தங்களும், பக்திரஸம் பெருக்கெடுக்கும் சமயச்சார்பான தோத்திரப்பாக்களுமான சில பாகுபாடுகள் மாத்திரமே பெறப்படுகின்றன. புராணங்களிற்பெரும்பாலன பிற்காலத்தனவே. தமிழ் வித்துவான்கள் சமய க்ஷாத்திரமின்றிப் பொதுவில் கற்பனவெல்லாம் நீதிநூல்களும் காவியங்களுமே.

ஒன்றுலொன்று குறைவின்றிப் பலதுறைப்பட்டநூல்களைப் பல பாஷைகளினின்றும் மொழிபெயர்த்தும் புதுவது புனைந்தும் நாட்குநாள் தங்கள் இலக்கியங்களையும் சாஸ்திரங்களையும் வர்க்கசங்கலிகிதமாகப்பெருக்கிவருகின்ற ஆங்கிலேயரே, இரண்டு பாஷையில் விற்பத்தியில்லாதார் புலமைகடாத்துவதை, பறவைகள் ஒரு சிறகைக்கொண்டு பறப்பதை

னோடொக்கும் என்பர். தமிழில் விற்பத்தியடைய விரும்புவோர், வடமொழியாயினும் இங்கிலீஷாயினுங் கற்றலன்றி, அறிவு தெளிவடைந்து பயன்படலான நூல்களை இயற்றவும், தமிழின் குறைபாட்டை அறிந்து ஆவனவற்றைச்செய்பவும் வகையறியாது, 'அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே வைகுண்டம்' என்பதாக, தங்களையும் தாங்கள் கற்ற தமிழையுமே, பாவம், பெருமை பாராட்டாநிற்பர்.

வசன நூல்களும் சாஸ்திரங்களுமே தமிழில் சுத்த சூனியமாக இருத்தலால், இக்குறைவை நிறைவுறுத்தாது விடுவோமாயின், நமது பாஷையிலுள்ள இலக்கியங்களால் மாத்திரமே அறிவு தெளிவடைந்து காரிய நிர்வாகஞ் செய்தலான எதிர்காலம் நேர்கையில், நாம் கல்வியறிவு சாலாத கடையர்கள் எனப் பிறதேயத்தாரால் இகழ்ச்சி யடைபவராவோம். அவ்வத்தேயத்தாருடைய இலக்கியத்தொகுதியே அவ்வத்தேயத்தர் திறத்தை நிறுத்துக்காட்டும் துலையாகும்.

தீர்க்கமான வசனநூல்கள் தமிழில் இன்னும் வெகுவாய்ப் பல்கவில்லை. தற்காலம் பிரசுரமாகிவருகின்ற அபிநவ கதைகளையும் உரையிடையிட்ட நாடகங்களையும் வியாசங்களையும் மொழிபெயர்ப்புக்களையும்பற்றிப் பெரியோர்களுடைய அபிப்பிராயம் இன்னும் திட்டமாக ஏற்படவில்லை. வர்த்தமான பத்திரிகைகளுள் சில, இங்கிலீஷில் மிக்க பாண்டித்திய முடையவர்களாலும், சில தமிழில்மாத்திரமே விற்பத்தி யுடையவர்களாலும் நடைபெற்று வருகின்றன. தமிழில் நிரம்பிய புலமையோடு இங்கிலீஷிலும் போதுமான விற்பத்தியுடையவர்கள் இத்துறைகளில் உழைக்கப் புகுவார்களாயின், தமிழில் கத்தியபாகம் நாட்குநாள் அழகும் ஆற்றலும் அடைவதாகும்.

நூல்களைக் கற்கும்போது மாணாக்கன், நீரை வார்க்குந்தோறும் அதனை ஒழுகவிடுகின்ற இல்லிக்குடம்போல், ஆசிரியர் கற்பிக்குந்தோறும் நூற்பொருள்களை மறந்துவிடாமல், வயிறு நிறையப் புல்லைமேய்ந்து ஓரிடத்திருந்து அசைபோடுகின்ற ஆவைப்போல், ஆசிரியனிடத்தில் நூற்பொருளை உள்ளம் நிறையக் கேட்டுக்கொண்டு, பின்பு ஏகாந்தமான இடத்திலிருந்து, ஆசிரியன் கற்பித்தவற்றை ஒழுங்காகச் சிந்தித்து மனதிற் பதிய வைத்துக்கொள்ளவேண்டும்.

கல்விகற்கும் மாணாக்கன் ஆயுள்முழுவதும் ஆசிரியனிடம் பாடங் கேட்பதில்லை. இறகு முளைத்த பறவைக் குஞ்சுகள் தத்தித்தொத்திப் பறக்கத்தொடங்கிச் சிலநாளில் தாங்களே இரைதேடிப் பிழைக்கின்றன. தாய்ப்பாலுண்டு இடுப்பிலும் தோளிலும் எடுத்து வளர்க்கப்பட்ட பச்சிளங்குழந்தைகள், நாளடைவில்தவழ்ந்துநடத்தலாய் ஓடத்தொடங்குகின்றன. ஆசிரியரிடம் கற்கலாயினவற்றைக் கற்றபின்னர் மாணாக்கர்கள் அவ்வளவில் அமையாது, அகராதி இலக்கணம் முதலிய கருவிநூல்களின் உதவிகொண்டும், தெரியாதவைகளைப் பலரைக்கேட்டுத் தெளிந்தும், மேலும்மேலும் கற்றல் வேண்டும். ஆசிரியரிடம் கற்றஅளவிலே கல்வியை விட்டவர்கள், எத்துறையிலும் எந்தச்சாஸ்திரத்திலும்பாண்டித்தியமுடையவ ராகார். ஆசிரியரிடம் கல்வி கற்கையில் குசாக்கிரபுத்தியின்றி இடைமாணாக்கர்களா யிருந்தபேர்களில் பல்லோர், பின்னர்த் தாங்கள் ஊக்கங்கொண்டு மேலுமேலும் செய்தஅபிவிர்த்தியால் பெரும்புலவர்களாகிப்பெரும்புகழும் அடைந்துளார். எப்படியும் நாம் கற்ற கல்வி ஜீவனார்த்தத்துக்குப்போதியதாக இருத்தலால், மேலுமேலும் கற்றுமண்டைவெளுப்பானேன் என்பவர்கள்சாப்பாட்டிராமரேயாவர். 'செவிக்குணவில்லாதபோதுசிறிது வயிற்றுக்கு மீயப்படும்.'

சாஸ்திர அபிவிர்த்தி செய்வதானாலும், இலக்கிய அபிவிர்த்தி செய்வதானாலும், நூல்களைக் கற்காமல்ஒன்றுஞ்செய்யமுடியாது. நூல்களைக் கற்குமிடத்தில் ஒழுங்கான சில முறைகளை அனுசரிக்கவேண்டும். வழிதுறையில்லாமல்'கண்டது கற்கப் பண்டிதனாவான்' என்று நம்பி, கண்ட கண்ட நூல்களையெல்லாம் கற்பவர், 'பலமரங் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டமாட்டான்' என்பதுபோல, உபயோகமான யாதொரு காரியமும் செய்ய உதவமாட்டார். ஓட்டமும் நடையுமாய்த் தாண்டுகால் பாய்ச்சி நுனிப்புல் மேய்ச்சலாக எல்லா நூல்களையும் கற்பதினும், கற்றறிந்த புலவர்கள்தேர்ந்துரைக்கும் சில நூல்களைமாத்திரம் சாவகாசமாய் நிதானத்தோடு ஆழ்ந்தறிந்து கற்றலே கற்றதனாலாய பயன்தருவதாகும். அகல உழுவதினும் ஆழ உழுவதே நன்றன்றோ? அங்ஙனம் உழுவதிலும் களர்நிலத்தை உழுவாருளரோ? சாரமின்றி நிஷ்பிரயோசனமான நூல்களிற் பழகுவது வீண்

காலக்ஷேபம். ஒவ்வொரு துறையையும்பற்றிய நூல்கள் பலவாக இருத்தல் கூடுமாகையால், புலமை நிரம்ப விரும்பும் மாணாக்கன் அவைகளை நாளடைவில் பாராமலும் படியாமலும் திருப்தியடையமாட்டான் என்பது உண்மையே. ஆயினும் தான் கற்க விரும்பிய சாஸ்திரத்தின் முக்கிய சாராமிசங்களைக் கற்கும்போதே பல நூல்களைப் பார்வையிடுதல் மயக்கம் எய்தற்குக் காரணமாகும்.

ஒரு நூலைப் பாடம் பண்ணுவதில் மாணாக்கர்கள் வெவ்வேறு முறைகளை அனுசரிக்கின்றனர். அந்நூலைப் பலமுறை பெயர்த்தெழுதுவர் சிலர். சிலர் வாய்ப்பாடமாக நெட்டுருப் பண்ணுவர். தாம் கற்கும் நூலின் அமிசங்களை ஒழுங்காக வகைப்படுத்திச் சுருக்கம் எழுதுவர் சிலர். நூலின் வார்த்தைகளைக் கவனியாமல், போக்கையும் கருத்தையும் விஷயங்களை விளக்கும் தோரணைகளையும் மாத்திரமே நன்கு சிந்தித்துக்கொள்ளுவர் சிலர்.

ஒரு நூலைப் பலமுறை பார்த்தெழுதுவதில் ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாய்ப் பார்த்தெழுதவேண்டும். இந்தப் பிரயத்தனம் மலைகல்லி எலிபிடிக்கு மத்தனையே.

சாஸ்திரங்களில் முக்கியமான சூத்திரங்களையும், இலக்கியங்களில் சொல்லழகு வாக்கிய நடையழகு பொருட்பொலிவு கற்பனை அலங்கார விசேஷம் பக்தியாதிரசம் முதலியன அமைந்துள்ளபகுதிகளையும் பலமுறைபடித்து மனதில்பதியவைத்துக்கொள்வது மாணாக்கனுக்கு நன்மையே. இலக்கியங்களிலும் நீதிநூல்களிலும் ஓரோவிடத்து ஒவ்வொரு வாக்கியமும் சிலவிடங்களில் ஒரு கோவையான சில பாடல்களும், சம்பாஷணையில் ஒவ்வொரு சமயத்தில் தான் விளக்கிவற்புறுத்தப் புகுந்த விஷயங்களுக்குப் பிரமாணமாக எடுத்துக்காட்ட உதவும். பொருளையறியாமல் நெட்டுருப் பண்ணுவது கேவலம் நிஷ்பிரயோசனமான பிரயாசம். பொருளறிந்து தெளிந்தவிடத்தும், சரித்திரமும் புராணமுமான நூல்களை நெடுக நெட்டுருப்பண்ணுவது பித்தர்செய்கையே.

கடினமான நூல்களைச் சூட்சுமமாகக் கிரகிப்பதற்கும், கிரகித்ததைமனதில்நன்கு பதியவைத்தற்கும்அந்நூல்களைச் சுருங்கப் பிடித்தெழுதலே உத்தமமான உபாயம். ஒருநூல் தன்னளவில் ஒரு கிரமத்தை அனுசரித்ததானால் இங்ஙனம்

சுருக்கம் எழுதலில் வெகுவாய்க் கஷ்டமிராது. மாணுக்கன் அந்நூலின் ஒழுங்கையே அனுசரித்து முக்கியமான அமிசங்களையும் உதாரணங்களையும் அதிகார அடைவின்படி தேர்ந்து கொண்டு, அட்டவணைரூபமாக ஒரு விஷய சூசிகையை எழுதுவது போதும். இது செய்ய விரும்பும் தமிழ் மாணுக்கர்கள் நன்னூலைத் தொகுத்து எழுதிப் பார்க்கலாம். அந்நூலை வார்த்தை வார்த்தையாகப் பெயர்த்தெழுதுவதைக் காட்டிலும், இங்ஙனம் அதன் முக்கியாமிசங்களை ஆராய்ந்து தேடித் தேர்வதற்கும், அவைகளைச் சுருக்குவதற்கும் கொள்ளும் பிரயாசையால் அந்நூல் மனதில் நன்றாய்ப் பதிவதன்றி, நூலின் ஒழுங்கும் அமைதியும் நன்கு கிரகிக்கப்படுதலால், இந்த உபாயம் மிகவும் உபயோகமானதே.

ஒரு சாஸ்திரத்தைப் படிக்கும் ஆரம்பகாலத்திலேதானே இங்ஙனம் சுருக்கங்கள் அமைக்க முயல்வது யுக்தமன்று. அந்தச் சாஸ்திர சம்பந்தமான இரண்டொரு நூல்களைத் தீர்க்கமாகக் கற்றபிறகு பெரிய நூல்களை இங்ஙனம் பாகுபாடு செய்து சுருக்கப் புகுவது நன்மை. இது செய்தாலொழிய எந்தச் சாஸ்திரத்தையும் ஒருவர் தீர்க்கமாகக் கற்றறிந்தவர் என்றுரைத்தலாகாது. ஒரு நூலுக்கு விளக்கமாய் நன்கமைத்திருக்கும் விஷய சூசிகையைப் பலமுறை கவனிப்பதனால், நூலின் விவரங்களெல்லாம் பலமுறை நினைவில் வரும். நூலின் விஷயங்களும் மனதில் நன்றாய் நிலைத்துவிடும்.

## 6. சீதா கலியாணம

(அங்கம் II—களம் I)

[விசுவாமித்திரர் வருகிறார். தசரதர் அவரை நமஸ்கரிக்கிறார். வசிஷ்டர் முதலியோர் அவரைத் தழுவுகிறார்கள். தசரதர் எழுந்து நின்றபடியே ஆசனம் கொடுத்து அவரை அதில் எழுந்தருளும்படி உபசரிக்கிறார். அவர் ஆசனத்தில் உட்கார்ந்து,]

விசுவாமித்திரர்.—சக்கரவர்த்தீ! சிம்மாசனத்தில் அமரும்.(தசரதர் உட்காருகிறார்.) ஜனரக்ஷகரான உம்முடைய தேசத்தில் எல்லாரும் சௌக்கியமா? சத்துரு சங்காரரான நீர் செய்யவேண்டிய தேவமனுஷ்ய யாகங்கள் எல்லாம் சரிவர நடந்தேறி வருகின்றனவா?

தசரதர்.—தங்களைப்போன்ற மகான்களுடைய கிருபையைப் பெற்ற எனக்கு என்ன குறை? தபோநிதி!

நிலஞ்செய்த தவமன்று; நீயிங்கே
வந்தவிது நீண்ட நாளென்
நலஞ்செய்த தவமன்று; வளஞ்சிறந்திவ்
வயோத்தியெனு நாமம் பூண்ட
தலஞ்செய்த தவமன்று; வலஞ்செய்து
நின்னடிநான் வணங்க என்தன்
குலஞ்செய்த தவமென்று கூறுவேன்
கோசிகப்பேர் கொண்ட எந்தாய்?

முனீஸ்வரரே! தேவரீர் இங்கே எழுந்தருளப்பெற்றது இந்த நிலஞ்செய்த தவப்பேறு? அன்றி நெடுநாளாக யான் செய்துவரும் நல்வினைப்பயனு? அல்லது பல வளங் களும் நிறைந்த இவ் வயோத்திமாநகரஞ் செய்த தவமா? அல்ல; இவையொன்றும் அல்ல. கணக்கிறந்த காலம், தலைமுறை தலைமுறையாக என் குலத்தவரெல்லாம் செய் துவந்த புண்ணியத்தின் பயனேயாகும். இதனினும் யான் பெறத்தக்க பேறு வேறு யாதுளது?

விசுவாமித்திரர்.—

என்னனைய முனிவரரும் இமையவரும்
இடையூறென் றுடைய ராகல்
பன்னகமும் நகுவெள்ளிப் பனிவரையும்
பாற்கடலும் பதும பீடத்
தன்னகரும் கற்பகநாட் டணிநகரு
மணிமாட அயோத்தி என்னும்
பொன்னகரும் அல்லாது புகலுண்டோ
இகல்கடந்த புலவு வேலோய்!

சக்கரவர்த்தீ! என்னைப்போன்ற முனிவர்களுக்கும் தேவர் களுக்கும் ஏதாவது துன்பம் நேரிட்டால் மலைகளிற்சிறந்த கைலைமலையும், கடல்களிற் சிறந்த திருப்பாற்கடலும், லோகங்களிற் சிறந்த சத்தியலோகமும், நாடுகளிற் சிறந்த கற்பகநாடும், நகரங்களிற் சிறந்த இவ்வயோத்திமா நகரமும் அல்லாமல் வேறு புகலிடம் ஏது? சம்பராசுர

னைக் குலத்தோடும் தொலைத்து, நீர் அன்றையதினம் அளித்த அரசன்றோ, இப்பொழுதும் இந்திரன் கற்பக நிழலில் இருந்து ஆள்வது?

**தசரதர்.**—முனிபுங்கவ! எனக்கெய்திய இந்தப் பெருமையெல்லாம் தம்போன்ற மகாத்மாக்களின் அனுக்கிரகத்தால்தான். நாம் இங்குவந்து என்னைக் கிருதார்த்தனாக்கி விட்டீர். இதனால் நான் அடைந்த பேரானந்தத்திற்கு ஓர் அளவும் உண்டோ? பிரமரிஷியாய் விளங்குந் தேவரீரை அடியேன் பூஜிக்கவேண்டியது நெறியாகையால், எந்தக் காரியம் தேவரீருக்கு என்னால் முடியவேண்டுமோ, அதைத் தெரிவித்தால் செய்து முடிக்கக் காத்துக்கொண்டிருக்கிறேன்.

**விசுவாமித்திரர்.**—

தருவனத்துள் யானியற்றும் தவவேள்விக்
கிடையூறாத் தவஞ்செய் வோர்கள்
வெருவரச்சென் றடைகாம வெகுளியென
நிருதரிடை விலக்கா வண்ணம்
செருமுகத்துக் காத்தியென நின்சிறுவர்
நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத்தந் திடுவையெனின் உலகேழும்
பெற்றனென உவப்பேன் மன்னா!

தசரதா! எனது குறையைச் சொல்லுகின்றேன் கேள்: வனத்தில் நான் செய்யும் தவத்திற்குக் காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்றுவித குற்றங்களைப்போல, அரக்கர், நிருதர், தைத்தியர் என்னும் மூன்றுவித துஷ்டர்கள் தடையுண்டாக்குகிறார்கள்; அவர்களை அழித்து எனது யாகத்தை முடிக்கவேண்டும். அதற்காக உனது பிள்ளைகள் நால்வரில் கரிய திருமேனியை உடையவனாகிய இராமச்சந்திரனை என்னுடன் அனுப்பினால் நான், ஏழுலகங்களையும் பெற்றதுபோல் சந்தோஷமடைவேன்

**தசரதர்.**—(மனங்கலங்கி) தவசிரேஷ்டரே! அதற்குக் குழந்தை இராமச்சந்திரன்தான் வேண்டுமோ?

விசுவாமித்திரர்.—சக்கரவர்த்தி ! சுபாகு, மாரீசன் என்னும் இரண்டு இராட்சதர்கள் தலைப்பட்டிருக்கின்றனர். அவர்கள் மாயாரூபங்கொள்ள வல்லவர்கள் ; வெகு பராக்கிரம சாலிகள் ; யாகத்தைக் கெடுக்க அவர்கள் கூடை கூடையாக மாமிசங்களையும், குடம் குடமாக இரத்தத்தையும் கொண்டு வந்து யாகசாலையிற் கொட்டுகின்றனர். 'யாகத்துக்குத் தீக்ஷை பண்ணிக்கொண்டிருக்கிறவர்கள் கோபத்துக்கு இடங்கொடுக்கலாகாது' என்பது விதியாகையால் நான் அவர்களைச் சபிக்கவும் கூடவில்லை. உமது மகன் இராமச்சந்திரன் பாலனாயிருந்தாலும் ஒப்பற்ற சாமர்த்தியமுடையவன். நான் அவனை மிகுந்த கவனத்தோடும் பாதுகாப்பேன். அவனால் என்னுடைய குறை நீங்குமென்பது திண்ணம். இதன் மூலமாக அவனுடைய பலவகையான மேன்மையும் கீர்த்தியும் மூன்று லோகங்களிலும் பரவப்போகின்றன. குழந்தையாயிற்றே என்று நீர் மனங் கலங்க வேண்டா.

தசரதர்.—(மூர்ச்சையாகிச் சிம்மாசனத்திற் சாய்கிறார் பிறகு எழுந்து முகம் சோர்ந்து,)

எண்ணிலா அருந்தவத்தோய் ! இயம்புமிச்சொல்
மருமத்தில் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையிற் கனல்நுழைந்தால
எனச்செவியிற் புகுந்த தையா
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
ஆருயிர்நின் றூச லாடக்
கண்ணிலான் பெற்றிழந்தான் எனத்துயரம்
உழக்கின்றேன் காதி மைந்தா !

தவசிரேஷ்டரே! தேவரீர் கூறிய வார்த்தை,ஒருவன் மார்பில் கூரிய வேல்பாய்ந்து அதனால் உண்டான புண்ணில் நெருப்பும் நுழைந்ததுபோல, எனது செவியில் நுழைந்தது. முனிவர் தலைவரே! உள்ளே நுழைந்த அந்தத்தீயின் வெப்பத்தால் எனது உயிர் வாடுகின்றது. கொடிய கூற்றுவனே எதிரில் தோன்றி என்னுயிரைக் கேட்டாலும் பின் வாங்காது கொடுக்குந் திடநெஞ்சம் படைத்த என்மனமும் பதைக்கின்றதே! பிறவிக்குருடன் கண்ணைப் பெற்று

இழந்ததுபோல வருந்துகிறேன். காதிகுமாரரே! கருணை வாரிதியே! என் குழந்தை இராமனுக்கு இன்னும் பதினாறு பிராயங்கூட ஆகவில்லையே! அவனோ இராட்சதர்கள் முன் நின்று போர்புரிய வல்லவன்! 'போர்' என்பது இன்னதென்றே அறியானே! அரக்கர்கள் வெகு கபடமாக யுத்தம் செய்கிறவர்களாயிற்றே! பச்சைப் பசுங்குழவியாகிய இராமனோ அவர்களோடு போர்புரியத் தக்கவன்!

**விசுவாமித்திரர்.**—சக்கரவர்த்தி! உனது குமாரன் யார் என்பதை நீ அறியாய்!

**தசரதர்.**—பெருந்தகையே! என்னவானாலும் குழந்தை இராமச்சந்திரனைப் பிரிந்து நான் ஒரு நிமிஷங்கூட என் பிராணனை வைத்திருக்கமாட்டேன். அரக்கரை அழித்துத் தங்கள் யாகத்தை முடிப்பதற்கு இராமன்தானோ வேண்டும்?

படையூற்ற மிலன்; சிறுவன். பெரியோய்!
பணியிதுவேற் பனிநீர்க் கங்கை
புடையூற்றுஞ் சடையானும் நான்முகனும்
புரந்தரனும் புகுந்து செய்யும்
இடையூற்றுக் கிடையூறு யான்காப்பன்;
பெருவேள்விக் கெழுக ஐயா!

குழந்தைஇராமன் ஆயுதப்பயிற்சியில் தேர்ந்தவனல்லன்; மேலும் சிறுவன். ஆதலால், பெருந்தவமுனிவரே! தேவரீருக்குத்திருவுள்ளமானால் கங்காதரனாகியசிவபெருமானேயானாலும் சரி; அன்றி, நான்முகம்படைத்த பிரமதேவனேயானாலும் சரி; அல்லது, ஆயிரங் கண்களோடு கூடிய தேவேந்திரனேயானாலும் சரி; வேறு யாராயிருந்தாலும் அவர்கள் செய்யும் தடைக்குத் தடைசெய்து உமது யாகத்தை நிறைவேற்றுகின்றேன். கட்டளையிட்டருளுங்கள்! முனீந்திரரே! அதை விட்டு இராமனை வேண்டாதீர்! சுவாமி, இவ்வளவு காலமாகப் பிள்ளையில்லாமல், எவ்வளவோ சிரமப்பட்டு, புத்திரகாமேஷ்டி செய்து பெற்ற பிள்ளையாயிற்றே அவன்! அதை நினைத்தாவது திருவுளமிரங்கி அவனை விட்டுவிடும்! எனக்குக் குழந்தைகள் நால்வர் இருந்தாலும், அவர்களுள் இராமனிடம் எனக்கு

வாஞ்சை அதிகம். இதன் பொருட்டாவது, சுவாமீ! இராமனை அழைத்துப்போகும் எண்ணத்தை மாற்றியருளவேண்டும்.

**விசுவாமித்திரர்.**—(கோபக்குறியோடு)தசரதா! நான்கேட்டதைத் தப்பாமல் கொடுப்பதாகச் சொல்லிவிட்டு, பிறகு, நெருங்கிவந்தால், மறுப்பதுதானோ உனது தருமம்! இது இரகு வமிசத்தார்கள் கொண்ட நோன்புக்கே விரோதமான காரியமாய் இருக்கிறதே! இப்படிச் சொல்லுவது உனக்குத் தகுதியானால் நான் வந்தவழியே திரும்பிச் செல்கின்றேன். சொன்ன சொல் தவறிய நீதானே பந்துக்களோடு சுகமாக வாழ்ந்திரு.

தசரதர்.—முனிபுங்கவ! இதுவரையில் நான் சொல் தவறியறியேன். இராமன் சிறுவன்; இன்றுங்கூட நித்திரையில் தாயை நினைத்து அழுகிறவன்; உலகியல்பு இன்னதென்று உணராதவன்.

விசுவாமித்திரர்.—உன் மகன்இராமனு உலகியல்பு உணராதவன்! உனக்குத்தான் அவன் இயல்பு தெரியாது! எனக்குமா தெரியாது? எத்தனையோ தேவர்கள், நான் அழையாமலே, என் குறிப்பறிந்துவரக் காத்திருக்கிறார்கள். அங்ஙனமிருந்தும் நான் இராமனை நாடுவானேன்? நன்றாய் யோசி. அவன் இன்னான் என்று அறியாமல் என்னென்னவோ கூறுகிறாயே!

அரசனீ அறியாய்; தவசிநான் அறிவேன்:
போகிநீ அறியாய்; யோகிநான் அறிவேன்:
முகக்கண் கொண்டுநீ அவனியல்·பறியாய்;
அகக்கண் கொண்டுநான்அவனியல் பறிவேன்:
சொல்லால் அவன்புகழ் சொல்லநீ அறியாய்;
மனத்தால் அவன்புகழ் மதிக்கநான் அறிவேன்:
அவத்தினர் போற்றுநீ அவன்புகழ் அறியாய்;
தவத்தினர் போற்றுநான் அவன்புகழ் அறிவேன்:
வில்லைத் தாங்கிய வேந்தனீ அறியாய்;
புல்லைத் தாங்கிய சாந்தனான் அறிவேன்:
மணிமுடி தரித்த மன்னனீ அறியாய்;
சடைமுடி தரித்த துறவிநான் அறிவேன்:

ரஜோகுணந் தன்னால் ராஜனீ யுணராய்;
சத்துவ குணத்தால் தவசிநான் உணர்வேன்:
ஆசனத் தமர்ந்தநீ அவன்புகழ் அறியாய்;
சூசனத் தமர்ந்தநான் அவன்புகழ் அறிவேன்:
புத்ரகா மேஷ்டி புரிந்தநீ அறியாய்;
முத்திகா மேஷ்டி புரிந்தநான் அறிவேன்;
பொருளையும் இன்பையும் புகழுநீ அறியாய்;
அருளையும் வீட்டையும் அடையுநான் அறிவேன்.

**வசிஷ்டர்.**—சக்கரவர்த்தி! மழையினலுண்டான வெள்ளம் ஆருகச் சென்று சமுத்திரத்திற் பாய்வதுபோல் உமது புத்திரனுக்கு அளவற்ற வித்தைகள் தாமே வலியவந்து சித்திக்கும் காலம் சமீபித்திருக்க, அதை நீர் உணராமல், மறுக்கின்றீரே! தருமதேவதைபோல் விளங்கும் நீர், ஒரு மகானுக்கு ஒன்றைச் சொல்லிப் பிறகு அதற்கு மாருக நடப்பது தகுமா? இன்னபடி நடக்கிறேன் என்று வாக்குக் கொடுத்தால் அதற்கேற்றபடி நடப்பதன்றோ நல்லார் கடன்? போர்முகங் கண்டறியாதவன் என்ருலும், இராமச்சந்திரன், விசுவாமித்திரருடைய பாதுகாவலில் இருக்கிற வரையில் அவனை ஒருவராலும் ஒன்றும் செய்ய முடியாது. அரக்கர்களை அழிப்பதென்ருல் விசுவாமித்திரருக்கு அது ஒரு பெரிய காரியமன்றென்பது உமக்கு நிச்சயமாய்த் தெரிந்திருக்கட்டும். அவர் இப்பொழுது உம்மிடம் இராமச்சந்திரனை வேண்டுவது, அவனுடைய நன்மைக்காகவே யல்லது வேறன்று. ஆகையால் இராமன் அவருடன் புறப்பட்டுப் போவதைப்பற்றி உமக்குக் கொஞ்சமும் அச்சம் வேண்டா.

**தசரதர்.**—ஆனல் சரி, அப்படியே செய்கிறேன். (விசுவாமித்திரரைப் பார்த்து) சுவாமீ! புத்திரவாஞ்சையால் தேவரீரிடத்து மதிமயங்கிப் பேசினேன்; மன்னித்தருளுக. இதோ, அவனை இலக்ஷ்மணனேடு கூட்டி உம் வசத்தில் ஒப்புவிக்கின்றேன். மந்திரீ! இராமச்சந்திரன் என்ன செய்துகொண் டிருக்கிருன்?

(மந்திரி ஏவலாளனைப் பார்க்கிருர். அவன் கைகூப்பி வணங்கி,)

**ஏவலாளன்.**—மண்டலேஸ்வரா! இளவரசர் தீர்த்தயாத்திரை சென்று திரும்பிவந்த நாள் முதலாக, ஏதோ துக்க

முற்றவர்போல முகந்தளர்ந்திருக்கிறார். நித்திய கரும மமும் சரிவரச் செய்வதில்லை. நாங்கள் அவர் காலைப் பிடித்து வேண்டிக்கொண்டால் ஏதேனும் சிலவற்றைச் செய்கிறார். 'பெண்டு பிள்ளை, பண்ட பதார்த்தங்கள் எல்லாம் பொய்; இவைகளில் என்ன பிரயோசனம்?' என்கிறார். நல்லவுடையை உடுக்கவும், இனிய உணவை உண்ணவும், மதுர பானத்தைப் பருகவும் அவருக்கு எண்ணமுண்டாகிறதில்லை. எப்பொருளினும் அபிமானமற்று மகான்களைப்போல் விளங்குகின்றார். ராஜாங்க முயற்சியும் காணோம். ஏதேனும் துன்பம் நேர்ந்தால் அதற்குத் துக்கிப்பது மில்லை. 'துன்பச் செயல்களிலேயே ஆயுள் கழிகிறதே' என்று இரக்கத்தோடு சொல்லுகிறார். சம்பத்து எப்பொழுதும் ஆபத்துக்கிடமென்று பொருளை எல்லோர்க்கும் வாரி இறைக்கின்றார். அவருடைய உள்ளக் கருத்து இன்னதென விளங்கவில்லை. எந்த மகானுபவர்தாம் இவருக்கு உலகானுபவத்தைப் போதித்துத் திருப்புவாரோ தெரியவில்லை.

தசரதர்.—(விசுவாமித்திரரை நோக்கி மனவருத்தத்தோடு,) எனக்கொன்றும் தோன்றவில்லையே! (கலங்குகிறார்.)

விசுவாமித்திரர்.—சக்கரவர்த்தி! நீ கலங்கவேண்டா. கூட்டத்தினின்றும் பிரிந்த மானைப்போலத் தயங்கி நிற்கும் பெருந்தகையாகிய இராமனை இங்கே அழைத்துவரச் செய். இந்த மயக்கம் அவனுக்கு ஆசையினாலும், ஆபத்துக்களினாலும் வந்ததன்று. விவேகத்தினால் வந்த ஞானோதயம்.

தசரதர்.—(ஏவலாளனை நோக்கி) இராமச்சந்திரனை அழைத்து வா.

[ஏவலாளன் போகின்றான். பிறகு இராமர் வருகிறார்; தந்தையை முதலில்வணங்குகிறார்;பின்பு வசிஷ்டர்,விசுவாமித்திரர்முதலிய முனிவர்களை வணங்குகிறார். மற்றையோர் இராமரை வணங்குகின்றனர். அவரவர் வணக்கங்களை அவரவர் தகுதிக்குத் தக்கபடி தலையைத் தாழ்த்தலாலும், 'ஆஹா, என வாயாற் சொல்லலாலும், கண்ணாற் பார்த்துத் தலையை அசைத்தலாலும், அங்கீகரிக்கிறார். 'இராமச்சந்திரா! என் மடியில் வந்துட்கார்' என்று தசரதர் சொல்லுகிறார். இராமர் 'வேண்டா. நான் இங்கேயே

உட்காருகிறேன்' என்று கூறித் தம் கையில் மடித்துவைத்திருந்த ஒரு சவுக்கத்தை, அங்கிருந்த பீடம் ஒன்றின்மேல் விரித்து உட்காருகிருர்.]

**தசரதர்.**—இராமச்சந்திரா! நற்குணங்களுக்கெல்லாம் இருப்பிடமாய் இருக்கிற நீ, எந்நேரமும் மனந்தளர்ந் திருக்கக் காரணம் என்ன? உனது அழகிய தேகம் மெலிந்து வாடி யிருக்கின்றதே! உன் மனத்தைப்பற்றி வருத்தும் துயர் இன்னதெனத் தந்தையாகிய நான் அறியக்கூடாதா? நமது குலகுரு வசிஷ்டர், தவசிரேஷ்டராகிய விசுவாமித்திரர் முதலிய மகான்களெல்லாம் உன்னை மிகவும் அருமையாய்ப் பாராட்டி வருகின்றனரே! அவர்களிடமேனும் உன்னுடைய குறையைத் தெரிவிக்கக் கூடாதா?

**வசிஷ்டர்.**—விஷயங்களை எளிதில் வென்ற அதிசூரா! அறிவில்லாதவர்களுக்கு உரியதாயிருக்கிற இந்தத் துக்க சமுத்திரத்தில் நீ ஏன் ஐயா வீழ்கிருய்?

**விசுவாமித்திரர்.**—கல்வீட்டை எலி யறுப்பதுண்டோ? உன்னையும் துயரம் பிடிப்பதுண்டோ? உன் மனத்திலுள்ளது எது? இராமச்சந்திரா! அதைச் சொல்வாயானல் நீ இச்சித்ததை அடையலாம்; உன்னைப்பற்றி வருத்தும் மனோ துக்கமும் திரும்பாமல் ஒழியும். ஆதலால், ஐயா, உன் எண்ணத்தைக் கூசாமற் சொல்.

**இராமர்.**—

வேதநூற் பிராயநூறு மனிதர்தாம் புகுவரேனும்
பாதியு முறங்கிப் போகு நின்றதிற் பதினையாண்டு
பேதை பாலகனதாகும் பிணிபசி மூப்புத் துன்பம்.

மாந்தர்க்கு வயது நூறல்லதில்லை. அந்த நூறுவயதும் ஒருவன் .வாழ்வதாக வைத்துக்கொண்டாலும், அதிற் பாதி உறக்கத்தில் கழியும்; எஞ்சிய ஐம்பதில் பதினைந்து நன்று தீதறியாப் பாலப் பருவமாய்க் கழிகின்றது. மீந்துள்ள சில்லாண்டுகளுக்குள்ளே நேருந் துன்பங்களோ கணக்கில.

வேட்டன பெறுமை துன்பம்; விழைநரைப் பிரிதல் துன்பம்;
மோட்டெழில் இளமை நீங்க மூப்புவந் தடையில் துன்பம்.

ஒன்றை விரும்பி அது கிடைக்காவிட்டால் துன்பம். நமக்குப் பிரியமானவர்களை விட்டுப் பிரிதல் துன்பம்.

இளமை நீங்கி வயோதிகம் வந்தால் துன்பம். இப்படி நமது வாழ்நாள் முழுதும் துன்பமாகவே முடிகின்றதே.

[வசிஷ்டர் இராமருக்குப் பல நியாயங்களை எடுத்துக் காட்டி வாழ்க்கையின் பயனை வலியுறுத்தி ஞானோபதேசஞ் செய்கின்றனர். பிறகு தசரதர் இராமரையும் இலக்ஷ்மணரையும் விசுவாமித்திரரிடம் ஒப்புவிக்க, அவர் அவர்களை அழைத்துக் கொண்டுசெல்கிறார்.]

---

## 7. மெய்ப்பொருணயனார்

சேதிநாட்டிலே, திருக்கோவலூரிலே, மலையமானாட்டாருக்கு அரசரும், வேதாகமங்களின் உண்மையை அறிந்தவரும், சிவனடியார்களுடைய திருவேடத்தையே மெய்ப்பொருளெனச் சிந்தைசெய்பவருமாகிய மெய்ப்பொருணயனாரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் தம்முடைய இராச்சியத்தைத் தருமநெறி தவறாமல் நடத்தியும், தம்மை எதிர்த்த பகைவர்களை ஜயங்கொண்டும், சிவாலயங்களெங்கும் நித்திய நைமித்திகங்களைச் சிறப்பாக நடத்தியும், சிவபக்தர்கள் வந்தபொழுது மனமகிழ்ச்சியோடும் வேண்டிய திரவியங்களைப் பூர்த்தியாகக் கொடுத்தும் வந்தார்.

இப்படி நடக்கும் காலத்திலே, முத்திநாதன் என்கின்ற ஓரரசனானவன் அவரை வெல்லுதற்கு விரும்பி, யுத்த சந்நத்தனாகி, அவரோடு பொருது, யானைகுதிரை தேர் காலாள் என்னுஞ் சேனைகளைப் பலமுறை இழந்து, தோற்று, அவமானப்பட்டுப் போனான். பின்பு அவன் யுத்தத்தினாலே அவரை ஜயிக்கமாட்டாதவனாகி, அவரிடத்திலே இருக்கின்ற அடியார் பத்தியை அறிந்து, விபூதிதரிக்கின்ற அவ்வடியார் வேடங்கொண்டு அவரைக் கபடத்தினால் வெல்ல நினைந்து, சரீரமுழுதிலும் விபூதி தரித்து, சடைகளைச்சேர்த்துக்கட்டி, புத்தகக்கவளிபோலத் தோன்றுகின்ற ஆயுதத்தை மறைத்து வைத்திருக்கின்ற ஒரு கவளியை எடுத்துக்கொண்டு, திருக்கோவலூரிற் சென்று மெய்ப்பொருணயனாருடைய திருமாளிகைவாயிலை அடைந்தான். அப்பொழுது வாயிற்காவலாளர் அவனை அஞ்சலிசெய்து, "சுவாமீ! உள்ளே எழுந்தருளும்" என்று சொல்ல; அம் முத்திநாதன் உள்ளே போய், மற்ற வாயில்களையும் அப்படியே கடந்துசென்று,

இறுதிவாயிலை அடைந்தபொழுது, அவ்வாயிற் காவலாளனாகிய தத்தன் என்பவன் "இப்பொழுது இராசா நித்திரை செய்கின்றார். நீர் சமயமறிந்து போகவேண்டும்" என்றான். அதைக் கேட்ட முத்திநாதன் "நான் அவருக்குச் சாஸ்திரோபதேசம் செய்யப்போகின்றபடியால், நீ என்னைத் தடுக்கலாகாது" என்று சொல்லி, உள்ளே புகுந்து, மெய்ப்பொருளுடையனார் கட்டிலிலே நித்திரைசெய்ய அவர் மனைவியார் பக்கத்தி லிருக்கக் கண்டும், சமீபத்திலே சென்றான்.

அப்பொழுது, மனைவியார் சீக்கிரம் எழுந்து, மெய்ப்பொருளுடையனாரை எழுப்ப; அவர் விழித்தெழுந்து, அவனை எதிர்கொண்டு வணங்கி நின்று, "சுவாமீ! தேவரீர் இங்கே எழுந்தருளுதற்குக் காரணம் யாது?" என்று வினவினார். அதற்கு முத்திநாதன் "உங்கள் கடவுளாகிய பரமசிவன் ஆதிகாலத்திலே அருளிச்செய்த சைவாகமங்களுள் எவ்விடத்துங் காணப்படாத ஓராகமத்தை உமக்குப் போதிக்கும்படி கொண்டுவந்தேன்" என்றான். மெய்ப்பொருளுடையனார் அதைக்கேட்டு "இதைப்பார்க்கிலும் உயர்ந்த பேறு அடியேனுக்கு உண்டோ? அந்தச் சிவாகமத்தை வாசித்து அடியேனுக்கு அதன் பொருளை அருளிச்செய்யவேண்டும்" என்று பிரார்த்திக்க; முத்திநாதன் "பட்டத்தரசி இல்லாமல் நீரும் நானும் வேறிடத்திருக்கவேண்டும்" என்றான். உடனே மெய்ப்பொருளுடையனார் தம்முடைய மனைவியாரை அந்தப்புரத்துக்குப் போம்படி செய்து, பொய்வேடங்கொண்ட முத்திநாதனை ஆசனத்தின்மேல் இருத்தி, தாம் கீழே இருந்துகொண்டு, "இனி அருளிச்செய்யும்" என்றார். முத்திநாதன் தன் கையில் இருந்த வஞ்சகக் கவளிகையை மடியின்மேலே வைத்து, புத்தகம் அவிழ்ப்பவன்போல அவிழ்த்து, மெய்ப்பொருளுடையனார் வணங்கும்போது, அக்கவளிகையில் மறைத்து வைத்த உடைவாளை எடுத்து, அவரைக் குத்த; அவர் சிவவேடமே மெய்ப்பொருளென்று, அவனை வணங்கினார். அம் முத்திநாதன் உள்ளே புகுந்தபொழுதே "இராசாவுக்கு என்ன அபாயம் சம்பவிக்குமோ?" என்று மனசை அங்கேயே செலுத்திக்கொண்டிருந்த தத்தனென்பவன் நொடியளவிலே உள்ளே புகுந்து, தன் கைவாளினால் அப்பகைவனை வெட்டப் போனான். அதற்குமுன் உடை

வாளினாலே குத்தப்பட்டு இரத்தஞ்சொரிய விழப்போகின்ற மெய்ப்பொருணயனார், விழும்பொழுது, "தத்தனே! இவர் சிவனடியாராதலால் இவருக்கு ஓரிடையூறும் செய்யாதே" என்று கையினாலே தடுத்து விழுந்தார். அப்பொழுது தத்தன் மெய்ப்பொருணயனாரைத் தலையினால் வணங்கி, அவரைத் தாங்கி, "அடியேன் செய்யவேண்டிய குற்றேவல் யாது?" என்று கேட்க; மெய்ப்பொருணயனார் "வழியிலே இவருக்கு யாவரொருவரும் இடையூறு செய்யாதபடி இவரை அழைத்துக்கொண்டுபோய் விடு" என்று சொன்னார். அப்படியே தத்தன் முத்திநாதனை அழைத்துக்கொண்டு போம்பொழுது அம் முத்திநாதன் இராசாவைக் குத்தின சங்கதியை அறிந்தவர்களெல்லாரும் அவனைக் கொல்லும்படி வந்து சூழச்சூழ, அவர்களெல்லாரையும், "இந்தச் சிவபத்தருக்கு ஒருவரும் இடையூறு செய்யாதபடி இவரை அழைத்துக் கொண்டுபோய் விடும்பொருட்டு இராசாவே எனக்கு ஆஞ்ஞாபித்தார்" என்றுசொல்லி, தடுத்தான். அவர்களெல்லாரும் அதைக் கேட்டவுடனே பயந்து நீங்கிவிட, தத்தன் அவனை அழைத்துக்கொண்டு நகரத்தைக் கடந்து சென்று, அவனுக்குரிய காட்டுவழியிலே அவனை விட்டு, நகரத்துக்குத் திரும்பி, சிவவேடங்கொண்ட முத்திநாதனை யாதொரு இடையூறு வாராமல் அழைத்துக்கொண்டு போய்விட்ட சமாசாரத்தைக் கேட்பதற்கு விரும்பி முன்னேயே நீங்கிவிடக்கூடிய உயிரைத் தாங்கிக்கொண்டிருக்கும் மெய்ப்பொருணயனாருக்கு முன் சென்று, வணங்கி நின்று, "சிவபத்தரை இடையூறு ஒன்றும் வாராதபடி கொண்டுபோய்விட்டேன்" என்று சொன்னான். அதைக்கேட்ட மெய்ப்பொருணயனார் "இன்றைக்கு நீ எனக்குச் செய்த உபகாரத்தை வேறார் செய்ய வல்லவர்" என்று சொல்லி, பின்பு தமக்குப் பின் அரசாளுதற்குரிய குமாரர்களையும் மந்திரி முதலானவர்களையும் நோக்கி, சைவாகம விதிப்படி விபூதிமேல் வைத்த அன்பைப் பாதுகாக்கும்படி போதித்து, கனகசபையிலே ஆனந்தத் தாண்டவம் செய்தருளுகின்ற சபாநாதரைத் தியானம்பண்ணினார். அப்பொழுது சபாநாதர் மெய்ப்பொருணயனாருக்குத் தோன்றி, அவரைத் தம்முடைய திருவடியிலே சேர்த்தருளினார்.

# 8. சகுந்தலை

[வேட்டை குறித்துக் காட்டுக்குச் சென்ற துஷ்யந்தன், கண்வர் ஆசிரமத்தைக்கண்டு ஆசிரமவாசிகளைத் தரிசிக்க விரும்பி, ஸாரதியைத் தேரோடு ஓர் இடத்தில் நிறுத்திவிட்டுத் தான் மட்டும் அங்கே சென்றான். அங்கே சகுந்தலை தன் தோழிமார் அனசூயை, பிரியம்வதை என்னும் இருவரோடு மலர்ச்செடிகளுக்கு நீர்வார்த்துக் கொண்டிருந்தாள். துஷ்யந்தன் ஒரு செடி மறைவிலிருந்து அவள் அழகைப் பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு வண்டு, தூரத்தியும் போகாமல், சகுந்தலையின் முகத்தை நாடிப் பறந்து பறந்து வந்தது. தன்னைக் காட்டிக்கொள்வதற்கு இதுவே சமயமென்று 'ஆசிரமப் பெண்களை அவமதித்நடப்பவன் யார்' என்று கேட்டுக்கொண்டு அவர்கள் எதிரே சென்றான் துஷ்யந்தன். சகுந்தலையின் தோழியர் அவனை விருந்தாக ஏற்று உபசரித்தனர். பிறகு,]

**பிரியம்வதை.**-[மறைவாய், அனசூயையை நோக்கி.] பெருந்தன்மையும் அழகும் விளங்கியிருக்கின்றார்; உட்கருத்தைப் பிறருக்கு வெளியிடாதவராய்க் காண்கிறார்; சுகதுக்கங்களில் மாறுதல் அடையாத சுபாவமுடையவராய்த் தோற்றுகிறார்; இசைவாகவும் இனிமையாகவும் பேசுகிறார்; உயர்குலத்திற் பிறந்த உத்தமரா யிருக்கின்றாரே; இவர் யாரோ?

**அனசூயை.**—எனக்குக்கூட இது விநோதமாயிருக்கின்றது; நான் அவரைக் கேட்கின்றேன்; (உரக்க) தங்களுடைய இனிய வார்த்தைகளால் எனக்கு ஒருவிதத் துணிவு உண்டாயிருக்கின்றது; அதனால், நான், தங்களுடன் பேச விரும்புகின்றேன்: எந்த அரசகுலம், தங்கள் பெருந்தன்மையால் விளக்கமுறுகின்றது? எந்தத் தேசம், தற்காலம், தங்கள் பிரிவாற்றாமல் வருந்துகின்றது? எந்தக் காரணத்தால், தங்கள் அருமைத் திருமேனி, தபோவனத்தை உற்று, அதனில் துயர்பெற்று, வருந்துகின்றது?

[துஷ்யந்தன் தன் பெயரை வெளியிடாமல் தான் மன்னனால் அனுப்பப்பட்ட நீதிமத விசாரணைத் தலைவன் என்று தெரிவித்தான். சிறிது நேரம் அவன் சகுந்தலையின் தோழிமாரோடு பேசிக்கொண்டிருந்தான். அப்பொழுது அவனுடைய பரிவாரங்கள் அவனைத் தேடிக்கொண்டு வர, அவன் ஆசிரமப் பெண்களிடம் விடைபெற்று நீங்கினான் ஆயினும், சகுந்தலைமீது கொண்ட

காதலால் பட்டணத்துக்குத் திரும்பிப் போக மனமில்லாமல் ஆசிரமத்துக்குச் சமீபமாகவே கூடாரம்அடித்துச் சிலநாள் தங்கியிருந்தான். அப்பொழுது கண்வமுனிவரின் சீடர்கள், தங்கள் யாகத்துக்குக் கண்வமுனிவரில்லாமையால் இராக்ஷதர்களால் இடையூறு நேருகிறதென்று கூறி, அதை நீக்கச் சில இரவு தங்கள் ஆசிரமத்தில் தங்கியிருக்க வேண்டுமென்று துஷ்யந்தனைக் கேட்டுக் கொண்டார்கள். துஷ்யந்தன் மிகுந்த விருப்புடன் அதற்கிணங்கிக் கண்வர் ஆசிரமத்திற் சென்று தங்கிவரத்தலைப்பட்டான். அங்ஙனம் வசித்துவருகையில் துஷ்யந்தனும் சகுந்தலையும் பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர்க்குள்ள அன்பை வெளிப்படுத்திக் கொள்ளச் சமயம் நேர்ந்தது. அப்போது இருவரும் தமது அன்பை வெளியிட்டுக் காந்தர்வ முறைப்படி விவாகஞ்செய்துகொண்டனர். பின்னும் சில நாட்களுக்கெல்லாம் துஷ்யந்தன் தன் நகர்க்குச் செல்லவேண்டியிருந்ததால் தனது கணையாழியைச் சகுந்தலையிடம் ஞாபகார்த்தமாகக் கொடுத்து விடைபெற்றுச் சென்றான். சில நாட்களுக்குப் பின் கண்வமுனிவர் தமது ஆசிரமத்துக்கு வந்து, சகுந்தலை துஷ்யந்தனைக் காந்தர்வ முறையில் விவாகஞ் செய்துகொண்டதறிந்து சந்தோஷமுற்று அவளை அவள் கணவனிடம் அனுப்ப விரும்பி அதற்கான ஏற்பாடுகள் செய்தார். அப்பொழுது,]

கண்வர்.—இன்று சகுந்தலை என்னைப் பிரிந்துபோய் விடுவாள் என்று எண்ணும்போதே, எனது மனம் விசனம் மிகுந்திருக்கின்றது; புறப்படும்போது கண்ணீர் விடுவது அனுசிதமென்று நினைத்துக் கண்ணீரை அடக்கிக்கொண்டிருப்பதினால் தொண்டை கம்மிக்கொண்டு, பார்வை மழுங்கித் தவிக்கின்றேன். உலக இன்பங்களையொழித்துக் காட்டில் வசிக்கும் துறவியாகிய எனக்கே, வளர்த்த மகளாசையால்,இத்தனை விசனம் மிகுந்திருக்கிறதென்றால், நாட்டில் வாழும், கிரகஸ்தாசிரமத்தில் இருக்கும் ஒருவனுக்கு, அவன் பெற்ற மகள் பிரிந்துபோகுங் காலத்தில் உண்டாகும் விசனத்தை அளவிட்டுரைக்கவும் ஆகுமோ? (சுற்றிவருகிறார்.)

பிரியம் வதையும் அனசூயையும்.—அன்புள்ள சகுந்தலா! உனது அலங்காரம் முடிந்தது; இப்போது இந்தப் பட்டாடைகளிரண்டையும் உடுத்திக்கொள்.

(சகுந்தலை எழுந்து அவ்வாடைகளை உடுக்கின்றாள்.)

கௌதமி.—குழந்தாய்! இதோ உனது தந்தை, ஆனந்தக் கண்ணீர்ப் பெருக்கோடு மகிழ்ச்சி மிக்கவராய் உன்

னைத் தழுவிக்கொள்பவரைப்போல வருகின்றார். ஆகையால் வழக்கம்போல அவருக்கு வந்தனம் செலுத்து.

சகுந்தலை.—(நாணத்தோடு) அப்பா! தங்களை நமஸ்கரிக்கின்றேன்.

கண்வர்.—எப்படி சர்மிஷ்டையை யயாதிவேந்தன் உயர்வாக மதித்தானோ, எப்படி, அவள் அவனுக்குப் பூருவனைப் பெற்றுக் கொடுத்தாளோ, அப்படியே, உனது கணவன் உன்னை உகந்து வாழக்கடவன்; உலகெலாம் ஒருகுடைக்கீழ் ஆளவல்ல ராஜகுமாரனை நீபெறக்கடவை.

கௌதமி.—இது ஆசீர்வாதமாகக் கூறப்பட்டதாயினும் வாஸ்தவத்தில் வரமேயாகும்.

கண்வர்.—குழந்தாய்! இங்கேயுள்ள யாகத்தீயைச்சுற்றி வா.

(எல்லாரும் சுற்றிவருகிறார்கள்; கண்வர், ருக்வேத சாரமாயுள்ள பின்வரும் கருத்தமைந்த ஒரு செய்யுளைக்கூறி அவளை ஆசீர்வதிக்கின்றனர்.)

நான்கு பக்கங்களிலும் தருப்பை சூழ்ந்த யாகமேடைமேல் விளங்கும் குழிகளில், சமித்துடன்கூடி எரியும் ஓம திரவிய வாசனையால், பாவமனைத்தையும் பறக்கடிக்கின்ற தக்ஷிணாக்நி, காருகபத்தியம், ஆகவனீயம் ஆகிய மூன்று நெருப்புகளும் உன்னைக் காக்கக்கடவன. குழந்தாய்! இப்போது நீ புறப்படலாம்; (சுற்று முற்றும் பார்த்து) சார்ங்கரவன் முதலியோர் எங்கே?

(சார்ங்கரவன் வருகின்றான்.)

சார்ங்கரவன்.—நாங்கள் இதோ இருக்கிறோம் சுவாமீ!

கண்வர்.—சார்ங்கரவா! உன் தங்கையை அழைத்துக் கொண்டு போ.

சார்ங்கரவன்.—அம்மணி! இவ்வழியே வா, இவ்வழியே வா.

(எல்லாரும் நடக்கிறார்கள்.)

கண்வர்.—வனதேவதைகள் வசிக்கும் ஆசிரமத்து மரங்காள்! எவள் உங்களுக்கு ஜலம் வார்க்காத முன்பு தான் ஜலபானம் செய்ததில்லையோ, எவள், தளிர்களால் அலங்கரித்துக்கொள்ள அதிக விருப்பமுள்ளவளாயிருந்தும்

உங்களிடத்திலுள்ள வாஞ்சையினால் உங்களது குளிர் தளிரை ஒருபோதும் கொய்ததில்லையோ, எவள், உங்களது முதற் பூப்பின் காலத்தில் உற்சவங்கொண்டாடி மகிழ்ந்தனளோ, அந்த அருங்குணவதியாகிய சகுந்தலையை நீங்கள் விடைகொடுத்து அனுப்புவது உங்கள் கடமையாம். (குயில் கூவுதலைக்கேட்டு) மரங்களிற் குயில்கள் கூவுவதனால், அவைகள் சகுந்தலைக்கு விடை தந்தோம் என்பது போலிருக்கின்றது.

(ஆகாயத்தில் ஒருவாக்கு)

தாமரை மலர்ந்த தண்ணீர்த் தடாகங்கள் இவள் செல்லும் வழிகளில் எங்கெங்கும் இருக்கக் கடவன; நிழலைக் கொடுக்கும் மரங்கள், இவள் செல்லும் வழியோரங்களில் இருந்து வெய்யிலைத் தடுக்கக் கடவன; வழித்தரையிற் புழுதி, தாமரைமலர்த் தாதுபோல மெத்தென்றிருக்கக் கடவது; இவட்கு நிரம்ப இன்பமாக, இவள் செல்லும் திசையை நோக்கித் தென்றல் வீசக்கடவது.

(அனைவரும் அதிசயத்தோடு கேட்கின்றார்கள்.)

கௌதமி.—குழந்தாய்! ஆசிரமத்துத் தெய்வங்கள் உனக்கு, போக உத்தரவு கொடுத்தன; அவைகள் உனது சொந்த சுற்றங்கள் போல்வன. ஆகையால், அவைகளுக்கு வந்தனம் செய்.

சகுந்தலை.—(அவைகளை வணங்கினபடியே அப்பால் நடந்து மறைவாய்) அன்புள்ள பிரியம்வதா! எனது கணவரைக் காணும் ஆவல் அதிகரித்திருந்தும், எனக்கு, இந்த ஆசிரமத்தை விட்டுப் போவதென்றால், எடுத்தடி வைப்பதற்குக் கஷ்டமா யிருக்கின்றது.

பிரியம்வதை.—ஆசிரமத்தை விட்டுப் பிரிவதற்கு நீ மாத்திரமா வருந்துகின்றனை? உன்னை விட்டுப் பிரியும் இந்தச் சமயத்தில், ஆசிரமம் முழுவதும் அனுபவிக்கும் மாசிரமத்தைக் கவனித்துப் பார்: தமது வாய்களிற் கௌவிய தருப்பைப் புல்லை, மான்கள் நழுவவிடுகின்றன; ஆடும் மயில்கள் அசைவற்றிருக்கின்றன; பழுத்த இலைகளை உதிர்க்குஞ்செடிகள் கண்ணீர் சிந்துவபோலிருக்கின்றன.

சகுந்தலை.— (அப்போதுதான் ஞாபகம் வந்து) அப்பா! எனது தங்கைக்கொடியாகிய வனஜோத்ஸ்னியைக்கண்டு பயணஞ் சொல்லிவிட்டு வருகிறேன்.

கண்வர்.—நீ அதனிடத்தில் வைத்திருக்கிற சகோதர அன்பை நானறிவேன். இதோ, அது இந்தத் தென் புறத்தி லிருக்கிறது.

சகுந்தலை.—(கொடியை நெருங்கி) ஓ, வனஜோத்ஸ்னி! நீ மாமரத்தோடு கூடியிருந்தபோதிலும், இப்புறந் திரும்பி உனது கிளைக்கைகளால் என்னைத்தழுவிக்கொள்; இன்று முதல், நான், உன்னைவிட்டு நெடுந்தூரத்தில் இருக்க வேண்டியவ ளாகிறேன்.

கண்வர்.— உன்னுடைய உத்தமகுண விசேஷத்தால் உனக்குத் தகுந்த வரனைப்பெற்றிருக்கின்றனை; இதுவே, எனது நெடுநாளைய எண்ணம். இந்த மல்லிகைக் கொடியும், மாமரத்தோடு கூடியிருக்கின்றது. ஆகையால் எனக்கு உங்கள் இருவரைப்பற்றிய கவலைகளும் ஒழிந்தன. நீ க்ஷேமமாய்ப் போய் வா.

சகுந்தலை.—(தனது தோழிமாரை நோக்கி) தோழிகாள், இம் மல்லிகைக் கொடியை, உங்கள் இருவர்கையிலும் ஒப்புவிக் கின்றேன்.

பிரியம் வதையும் அனசூயையும்.—எங்களை யார் கையில் ஒப்புவிக்கின்றாய்? (கண்ணீர் சொரிகின்றனர்.)

கண்வர்.—அனசூயா! அழாதே—நீங்களிருவரும் அல்லவா, சகுந்தலையைத் தேற்றவேண்டும்.

(எல்லாரும் போகிறார்கள்.)

சகுந்தலை.—அப்பா! இதோ, இந்த வீட்டுக் கொல்லையில் மேய்ந்துகொண்டிருக்கும் பெட்டை மான் பூர்ண கர்ப்பமாயிருக்கிறபடியால் தள்ளாடி நடக்கின்றது; இது குட்டிபோட்டுச் சௌக்கியமானவுடன், எனக்கோர் ஆள் அனுப்பிச் சங்கதி தெரிவியுங்கள்.

கண்வர்.—அப்படியே, மறக்கமாட்டோம்.

சகுந்தலை.—(நடை தடுக்கப்பட்டு நின்று) விட்டு விட்டு என் ஆடையைக் கௌவி யிழுத்து உறுய்ந்து நிற்பது எது?

(திரும்பிப் பார்க்கிறாள்.)

கண்வர்.—குழந்தாய்! எந்த மான் வாயில் கூர்மையாகிய தருப்பைப் புல்லின் நுனி குத்திக்கொண்டபடியால் உண்டான புண்ணை இங்குதி நெய்யைத் தடவி நீ ஆற்றினையோ, சாமாகமென்னும் தானியத்தை நின் கைநிறைய அள்ளி, எந்த மானை இதமாய் ஊட்டி உன் பிள்ளையைப்போலப் பிரியமாய் வளர்த்தையோ, அந்தக் குட்டிமானே உன்னை விடாது பின் தொடர்ந்து வருகின்றது.

சகுந்தலை.—குழந்தாய்! நீ ஏன் என்னைப் பின்தொடர்கின்றாய்; நான் தான், உங்களை எல்லாம் விட்டுப்போகத் துணிந்தவளானேனே! நான் என்னவோ, உன்னைச் சின்னகுட்டியிலேயே, உன் தாய் இறந்தவுடனே, எடுத்து வந்து வளர்த்தேன்; இப்போதுகூட நான் போய்விட்ட பிறகு எனது தந்தையார் உன்னைப் பாதுகாப்பார். நீ திரும்பிப் போ. (அழுதுகொண்டே போகிறாள்.)

கண்வர்.—அழாதே! அழாதே! கண்ணீர் பெருகி நீண்ட இறையினையுடைய உன் கண்களின் பார்வையை மறைக்கும்; அதனால் மேடு பள்ளமாய் உள்ள வழிகளில் உனக்கு அடி தடுமாறும்.

சார்ங்கரவன்.—தமது சுற்றத்தாரைப் பயணங்கூட்டி விடுபவர்கள், தண்ணீர்க் கரை வரையில் தான் வரலாம் என விதியிருக்கின்றது. இதோ இங்கே ஏரிகரை குறுக்கிட்டிருக்கிறது. ஆகையால், ஸ்வாமின் வேண்டிய விஷயங்களைச் சொல்லிவிட்டுத் திரும்பிச் செல்லலாம்.

கண்வர்.—ஆனால், இந்த ஆலடி நிழலில் அனைவருஞ் சிறிதுபோது தங்குவோம்.

(எல்லாரும் போய்த் தங்குகின்றார்கள்.)

கண்வர்.—(தமக்குள்) மாட்சிமை தங்கிய துஷ்யந்த மன்னவர்க்குத் தகுதியான சமாசாரம் என்ன சொல்லி அனுப்பலாம்! (யோசிக்கிறார்.)

சகுந்தலை.—(மறைவாய்) தோழீ! அந்தப் பெடைச் சக்ரவாகப் பக்ஷியைப் பார்! அது தனது சேவலைக் காணமல் வருந்திப் புலம்புகின்றது; சேவல், தூரத்திலும் இல்லை; அருகிலுள்ள தாமரை இலைகளிலேயே மறைந்திருக்கின்றது. இதைக் கண்டதனால் என் மனம் வருந்துகின்றது.

**அனசூயை.**—தோழீ, சகுந்தலா! அப்படிச் சொல்லாதே. தனது சேவலைப் பிரிந்த பெடையும், விசன மிகுதியால் விடியாது நீண்ட இரவைக் கடக்கும் இயற்கை உள்ளதாகும். பிரிவின் துயரம் பெரிதே. ஆயினும், மறுபடியுங் கூடுவோம் என்னும் கோரிக்கையால், அது பொறுத்துக் கொள்ளக் கூடியதாகும்.

**கண்வர்.**—சார்ங்கரவா! நீ, சகுந்தலையை அரசனெதிரிற் கொண்டுபோய் விட்டு, நான் சொன்னதாகப் பின் வருகிறபடி சொல்லக் கடவாய்:—

**சார்ங்கரவன்.**—தேவரீர் கட்டளைப்படியே.

**கண்வர்.**—"எமது *தவந்தான் எங்களுக்கு ஆஸ்தியென்று எண்ணும் தவசிகள் நாங்கள். உமது ராஜகுல மேன்மையையும், உற்றாராகிய நாங்கள் இல்லாத காலத்தில், இவள், உம்மை விரும்பித் தனதாசையைக் குறைவின்றி உம்மிடத்திற் செலுத்தியதையும் உள்ளபடி யோசிக்கக் கடவீர். அரண்மனை ஸ்திரீகள் பலர் உமக்கிருப்பினும், அவர்களைக் காட்டிலும் இவள் தாழ்ந்து வருந்தாமல் ஆதரிக்கக் கடவீர். அப்பால் இவளதிர்ஷ்டம்போலாகட்டும். இதற்கு மேலும் பெண் வீட்டார் பேசலாகாது."

**சார்ங்கரவன்.**—சங்கதி தெரிந்து கொண்டேன்.

**கண்வர்.**—மகளே! உனக்கு இப்போது கொஞ்சம் புத்திமதி சொல்லவேண்டியிருக்கின்றது; நாங்கள் வனவாசிகள் ஆயினும் உலக விவகாரமும் அறிந்திருக்கின்றோம்.

**சார்ங்கரவன்.**—அறிஞர் அறியாத அறிவு கிடையாது.

**கண்வர்.**—உனது புருஷன் வீட்டில் நீ வாழ்கிற காலத்தில், மூத்தோரிடத்தில் முகக்கோணலில்லாமல் ஏத்தியவரையிறைஞ்சிடுவாய். சக்களத்திமார்களைத் தோழியர்போல நேசிக்கக் கடவாய்; உனது புருஷர் கோபித்தாலும், நீ அவரை மீட்டும் கோபிக்காதே; வேலையாட்களிடத்திற் பக்ஷமாயிரு; அணியாடை முதலிய செல்வவளங்

---

* தவந்தான் என்பதற்கு தவந்தவிர ஆஸ்தி எங்களுக்கு வேறில்லை யென்றும், தவமே ஆஸ்தி மற்றெல்லாம் நாஸ்தியென்றும், இருபொருள் படுகின்றமை காண்க.

களைக் கண்டு நீ செருக்கடையாதே. இப்படி வாழ்பவர்களே கற்புடைய ஸ்த்ரீகள்; 'எப்படிவாழ்ந்தால் என்' என்று உல்லங்கனஞ் செய்யும் பெண்களே குலத்தைக் கெடுக்கவந்த கோடாலிக் காம்பாவார்கள். இந்தப் புத்திமதிகளைக் குறித்துக் கௌதமியெண்ணம் என்னவோ?

கௌதமி.—புருஷன்வீட்டுக்குப் போகிற புதுப்பெண்ணுக்குச் சொல்லவேண்டிய புத்திமதி இவ்வளவே; இந்தப் புத்திமதியை மனத்தில் அமைத்துக்கொள்.

கண்வர்.—குழந்தாய்! என்னையும் உனது தோழிமார்களையும் தழுவிக்கொள்.

சகுந்தலை.—அப்பா, என் சகிமார் பிரியம்வதையும் அனசூயையும் இங்கிருந்தே திரும்பி ஆசிரமத்துக்கு வந்துவிடுவார்களோ?

கண்வர்.—அவர்களுக்குக்கூட கலியாணம் ஆகவேண்டியிருக்கின்றது. அவர்கள் உன்னுடன் நகரத்துக்கு வருவது சரியன்று. கௌதமி வருவாள்.

சகுந்தலை.—(தனது பிதாவைத் தழுவிக்கொண்டு) மலயமலைச் சாரலிலிருந்து பிடுங்கியெறியப்பட்ட சந்தனச் சிறு செடிபோல, எனது தந்தையின் மடியிலிருந்து பிரிந்து நான் மற்றொரு தேசத்தில் எங்ஙனம் உயிர் பிழைத்திருப்பேன்!

கண்வர்.—என்னத்துக்கோ, இங்ஙனம் பயப்படுகின்றனை? உயர்குல வேந்தர் வேந்தனுயுள்ள ஒருவனுடைய மனைவி நீ; அவன் உன்னை விரும்பி ராஜகாரியத்தில் தனது (மந்திரத்) துணைவியாக்கிக்கொள்ளப்போகின்றான்; அதிலேயே உனது மனந்திரும்பி வேறு நினைக்க அவகாசம் இல்லாமற் போகப்போகிறது; கிழக்குத் திக்கில் உதிக்கும் சூரியன்போல, புகழ்பெறும் புத்திரன் ஒருவனைப் பெறப் போகின்றனை; ஆதலால் நீ எனது பிரிவைச் சற்றும் கவனிக்கப் போகிறதே இல்லை.

(சகுந்தலை தனது தந்தையின் பாதங்களில் விழுந்து வணங்குகிறாள்.)

---

மலயமலை—கன்னியாகுமரிக்கருகே மேற்குத் தொடர்ச்சி மலைகளில் ஒன்று.

**கண்வர்.**—நீ அடையவேண்டுமென்று நான் விரும்புகின்ற எல்லாவற்றையும் நீ அடையக்கடவாய்.

**சகுந்தலை.**—(தனது தோழியர்களை நெருங்கி) நீங்கள் இருவீரும் ஒன்ருய் என்னைத் தழுவிக்கொள்ளுங்கள்.

**பிரியம்வதையும் அனசூயையும்.**—(தழுவிக்கொண்டு) தோழீ! ஒருவேளை, அரசர் உன்னை இன்னுளெனத் தெரிந்துகொள்ளத் தாமதிப்பாராஞல், அவர் பெயர் செதுக்கியுள்ள இந்த மோதிரத்தைக் காட்டு.

(அவர்கள் அவளுக்கதனைக் கொடுக்கின்றனர்.)

**சகுந்தலை.**—இப்படி நீங்கள் கொள்ளுகிற இந்தச் சந்தேகத்தால், என் மனம் நடுங்குகின்றது.

**பிரியம்வதையும் அனசூயையும்.**—அஞ்சாதே; அன்பதிகமாஞல் கெடுதி வருமோ என அச்சமுண்டாவது வழக்கம்.

**சார்ங்கரவன்.**—சூரியன் உச்சமாஞன்; வெய்யில் ஏறியது; அம்மா! நீ சீக்கிரம் பிரயாணப்படவேண்டும்.

**சகுந்தலை.**—(ஆசிரமத்துக்கு நேராகத் திரும்பி) அப்பா! மறுபடியும் நான், இந்த ஆசிரமத்தை எப்போது காணுவேன்?

**கண்வர்.**—கவனமாய்க்கேள். நாற்கடல் சூழ்ந்த நானிலாதிபதியாகிய துஷ்யந்த மஹாராஜனுக்கு, மனைவியாய் வாழ்ந்து, நீ, புகழ்பெறும் புத்திரனெருவனை, பெற்றுக் கொடுத்து, அந்த மைந்தனுக்கு மணவினை முடித்து, முடிசூட்டி அரசனுக்கிப் பூபாரத்தை அவன்மேற் சுமத்தி, பின்பு நீயும் நினது கணவனும் இவ்வாசிரமத்தை நிச்சயமாய் அடைவீர்கள்.

**கௌதமி.**—குழந்தாய்! புறப்படுவதற்குக் குறித்த லக்கினம் தப்பிப்போகின்றது. அப்பாவைத் திரும்பிப் போகவிடு. (கண்வரைநோக்கி) இங்கே இவள் இப்படித்தான் திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டே பொழுது போக்குவாள். ஆகையால் தாங்கள் தயவுசெய்து திரும்பிவிடுங்கள்.

கண்வர்.—குழந்தாய்! என்னுடைய தபோநுஷ்டானங்களுக்குத் தடை உண்டாகின்றது.

சகுந்தலை.—(மறுபடியுந் தந்தையைத் தழுவிக்கொண்டு) அப்பா! உமது சரீரம் தவ அனுஷ்டானத்தால், இப்போதே இளைத்திருக்கின்றது. ஆகையால் என்னைப் பற்றி அதிக கவலைப்படவேண்டாம்.

கண்வர்.—(பெருமூச்செறிந்து) நிவேதனமாக நீ வாரி இறைத்த நீவாரதானியம், ஆசிரமவாசலில் முளைத்து வளரக் காணுந்தோறும், எனது கவலையும் அதுபோலவே வளரும்; கொஞ்சமேனும் குறையாது. ஆனாலும், நீமட்டும் மங்களகரமாகப் போய் வா.

(சகுந்தலை தனது துணைவரோடு செல்லுகின்றனள்.)

பிரியம்வதையும் அனசூயையும்.—(சகுந்தலையை நெடுக நோக்கி) ஆஹா! ஆஹா! சகுந்தலை வனத்தில் மறைந்து விட்டாளே!

கண்வர்.—(பெருமூச்செறிந்து) அம்மா, அனசூயா! தவத் தொழில்களில் உங்களுக்குத் துணையாயிருந்த சகுந்தலை கடைசியாகப் பிரிந்துபோய் விட்டாள். உங்கள் விசனத்தை அடக்கிக்கொண்டு என்னோடு வாருங்கள்! நான் ஆசிரமத்துக்குப் போகிறேன்.

பிரியம்வதையும் அனசூயையும்.—அப்பா! சகுந்தலை யில்லாமல் பாழடைந்து, அழகு குறைந்து, இருக்கும் ஆசிரமத்தில் நாங்கள் எப்படி நுழைவோம்?

கண்வர்.—அன்பு அதிகமாயிருப்பதால் அப்படித் தான் தோன்றும். (ஆழ்ந்த யோசனையோடு நடந்துகொண்டு) ஆஹா! சகுந்தலையை, அவள் கணவன் வீட்டுக்கனுப்பின இப்போதுதான் எனக்கொருவித ஆறுதல் உண்டாயிருக்கின்றது; மகள் எந்நாளும் மற்றவர் பொருள்; பிறரிடத்திற் பெற்ற இரவற் பொருளென்றும் இயம்பலாம். இரவற்பொருளை அதற்குடையவரிடத்தில் திருப்பிக் கொடுத்து மகிழ்வதுபோல, சகுந்தலையை அவளுக்குடையவனாகிய அவள்கணவனிடம் அனுப்பின பின்பே, என் மனம் தெளிந்து மகிழ்ந்து விளங்குகின்றது.

[இவர்கள் இங்கிவ்வாருகச் சகுந்தலையை அழைத்துக்கொண்டு சென்ற சீடர் துஷ்யந்தனுக்குத் தமது வரவைக் கஞ்சுகி மூலமாக அறிவித்தனர்.]

**கஞ்சுகி.**—அந்தோ! நான் இந்த நிலைமைக்கு வந்துவிட்டேனே! ஒருகாலத்தில், எனது அந்தப்புரக்காவல் அதிகாரத்துக்கு அடையாளமாய் என் கையிலேந்தியிருந்த இந்தச் சிங்காரத்தடி இப்போது நடக்கத் தள்ளாத கிழவனாகிய எனக்குக் கிழத்தடியாய் ஊன்றிநடக்க உதவுகின்றதன்றோ? அரசகடன் தடைபடக்கூடாது. என்றாலும், இப்போதுதான், தமது கடமைகளை முடித்து நியாயாசனத்தைவிட்டெழுந்து சென்ற அரசர்க்கு, கண்வ முனிவருடைய சிஷ்யர்களின் வரவைத் தெரிவித்துச் சிரமமுண்டாக்க எனக்கு மனம்வரவில்லை. ஆனாலும், உலகரக்ஷணை செய்வோர்க்கு ஒருகாலும் ஒழிவே கிடையாதென்பது உண்மை. கட்டின தேர்க் குதிரைகளை அவிழ்க்காமலே சூரியன் ஓட்டிக்கொண்டிருக்கிறான்; எப்போதும் காற்று ஓயாமல் வீசிக்கொண்டே யிருக்கின்றது; பூபாரத்தைச் சேஷன் விடாது சுமந்துகொண்டேயிருக்கின்றான்; ஆறிலொரு கடமைகொண்டு பாராளும் மன்னவன் தன் அதிகாரமும் அப்படியே ஓய்வின்றி விளங்கும். எனது கடமையை நான் தவருமற்செய்வதே தகுதி. (சுற்றிப்போய் உற்றுநோக்கி) தனது பரிவார யானைகளை மேயவிட்டு, தன்னந்தனியே ஓரிடத்தில் இளைப்பாறிக் கொண்டிருக்கும் அரச யானையைப்போல, வேந்தராகிய இவர், ஜனங்களைப் பெற்றபிள்ளைகளைப்போல் பாதுகாத்து, தமது இளைப்பு ஆறத் தங்கியிருக்கின்றார். (அருகேசென்று) மகாராஜாவுக்கு ஜயமங்களம் உண்டாகுக! இங்கே துறவிகள் இருவர் பெண்களுடன் வந்திருக்கின்றனர். இமயமலைச் சாரலிலிருப்பவர்களாம்; கண்வரிடத்திலிருந்து சமாசாரம் கொண்டுவந்தனர். இதைப் பற்றித் தங்கள் கட்டளைக்குக் காத்திருக்கின்றேன்.

**துஷ்யந்தன்.**—(மரியாதையோடு) கண்வரிடத்திலிருந்து சமாசாரங் கொண்டு வந்தவர்களா?

**கஞ்சுகி.**—ஆம்.

துஷ்யந்தன்.—ஆனால், உடனே, நீ போய் இதைப் புரோகிதர், சோமராதர்க்குத் தெரிவி; அவர் ஆசிரமவாசிகளுக்கு வேத விதிப்படி செய்யவேண்டிய அர்க்கிய பாத்தியாதி கடமைகளைச் செய்து, அவர்களை உள்ளே அழைத்துக் கொண்டு வரட்டும்; நான் போய் அவர்களை நல்வரவேற்பதற் குரிய இடத்தில் இருக்கின்றேன்.

கஞ்சுகி.—தங்கள் கட்டளைப்படியே.

துஷ்யந்தன்.—(எழுந்து)வேத்ரவதீ! யாகசாலைக்கு வழிகாட்டு.

பிரதீகாரீ.—இவ்வழியே வாருங்கள். (வழிகாட்டிச் செல்கின்றாள்.)

துஷ்யந்தன்.—(அரசாட்சியின் துன்பத்தைச் சொல்லிக் கொண்டே நடந்து) தான் விரும்பிய பொருளைப் பெற்றவுடனே ஒவ்வொரு பிராணியும் சந்தோஷப்படுகின்றது. ஓர் அரசனோ என்றால், தான் விரும்பிய பொருளைப் பெற்றும், பின்னும் துன்பத்தையே அடைகின்றான். ஒருவன் தான் விரும்பிய *பொருளைப் பெற்றானானால், அவனுடைய இச்சை மட்டும் தீரும். அன்றி அதனைக் காப்பாற்றுந் துன்பம் அதிகரிக்கும். ஆதலால், அரசாட்சி கைக்குடைக்குச் சமானம்; அதனைப் பிடித்தலால் † கைக்குண்டாகும் துன்பம் அதிகம், ‡ உடற்குண்டாகும் சுகம் குறைவு. (திரைக்குப் பின்னே)

|| வைதாளிகர்.—மன்னர்க்கு ஜயமுண்டாகுக.

முதல் வைதாளிகன்.—குடிகள் சுகத்தை நாடுதலே உமக்கு இயற்கை; ஒருபோதும் உமது சுகத்தை நீர் நாடுவது கிடையாது. மரமானது தனது தலையில் வெய்யிலைத் தாங்கிக்கொண்டிருந்தும், தன்னிழலில் வருபவர்களுடைய

---

*பொருள்-அரசாட்சி.

† எதிர் காற்றிற் பட்டபோது குடைபிடித்துச் செல்வோன் கைபடும்பாடு பெரும் பாடு ‡ எதிர் மழையிற்பட்டபோது குடைபிடித்துச் செல்வோன் படும்பாடு பெரும்பாடு.

||வைதாளிகர்—சமயோசிதமாய்ப் பாடும் அரண்மனைப் பாடகர்கள். அரசர்க்குக் காலவரை யறிவித்துக் கடமை முடிப்பிக்கிறவர்கள்.

இளைப்பை யகற்றுவதுபோல, சான்றோர் தமது துன்பத்தைக் கவனியாமலே, பிறர் துன்பத்தை நீக்குவார்கள்.

**இரண்டாம் வைதாளிகன்.**—செல்வம் பொருந்தியுள்ள போது மட்டும் சுற்றத்தார் கூடி இருப்பார்கள். நீரோ அப்படி இல்லை. குடிஜனங்கள், உண்மை வழியைவிட்டு விலகினால் கண்டிக்கின்றீர்; அவர்களுக்குள் நேரிடும் வழக்கறுக்கின்றீர்; அவர்களைப் பலவிதத்திலுங் காப்பாற்றுகின்றீர்; ஆதலால் உமது அன்பின் நிலைமை அதிசயிக்கத் தக்கது.

**துஷ்யந்தன்.**—மனக்கவலைகொண்ட நான் மறுபடியும் மனக்களிப்படைந்தேன். (சுற்றிச் செல்கிறான்.)

**பிரதீகாரீ.**—யாகசாலையின் சுற்றுமேடை நன்றாய்ப் பெருக்கிச் சுத்தமாயிருக்கின்றது; யாகப்பசுவும் ஒருபுறங் கட்டியிருக்கின்றது; கண்டோர் மனத்தைக் கவரக்கூடிய இந்த வாசற்படியின்மேல் ஏறுங்கள்.

(ஏறி, மெய்காப்பாளன் ஒருவனுடைய தோள்மேல், சாய்ந்து கொண்டு நிற்கிறான்.)

**துஷ்யந்தன்.**—வேத்திரவதி! எதற்காக இம்முனிவர்களைக் கண்வர் அனுப்பியிருப்பாரோ? இந்த ருஷிகள் தவத்திற் கென்ன குறை நேரிட்டதோ, துன்மார்க்கர்களில் எவர்களேனும் தவவன மிருகங்களுக்குக் கெடுதிசெய்தார்களோ, எனது தீவினையின் முதிர்ச்சியால், தவவனக் கொடிகள் மலராதிருந்தனவோ, இப்படிப் பலவாறு என் மனது பரிதபிக்கின்றது.

**பிரதீகாரீ.**—இந்த ருஷிகள் தம்தம் தவகருமங்கள் சரிவர நடைபெறுவதால், மனமகிழ்ந்து, மன்னவராகிய தங்களுக்கு மரியாதை செய்ய வந்திருக்கிறார்கள் என்று எண்ணுகின்றேன்.

(அப்போது, முன்னே கஞ்சுகியும் புரோகிதரும் நடந்து வழிகாட்ட, இடையில் சகுந்தலையோடு கௌதமி செல்ல, பின்னே முனிவர்கள் வருகின்றனர்.)

**கஞ்சுகி.**—சுவாமிகாள்! இப்படி வாருங்கள்; இப்படியே வாருங்கள்.

சார்ங்கரவன்.—சாரத்வதா! இந்த அரசர், எப்போதும் நல்வழிவிட்டு அல்வழியிற் செல்லாத பரிசுத்தபுருஷோத்தமர்; இவர் அரசாட்சியில் அடங்கிய குடிகளில், கீழ்க்குலத்தோரும் அல்வழியிற் செல்லார்; ஆயினும் மனிதர் மிகுந்தில்லாத் தவவனங்களிலிருந்து பழகிய எனக்கு இந்த மாந்தர் நிறைந்த அரண்மனை, நெருப்புச் சூழ்ந்த வீடுபோலத் தோன்றுகிறது.

சாரத்வதன்.—நகரத்தை அடைந்தவுடனே உமக்கு இப்படித் தோன்றுவது நியாயந்தான். எண்ணெய் தேய்த்துக் குளித்தானவன் எண்ணெய் தேய்த்துக்கொண்டு இனிக் குளிப்பவனையும், நல்வழியிற் செல்வோன் அல்வழியிற் செல்வோனையும், தூங்கி விழித்துக்கொண்டவன் தூங்கிக் கொண்டிருப்பவனையும், சுயேச்சையில் திரிபவன் சிறையில் இருப்பவனையும், கண்டால் எப்படி எண்ணுவார்களோ, அப்படி நான், சிற்றின்பத்தில் மூழ்கிவாழும் இம் மனிதரைக் கண்டு மதிக்கின்றேன்.

சகுந்தலை.—(தான் என்னவோ அவசகுனங்கண்டு) அந்தோ! ஏனோ என் வலக்கண் துடிக்கின்றது!

கௌதமி.—குழந்தாய்! உனக்கு வந்த துன்பம் நீங்கக் கடவது; உனது கணவன் வீட்டுக் குலதெய்வங்கள் உனக்கு நன்மை உண்டாக்கக் கடவன.

(நெடுக நடக்கிறாள்.)

புரோகிதர்.—(அரசனைச் சுட்டிக்காட்டி) நான்கு வருணத்தினரையும் நான்கு ஆசிரமத்தினரையும் தத்தம் நிலையில் தவறாது காப்பவராகிய மன்னவர், தமது ஆசனத்தைவிட்டெழுந்து, உங்கள் வரவை எதிர்நோக்கி நிற்கின்றார்; அவரைப் பாருங்கள்.

சார்ங்கரவன்.—ஓ, பிராமணோத்தம! இது மிகவும் கொண்டாடத்தக்க விஷயமேயாயினும், நாங்கள் இதனை இவ்வரசர் விஷயத்தில் அரிதாக மதியோம். காய்த்த பருவினால் மரங்கள் வளையும்; நீர் மிகுந்து சாய்ந்த பருவினால் மேகங்கள் கீழ் இறங்கும்; செல்வம் நிறைவதனால் சான்றோர்க்கு வணக்கம் உண்டாகும்; பிறர்க்கு நன்மை தரும் மனமுடையார் இங்ஙனம் இருத்தல் இயற்கை.

பிரதீகாரீ.—சுவாமீ! முனிவர்கள் முகமலர்ந்திருக்கின்றபடியால், தமது காரியம் லகுவில் முடியுமென நம்பியிருக்கின்றார்கள என்றெண்ணுகின்றேன.

துஷ்யந்தன்.—(சகுந்தலையை உற்றுநோக்கி) இதோ பழுத்த இலைகளின் இடையிலிருக்கும் இள இலைபோல, முற்றிலும் தனது அழகு தோன்றாதபடி, துறவியர் நடுவில், முக்காடிட்டு முகத்தை மூடி விளங்கும் இந் நங்கை யாரோ?

பிரதீகாரீ.—ஆச்சரிய மிகுதியால், எனது எண்ணமும் எந்த வழியிலும் செல்லவில்லை; உருவமென்னவோ, அதியற்புதமாகத்தான் இருக்கின்றது.

துஷ்யந்தன்.—என்றாலும் பிறன் மனைவியைக் கவனித்துப் பார்க்கப்படாது.

சகுந்தலை.—(தனது மார்பிற் கையைவைத்து, தனக்குள்ளேயே) ஓ, நெஞ்சே! ஏன் இப்படி நடுங்குகின்றனை? எனது தலைவரது காதல் மிகுதியை நினைந்து சற்றுத் தைரியமாயிரு.

புரோகிதர்.—(முன்னே போய்) இறைவ! விதிப்படி உபசரித்து நல்வரவேற்று, நான் அழைத்துக்கொண்டுவந்த துறவிகள் இதோ வந்திருக்கின்றனர்; அவர்கள் தமது குருவினிடத்திலிருந்து நங்களுக்கொரு சமாசாரங் கொண்டுவந்திருக்கின்றார்கள்; அதனைத் தாங்கள் தயை செய்து கேட்கவேண்டும்.

துஷ்யந்தன்.—கேட்கச் சித்தமாயிருக்கின்றேன்.

சார்ங்கரவனும் சாரத்வதனும்.—(கைகளை உயர்த்தி) ஓ அரச! உமக்கு ஜயமுண்டாகக் கடவது.

துஷ்யந்தன்.—உங்களனைவர்க்கும் வந்தனஞ்செய்கின்றேன்.

சார்ங்கரவனும் சாரத்வதனும்.—உமது எண்ணம் ஈடேறக் கடவது.

துஷ்யந்தன்.—முனிவர்களுடைய தவவொழுக்கங்கள் நன்கு நடைபெறுகின்றனவா?

சார்ங்கரவனும் சாரத்வதனும்.— உமது பாதுகாப்பில் உள்ள நல்லோருடைய தவகருமங்களுக்கும் தவறுண்டாகுமா? சூரியன் சுடர்விரிந்து விளங்குகையில் இருள் எவ்வாறு நிற்கும்?

துஷ்யந்தன்.—இப்போதுதான் அரசன் என்னும் பட்டப் பெயர் எனக்கு நிலைத்தது. உலக க்ஷேமகாரணரும் பெருமை பொருந்தியவரும் ஆகிய கண்வர், க்ஷேமமாயிருக்கின்றாரா?

சார்ங்கரவனும் சாரத்வதனும்.—மஹான்கள் தங்களுடைய தபோசக்தியினாலேயே தங்களுடைய சுகத்தையும் வாழ்வையும் பெற்றிருக்கின்றனர். அவர், உமது சுகத்தைக் கேட்ட பிறகு, இதனை உமக்குச் சொல்லச் சொன்னார்.

துஷ்யந்தன்.—மஹானாகிய அவர் என்ன கட்டளையிட்டார்?

சார்ங்கரவன்.—"நீரும் எனது மகளும் ஒருவருக்கொருவர் உடன்பட்டு மணம்புரிந்து கொண்டதை, நான், உங்கள் இருவர்மேலும் வைத்த அன்பினால், அங்கீகரிக்கின்றேன். உலகில் உம்மை உத்தமோத்தமராக மதிக்கின்றேன்; சகுந்தலையோ, சற்குணவதி; ஆதலால், இப்படி ஒத்த குணநிசயங்களோடு கூடிய தம்பதியராகிய உங்கள் இருவரையும் ஒன்றாய்க் கூட்டிவைத்த பிரமன் தான் இத்தனை நாளாய்ப் பெற்ற நிந்தையைப்* போக்கினான்; கருவுயிர்க்குங் காலம் நெருங்கியுள்ள இந்த மங்கையை, தம்பதி சமேதராய்ச் செய்து கொள்ளவேண்டிய ஸீமந்தம் முதலிய சடங்குகட்காக, இப்போதே நீர் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

கௌதமி.—மஹாராஜாவே, நான் பேசவேண்டியது அநாவசியம்; ஆயினும், இரண்டொரு வார்த்தை பேச விரும்புகின்றேன்: கலியாணத்தை விரும்பின நீரும், பெண்ணைப் பெற்றவர்களுடைய இஷ்டத்தை எதிர்பார்க்கவில்லை; அந்தப் பெண்ணும் அப்படியே, தனது சுற்றத்தாரை யோசிக்காமலே ஒப்புக்கொண்டனள். இப்படி

* கணவர் மனைவியர் ஒருவர்க்கொருவரை, பெரும்பாலும் ஒவ்வாமற் படைத்துப் பெற்ற நிந்தை.

உங்களுக்குள்ளே உள்ளம் ஒத்துத் தனிமையில் நடந்த விவகாரத்தில், நீங்கள் ஒருவர்க்கொருவர் நடந்துகொள்ள வேண்டிய முறையைப்பற்றி நான் என்ன சொல்லக்கூடும்?

சகுந்தலே.—(தனக்குள்) எனது நாயகர் என்ன சொல்லுவாரோ தெரியவில்லையே!

துஷ்யந்தன்.—இது என்ன இது! எனக்கு முன்னே, இவர்கள் என்னவோ கொண்டுவந்திருக்கிறார்களே!

சகுந்தலே.—(மனத்துக்குள்) ஐயோ! இவர் வார்த்தை நெருப்புப்போ லிருக்கிறதே!

சார்ங்கரவன்.—என்ன வார்த்தை சொல்லுகிறீர்! உம்மைப் போன்ற மன்னர்கள் உலகவிவகார ஒழுங்கை நன்குணர்ந்தவர்கள் அல்லவா? யௌவனமுடைய ஒரு பெண் கற்புடையவள் ஆயினும் தனது கணவனை விட்டு, சுற்றத்தார் சார்பில் வாழ்வாளாயின், ஊரார் அவளை மதியார்கள்; ஆதலாற்றான் கணவன் வெறுத்துத் தள்ளினாலும், அவனுடனே மனைவி இருக்கவேண்டுமென்று அவள் பந்துக்கள் விரும்புகிறார்கள். இதனை நீவிர் அறியாதிருப்பது விந்தை.

துஷ்யந்தன்.—ஆஹா! இவ்வம்மையாரை நான் மணந்தேனா?

சகுந்தலே.—(துயரத்தோடு மனத்துக்குள்) ஓ, நெஞ்சே! நீ பயந்தது சரிதான்.

சார்ங்கரவன்.—ஐயா! செய்த காரியத்தை ஏன் இல்லை என்கிறீர். அந்தரங்கமாகச் செய்தது இப்பொழுது உமக்கு வெறுப்பாய்த் தோன்றினாலும் அரசராகிய நீர் நீதி நெறியைத் தவறலாமா?

துஷ்யந்தன்.—பொய்யைப் புனைந்து சுருட்டிக்கொண்டு வந்த இந்தக் கேள்விகளுக்கு விடைகள் கிடையா.

சார்ங்கரவன்.—இராஜாதிகாரப் பிராந்தி மிகுந்திருப்பவர்களுக்கு, இந்த மனமயக்கம் சாதாரணமாயுண்டு.

துஷ்யந்தன்.—என்னை மிகவும் அவமதித்துப் பேசுகின்றீர்

கௌதமி.—குழந்தாய்! கொஞ்சங் கூச்சப்படாமல் இரு; முக்காட்டை நீக்குகின்றேன்; உனது கணவர் உன்னை இன்னாளென அறிந்துகொள்வார்.

(முக்காட்டை நீக்குகின்றாள்.)

துஷ்யந்தன்.—(சகுந்தலையை உற்று நோக்கித் தனக்குள்) அழகின் மிகுந்த *அணங்குபோல் என்னெதிரே தோன்றும் இந்த இளங்கொடியை, எந்நாளில் எங்கே மணந்தேனோ, இல்லையோ எனக்கு ஞாபகம் இல்லை. † பனித்துளியான் மூடிய மல்லிகை மலரைக் கண்ட வண்டுபோல, இவளைத் துணிந்து கொள்ளவும் மனம் வரவில்லை; தள்ளவும் மனம்வரவில்லை.

(சிந்தித்துக்கொண்டிருக்கின்றான்.)

பிரதீகாரீ.—(மனத்துக்குள்) சன்மார்க்க நெறியில் எமது மன்னவர் எத்தனை சிறந்தவர்! வலிய வந்திருக்கிற இந்த அழகைக் கண்டவுடனே யார்தான் தடைசொல்வார்கள்?

சார்ங்கரவன்.—ஓ வேந்தே! நீர் ஏனோ இங்ஙனம் சும்மா இருக்கின்றீர்?

துஷ்யந்தன்.—ஓ துறவிகாள்! நான் எத்தனையோ எண்ணி எண்ணிப்பார்த்தும், இவ்வம்மையாரை மணஞ்செய்து கொண்ட ஞாபகம் வரவில்லை. ஆதலால் நான் தான் கணவனென்பது சந்தேகமாயிருக்கையில், கர்ப்பச் சின்னங்கள் விளங்கியுள்ள இவளை, எங்ஙனம் ஏற்றுக் கொள்வேன்?

சகுந்தலை.—(துக்கத்தோடு மறைவாய்) எனது நாயகர், கலியாணத்தைக்குறித்தே சந்தேகப்படுகின்றார். ஆதலால் எனது ஆசையின் முதிர்ச்சி எங்ஙனம் நிறைவேறப்போகின்றது?

சார்ங்கரவன்.—அப்படிச் சொல்லாதீர்; கண்வ முனிவர், திருடின பொருளைக் கண்டுபிடித்தும், அதனை அக்

---

* அணங்கு = தெய்வப்பெண்.

† பனியால் நிறைந்த மல்லிகை மலரை வண்டு நுகருவதற்கு முன் அதைத் தொடுகிறதா விடுகிறதாவென்று சுற்றிப்பறந்து ஆராய்வது வழக்கம்.

கள்வற்கே திரும்பிக்கொடுப்பதுபோல, தமது மகளை உமக்கே கொடுத்து, உமது நிந்தையைத் துடைத்தனர்; அப்பேர்ப் பட்டவரை, நீர் அவமதிப்பது அடாது.

**சாரத்வதன்.**—சார்ங்கரவ! இனிப் பேசுவதை நிறுத்து; சகுந்தலா! நாங்கள் என்ன சொல்லவேண்டுமோ, அதனைச் சொல்லியாயிற்று. இங்கே அரசரும் இப்படிப் பேசுகிறார்; அவர்க்கு நம்பிக்கை வரத்தகுந்த விஷயம் ஏதாவதிருந்தால் சொல்லு.

**சகுந்தலை.**—(தனக்குள்) அப்படிப்பட்ட காதலே அடியோடு காற்றாய்ப் பறந்தபோது, ஞாபகம்பண்ணி நம்பவைப்பதிற் பலனென்ன? நான், எப்போதும் தீராத் துயரத்தை அனுபவிக்க வேண்டியவளாயிருக்கின்றேன். (உரக்க) பிராணநாதா! (இது பாதி சொல்லி) மணம் புரிந்ததே, சந்தேகத்தில் இருக்கிறபொழுது, இப்படி அழைப்பது நியாயமல்ல;— புருவமிசத்தில் உதித்தவரே! ஆசிரமத்தில் என்னென்னவோ உடம்படு மொழிகள் கூறி, களங்கமற்ற என்னை மயக்கிவிட்டீர். இப்போது இப்படிப்பேசித் தள்ளிவிடுதல் சரியன்று.

**துஷ்யந்தன்.**—(காதுகளிற் கைகளை வைத்து) அந்தோ பாவம்! பாவம்! கரைபுரண்டு வேகமாய் ஓடுகின்ற பெருநதியானது, தெளிந்த நீரைக் கலங்கலாக்கி, கரையிலுள்ள மரங்களை வேரோடு தள்ளிவிடுகின்ற தன்மைபோல, எனது நிலையைக் கலக்கிக் குலநலத்தைக் குலைத்துவிட எண்ணுகின்றனை!

**சகுந்தலை.**—உண்மையில் நான், பிறர் மனைவியென நீர் ஐயுற்று, இங்ஙனம் நடந்துகொள்வீராயின், சரி! இதோ இந்த அறிகுறியைக்கொண்டு உமது ஐயத்தை நீக்குகின்றேன்.

**துஷ்யந்தன்.**—மிகவும் நல்ல ஏற்பாடு.

**சகுந்தலை.**—(மோதிரமிருந்த இடத்தைத்தடவி) ஐயையோ! என் விரலில் மோதிரத்தைக்காணேமே!

**(கௌதமியை வியாகுலத்தோடு பார்க்கிறாள்.)**

கௌதமி.—சக்கராவதாரத்திலுள்ள சசிதீர்த்தத்தை நீ குனிந்து வணங்குகையில், அம் மோதிரம் நழுவி விழுந்துவிட்டிருக்கலாம்.

துஷ்யந்தன்.—(புன்சிரிப்போடு) 'பெண்புரட்டு, புனை சுருட்டு' என்கிறார்களே, இதுதான்.

சகுந்தலை.—இருக்கட்டும்; இதுதான் இப்படியாயிற்று. விதியைவெல்ல யாராலாகும்? வேறொரு விஷயம் கூறுகிறேன்.

துஷ்யந்தன்.—கண்ணாலே பார்க்கவேண்டியது போய்விட்டது. இப்போது காதாலே கேட்கவேண்டிய விஷயம் வந்துவிட்டது! ஆகட்டும், அதை இப்போதே சொல்லு.

சகுந்தலை.—ஒருநாள், நவமாலிகைக் கொடிப்பந்தலில் உமது கையில் தாமரையிலைத் தொன்னையில்தண்ணீர் வைத்துக் கொண்டிருந்தீர்.

துஷ்யந்தன்.—நன்றாய்க் கேட்கிறது; சொல்லு.

சகுந்தலை.—அந்தச் சமயத்தில், நான் பிள்ளையைப்போல் வளர்த்த தீர்க்காபாங்கன் என்னும் எனது மான் உமதருகில் வந்தது. நீர், அதனைத் தயாளகுணத்தோடு நோக்கி "மெல்லியமானே, இந்தா, தண்ணீர்குடி" என்றீர். அது உம்முடன் பழகியில்லாதபடியால், உம்முடைய உபசாரத்தை ஏற்றுக்கொள்ளப் பயந்தது. அதே ஜலத்தை என் கையில் எடுத்துக்கொண்டபொழுது, அது என்னிடத்தில் நம்பிக்கைவைத்துக் குடித்தது. அப்போது நீர் "இனத்தை இனம் நம்பிச்சேரும்; நீங்கள் இருவீரும் வனசரர்களல்லவா?" என்று பரிகாசஞ்செய்யவில்லையா?

துஷ்யந்தன்.—தந்நலம் பாராட்டும் நயவஞ்சகப் பெண்கள் இத்தகைய தேன்மொழிகளால், சிற்றின்பப் பிரியர்களை மயக்குகின்றார்கள்.

கௌதமி.—பெருந்தகை அரசே! இப்படி அவசரப்பட்டுப் பேசாதீர். ஆசிரமத்தில் வளர்ந்த இந்த மாசிலாமங்கை பொய் பேச அறியாள்.

துஷ்யந்தன்.—மூத்த மாதவப் பெண்மணீ! பெண்களுக்குள் சூது மிகுந்திருக்கின்ற தென்பதை, மனிதரினும் தாழ்ந்த மிருக பக்ஷிகளுக்குள்ளேயும் காணலாம்: ஆகையால் அவைகளினும் அறிவின் முதிர்ந்த மனிதர் எத்தனை ஏற்றமான சூதர் என்பது சொல்லவும் வேண்டுமோ? பெட்டைக்குயில், தனது குஞ்சுகளுக்குப் பறக்கும் பருவம் வரும் வரையில் மற்றப்பக்ஷிகளாலே ரக்ஷிக்கப் படும்படி செய்யுந் தந்திரம் யாவர்க்கும் தெரிந்த விஷயமே.

சகுந்தலை.—(கோபத்தோடு) பெருந்தகைமையிற் பிறழ்ந்தவரே! உமது † துர்க்குணத்தைக்கொண்டே, உலகத்தை மதிக்கும் உமது தந்திரம், யார்க்கும் அடுக்காது; ஆழ்ந்த பாழ்ங்கிணறானது அழகிய புல் பூ முதலியவற்றால் தன்னை மறைத்துக்கொண்டு அபாயத்துக்கிடமாயிருப்பதுபோல, நீரும் தருமநீதி என்னும் கஞ்சுகத்தை மேலுக்குப் பூண்டு உமது துர்க்குணம் தோன்றாமல் மறைந்தொழுகுகிறீர்.

துஷ்யந்தன்.—(தனக்குள்) இவளுடைய கோபம் களங்கரஹிதமாய் இருக்கின்றது. இதனால், எனது மனத்திற் சிறிது சந்தேகம் உண்டாயிருக்கிறது. மறதியென்னும் மயக்கம் கப்பிக்கொண்டபடியால், இருவர்க்கும் அன்பு இதற்கு முந்தியே இரகசியத்தில் ஏற்பட்டிருக்கிறதென்று, ஒப்புக்கொள்ளாத என்னை நோக்கி இவள், தனது கரும்புருவத்தை நெளித்துக் கண் சிவத்தல், மன்மதன் தனது ‡ கரும்புருவவில்லை வளைத்து முறித்தபடியென மொழியலாம். (உரக்க) அம்மா! துஷ்யந்தனுடைய செய்கைகள் ஜகத்பிரசித்தம்; ஆயினும் அவைகளில் உன்னை மணந்ததென்பது கிடையாது.

சகுந்தலை—.புருவமிசத்திலுதித்த உத்தமரென்ற நம்பிக்கை

---

தனக்குக் கூடுகட்டவும் குஞ்சு பொரிக்கவும் தெரியாதபடியால், *குயில் காக்கைக் கூட்டில் முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கச் செய்யுந்தந்திரம். † "தான் திருடி அசல்வீடு நம்பாள்" என்பது போல. ‡ கரும்புருவ = கரும்பு + உருவ = கரும்புவடிவாகிய.

நெஞ்சில் நஞ்சும் நாவில் தேனும் வைத்திருக்கின்ற இந்த நயவஞ்சகர் வார்த்தையிற் கட்டுப்பட்டு மதிமோசம் போன என்னை இவர் இப்பொழுது வேசியாக்கி விட்டது மிக நியாயந்தான்; ஐயோ! கற்பிழந்தேன்; உலக நிந்தைக்காளேனேன்.

[முன்றானையால் முகத்தை மூடிக்கொண்டு அழுகிறாள்.]

சார்ங்கரவன்.—ஆய்ந்தோய்ந்து பாராமல் தானே அவசரப்பட்டுச் செய்த காரியம் இப்படித்தான் துன்பத்தைத் தரும். ஆகையால் காந்தர்வ விவாகம் செய்து கொள்ளுவோர் நன்கு ஆராய்ந்தறியாமல் செய்யலாகாது; ஒருவருடைய மனத்தைத் தேராமல் கொண்ட நட்பு, பின்னுக்குக் கடும்பகையாய் முடிகின்றது.

துஷ்யந்தன்.—ஐயா, இவ்வம்மையார் வார்த்தைகளிற் பூரண நம்பிக்கை வைத்து, ஏனையா என்னை அவதூறு பேசி வருத்துகிறீர்?

சார்ங்கரவன்.—(இகழ்ச்சியாய்) ஒன்றுக்கொன்று மாறான விஷயங்களை—நான் பேசிவிட்டேன்—பெரியோராகிய தாங்கள் அதைக்—கேட்டு விட்டீர்களே! பிறந்த நாள் தொடங்கிச் சிறந்த உத்தமியாகக் கபடென்பதுவே கனவிலும் அறியாத நங்கை மொழிகள் நம்பத் தகாதன தான்! பகைவரை வஞ்சித்து ஜயிப்பதுவே கற்ற கல்வியாகக் கைக்கொண்ட ஒருவருடைய வார்த்தைகள் நம்பத்தக்கவைகளா யிருக்கட்டுமே!

துஷ்யந்தன்.—ஐயா, உண்மையில் உயர்ந்தவரே! நீர் சொல்வது சரி என்று வைத்துக்கொள்ளுகிறேன்; இவ்வம்மையாரை வஞ்சிப்பதில் எனக்கு என்ன இலாபம்?

சார்ங்கரவன்.—அழியா நரகத்தில் விழுவதுதான்.

துஷ்யந்தன்.—புருவமிசத்தார் நரகில்விழ நாடுவார்கள் என்பது நம்பத்தகாத காரியம்.

சாரத்வதன்.—சார்ங்கரவா! இந்த வாக்குவாதத்தால் வரும் இலாபம் என்ன? நாம் நமது குருவின் கட்டளைப்படி நடந்துகொண்டோம்; இனித் திரும்பிப் போகவேண்டியது தானே? (அரசனை நோக்கி) இதோ உமது மனைவி; அவளைக் கொள்ளுவீரோ, தள்ளுவதோ, உமது இஷ்

டம். மனைவியர் மீது கணவர்க்குள்ள அதிகாரத்துக்கு அளவேது? அம்மா கௌதமி! புறப்படுங்கள் முன்னே.

(அனைவரும் புறப்படுகிறார்கள்.)

சகுந்தலை.—அந்தோ, நான் என்ன செய்வேன்! இந்த இரண்டகமுள்ளவன் தான், என்னை வஞ்சித்தானென்றால், நீங்களுமா, சதிசெய்து விட்டுப் போகிறீர்கள்?

(அவர்களைப் பின் தொடர்கின்றாள்.)

கௌதமி.—(சிறிது தூரஞ்சென்று) குழந்தாய், சார்ங்கரவா! இதோ சகுந்தலை அழுதுகொண்டு நம்மைப் பின்தொடர்கின்றாள்; பார்த்தால் பரிதாபமாயிருக்கிறது; என் செய்வாள் மகள்? புருஷனும் வேண்டாமென்று தள்ளிவிட்டான்; மிகவும் கொடுமை.

சார்ங்கரவன்.—(கோபத்துடன் திரும்பி) கட்டுக்கடங்காதவளே! உன் இஷ்டப்படி இருக்கப் பார்க்கிறாயா?

(சகுந்தலை பயத்தால் நடுங்குகிறாள்.)

சார்ங்கரவன்.—அரசன் சொற்படி நீ அவனுடைய மனைவியாகாவிட்டால், அருந்தவ முனிவராகிய உனது தந்தை தமது மனம் ஒப்பி உன்னை எப்படி ஏற்றுக்கொள்ளுவார்? குலத்தில் இழிந்த கோதையென்று உன்னைத் தள்ளிவிடுவார். அவ்வாறன்றி உன் சொற்படி நீ கற்புள்ள காரிகையானால் உனது கணவன் வீட்டில் அடிமை செய்தாவது காலங்கழிப்பது மேன்மை. ஆகையால் நீ நில்லு; நாங்கள் செல்லுகிறோம்.

துஷ்யந்தன்.—துறவிகாள்! ஏனோ இம் மங்கையை வஞ்சிக்கின்றீர்கள்? சந்திரன் இரவில் ஆம்பல் புஷ்பத்தை மட்டுமே மலரச்செய்து திருப்தியடைகிறான்; சூரியன் பகலில் தாமரைப் புஷ்பத்தை மட்டும் மலரச்செய்து அதனோடு திருப்தி அடைகிறான்; (அதுபோல) ஐம்புலன்களையும் அடக்கினவர்கள் அயல் மாதர்மேல் மனம் வையார்கள்.

சார்ங்கரவன்.—மற்றக்காரியங்களில் மனஞ்செலுத்தியிருப்பதனால், முந்தி நடந்த விஷயத்தை நீர் மறந்திருக்கலாம்; இவ்வாறு மறதிக்காளாகிய நீர் எவ்வாறு பழிபாவத்திற்குப் பயப்படுவீர்?

துஷ்யந்தன்.—(புரோகிதரை நோக்கி) நான் இப்பொழுது செய்யவேண்டியது இன்னதென்று மஹானாகிய தாங்களே ஆலோசித்துத் தெரிவிக்கக் கோருகின்றேன். நானே மறந்திருக்கலாம்; ஒருவேளை, இவளே பொய்யுரைத்திருக்கலாம்; மெய்யாய் நான் இவளை மணம் புரிந்திருக்கிற பக்ஷத்தில், கொண்ட மனையாளைக் கைவிட்ட பாதகனாகிறேன்; அப்படியன்றி, இவளை மணஞ்செய்து கொள்ளாதிருப்பது உண்மையென்றால், பிறன் மனையாளைப் பெண்டுகொண்ட பாவியாவேன்; இவ்விரண்டு கொடும்பாவங்களிலும் எது பெரிது எது சிறிது என்று சொல்லவேண்டும்.

புரோகிதர்.—(ஆழச்சிந்தித்து) அப்படியானால், இப்படிச் செய்யுங்கள்.

துஷ்யந்தன்.—நல்லது; தயவுசெய்யுங்கள்.

புரோகிதர்.—பிரஸவிக்குமளவும் இவ்வம்மையார் எனதகத்தில் வாழட்டும்; ஏனப்படி என்பீராயின், உமக்கு முதற்பிறக்கும் புதல்வன் நான்கு சமுத்திரங்கள் வரையிற் பரவிய பூமியை ஒரு குடைக்கீழ் ஆள்வான் என்று முனிவர்கள் அருளிய வரம் ஒன்றிருக்கின்றது. இந்த முனிவர் மகள் வயிற்றிற்பிறக்கும் பிள்ளை சக்கரவர்த்திக்குள்ள லக்ஷணங்கள்பொருந்தியிருப்பானாயின், இவளைப்போற்றி உமது அந்தப்புரத்திற் சேர்த்துக்கொள்ளலாம். இல்லாவிட்டால் இவளை இவள் தந்தையிடத்திற் சேர்த்துவிடலாம்.

துஷ்யந்தன்.—தாங்கள் விரும்பியபடி செய்யலாம்.

புரோகிதர்.—மகளே! என் பின்னே வா.

சகுந்தலை.—ஓ, பூமாதேவியே! உனது கர்ப்பத்தில் என்னைச் சேர்த்துக்கொள்.

**(அழுதுகொண்டே புரோகிதரோடு போகின்றாள். துறவிகளும் போய்விட்டார்கள். சகுந்தலை விஷயத்தைப்பற்றி அரசன் யோசிக்கின்றான்; ஆனால் சாபம், அவன் ஞாபகத்தைத் தடுக்கின்றது. திரைக்குப் பின்னே,)**

**ஆச்சரியம்! ஆச்சரியம்!**

**துஷ்யந்தன்.**—(உற்றுக்கேட்டு) அங்கே என்ன நடந்திருக்கலாம்! (புரோகிதர் வருகின்றார்.)

**புரோகிதர்.**—(ஆச்சரியத்துடன்) ஓ, வேந்த! ஓர் அதிசயம் நடந்தது.

**துஷ்யந்தன்.**—என்ன?

**புரோகிதர்.**—இறைவ! கண்வருடைய சிஷ்யர்கள் திரும்பிப் போனவுடனே, அம் மங்கை தனது தௌர்ப்பாக்கிய தசையை நொந்துகொண்டு கைகளை உயர்த்தி அழத் தொடங்கினாள்.

**துஷ்யந்தன்.**—அப்புறம் என்ன?

**புரோகிதர்.**—அப்ஸரஸ் தீர்த்தத்துக்கருகாமையில் மின்னொளியிற் பெண்ணுருவொன்று தோன்றி, அவளை அந்தரத்தில் தூக்கிக்கொண்டு மறைந்து போயிற்று.

(அனைவரும் அதிசயிக்கின்றனர்.)

**துஷ்யந்தன்.**—பெருமை பொருந்திய ஐயா! அவ்விஷயத்தைத்தான், நாம் அப்போதே, விலக்கி விட்டோமே; நீங்கள் ஏன் அதைப்பற்றி வீணாய் யோசிக்கின்றீர்கள்? தயவுசெய்து சும்மா இருங்கள்.

**புரோகிதர்.**—(அரசனை நோக்கி) உமக்கு ஜயமுண்டாகக் கடவது. (போய்விடுகிறார்.)

**துஷ்யந்தன்.**—வேத்திரவதி! நான் மனங்கலங்கியிருக்கின்றேன்; படுக்கையறைக்கு வழிகாட்டு.

**பிரதீகாரீ.**—இந்த வழி, இந்த வழிதான் மகாராஜாவே! (வழிகாட்டிச் செல்கின்றாள்.)

**துஷ்யந்தன்.**—(தனக்குள்) எனது மனைவியென்று இங்கே வந்த முனிவர் மகளைத் தனிமையில், நான் திருமணஞ்செய்த ஞாபகம் இல்லாமல், தள்ளிவிட்டது உண்மையானாலும், எனது நெஞ்சம், அதனால் இரங்கி வாடுகின்றதை நாடிப்பார்க்கையில், விவாகம் செய்தது மெய்யெனக் கலக்கமின்றிக் காட்டுகின்றது.

(எல்லாரும் போய்விடுகின்றனர்.)

# 9. யானையை வென்ற முயல்

ஒரு காட்டில் சதுரதந்தன் என்னும் அரசயானை பல யானைகளோடு கூடிக்கொண்டிருக்கும்போது அங்கே மழை பெய்யாமையால், ஆறு, ஏரி, குளம், குட்டைகளெல்லாம் வற்றிப்போக, அப்போது யானைகளெல்லாம் தாகித்துச் சதுரதந்தனைப் பார்த்து, "சுவாமீ! நாங்களெல்லாம் தாகத்தினாலே செத்தாற்போலானோம்; சிலர் தண்ணீர்க்காகச் செத்தார்கள். ஆகையால், மிகவும் தண்ணீருள்ள இடந்தேடிப் போயிருப்போமானால் எல்லாரும் சுகமடைவோம்" என, இவற்றின் பேச்சைக் கேட்டுத் தன் மனத்தில் யோசித்து, "இதற்கு ஐந்துநாளைப் பயணதூரத்தில் ஒரு பெரிய மடு பாதாள கங்கையினால் நிறைந்திருக்கிறது. அங்கே போனால் எல்லோர்க்கும் மிகவுந் தண்ணீர் கிடைக்கும்" என்றிப்படி அது உறுதி சொல்ல, அப்படியே அவைகள் அங்கே போய்த் தெளிந்த நீரைக்கண்டு, அந்திவரைக்குஞ் சலக்கிரீடை செய்துகொண்டிருந்து பின் கரையில் வந்திருந்தன. அப்போது அங்கே வாசம் பண்ணிக்கொண்டிருந்த பல முயல்களிற் சில, யானைகளின் காலின்கீழ் அகப்பட்டிறந்தன; சிலசில முயல்களுக்குக் கால் கைகள் ஒடிந்தன; சிலவற்றிற்கு உடல்கள் நொறுங்கின; சிற்சிலவற்றிற்குக்குடல்கள் சரிந்தன; சிலச்சில இரத்தத்தால் நிறைந்தன. இப்படிப் பொல்லாங்கு நேரிட்டவுடனே சிலமுயல்கள் ஒன்றாய்க்கூடி, "இன்றைக்கு யானைக்கூட்டம் வந்து நம்மை யழித்தது. இப்படியே தினமும் இருக்கும். ஏனெனில், இங்கே கிட்ட வேறே தண்ணீரில்லை. இதனால் நமக்கு மீளாச் சங்கடம் நேரிட்டது. யானை தொட்டாலும், பாம்பு மோந்தாலும், அரசன் நகைத்தாலும், துர்ச்சனன் மரியாதைபண்ணினாலும் உயிர்ச்சேதம் வரும். ஆதலால், இதற்கு ஏதாவது உபாயம் யோசிக்கவேண்டும்" என, அப்போது சில முயல்கள் "உயிரைக் காப்பாற்றும் பொருட்டுப் பூமியைவிட்டுவிடலாமென்றிருக்கிறதினால் இவ்விடத்தை விட்டுவிடவேண்டும்" என்றன. இதைக்கேட்டு வேறு சில முயல்கள் "நம்முடைய பெரியோர்கள் வாழ்ந்த இடத்தைவிட்டு வேறிடத்துக்குப் போகாமல் யானைகள் அஞ்சத்தக்க தந்திரமெடுக்க வேண்டும். நஞ்சில்லாப் பாம்

பும் படமெடுத்தால், அதற்கு நஞ்சில்லாதிருந்தும் பயங்கர மாயிருக்கிற படத்தின் வடிவைப்பார்த்து மனிதர்கள் பயப் படுகிறார்கள்'' என்றன.

அதைக்கேட்டு ஒரு முயல் "யானைகள் பயப்படும்படி ஓர் உபாயஞ் சொல்லுகிறேன்; என்னென்றால், விசயதந்தன் என்னும் நம்முடைய சுவாமி சந்திரமண்டலத்திலிருக்கிறான். அவன் தூதனுப்பினான் என்று ஒரு நிமித்தம் வைத்து ஒரு பொய்த்தூதனை அவர்களிடத்துக் கனுப்பினால் நம் காரிய மாகும்'' என்றது. இதைக் கேட்டவுடனே எல்லாம் அப் படியே நிச்சயித்து, நெட்டைக்காதனைப்பார்த்து, "நீ சாதுரி யவான், எதிரிகளைச் சமாதானம் பண்ணுகிறவன்; ஆதலால் தூதகாரியத்தில் நிபுணனாயிருக்கிறாய்; மௌட்டியமில்லா மையும், சோம்பாமையும், பொய்யாமையும், ஊகித்தறித லும் தூத லக்ஷணமென்று சொன்னவற்றிற்கு நீயே வாச ஸ்தானமென்று நினைக்கிறோம். ஆகையால், நீ போனால் நம் முடைய காரியங் கைகூடும்; மூடத்தூதனை யனுப்பினாற் காரியங் கெட்டுப்போம்'' என்று சொல்லி அதை யனுப்ப, அது போய் யானைகள் வரும் வழியில் ஓர் உயர்ந்த மேட்டில் உட்கார்ந்திருந்து, யூதபதி வந்தவுடனே அதைப் பார்த்து, "அடா துஷ்ட யானையே! வெட்கத்தை விட்டு இந்த மடுவில் வந்து பலவகைப்பட்ட விளையாட்டு விளையாடுகிறாய். ஆத லால் நான் எல்லாரையும் அடித்தெறிந்து விடுவேன்'' என, இதைக்கேட்டு யானை, "உன் பேச்சைக்கேட்டு நான் மிக வும் ஆச்சரியப்படுகிறேன். ஆனால் நீ யார்?'' என, முயல் "விசயதந்த ராஜனுடைய தூதன். அவன் கட்டளையை உனக்குச் சொன்னேன். அவன் சந்திரமண்டலத்தில் இருக் கிறபடியால் சந்திரன் உன்னிடத்திற்குஎன்னையனுப்பினான்'' என்றது. இதைக்கேட்டு இவன் வலியவனுடைய தூத னென்றெண்ணி அதைப் பார்த்து, "சந்திரனுடையகட்டளை என்ன?'' என, அது "நீ இங்கே வந்து நாணமில்லாமற் கிரீடைசெய்து பல முயல்களைக் கொன்றாய். ஆகிலும் நான் ஒருதரம் பொறுத்தேன். இப்போது உனக்கு உயிர்மேல் ஆசையிருந்தால் மீண்டும் இங்கே வரவேண்டா என்றிப் படிச் சந்திரனுடையகட்டளையாயிருக்கிறது. அதை உனக்கு நான் சொன்னேன். இப்போது இதற்குப் பிரதியுத்தரஞ்

சொன்னால் சுவாமி திருவடிகட்கு அறிவிப்பேன்'' என்றது. யானை "அவனிடத்திற்கு என்னை அழைத்துக்கொண்டுபோ. நான் உன் எசமானனுக்கு நமஸ்காரம்பண்ணி வேறொரு குளத்திற்குப் போவேன்'' என்றது.

இதைக்கேட்டு முயல் "நீ தனியாய் என்னோடுகூடவா. உனக்குச் சுவாமியைக் காண்பிக்கிறேன்'' என, பிறகு இரண்டும் போகையில், ஓர் ஏரியினருகே போனதும் முயல் யானையைப்பார்த்து, "சந்திரன் இந்தத் தண்ணீருக்குள்ளே வந்திருக்கிறான். அவனை நமஸ்கரித்துவிட்டுக் கடுகெனப் போ. இல்லாவிட்டால் அவனுடைய சமாதிக்குப் பங்கம் வரும். அப்பொழுது அவற்கு வெகு கோபம் வரும்'' என அப்போது யானை பயந்து சந்திர விம்பத்துக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டுப் போயிற்று. அதுமுதற்கொண்டு முயல்கள் அங்கே சுகமுற்றிருந்தன.

ஆகையால், பெரியோர்களை அடுத்திருந்தால் மலைபோல் வந்த வினை சூரியன்முன் பனிபோல நீங்கும்.

## 10. இராமர் கொலுவிருக்கை

பூலோகத்தினிடத்திலேசுவர்க்கலோகம்போலவிளங்கும் அயோத்தியா பட்டணத்தில் அளவில்லாத விசித்திரமான தேவேந்திர சபையைப்பார்க்கிலும்அதிகமான சிங்காரங்கள் பொருந்தியதோர்கொலுமண்டபம்தயங்கியது.அதன்நடுவே பூமி பாதாளஞ் சுவர்க்கமென்று சொல்லப்பட்ட மூன்று லோகங்களும் நடுங்கச்செய்யுங் கொடிய துஷ்டர்களாகிய இராவணன் கும்பகர்ணன் முதலானவர்களையும் பொல்லாத பாபமே ரூபமாகக்கொண்ட இராக்ஷச குலத்தையும் நாசமாகும்படி சங்கரித்துச், செயம் பொருந்திய ஸ்ரீ ராமரானவர் சோதிமயமாகப் பிரகாசிக்கும் மாணிக்க கிரீடமும் மகரகுண்டலமும் வாகுவலயமும் வச்சிரகடகமும் இரத்தின கங்கணமும் கொத்துச்சரப்பணியும் முத்துமாலையும் மோகனமாலையும் பொற்பூணூலும் பட்டையரைஞாணும் பவித்திரமோதிரமும் வீரகண்டாமணியும் இவை முதலான திவ்வியாபரணங்களுஞ் சித்திரப்பூம் பட்டாடையும் உத்தரீயமும் பீதாம்பர

மூங் தரித்து, சீதள களப சந்தன கஸ்தூரியுஞ் சுகந்த பரி மள புஷ்ப மாலைகளும் அணிந்து அலங்கரித்துக்கொண்டு, சர்வாபரணாலங்கார அதிரூப சௌந்தரியவதியாய் விளங்கும் மகா லக்ஷ்மியாகிய சீதாதேவி சமேதராய், நவரத்தின சிங் காசனத்தின் மேலே வீற்றிருந்தனர். அப்பொழுது வசிஷ் டர் முதலான மகரிஷிகளுந் தேவேந்திரன் முதலான சகல தேவர்களும் வேதப் பிராமணர்களுஞ் சகல வித்தைகளிலும் வல்லவர்களாகிய மகா வித்துவான்களும் அங்கேநிறைந்திரு ந்தார்கள். அங்கவங்கசூலிங்க கலிங்க காஸ்மீரமகதகுருகுதமாள வசாளுவமச்சகுர்ச்சரகேகய கோசலகேரள விதேகவிதர்ப்ப பாண்டிய பாஞ்சால பப்பர சிந்து சௌராஷ்டிர கொங்கண நேபாள மாராட விராட கருணாடகம் முதலான தேசாதிபத் திய மகுடவர்த்தன இராஜாக்கள் ஸ்ரீராமரைத் துதித்துவணங் கினார்கள். பேரிகை சங்கு முதலான பதினெண்வகை வாத் தியங்கள் முழங்கின. யக்ஷ கந்தருவர் தேவகானங்கள் பாடி னர். பரத மோகன நாட்டிய மாதர்கள் நடனஞ் செய்தார் கள். இப்படி அனேக விநோதமான சம்பிரமத்துடனே ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு கொலுவாக வீற்றிருக்குஞ் சமயத்தில், காசிபர், அத்திரி, பரத்துவாஜர், கௌதமர்,ஜமதக்கினிபகவான் முதலான மகா முனிவர்கள் அயோத்திமா நகரத்திற் பிரவேசித்து,ஆஸ்தான மண்டபத் துக்கு முன்னாக விளங்கும் கோபுரவாயிலில் வந்து, அந்த வாயில் காத்திருக்குங் காவலாளரைப் பார்த்து, இருஷிக ளெல்லாரும் உம்முடைய பட்டாபிஷேகத் திருக்கோலங் காண அபேக்ஷித்து வந்திருக்கின்றார்களென்று இராமருக்கு அறியப்படுத்துவீரென்று விளம்பினர். அவர்களும் அப்ப டியே அறியச்செய்து, அவர் சொல்லியனுப்பிய உபசாரங்க ளைச்சொல்லி அந்தமுனிவர்களை உள்ளே அழைத்துக்கொண் டுபோனார்கள். ஆஸ்தானமண்டபத்துக்குச் சமீபமாகஅடுத்த மாத்திரத்தில் இராமர் அந்த இருஷிகளைக் கண்டு துணுக் குற்றுச், சிங்காசனத்தை விட்டெழுந்து சீக்கிரமாக வந்து, அவர்களுடைய பாதங்களிலே தீர்க்க தெண்டனாக நமஸ்கா ரம் பண்ணி வந்தனஞ்செய்து, அனேகமான உபசார வார்த் தைகள் சொல்லி,அவர்களை முன்னே நடத்தித்தாம்பின்னே நடந்து அழைத்துப்போயினர். ஸ்ரீராமர் ஆஸ்தான மண்ட

பத்தில் நிறைந்திருக்குஞ் சகல இருஷிகளும் தேவர்களும் மற்றுமுள்ள எல்லோரும் எழுந்திருந்து வந்தனங்கள் செய்ய, வந்த இருஷிகளுக்கு ஆசனங்கள் கொடுத்துப் பூசித்து எழுந்தருளியிருக்கச் செய்தார். அவர்களும் இராமருக்கு ஆசீர்வாதஞ் செய்தார்கள்.

அதன் பின்பு, மகா சந்தோஷமாக எழுந்தருளியிருக்கும் ஜமதக்கினிபகவான் முதலான மகாயோகிகளை ஸ்ரீராமர் பார்த்து, தேவரீர்களுடைய ஆச்சிரமங்களும் யாகசாலைகளும் பசுக்களும் நன்றாயிருக்கின்றனவோ வென்றும், நித்திய கருமானுஷ்டான முதலான காரியங்களுங் கால நியமங்களுந் தப்பாமல் நடந்து வருகின்றனவோ வென்றும் அந்தரங்க விநய பயபக்தியுடனே மாதுரியவசனமாக க்ஷேமங்களை விசாரித்தார். அப்படி இராமர் சுகவிருத்திகளைக் கேட்ட மதுரவசன அமிர்தபானம் பண்ணினவர்களாய், மகா சந்தோஷத்தை அடைந்து அந்த மகாயோகிகள் அனைவரும் ஸ்ரீராமரைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினார்கள்:

கேட்பீர் இராகவரே! தேவரீர் செய்த இராவண யுத்தத்தில், சகல லோகங்களும் நசிக்கும்படியாய் மிகவும் கொடுமையான உபத்திரவங்களைச் செய்யும் துஷ்ட கண்டகராகிய விராதன் கவந்தன் கரன் தூஷணன் கும்பன் நிகும்பன் அகம்பன் மகோதரன் மகாபாரிசுவன் தூம்பிராக்ஷன் விருபாக்ஷன் சோணிதாக்ஷன் மகராக்ஷன் அதிகாயன் பிரகஸ்தன் தேவாந்தகன் நராந்தகன் கும்பகர்ணன் முதலானவர்களும் சேனாதிபதிகளும், அளவில்லாத இராக்ஷதசேனையும், மூலபலமும், தசக்கிரீவனும் யுத்தகளத்திலே சின்னபின்னப்பட்டு மடிந்து, பிணக்குவைகள் பருவதங்கள்போல் இராசிராசியாகக் குவிந்தனவன்றோ! தேர்களும் யானைகளும் குதிரைகளும் குடைகளுங் கொடிகளுஞ் சாமரங்களும் மயிற்பிச்சங்களும் ஆலவட்டங்களும் வால்களும் வேல்களும் வில்லுகளும் பாணங்களுந் தண்டங்களும் முசலங்களுஞ் சூலங்களும் எழுக்களும் இவைமுதலான அஸ்திர சஸ்திரங்கள் அறுபட்டு முறிபட்டுத்தெறிபட்டு ஒடிபட்டுச்சிதைபட்டு வதைபட்டு இரத்தப்பிரவாகத்தில் மிதந்தோடினவன்றோ! நாய்களும் நரிகளுங் காக்கைகளும் கழுகுகளும் பருந்துகளும் குடல்களை மூளைகளைக் கொழுப்புக்களை நிணங்களைத் தசைகளைத் தோல்

களைக்கொத்தியும் பிடுங்கியும் குடித்துந் தின்றும் கௌவியும் வௌவியும் ஒன்றோடொன்றுகலந்து கூட்டமிட்டு நெருங்கி ஊளையிட்டுக் குலைத்துக்கத்திக் கதறி ஆர்ப்பரித்தனவன்றோ! பூதப்பிரேத பிசாசங்கள் ஆண் பெண் குட்டிகள் அங்கங்கே கூட்டங்கூட்டமாகக் கூடிக்கொண்டு மண்டைகளாகிய கலங்களிலே பருந்திட்டுத் தின்று தேக்கிட்டுக் கொக்கரித்துத் தோள்கொட்டிக் கூத்தாடி விளையாடினவன்றோ! விசயலட்சுமி சந்தோஷத்துடனே நடனஞ்செய்தாளன்றோ! தேவரீர் மகா உக்கிராவேசமாய் அட்டகாசம்பண்ணி, விசயகோதண்டத்தை வளைத்து நாணேறிட்டுக் குணத்தொனி முழக்கி, அந்தக் கோதண்டஞ் சக்கிராகாரமாக வளையும்படி வாங்கி, அர்த்தசந்திரபாணம் வச்சிர சூசிகாபாணம் அக்கினிபாணம் முதலான திவ்வியாஸ்திரங்களைப் புங்கானுபுங்கமாக இடைவிடாது தொடுத்துச், சரவருஷமாகப் பொழிந்து, கண்டதுண்டங்களாகச் சித்திரவதை செய்து சங்கரித்து, சர்வலோகங்களும் நிர்ப்பயமாக வாழ்ந்திருக்கும்படி வெற்றிபெற்று வாகைமாலை சூடியருளினீரன்றோ! அப்படிப்பட்ட விசய கோதண்டபாணியாகிய தேவரீரும்; மகா தபோமகிமை பொருந்திய முனிவர்களாலும் திரிலோகாதிபதிகளாலும் வெல்லுதற்கு அரிய சகல மாயோபாயங்களிலும் வல்லவனாகிப், பலபராக்கிரம சௌரியங்களாலே மதோன்மத்தனாகித், துவாதசாதித்தியர்கள் ஏகாதச ருத்திரர்கள் அஷ்டவசுக்கள் மருத்துவரிருவர் இந்நால்வகைப்பட்ட முப்பத்துமூவர்க்கும் ஓரொரு வகையினர்க்கு ஒவ்வொருகோடியாகக் கூடிய முப்பத்து முக்கோடி தேவகணங்களுக் கதிபதியாகிய இந்திரனை மாயாபாசத்தினாலே கட்டிக் கொடுஞ்சிறையில் வைத்து, அக்காரணத்தினாலே இந்திரசித்து என்னும் பெயர்பெற்ற பொல்லாத துஷ்ட கண்டகனைச் சங்கரித்து வெற்றிபெற்ற இலட்சுமணரும் இருக்க, எங்களுக்கு எக்காலத்திலும் ஒரு குறையுண்டாகுமோவென்று சொல்லி வாழ்த்தினார்கள்.

# 11. தெய்வ நம்பிக்கை

ஒரு கிராமத்தில் தெய்வபக்தி பூரணமாய் நிறையப் பெற்ற ஒரு நாயகனும் நாயகியும் கிரகஸ்தாச்சிரம தருமத்தை நடத்திக்கொண்டு வருகையில் அவர்களுடைய தவப் பேருக அவர்களுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். நாட்டுப் புறத்திலுள்ள சாதாரண பள்ளிக்கூடங்களில் அச்சிறுவனைக் கல்வி பயிலுவித்தால் அவன் விசேஷமாய்ச் சாஸ்திரங்களை நன்குணர்வதற் கிடமிராதென்று நினைத்து அப்பெற்றேர் அவனைத் தூரத்திலிருந்த ஒரு நகரத்துக்கு அனுப்பி அங்குள்ள சர்வகலாசாலையில் கல்வி பயிலச் செய்தார்கள். இளமைப்பருவத்தில் ஈஸ்வர பக்தியை விளைவிப்பதற்கேற்ற எவ்வித பாடத்தையும் அக் கல்விச்சாலையில் உபாத்தியாயர்கள் அவனுக்குக் கற்பித்திலர். ஆயினும் லௌகிகத்துக்கு வேண்டிய உலக சம்பந்தமான பல நூல்களையே அவன் அக் கல்விச்சாலையில் சதா கற்றும், ஆன்ம விசாரணை பரத்துவ நிச்சயம் முதலிய விஷயங்களைத் தெரிவிக்கத்தக்க நூல்களைக் கற்காமலும் வந்தானுதலின் அவன் மனம் நாஸ்திகச் சார்பு பெற்றிருந்தது.

அக் கல்விச்சாலை விடுமுறை காலத்தில் ஒருநாள் அச் சிறுவன் தன் பெற்றேரைப் பார்க்கத் தன் தாயகமாகிய கிராமத்துக்குச் சென்றுன். அப்போது அக்கிராமத்தில் அண்டை வீட்டுக்காரன் ஒருவன் இச்சிறுவனுக்கு விருந்தளிக்க நினைத்து, அவனைத் தன் வீட்டுக்கு முகமன்கூறி இட்டுக்கொண்டுபோனுன். அவ்வீட்டுக்காரனுடைய பெண் ஓர் அறையில் இருந்துகொண்டு கடவுள் விஷயமாய்ச் செய்யப்பட்டுள்ள சில தோத்திரப்பாக்களைப் பக்தியோடு வாசித்துக்கொண்டிருந்தாள். அச்சிறுவன் அதைக்கண்டு "பெண்ணே! காலத்திரயத்தும் இல்பொருளாகிய கடவுள் பெயரைப் பலகாலும் நினைத்தும் கூறியும் வீண்காலம் ஏன் போக்குகிறுய்? உபயோககரமான நற்காரியம் எதையேனும் செய்யலாகாதா? என்று அதிபுத்திமான்போல் வினவினுன். இதைக்கேட்ட அச்சிறுமி திடுக்கிட்டுப் பிரமித்து "அப்பா! கடவுளிடத்து உனக்கு நம்பிக்கை இல்லையா? அவர் யாவற்றையும் படைத்து அளிப்பவர் என்று உனக்குத் தெரி

யாதா?'' என்று கேட்டாள். அதற்கு அவன் "நாட்டுப் புறத்துக் கல்விக்கும் பட்டணத்துக் கல்விக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது! நான் சர்வகலாசாலையில் வாசித்தறிந்த வானசாஸ்திரம், கணிதசாஸ்திரம், மனோதத்துவ லட்சணசாஸ்திரம் முதலியவற்றின் உணர்ச்சியினால் யாவும் இயற்கையேயன்றி அவற்றைப் படைக்க ஒரு தனிமுதல் வேண்டுவதில்லை யென்றும், உலகத்திலுள்ள யாவும் காரணகாரிய ரூபங்களாகவே இருக்கின்றனவென்றும், அவற்றிற்கு ஒரு முதற்காரணம் உண்டென்றுசொல்வது தர்க்கத்துக்கு நில்லாதென்றும் நன்கு உணர்ந்தேன். இந் நாட்டுப்புறத்துக் கல்வி உனக்கு அவ்வளவு தெளிவை விளைவிக்காது'' என்று தன்னை வியந்து உரையாடினான். இதைக்கேட்ட அச்சிறுமி, "அண்ணா, இதோ இருக்கும் கோழிமுட்டை எங்கேயிருந்து வந்தது? சொல், பார்ப்போம்'' என்றாள். அவன் பரிகாசம்செய்து "சபாஷ்! பேதாய்! இவ்வளவு பெருத்த கேள்வியா நீ என்னைக் கேட்கத் துணிந்தாய்? கோழிமுட்டை கோழியினிடத்திலிருந்து வந்தது. இது தெரியாதா?'' என்றான். அதற்கு அச்சிறுமி "கோழி எங்கேயிருந்துவந்தது?'' என்றாள். அதைக்கேட்ட அவன் "முட்டையிலிருந்து கோழி வந்தது'' என்றான். இதைக் கேட்டு அச்சிறுமி, நகைத்து "எது முன்னே உண்டாயிற்று? கோழியா? முட்டையா?'' என்றாள். அவன் பசபசவென்று விழித்து "அம்மா! கோழிதான் முன்னே உண்டாயிற்று'' என்றான். அதற்கு அவள் "முட்டையிலிருந்து வெளிப்படாத ஒரு கோழி ஆதியில் இருந்தது என்று நீ ஒப்புக்கொள்கிறாயா?'' என்றாள். அதைக்கேட்டு அச்சிறுவன் இது என்ன வம்பாயிருக்கிறது என்று திகைத்துச் சற்றே நிதானித்து "அம்மா! முட்டைதான் முன்னே உண்டாயிற்று'' என்றான். இதைக்கேட்ட அச்சிறுமி "பளா! பளா! நன்று! நன்று'' என்றுசொல்லிக் கைகொட்டிநகைத்து, "அப்பா! கோழியிடாத ஒரு முட்டை ஆதியில் இருந்ததென்று நீ ஒப்புக்கொள்கிறாயா?'' என்றாள். இதைக்கேட்ட சிறுவன் ஒன்றும்பேச வகையறியாது உதட்டை மென்று பல்லைக் கடித்துக்கொண்டு கோபித்து நின்றான். அப்போது அச்சிறுமி அவனைப் பார்த்து அடியில்வருமாறு கூறினாள்:

"சோதரனே! வயதில் என்னினும் நீ மூத்தவன்.

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'.

ஒரு விஷயத்தைக் கூறுவாருடைய வயது, குணம் முதலிய வற்றை நோக்காமல், அப்பொருளின் பயனை நோக்கி, நல்லதைக் கிரகித்துத் தீயதை விடுவதே உத்தமபுருஷனுடைய கடமை என்று பொருள்பட நாயனார் கூறிய அமுதத் திருவாக்கை அனுசரித்து என் சொற்களுக்குச் சிறிது செவி சாய்ப்பாயாக. அற்பவஸ்துக்களாகிய கோழியும் முட்டையும் உண்டான விதத்தைச் சொல்ல வகையறியாத நீ அண்ட சராசரங்கள் யாவும் ஒரு முதற்காரணமின்றி இயற்கையில் தாமே அமைந்தன என்று சாதிக்கத்துணிந்தது மிகவும் வியப்பாயிருக்கிறது. ஆதியில் உண்டானது கோழியோ? முட்டையோ? எனக்குந் தெரியாது. உலகத்தில் அதனை நிச்சயமாய்க் கூறுவது எத்தகைய சாஸ்திரிக்கும் முடியாது. அம்மட்டில் ஆஸ்திகரும் நாஸ்திகரும் சமந்தான். ஆனால் கோழியையாவது முட்டையையாவது ஆதியில் உண்டாக்கின, முதல்வன் ஒருவன் இருத்தல்வேண்டும் என்று ஆஸ்திகர் நிச்சயிக்கின்றார்கள். ஆகவே முட்டையிலிருந்து வெளி வராத கோழியாவது கோழியிட்டிராத முட்டையாவது ஆதியில் சர்வவல்லமையுள்ள கடவுளால் படைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்று மனத்தெளிவுகொண்டிருக்கும் ஆஸ்திகர் இத்தகையவினாக்களுக்குப் பசபச என்று விழிக்கவேண்டியதில்லை. அர்த்தசாரமற்ற இயற்கை என்னும் பதத்தையே கதியாகக்கொண்டிருக்கும் நாஸ்திகர் இப்படிப்பட்ட வினாக்களுக்கு விடைபகரமுடியாமல் அல்லற்படவேண்டிவரும். பரிதாபம்! ஓர் அரசனுடைய அரசாட்சிக்குட்பட்ட இரண்டு குடியானவர்களுக்குள்ளே ஒருவன் தனக்காகவும் ஏனையோர்க்காகவும் அவ்வரசன் செய்துவரும் அளவிறந்த நன்மைகளையும் இராஜாங்க ஏற்பாட்டின் ஒழுங்கையும் சட்ட நிரூபணம் முதலிய விவரங்களையும் நன்றாய் அறிந்தவன்; மற்றவனோ அவைகளில் எதையும் எவ்வளவும் உணர்ந்திலாக் கயவன்; இவ்விருவருக்குள் இராஜவிசுவாசம் யாரிடத்து அதிகமாயிருக்கும்? முன்னே சொல்லப்பட்டவனிடத்தே தான் இருக்கும் என்பதற்கு எவ்வளவும் ஐயமில்லை. அது

போல், உலகத்திலுள்ள பூதபௌதிக ஏற்பாடுகளின் விசித்திரங்களையும், சூரியன் சந்திரன்முதலிய அளவிறந்த உடுத்திரள்களின் இயக்கத்தைப்பற்றிய காலக்கிரமத்தையும், ஊனக்கண்ணுக்குப் புலப்படாத எண்ணிறந்த ஜீவராசிகள் அகண்டாகார வெளியில் எங்கும் நிறைந்திருந்தும் அவற்றிற் கெல்லாம்,

'கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கும் மெய்யன்'

படியளக்கும் விசித்திரத்தையும் பேரருட்டிறத்தையும் சர்வ வல்லமையையும் சாஸ்திரங்களின் மூலமாகப் பூரணமாயுணர்ந்தவன் எவனே அவனே அங்ஙனம் ஒரு சிறிதும் உணரப்பெறாதவனைவிட எண்ணில் மடங்கு தெய்வ நம்பிக்கையும் பக்தியும் பெற்றிருக்க வேண்டியதன்றே? ஆகையால் என்னிலும் நீ அதிக தெய்வ விசுவாசம் உள்ளவனாய் இருத்தல் வேண்டும். இவ்வளவுவரையில் நீ வாசித்தும் அந்த இணையில் ஞானபரணரை நினைக்கவும் எண்ணம் உதியாததா. அம்மம்ம! பரிதாபத்துக்கிடம்.''

அச்சிறுமி இந்தப்படிசொல்லியானபிறகு,'சாப்பிடலாம், வா' என்று அச்சிறுவனை இட்டுக்கொண்டு போனாள். இருவரும் அறுசுவையோடுகூடிய சாப்பாடு உண்டு வீட்டுக்காரன் களிக்க மனம் மகிழ்ந்தார்கள். அச்சிறுவன் கூடியமட்டில் கல்விக்கு அணிகலமாகிய நடுவுநிலைமை உள்ளவனானபடியால் அச்சிறுமி தனக்கு எடுத்துரைத்த வசனங்களின் உண்மையை அறிந்து அன்றுமுதல் கல்விச்செருக்கை அறவேவிட்டு நாளாவட்டத்தில் ஆன்றோருடைய அனுபவ வாக்கியங்களை வாசித்து வெகுசீக்கிரத்தில் தெய்வநம்பிக்கை எய்தப்பெற்றான். ஆகையால் ஒருவன் எவ்வளவு சாஸ்திரங்களை வாசித்துப் புத்திவிசாலம் அடையப்பெற்றானேயாயினும், இளமைப் பருவத்திலேயே தெய்வபக்தியை விளைப்பதற்கான நூல்களிலும் பயின்று வரவேண்டியது. ஏனெனில்,

''கற்றதனா லாய பயன்என்கொல், வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்?''

## 12. காலம

"தேடப்படும் பொருளைச் சிக்கனவாகப் புதைந்துக் கோடிக்கொரு நிமிஷம் கொள்ளுகினும்" கொள்ளக்கிடையாத அவ்வளவு அருமையும் பெருமையுமுடையது ஜீவகாலம். அதில் அறியாமையுள்ள குழந்தைப்பருவத்தையும், யாதுஞ் செய்ய ஏலாத முதிர்வயதையும் அகற்றினால் நின்ற நாள், நாற்பது, மிஞ்சினால் ஐம்பது வருஷகாலமாம். இதினும் நித்திரைக்கும் வியாதிக்கும் நிவர்த்திக்க முடியாத பல தொந்தரைகளுக்கும் போவதுபோக,மீதியாயிருக்கிற காலம் மிகவும் சொற்பகாலமாம். இந்தக் காலத்தில்தான் நாம் அடையவேண்டிய அனைத்தையும் அடைந்து,செய்யவேண்டிய சகலத்தையும் செய்து முடிக்கவேண்டும். இதை யோசிக்கும்போது கல்விகற்று அறிவடையும்படி நமக்குக் கிடைக்கிற காலம் எவ்வளவு சுருக்கமென்று தெரியவரும். கல்வி பெருக்கமும் காலம் சுருக்கமுமாயிருக்கின்றன. "கல்விகரையில கற்பவர் நாள் சில" என்றார் பிறரும். அப்படியானால் இப்படிச் சுருங்கியகாலத்தில் வரம்பிலாக் கல்வி கற்றுத் தேறுவது எப்படியெனில், உள்ளதைக்கொண்டு நல்லதைச் செய்யவேண்டும். ஒரு நிமிஷமாவது அவம்போக்காமல் காலத்தை உபயோகப்படுத்த வேண்டும். பிசினித்தனக்காரன் பெரும்பாலும் பெரிய பணக்காரனாயிருக்கக் காண்கிறோமே, அதெப்படியாயிற்று? மற்றவர்களைப்பார்க்கிலும் அதிக வரும்படி அவனுக்கு இருக்கிறதினாலேயா? இல்லை. அவன் எப்போதும் வெகு விழிப்பாயிருந்து செலவைச் சுருக்கிக் கால்காசுமுதல் விடாமல் கையை இறுகப்பிடித்துக் கூட்டிவைக்கிறதினாலே வருமானம் சுருங்கியிருந்தபோதிலும் பணத்தைப் பெருக்கிவிடுகிறான். அப்படியே காலம் சுருக்கமாயினும் அதை வெகு கவனத்தோடும் ஜாக்கிரதையோடும் உபயோகப்படுத்துவோமாகில் நாம் அறியவேண்டியவைகளை அறியவும் செய்யவேண்டியவைகளைச் செய்யவுந் தக்கதாக அதைப் பெருக்கிக் கொள்ளலாம். இதை இளமையிலேயே ஆரம்பிக்கவேண்டும். அப்பொழுதுதான் குறைவின்றி முடியும். சுருக்கமாய்ச் சொல்லில் இம்மை மறுமைக்குரிய சகல சுகதுக்கங்களும் இன்பதுன்பங்களும் எல்

லாம் காலத்தை உபயோகிக்கிறதில் தான் அடங்கியிருக்கின்றன; ஆதலால் காலத்தைப் புத்தியாய்ச் செலவழிக்க வேண்டும்.

ஒவ்வொருநாட் காலையிலும் எழுந்தவுடனே அன்று செய்யவேண்டியவற்றைக்குறித்துச் சிந்தித்து இன்னநேரத்தில் இன்னது செய்யவேண்டும் என்று தீர்மானமும் ஒழுங்கும் செய்துவைத்துக்கொள். அப்புறம் அந்தந்தநேரத்தில் அதது நடக்கப் பார். ஒருநிமிஷமாவது பலனின்றிச் சும்மா கடந்துபோகவிடாதே. யோசிக்கிறதும் உடனேசெய்கிறது மாயிருக்கவேண்டும். இவ்விரண்டுக்கும் மத்தியில் காலம் கடந்துபோக விடப்படாது. மகா அலெக்சாந்தர் என்னும் அரசர் சொற்பகாலத்தில் உலக முழுமையும் ஜெயித்ததைக்குறித்து ஒரு விசேஷம் சொல்லப்படுகிறது. அதென்னவெனில், அவர் ஒரு ராஜ்யத்தைப் பிடிக்கவேண்டுமென்று தீர்மானித்த அந்த நிமிஷமே செய்கைக்கு உடன்பட்டுவிடுவராம். அந்தச் செய்தி எதிரிகளுக்குப் போய்ச் சேருமுன்னமே அவர் சேனை அவர்கள் தேசத்துக்குச் சமீபித்துவிடுமாம். இதுதான் செய்கையின் திறம். 'இரவில் படுக்குமுன்னதாக, காலையிற் செய்த ஒழுங்கின்படி காலத்தைச் செலவிட்டோமா என்று சிந்தித்துப்பார். தவறுதல் உண்டென்றுகண்டால் அடுத்த நாளாவது அதைத் திருத்தி நடக்கப்பார். அப்புறம் சிறிது காலத்துக்குள் திருந்திக்கொள்வாய்.

---

## 13. அடக்கமும் உழைப்பும்

நமக்கு ஈடு இணை யாரேனும் உண்டா? நம்மளவு தெரிந்தவர்கள் யார் இருக்கிறார்கள்? என்கிற வீண்பெருமை உனக்குள் தோன்றலாம். அப்படியானால் பெரியோருடைய ஆசாரத்தை ஆராய்ந்துபார். அதிக அறிவாளர்களும் திறமையாளர்களும் வெகுகாலம் சிரமப்பட்டுக் கடைசியாய்,

> "கற்றதுகைம் மண்ணளவு; கல்லா துலகளவு:
> உற்ற கலைமடந்தை ஓதுகிறாள்.—மெத்த
> வெறும்பர் தயங்கூற வேண்டாம், புலவீர்!
> எறும்புந்தன் கையால்எண் சாண்"

என்ற செய்யுளின் கருத்துக்கிணங்க, நாம் கற்றது எம்மாத்திரம்? நாம் கற்கவேண்டியது எவ்வளவு அபாரம்! என்று

சருதி நீறுபூத்த நெருப்பையும், கரித்துணியில் முடிந்த மாணிக்கத்தையும் ஒப்ப ஒன்றும் தெரியாதவர்போல்அடங்கியிருக்கிறார்கள் அல்லவா? மேலும், எப்படி ஒரு பிரபல வர்த்தகன் தன் சரக்குகள் எல்லாவற்றையும் உள்ளே பத்திரமாய் வைத்திருந்து, வாங்குவோர்வந்து கேட்டபின்மேல் எடுத்துக் காட்டுகிறானோ,அப்படியே தெரிந்த நிபுணர்களும் தங்களுடைய கல்வியை மனத்திலேயே வைத்திருந்து தகுந்த சமயம் வாய்க்கும்பொழுது மாத்திரம் மிகுந்த அடக்கத்துடன் எடுத்துக் காட்டிப் பிரகாசமடைகிறார்கள்.

நீ அடக்கக்கூடாத அதிகார ஆசையுடையவனாய்இருந்தால் அதிக பேர்பெற்ற அரசர்கள் அதிகாரிகள் முதலானவர்களுடைய சரித்திரங்களைப் பரிசோதித்துப் பார். எந்தச் சரித்திரத்தைப் பார்ப்பினும்,உயர்பதவியும்கீர்த்தியும்உழைப்பினாலும் விடாமுயற்சியாலும் சித்தித்தனவாகத் தெரியவருமேயொழிய, அதிர்ஷ்டத்தாலும் நற்செயலாலும் உண்டாயினவென்று காணாய். ஆகவே,ஜயிக்க விரும்புவோன்சண்டை செய்தாலொழிய ஜயமடையான்; உயர்ந்த மலையுச்சிக்குப் போகக் கருதுவோன் வருந்தித் தொத்தித் தொத்தி ஏறினாலொழிய அவ்விடம் சேரான்.அதுபோல் புகழ்பெறவிரும்புவோன்சிறிதுசிறிதாகஉலகுக்குஇதஞ்செய்து வரவேண்டும்.

சந்தேகம்,அதைரியம்,பயம்முதலியவற்றினின்று விலக வகை என்னவென்றால், சர்வ வல்லவராகிய கடவுள் உழைக்கிறவர்களுக்கு உதவிசெய்வார் என்பதை உன்னி, உன்னால் கூடியமட்டும் சிரமப்பட்டுச் செய்து, அவருடைய ஒத்தாசைக்குப் பாத்திரனாக முயலுவதேயாம். இதைவிட்டுச் சோம்பி அஜாக்கிரதையாயிருந்து, உள்ளம் நிரம்ப ஞானமும் பெட்டி நிரம்பப் பணமும் வேண்டுமென்றால் கிட்டுமா? கிட்டா. மேலும் கடவுள் தமது காசுக்கடையில் வருகிற சோம்பேறிகளுடைய உண்டிச் சீட்டுகளுக்கெல்லாம் பணம் கொடாமல், உழைப்பாளி கொண்டுவருகிற உண்டியைமாத்திரம் மதித்துச் செல்லாவணியாகும்படி ஏற்படுத்தியிருக்கிறார்.

## 14. அரிச்சந்திரன்

(அங்கம் V—களம் III)

[அரிச்சந்திரன் சந்திரமதியை வெட்டப் போகும்பொழுது, அவனைத் தடுத்து,]

விசுவாமித்திரர்.—அரிச்சந்திர! உனக்கு இதுவரையில் நேர்ந்த இடையூறுகள் அனைத்தும் என்னுடைய சூழ்ச்சியால் நேர்ந்தவைகளேயன்றி வேறல்ல. இதற்குக் காரணம் ஒன்றுண்டு. அது என்னையெனின், ஒருநாள் இந்திரன் தன் அவைக்களத்திலுள்ள முனிவர்களை நோக்கி, "ஐயன்மீர், மண்ணுலகின்கண் நன்னெறியினின்றும் சற்றும் விலகாத மன்னன் ஒருவன் உளனோ?" என்றனன். அது கேட்ட அனைவரும் வாளா இருப்ப, வசிஷ்டர் மகபதியை நோக்கி, "ஐய! எம்மிடத்து அன்பு பூண்டொழுகும் அரிச்சந்திரன் நன்னெறிக்கோர் நாயகமாய் விளங்குகின்றனன்" என்றனர். அவரிடத்து நெடுங்காலமாகக் கொண்டிருந்த பகைமை காரணமாக, அவர் கூறியவைகளை அறவும் மறுத்து, "அவ்வரிச்சந்திரன் தீக்குணங்கள் அனைத்தும் திரண்டு ஒருருவானவன்; அதனை இன்னே வெளிப்படக்காட்டுவேன்" என்று மண்ணுலகை யடைந்தேன். உன்னைத் தீநெறிக்கண் செலுத்த வழி நாடினேன். அக்கருத்துக்கொண்டே, யாக மியற்றுவதற்கென்று பொன் பெற்று அதனை நின்பாலே வைத்து வந்தேன். அந்தோ! ஒவ்வொன்றாக எத்தனை தீங்குகள் இழைத்துவிட்டேன். அரிச்சந்திர! காட்டகத்திலுள்ளவிலங்குகளை நாட்டகத்திற் புகுமாறு வேடுவர்களைக்கொண்டு ஓட்டுவித்தேன். பின்பு நீ வேட்டை காரணமாகக் காட்டையடைந்த காலத்து, உன்னை மயக்கவந்த பெண்கள் எம்முடைய உயிர்ப்பில் உதித்த பெண்களே. மற்றும் வீண்வாதம் பேசி உனது அரசாட்சியைப்பெற்றபின்னும் முன்னேவைத்த பொன்னைச் செலுத்துமாறு வருத்தினுல் தருதற்கில்லாது சொல் தவறுவாய் என்று எண்ணினேன். அதனிலும் நீ மனஞ் சோர்வுபடாது, அப்பொன்னைத்தருவதாகச்சம்மதித்துத் தவணை பெற்றுக்கொண்டு காசியம்பதியை நோக்கிச்செல்லும் மார்க்கத்தில், மாறுவேடம் பூண்டு, உன் தாயார் மாணுவஸ்தையிலிருந்து உன்னைக் காணப் போவாக்

கொண்டிருப்பதாகக் கூறியவனும், பின்பு அவள் இறந்து விட்டாள் என்று உரைத்தவனும், மற்றும் சோசியனாக வும், தத்துவ சாஸ்திரியாகவும், அஷ்டாவதானியாகவும், வைத்தியனாகவும், வாதியாகவும் உருமாறி வந்து உங்களுக்குத் துன்பம் உண்டாக்கவல்ல விஷயங்களையும் புரட்டுகளையும் புகன்று சோதித்தவர்களும், உன் மனைவியையும் மைந்தனையும் விலைக்குக்கொண்ட காலகண்டனும், உன்னை விலைக்குக்கொண்ட வீரவாகுவும் என்னால் அனுப்பப்பெற்றவர்களேயாவர். இவர்கள் அனைவரும் எனது துர்ப்போதனையைக் கைக்கொண்டு வந்து உங்களுக்குப் பலவகையினும் இன்னலிழைத்துத் தீ நெறிக்கண் செலுத்த முயன்றனர். ஒன்றேனும் முடிந்ததில்லை. பின்னர் தேவதாசன் உயிரைப்போக்கிய அரவும் எனது சூழ்ச்சியால் வந்ததே. அவனைச் சந்திரமதி சுடலைக்குச் சுமந்து செல்லுகையில், அப் பிள்ளையை உயிர்ப்பித்துத் தருவதாக முன்னின்றவன் எல்லாம் வல்ல சித்தனென்று பெயர்கொண்டுவந்த எனது சீடனே. எவராலேனும் ஏதேனும் முடிந்ததா? இல்லை, இல்லை. அரிச்சந்திர! யான் கல்மனங்கொண்டு அதன்மேலுஞ்செய்த தீங்குகளை என்னென்று உரைப்பேன்! காசி மன்னன் மைந்தனைக் களவாடிக் கொண்டுவந்து உயிர்போக்கி வழியிற் கிடக்கச் செய்தவனும், பின்பு அக்கொலை செய்தவள் நின் மனைவியே எனத் தீர்மானிக்கத் தட்டானாகவும், பட்டு வியாபாரியாகவும், யாத்திரிகனாகவும், சந்நியாசியாகவும், நியாயவாதியின் குமாஸ்தாவாகவும் வேடங்கொண்டு அக்கொலை செய்ததை உண்மைபுறக்கண்டவர்களேபோல் சாட்சியம் கூறினோர் அனைவரும் என்னால் ஏவப்பட்டவர்களே. அரிச்சந்திர! அந்தோ! உனக்கிழைத்த தீவினைப்பெருக்கை என்னவென்று உரைப்பேன்! செய்யுங்காலத்து ஒவ்வொன்றும் ஓர் அணுவாய் இருந்தது. அனைத்தையும் இன்று திரட்டிப் பார்க்கையில் பெருமலைகளாகக் காண்கின்றன. தீவினை தினையளவாக இருந்து பனையளவாகப் பெருகும் என்னும் பழமொழிக்கு யானே இலக்கியமாக இருக்கின்றேன். 'எண்ணித் துணிக கருமம்: துணிந்தபின் எண்ணுவ மென்ப திழுக்கு' என்

பதை எண்ணிப் பாராமற் போயினேன். ஆஹா! "அடாது செய்வோன் படாது படுவன்" என்றபடி குன்றினை முட்டிய குருவியைப்போல வசிட்ட முனிவரோடு வாதிட்டு வீணே பழிக்குப் பாத்திரனானேன். என்செயல் எனக்குத் தீங்கினை விளைப்பதாயினும், உலகிற்கு இது ஒரு பெரு நன்மையை விளக்குந் திருஷ்டாந்தமாக விளங்கும். அரிச்சந்திர! இவ்வகைய துன்பங்களை உனக்கு இழைத்தேனென்று நீ வருந்தாதை. உனக்கு இத்துன்பங்களைச் செய்யும்படி யான் அடைந்த துன்பத்திற்கு ஓர் அளவும் உண்டோ! 'கெடுவான் கேடு நினைப்பான்' என்பதை அறியாயா? அந்தோ! இப்பழி இன்றோடு ஒழியுமா! ஒழியாது, ஒழியாது. சூரியசந்திரர் உள்ளளவும், இதுகாறும் அறியப்படாத பற்பல தேசங்களினும், பற்பல பாஷைகளினும், பற்பல வருணத்தாராலும், நாடகமாகவும் நடத்தப்படும். அக்காலத்தே, என் உருவினைக்கண்ட அனைவரும் என்னைப் பழித்துக் கூறுவரே. என்ன செய்வது! பிறர்க்குத் துன்பம் விளைப்பதனாலுண்டாகும் பயன் இதுவேயாகும். அரிச்சந்திர! இதுவரையில் உண்டான பழிக்கும் பாவத்திற்கும் அளவில்லை. இனி உன் மனைவியைச் சிரச்சேதம் செய்து ஸ்திரீ ஹத்திதோஷத்தையும் என்மீது சுமத்தாதை, சற்றுப் பொறுப்பாய்.

**அரிச்சந்திரன்.**—சுவாமீ! இவ்விளைவுகள் அனைத்தும் தேவரீரது சூழ்ச்சிகள் என்பதை யான் இதற்குமுன் அறியேன்; இன்றே அறிந்தேன். தேவரீர் இதுகாறும் செய்துவந்த சூழ்ச்சிகளை யுன்னினால், இப்போது அடியேனைச் சற்றுப் பொறுக்கும்படி சொல்வதும் ஒரு சூழ்ச்சியேயாகும் என்று சந்தேகிப்பதற்கு இடமுண்டாகின்றது. அதனால் தேவரீர் அடியேனை மன்னிக்க வேண்டுகிறேன். காலந் தாழ்க்கின்றது. கடமையை நிறைவேற்றவேண்டும், சற்று அகன்றிருங்கள்.

**[விசுவாமித்திரர் வேறு வகையின்றி அவன் சொற்படி அகன்றிருக்க, அவன் தன் மனைவியை ராஜ கட்டளைப்படி வெட்டத் துணிந்து வாளை ஓங்கி வீசினான். அவ்வளவில் அவ் வாள் மலர் மாலையாகச் சந்திரமதி கழுத்தில் விழுந்தது. தேவர்கள் தோன்றி அரிச்சந்திரனை மெச்சி, அவன் பாலனை உயிர்ப்பித்து, இழந்த அரசு முதலியவைகளை அவன் பெறச்செய்து வாழ்த்தினார்கள்.]**

# 15. பச்சையப்ப முதலியார்.

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்றார் ஆசிரியர் திருவள்ளுவ நாயனார். அத் திருவாக்குக்கு இலக்காகத் தோன்றி, நிலையாத இவ்வுலகில் நிலையான புகழை நாட்டிச் சென்ற நல்லோர்களில் ஒருவராவர் தென்னாடெங்கும் தெரியச் சிறந்த பச்சையப்ப முதலியார் என்னும் தமிழ வள்ளல். இவர்,

'யுகமேழு கோடி இருபதில்க்கமும் உள்ளமட்டும்
சகமேழு மேழும் புகழே நிறுத்தித் தமிழ் புனைந்து
புகழ்மேழி வாகைப் பதாகையும் வீரப் புலிக்கொடியும்
மகமேரு விற்சென்று நீட்டியதாற் றொண்டை மண்டலமே.'

என்று சிறப்பிக்கப்பட்ட தொண்டை நாட்டில் சென்னை மா நகர்க்கும் காஞ்சீபுரத்துக்கும் இடையில் உள்ள பெரிய பாளையம் என்னும் கிராமத்தில் 1754௵ வேளாள குல திலகரான விசுவநாத முதலியார் என்னும் புண்ணிய சீலருக்கும் பூச்சியம்மாள் என்னும் புண்ணியவதிக்கும் புத்திரராகப் பிறந்தவர். இவர் பிறப்பதற்குமுன் இவர் தாய்தந்தையர் காஞ்சீபுரத்தில் வசித்துக்கொண்டிருந்தனர். ஆதலால் இவர் காஞ்சீபுரம் பச்சையப்ப முதலியார் என்றே பெயர் வழங்கப் பெறுவாராயினர்.

பச்சையப்ப முதலியார் பிறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்னமே அவர் தந்தையார் விசுவநாத முதலியார் இறந்துபோயினர். அதன் பின்பு, வேறு ஆண் துணையற்ற பூச்சியம்மாள் தன் குமாரத்திகள் சுப்பம்மாள், அச்சம்மாள் என்பவர்களை அழைத்துக்கொண்டு தம் கிராமமாகிய பெரிய பாளையம் போய்ச் சேர்ந்தார். அவ்விடத்தில் ஆர்க்காட்டுச் சுபேதாருடைய காரியஸ்தராய் அதிகாரம் செலுத்தி வந்த ரெட்டிராயர் என்னும் ஒருவர் இருந்தார். அவர் தம் குடும்பத்தாருக்கு மிகவும் பழக்கமுள்ளவராகையால் பூச்சியம்மாள் தம் குமாரத்திகளுடன் அவர் ஆதரவில் இருந்தார்.

உரிய காலத்தில் பூச்சியம்மாள், தமது தவம் மட்டுமன்று, தென்னாடு செய்த தவமெல்லாம் ஒருங்குதிரண்டு ஒரு வடிவெடுத்து வந்தாற்போலொத்த அருமைத்

திருக்குமாரரைப் பெற்றார். அன்று, அவ்வம்மையார், கணவனையிழந்து கதியற்று ஒரு சிற்றூரில்வந்து அந்நியர் ஒருவரது பாதுகாப்பில் இருக்க நேர்ந்த அந்நிலையில்,பெற்ற இம்மகவே பின்னர் அரசர் கூட்டுறவும் ஆன்றோர் மதிப்பும் பெற்றுப் பிரபலமுற்றுத் தமது வள்ளன்மையால் வழி வழிப் பெயர் சிறக்க வந்த பச்சையப்ப முதலியார் என்றால் ஈசனது அருள் விளையாட்டை யாவரே அறிய வல்லார்?

பச்சையப்ப முதலியாராகப் பிறந்த பச்சைப்பாலகனை அன்னையார் குடி தழைக்க வந்த குலக்கொழுந்தாகப் பாராட்டிச் சீராட்டி வளர்த்து வந்தார். குழந்தைக்கு ஐந்தாவது வயது வரவும் ரெட்டிராயர் அதைப் படிக்கவைத்தார். குழந்தை படிக்கத் தொடங்கிய சிறிது காலத்துக்கெல்லாம், அக்குழந்தைக்கும் அதன் தாயாருக்கும் ஒரு பெரிய ஆதரவாயிருந்த ராயர் இறந்து போயினர். கணவன் ஆதரவை இழந்து அவர் ஆதரவைப் பெற்றிருந்த பூச்சியம்மாளுக்கு அவர் இறந்தது, கண்ணிழந்து கோல்கொண்ட குருடன் அக்கோலையும் இழந்ததுபோ லாயிற்று.

பூச்சியம்மாளுக்கு இருந்தது சொற்ப ஆஸ்தி. ரெட்டிராயர் இறந்து போனபிறகு அதையும் தம் மக்களையும் பாதுகாத்து விருத்தி செய்பவர்கள் வேறெவரும் அவ்விடத்தில் அவ்வம்மையாருக்குக் கிட்டவில்லை. அதை எண்ணி அவர் மிகவும் மனம் வருந்திக்கொண்டிருந்தார். அப்போது அவ்வம்மையார் நலத்தை விரும்பிய அவ்வூரார் சிலர் 'இராஜதானி நகரமாகிய சென்னைக்குச் சென்றால் நன்மை உண்டாகும்' என்றார்கள்.

பூச்சியம்மாள் அதற்கு இசைந்து தமக்கு ஆலோசனை கூறியவர்கள் உதவியைக் கொண்டே யௌவன பருவத்தினரா யிருந்த குமாரத்திகள் இருவரையும், அறியாச் சிறு பருவத்தினரான அருமைக் குமாரர் பச்சையப்ப முதலியாரையும் அழைத்துக்கொண்டு சென்னைக்குச் சென்றார். சென்னையில் இப்பொழுது அவர் குமாரர் பெயரை விளக்கி நிற்கும் பச்சையப்பனார் கலாசாலை அமைந்திருக்கும் இடத்திற்கு அருகாமையில் உள்ள சாமிமேஸ்திரி தெருவின் வடபுற மேலண்டைக் கோடியிலிருந்த ஒரு வீட்டில் பூச்சியம்

மாள் தம் மக்களுடன் குடியிருந்தார். குடியேறிய சில நாட்களுக்கெல்லாம் அவர் தம் கையிலிருந்த சொற்ப ஆஸ்தியைப் பாதுகாத்து விருத்திசெய்து தரக்கூடிய ஒருவர் வசம் ஒப்பிக்க விரும்பி அதற்கானவர்களை யாரென்று விசாரித்தார். அப்பொழுது, போனி நாராயணபிள்ளை என்னும் சீமானூர் தம் விருப்பத்தை நிறைவேற்றத் தகுந்த யோக்கியதை உடையவர் என்று தெரிந்தது.

நாராயணபிள்ளை என்னும் அச் சீமானூர் யாதவகுலத்தினர்; அக்காலத்தில் சென்னைக்கு வந்து வியாபாரம் செய்துகொண்டிருந்த போனி என்னும் ஐரோப்பிய துரைமகனுக்கு வர்த்தக சம்பந்தத்தில் துபாஷியா யிருந்தவர்; அதனால் போனி நாராயணபிள்ளை எனப் பெயர் பெற்றவர்; இங்கிலீஷ் துரைத்தனத்தாருக்கு மிகவும் வேண்டியவர்; தமது செல்வாக்கினால் அக்காலத்தில் பெரிதாய் மதிக்கப்பட்ட துரைத்தன உத்தியோகங்கள் பலவற்றை நம்மவர்க்குச் சம்பாதித்துக் கொடுத்தவர்; நவாப் அரசாண்டகாலத்தில் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள மெதவாயல் என்னும் கிராமத்தை அவனிடம் சுரோத்திரியமாகப் பெற்றுத் தரும சத்திரத்துக்குப் பயன்படுத்தியவர்; பலர் புகழ வாழ்ந்த பரோபகார பிரபலர்.

ஆதலால், பூச்சியம்மாள், அவரே தம் கோரிக்கையைக் குறைவற நிறைவேற்றத் தக்கவர் என்று அறிந்து அவரைச் சென்று கண்டு தமது விருப்பத்தைக் கூறினர்.

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்'

என்னும் வேதவாக்கைக் கடைபிடித் தொழுகிய பெருந்தகையாளரான நாராயணபிள்ளை அவ்வம்மையார் வேண்டுகோட்கு உவப்புடன் இணங்கினர். அதுமுதல், அவர், பூச்சியம்மாளுக்கும் அவர் மக்களுக்கும் முற்று இளங்கொடிக்குப் பற்றுகக் கிடைத்த கொழுகொம்புபோ லாயினர். அவர் பூச்சியம்மாளைத் தம் உடன்பிறந்த சகோதரிபோல் பாவித்து அவர் குமாரர் பச்சையப்ப முதலியாரைப் படிக்க வைத்ததோடு பெண்மக்கள் இருவரையும் தக்க இடந்தேடி விவாகஞ் செய்து கொடுத்தார்.

பச்சையப்ப முதலியார், நாராயணபிள்ளையின் முயற்சியால் வாலிபப் பருவத்திற்றனே உத்தியோகஞ்செய்யத் தொடங்கிவிட்டார். ஆரம்பத்தில் அவர் மேற்கொண்ட உத்தியோகம் தரகராக நம்மவர்களிடமிருந்து ஐரோப்பியருக்குக் கடைச் சரக்குகள் வாங்கிக்கொடுப்பது. அத் தொழிலில் தாம் சம்பாதிக்கும் பொருளில் பெரும் பகுதியை அவர் தானதருமங்களிற் செலவழித்து விடுவார்; எஞ்சியதைத் தம் தாயாரிடம் கொடுப்பார்.

'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்த
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.'

என்று ஔவைப்பிராட்டியார் கூறியது உண்மையேயன்றோ. சின்னஞ் சிறுவயதிற்றனே முதலியார் அவர்களுக்கு அமைந்த இந்தப் பரோபகார குணம் அன்றோ அவர் பெயரை அழியாமல் நிலைநிறுத்தியது! இது நிற்க.

இவருடைய அருங்குணத்தையும், நுண்ணறிவையும், ஆராய்ந்து தெளிந்ததைத் தீரமாய்க்கொண்டு துணிவுடன் நிறைவேற்றும் வினைத்திட்பத்தையும் கண்டறிந்த ஓர் ஐரோப்பியப் படைத்தலைவர் இவரைத் தம்முடைய உத்தியோகஸ்தர்களுள் ஒருவராக வைத்துக் கொள்ள விரும்பினர். முதலியார் அவர் விருப்பத்துக் கிணங்கி அவரளித்த ஒரு சாமானிய உத்தியோகத்தைப் பெற்றுக்கொண்டு, தம் தாயார் முதலியவர்களுக்குத் தெரியாமல் அவ் வைரோப்பியப் படைத்தலைவருடன் சென்னையை விட்டுப் போய்விட்டார். இவரைக் காணுமல் இவர் தாய் தமக்கைமாரும் நாராயணபிள்ளை யவர்களும் மிகவும் கவலையுற்றனர்கள். பிறகு சென்னைக்குக் காதவழிதூரத்தில் பாலவயற் சத்திரத்தண்டை தங்கியிருந்த பட்டாளத்தில் இவர் உத்தியோகம் வகித்திருப்பது தெரிந்தது. உடனே நாராயணபிள்ளை யவர்கள் தாமே நேரிற்போய் அப் பட்டாளத்தின் தளகர்த்தரைக் கண்டு பேசிப் பச்சையப்ப முதலியார் அவ் வுத்தியோகம் பெற்றுச் செல்வதில் தங்களுக்குச் சிறிதும் சம்மதமில்லை யென்பதைத் தெரிவித்து அவரை

அவ் வுத்தியோகத்தினின்றும் விடுவித்து அழைத்துக் கொண்டுவந்துவிட்டார்.

அப்பாற் சிலகாலம் சென்றபிறகு பச்சையப்ப முதலியார்க்கு மற்றொரு சிறந்த உத்தியோகம் கிட்டியது. நிக்கிலீஸ் துரைமகனார் துரைத்தன அதிகாரியாகத் தென்னாடு சென்றார். அப்போது பச்சையப்ப முதலியார் நாராயண பிள்ளை யவர்களின் சம்மதத்துடனே, அவருக்குத் துபாஷியாக உடன் சென்றார். அவ்வுத்தியோகத்தில் அவருக்குப் பொருள் வருவாய் மிகுதியாகக் கிடைத்தது. அதை அவர் துர்விநியோகம் செய்யாமல் நல்வழியிற் செலவிட்டது போக மிஞ்சியதைத் தொகுத்துவைத்து வருவாராயினர்.

சிறிது காலம் அவர் அந்த உத்தியோகத்திலிருந்து பிறகு சென்னைக்குத் திரும்பிவந்து சேர்ந்தார். வந்தவுடன் தாம் தொகுத்துக் கொண்டுவந்த பொருளை, நன்மகனுக்குரிய முறைமைப்படி தம்மைத் தந்தை வளர்ப்பதுபோல் வளர்த்துவந்த நாராயணபிள்ளை அவர்களிடம் கொடுத்தார். அவர் அதைப் பெற்றுப் பூச்சியம்மாள் தம்மிடம் ஒப்பித்த பொருளோடு சேமித்து வைத்தார்.

நாளடைவில் பச்சையப்ப முதலியார் குடும்ப பாரம் வகிக்கத்தக்க பருவமுடையவராயினர். அஃதறிந்து, நாராயணபிள்ளை அவர்களே முன்னின்று பச்சையப்ப முதலியாருக்கு அவருடைய தமக்கை சுப்பம்மாள் குமாரத்தி ஐயாளம்மாள் என்னும் பெண்மணியை விவாகம் செய்வித்தார்.

விவாகமானபிறகு, பச்சையப்ப முதலியார் தாம் முன் செய்துவந்த துபாஷி உத்தியோகத்திற்றானே தலையிட்டார். அக் காலத்தில் பிரிட்டிஷ் துரைத்தனம் நம் நாட்டில் நன்றாய் வேரூன்றாமலிருந்ததால், இங்கும் அங்கும் சிறு கலகங்களும் யுத்தங்களும் அடிக்கடி நிகழ்ந்து வந்தன. ஆதலால் துரைத்தன சம்பந்தமான உத்தியோகங்களில் பொருள் வருவாய் அதிகமாய்க் கிடைத்து வந்தது. சாதாரண உத்தியோகங்கள்தான் அப்படி யென்றால், துபாஷி உத்தியோகத்தைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ ?

துபாஷி உத்தியோகஸ்தர்களிற் பெரும்பாலாருக்கு இங்கிலீஷ் பாஷை மிதமாகப் பேசவும் எழுதவும் தெரியும். சிலருக்கு அவ்வளவு மில்லாமல் கொஞ்சம் கொஞ்சம் பேச

மட்டுந்தான் தெரியும். ஆனால் அவர்களுடைய சம்பாத்திய மோ ஓர் அளவுக்குட்பட்ட தன்று. ஒவ்வொருவரும் திரள் திரளாகப் பணஞ் சம்பாதித்து வந்தார்கள். அவர்கள் எல்லோரும், பச்சைக்கல் முருகு, பெரிய கடுக்கன், தோடா, ரத்தினமாலை, மோதிரம் இவை முதலிய ஆபரணங்களை அணிந்து நெடு அங்கி தரித்து, அதன்மேல் சரிகை நடுக்கட்டுக் கட்டிக், கையில் சிவப்பு உருமால் பிடித்துச், சாலுவை போர்த்துக்கொண்டு, பல்லக்கு முதலிய வாகனங்கள் ஏறிச் சஞ்சரித்தவர்கள்.

அத்தகையவர்களில் ஒருவராகப் பச்சையப்ப முதலியாரும் துபாஷி உத்தியோகம் வகித்திருந்தார். அப்பொழுது அவர் தர்மராய முதலியார் செங்கல்வராய முதலியார் என்னும் இருவரைத் தம்முடன் சேர்த்துக்கொண்டு, பூந்தமல்லி, திருப்பாசூர் முதலிய கிராமங்களில் சர்க்கார் மேல்வார நெல் முதலியவைகளைக் குத்தகைக்கு எடுத்தார். அதில் அவருக்கு மிகுந்த லாபங் கிடைத்தது. அதோடு, அக் காலத்தில் பிரபல ராஜதந்திர சிரேஷ்டராக இருந்த ஸலவன்துரை மகனார்க்கு முதலியார் அவர்களே தலைமைத் துபாஷியாயினார்.

ஸலவன் துரையவர்கள் திருச்சிறாப்பள்ளிக்குத் தலைமை அதிகாரியாய்ச் செல்ல நேர்ந்தது. அப்போது முதலியாரவர்களும் உடன் சென்றார். 1783 ஆம் வருஷத்தில் இங்கிலீஷ் துரைத்தனத்தார் கோயம்புத்தூரைக் கைப்பற்றி டிப்பு சுல்த்தான் ராச்சியத்தின்மீது படையெடுத்துச் செல்ல ஸலவன் துரையவர்கள் மூலமாக ஏற்பாடுகள் செய்தனர். அப்பொழுது முதலியாரவர்களே முதன்மையாக நின்று ஸலவன் துரையவர்களுக்கு வேண்டிய அனுகூலங்களைச் செய்துகொடுத்துத் துரைத்தனத்தாரால் புகழ்ப் பெற்றனர். அதுவுமன்றி, பல ராஜசமஸ்தானிகர்களுக்கும் பாளையப்பட்டாருக்கும் முதலியார் மிகவும் வேண்டியவராகி அவர்களுக்குத் தமது பேராலும், நாராயணபிள்ளை பேராலும் பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டு தேவையான பொருள்களைக் கடன் கொடுத்தல் முதலிய உதவிசெய்துவந்தனர். இம்மட்டுமன்று. தஞ்சை மன்னர் இங்கிலீஷ்காரருக்குத் தாம் செலுத்தவேண்டிய வருஷக்கட்டணத்தைப் பலவகை

நாணயங்களாகவும் உண்டிகளாகவும் கலந்து கொடுக்க நேர்ந்தது. அது இங்கிலீஷ்காரருக்கு மிகவும் தொல்லை தருவதா யிருந்தது. அதனால் பச்சையப்ப முதலியார் அரசர் கட்டணத்தைத் தாம் வட்டம் தள்ளிப் பெற்று இங்கிலீஷ்காரருக்கு ஒருவகை நாணயமாகச் செலுத்துவ தாக ஏற்றுக்கொண்டார். அவ்வகையில் வட்டத்தொகை நூற்றுக்கு இருபது முப்பது கிடைத்தமையால் முதலியார் மிகுந்த லாபமடைந்தார்.

இவ்வாறு சில வருஷங்கள் சென்றன. இதுவரையில் முதலியாரவர்களுக்கு, செல்வம் புகழ் முதலியவைகள் குறைவறக் கிடைத்தனவாயினும், புத்திரப்பேறு ஒன்று மட்டும் கிட்டவில்லை. அக் குறையை நிவர்த்தித்துக்கொள் ளக் கருதி, சந்தான விருத்தியின் பொருட்டு இரண்டாவது விவாகம் செய்து கொள்ளலாம் என்னும் தருமசாஸ்திரக் கோட்பாட்டை அனுசரித்து முதலியாரவர்கள் இரண்டாம் விவாகம் செய்துகொள்ள உடன்பட்டார். அதற்காகப் பெண்பார்த்து, வேதாரணியத்தில் தம்மைவிட உயர்ந்த குலத்தவரான சோழிய வேளாளர் குலத்தில் பழனியம் மாள் என்னும் ஒரு பெண்ணைத் தெரிந்தெடுத்தார். அப் பெண்ணுக்கு மிகுந்த ஆபரணங்களிட்டுப் பெண்ணின் பெற்றோருக்குப் பரிசப்பணமாகப் பதினாயிரம் வராகன் ரொக்கம் கொடுப்பதாக எழுதிக்கொடுத்துப் பெண்ணை விவாகஞ்செய்து கொண்டார்.

இவ் விவாகத்தினால் முதலியாரவர்கள் குடும்ப சமாதா னம் குலைந்ததேயன்றி அவருடைய கோரிக்கை ஈடேற வில்லை. 'ஏன் இவ்விவாகம் செய்துகொண்டோம்' என்று முதலியாரவர்கள் பின்னால் வருந்தியிருக்கக்கூடும் என்று கருத இடமுண்டு. இது நிற்க.

முதலியார் தாம் சம்பாதித்த திரண்ட பொருள்களைக் கொண்டு தமிழ்நாட்டிலுள்ள புண்ணிய ஸ்தலங்களிலும் காசிமா நகரத்திலும் பலவிதமான கட்டளைகளும் அன்ன தானங்களும் செய்தார். முதலியாரவர்களுக்கு அந்தரங்க நண்பரான வீரப்பெருமாள்பிள்ளை என்பார் ஒருவர் இருந் தார். அவர் சென்னையை அடுத்துள்ள சிந்தாதிரிப் பேட் டையில் வசித்து வந்தார். தம் நண்பருக்கு அருகாகவே

நாமும் இருக்க விரும்பி. முதலியாரவர்கள் சிந்தாதிரிப் பேட்டையை அடுத்த கோமளேசுரன் பேட்டையில் ஒரு வீடு கட்டி அதிற் சிலகாலமும் தஞ்சையிற் சிலகாலமுமாக வசித்துவந்தார். இவ்வாறு வசித்துவருங் காலையில் அவர் சைவ சமய தீக்ஷைகள் பெற்றுக்கொண்டார். அது முதல் ஒவ்வொரு நாளும் பூஜாகாலத்தில் தேவார திருவாசக முதலியவைகளைப் பண்ணுடன் ஓதி வந்தார். இரவில் தேவாரப் பதிகங்களை யாழில் அமைத்து வாசிப்பதும், சிவனடியார்களுடனிருந்து பெரிய புராணம் திருவிளையாடல் முதலிய சைவபுராண காலக்ஷேபம் செய்வதும், சிவனடியார்களைச் சிவமாகவே கருதி அவர்களுக்கு வந்தனை வழிபாடுகள் செய்வதும், சிவாலயத் திருப்பணிகள் செய்வதுமா யிருந்தார். இவருடைய பக்திச் சிறப்பைக் கேட்டுக் காசி ராமேசுர யாத்திரைபோகும் பக்தர்கள் இவரைக்காணவந்து கொண்டே யிருப்பார்கள். ஆதலால் இவர் வீட்டில் எப்பொழுதும் பக்தர்கள் கூட்டமே நிறைந்திருக்கும்.

தஞ்சையில் அமரசிங் மகாராஜாவுக்குப் பட்டமான சில நாட்களுக்குப் பின் முதலியார் சென்னைக்குவந்து அது முதல் சென்னையிலேயே தங்கியிருந்தார். அப்பொழுது 1788 ௵ சென்னை கவர்னர் ஸர் ஆர்ச்சிபால்ட் காம்பல் என்பவர் முதலியாரவர்களை வரவழைத்து, 'தஞ்சை மன்னர் துரைத்தனத்தாருக்குக் கட்டவேண்டிய பணம் கிரமமாக வந்து சேரவில்லை. ஆதலால் தாங்கள் அந் நாட்டு வருமானங்களை ஏற்றுக்கொண்டு நமக்குச் சேரவேண்டிய பணத்தைக் கிரமமாகக் கட்டிவரவேண்டும்' என்றார். தஞ்சை மன்னரும் அவ்வாறே செய்யும்படி முதலியாரவர்களுக்கு எழுதினார். ஆனால், அவ்வளவு பொறுப்பான உத்தியோகத்துக்குத் தாம் அருகரல்லர் என்று சொல்லி முதலியார் அதை நழுவவிட்டார். அதன்மேல் துரைத்தனத்தார் பீட்டர் என்னும் இங்கிலீஷ் துரைமகனாரை அவ்வுத்தியோகத்தில் அமர்த்தி முதலியாரவர்களை அவருக்குத் துணையாகப் போகும்படி கேட்டுக்கொண்டார்கள். முதலியார் அதற்கு இசைந்து சென்றார்.

தஞ்சைக்குச் சென்றதும் முதலியாரவர்கள் தஞ்சை மன்னருக்கு லக்ஷம் வராகன் ரொக்கத்தைக் கடனாகக் கொ

டுத்தார். மன்னர் அதை வாங்கித் துரைத்தனத்தாருக்குச் செலுத்திவிட்டார். அதன்மேல் பீட்டர்துரை மன்னர் இனிச்செலுத்தவேண்டியவற்றைச்செலுத்துவதற்குச் சில புது ஏற்பாடுகளைச் செய்துகொண்டு சென்னைக்கு வந்து விட்டார். முதலியார் முன்போலவே தஞ்சைநகரில் தங்கி லேவாதேவிகள் நடத்தி வந்தார்.

சில காலத்துக்குப் பிறகு அவர் மறுபடியும் சென்னைக்கு வர நேர்ந்தது. சென்னையில் வந்திருக்குங் காலத்தில், 1792ஆு ஜூன்மீ அவருக்குப் பாரிசவாயு என்னும் நோய் பற்றியது. தஞ்சையில் வசித்தால் அந் நோய் நீங்கிவிடு மென்றுகருதி முதலியாரவர்கள் தஞ்சைக்குச் சென்றார்கள். சென்ற இரண்டாவது வருஷம் வாயுநோய் சிறிது குணமா யிற்று. ஆனால் அது குணமாகிக் கொஞ்சகாலத்துக்கெல் லாம் முதலியாரவர்கள் மதுமேகம் என்னும் நோய்க்கு ஆளாயினார்கள். அது குணமாகுமென்று கருதி அவர்கள் கும்பகோணத்துக்குச் சென்று, அங்கே தாம் முன் எத்த ணம்செய்து விட்டிருந்த சத்திரவேலை ஒன்றை நடப்பித்துக் கொண்டு சில நாட்கள் வசித்தார்கள். பற்றிய நோய் குண மாவதாகத் தோற்றவில்லை. நாளுக்குநாள் தேகம் மெலிந்து கொண்டே வந்தது. இனித் தேகம் நிற்காது என்று கருதி முதலியாரவர்கள் 1794ஆு மார்ச்சுமீ 22உ தம்முடைய மரணசாசனப பத்திரத்தை எழுதிவைத்து அடுத்த மூன் றாம்நாள் தமக்கு அந்தியகாலம் நெருங்கியதைத் தெரிவித்து போணி நாராயணபிள்ளை அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி னார். அதுவே அவர் கைப்பட எழுதிய கடைசி கடிதம். இக் கடிதம் எழுதியபின், முதலியாரவர்கள் திருவையாறு என்னும் உத்தம சிவக்ஷேத்திரத்தில் தமது உயிர் நீங்க வேண்டுமென்று விரும்பிக் கும்பகோணத்தைவிட்டு அங்குச் சென்றார். அவர் தமது விருப்பப்படி அத் திருவையாற்றி லேயே 1794ஆு மார்ச்சுமீ 31உ தமது பூதவுடம்பு நீங் கிச் சிவபெருமான் திருவடி சென்று சேர்ந்தார். அவரு டைய புகழுடம்பு இன்றுவரையில் நிலைத்திருக்கிறது. இனி என்றும் நிலைத்திருக்குமென்பதில் ஐயமில்லை.

பச்சையப்ப முதலியாரவர்கள் இறந்த பிறகு அவர் அருமையாய்ப் பாராட்டி வந்த சுற்றத்தாரும் அவர் தேடி

வைத்துப்போன திரவியமும் அடைந்த நிலை மிக விந்தை யானதும் ஒருவரும் எதிர் பாராததுமாகும். முதலியார் மக்குச் சந்ததியில்லையென்று வேதாரணியம் பழனியம் மாளை இரண்டாம் தாரமாக விவாகஞ்செய்து கொண்டா ன்ரே? அவ்விவாகத்தால் பச்சையப்ப முதலியாருக்குக் டைத்த பலன் மனத்துன்பமே யொழிய வேறில்லை என் து முன்னமே குறிக்கப்பட்டது. அவர் இறந்த பிறகும் புவ் விவாகத்தால் துன்பமே விளைந்தது. பழனியம்மாள் விவாகத்தால் முதலியார் அவர்கள் விருப்பப்படி ஆண்சந் தி ஏற்பட்டிருக்குமானால் அத் துன்பம் பின்னும் அதிக ாகி, முதலியாரவர்கள் செல்வம் இப்பொழுது உலக ன்மையாகப் பயன்படுவதுபோல் பயன் படுவதற்கு ஏது ில்லாமற் போயிருக்கக்கூடும். முதலியாரவர்கள் செய்த ல்வினைப் பயனும் தமிழ்நாடு செய்த தவப்பயனும் கூடியே க்கு ஆண்குழந்தை பிறவாமற் செய்து விட் பெற்றது ஓரே ஒரு பெண்மகவுதான். பின் தம் செல்வத்தை ஆள்வதற்கு ஆண் ந எண்ணித்தான் போலும் முதலியாரவர் னத்தில் தமது சொத்தில் இவ்வள இவ்வாறு உபயோகிக்கப்படவேண் ம் என்று தெளிவாக வரையறுத்து எழுதிவைப்பாராயி ார். அச் சாசனத்தில் பழனியம்மாளைக் குறித்து ஒன்றும் ழுதப்படவில்லை. விவாக காலத்திலேயே பதினாயிரம் ாகன் ரொக்கங் கொடுப்பதாக எழுதிக்கொடுத்துவிட்ட டியால், இப்பொழுது அவட்கு ஏதும் கொடுக்க அவசி ம் இல்லை என்று கருதினார்போலும். ஆயினும் அவள் பெற்ற பெண் குழந்தைக்கு மட்டும் உரியகாலத்தில் தம் டைய சொத்திலிருந்து ஐயாயிரம் சிபிசக்காப் பணத்துக் தள் ஆபரணமும் விவாகமும் செய்யும்படி எழுதியிருந்தார்.

முதலியாரவர்கள் தமக்கைமார் இருவரில் மூத்தவர், ம் மகள் ஐயாளம்மாள் வயிற்றிலிருக்கும்போதே, விதவை ாகிச் சிறிது ஆஸ்தியோடு தாயார்வீடு வந்துவிட்டவர்; புதுமுதல் அவர் தம்பியுடனேயே வசித்துவந்தவர்; தமது களையும் தம்பிக்கே விவாகஞ்செய்து கொடுத்தவர். இளைய மக்கையோ விவாகமான சில வருஷங்களுக்கெல்லாம் ஓர்

ஆண்குழந்தை பெற்றுவைத்து இறந்து போயினர். அந்த ஆண்குழந்தை முத்தையா எனப் பெயரிடப் பெற்றுத் தன் அம்மானுன பச்சையப்ப முதலியாரவர்கள் ஆதரவிலேயே வளர்ந்து வந்தது. இந்தத் தமக்கை குமாரனைப்பற்றி முதலியாரவர்கள் தமது மரணசாசனத்தில் 'என் சகோதரிகுமாரன் முத்தையா விவேக சூனியனு யிருப்பதால் அவன் சீவனும்சத்துக்கு ஐயாயிரம் வாராகனுக்குள்ள வட்டி மாத்திரம் கொடுத்துக்கொண்டு வருகிறது' என்று எழுதி யிருக்கிறார்.

முதலியாரவர்கள் தம் மருமகனைப்பற்றி இங்ஙனம் தீரத் தெளிந்து எழுதிய அபிப்பிராயத்தைப் பின்னல் அவன் மெய்ப்படுத்தி விட்டான். மூடன் உறவினும் அறிஞன் பகை நன்று என்னும் ஆன்றோர் உரைக்கு அவனே இலக்காயினன். லக்ஷக்கணக்கான சொத்தில் தனக்கு ஏற்பட்டது சொற்பமாயிற்றே என்ற வருத்தம் அவனுக்குண்டாயிற்று. முதலியார் இளைய மனைவி பழனியம்மாளுக்கும் அவ்வாறே தனக்கு ஒன்றும் கிடைக்கவில்லையே என்ற வருத்தம் இருந்தது. ஆகவே இவர்கள் இருவரும் முதலியாரவர்கள் தமக்கை சுப்பம்மாள் மீதும் முதன் மனைவி ஐயாளம்மாள் மீதும் பகைமை பாராட்டினர்கள். பழனியம்மாளுக்கு முதலியார் சொத்திற் பாதி கிடைக்கும்படி செய்தால் தனக்கும் லாபம் கிடைக்கும் என்ற தீய எண்ணத்துடன் முத்தையா முதலி தன் அம்மான் இறந்த மூன்றும் நாளே பழனியம்மாள் உறவினருடன் கலந்து கொண்டு கலகம் விளைக்கத் தொடங்கினன். அவன் செய்த கலகத்தால் முதலியாரவர்கள் முதன் மனைவி ஐயாளம்மாளும், அவர்கள் தமக்கையாரும் பட்ட துன்பம்மிகப்பெரிது என்பது போணி நாராயணபிள்ளை அவர்களுக்கு ஐயாளம்மாள் எழுதியனுப்பிய ஒரு கடிதத்தால் ஒருவாறு விளங்குகிறது.

என்னே பாவம்! அரசர்க்கும் பொருளுதவி செய்யத் தக்க உன்னத பதவியிலிருந்த முதலியாரவர்களின் வாழ்க்கைத் துணைவியா யிருந்த அவ் வம்மையார் கல்லுங் கரையக் கலங்கிக் கடிதம் எழுதநேர்ந்த ஊழ்வினையை என்னென்பது!

"குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினு நண்ணுவர்"

என்னும் உலகியலை நினைந்து உளம் அமைய வேண்டுவது தான் போலும்!

ஐயாளம்மாள் கடிதம் கிடைத்ததும் நாராயணபிள்ளை அவர்கள் தம் வல்லமையால் இளையாள் கலகத்தை அடக்கி இவர்களைச் சென்னைக்கு அழைப்பித்துக் கொண்டார்.

பழனியம்மாள் அதோடு விட்டாளில்லை. முதலியார் சொத்தில் பாதி தனக்கு வரவேண்டும் என்று அறநிலையத்தில் வழக்குத் தொடுத்தாள். அவ்வழக்கு விசாரணையில் ஒரு விந்தை நேர்ந்தது. முதலியாரவர்கள் பழனியம்மாளை இயற்பெயரிட்டு அழையாமல் வேதாரணியம் என்று அழைப்பது வழக்கமாயிருந்தது. அவ் வழக்கப்படியே தமது மரணசாசனத்திலும் அவள் பெயரைக் குறிப்பிட நேர்ந்த இடத்து வேதாரணியம் என்றே குறிப்பிட்டார். அதை ஆதாரமாகக்கொண்டு பிரதிவாதியின் சார்பில் பழனியம்மாள் பச்சையப்ப முதலியாரவர்கள் மனைவியல்லள் என்று வாதிக்கப்பட்டது. அதனால் விவகாரம் இளைத்துச் சிக்கலுற்றது. முடிவில் நியாயாதிகாரிகள் அவ் வழக்கைத் தள்ளி விட்டார்கள்.

இவ்வாறு தன் வழக்கு வீணாகவே, பழனியம்மாள் பின்னால் ஒரு சமயம் தனக்கு உரிமை ஏற்படுதல் கூடும் என்றெண்ணி, தன் வழக்குக்குப் பெரிதும் உதவி செய்த சித்திரப்பிள்ளை என்பார் ஒருவரைத் தனக்குக் காரிய நிர்வாகராக நியமித்து, தனக்குப்பின் தன் ஆஸ்தியைத் தன் மகளுக்குச் சேர்க்கும்படி மரணசாசனம் எழுதிவைத்து விட்டு 1794ஆம் கடைசியில் இறந்துபோயினள். அதன் பிறகு இந்தச் சித்திரப்பிள்ளை என்பவர், முதலியார் அவர்கள் பழனியம்மாளுக்கு எழுதிக்கொடுத்த பதினாயிரம் வராகனைப்பற்றி வழக்கிட்டார். பழனியம்மாள் முதலியாரவர்கள் மனைவிதானா என்பதில் முன்னமே ஐயம்பிறந்து இன்னமும் உண்மை தெரியாதிருக்கிறது என்ற காரணத்தை வைத்துக்கொண்டு மத்தியஸ்தர்கள் அவ்வழக்கை விலக்கிச் சித்திரப்பிள்ளைக்குக் கொஞ்சம் பொருள் கொடுத்து அவர்

தொல்லையை நீக்கிவிட்டார்கள். அடுத்த சில நாட்களில் பழனியம்மாள் மகளும் இறந்தனள்.

முத்தையாமுதலி தஞ்சையில் தன் மாமன் வீட்டிலேயே வசித்துவந்தான். சுப்பம்மாள் 1802ஆ ஜனவரி மாதத்தில் தம் தம்பியார் கோமளேசுரன் பேட்டையில் கட்டிய வீட்டிலேயே இறந்தார். அடுத்த நவம்பர் மாதத்தில் போனி நாராயணபிள்ளை அவர்கள் இவ்வுலக வாழ்க்கையை நீத்தார்கள். அதன் பின் அவர் குமாரர் சத்தியவந்தரெனப் பெயர் பெற்ற ஐயாபிள்ளை என்பார் முதலியார் தர்மங்களைப் பாதுகாத்து வந்தார். அவருடைய அனுமதி பெற்று முதலியாரவர்கள் முதன் மனைவியார் ஐயாளம்மாள் கும்பகோணந் தாலுக்காவைச் சேர்ந்த பட்டீசுவரம் குமாரசுவாமி பண்டாரத்தின் மகன் சிவசிதம்பரம் என்பவனை ஐந்நூறு பொன்னுக்கு வாங்கிச் சுவீகார புத்திரனாக்கிக் கொண்டார்.

1807-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் 27-ஆம் தேதியன்று இவ் வம்மைபாரும் காலஞ் சென்றனர். இதற்கிடையில் பஞ்சநத ஐயன் என்பான் ஒருவன் ஐயாளம்மாள் க்ஷேமத்தில் அக்கறையுள்ளவன் போலக் காட்டி, அவர் இறக்குந் தறுவாயில் அவர் வசமிருந்த பொருள்கள் பலவற்றைக் கவர்ந்து கொண்டான். இவனே பின்னால் சுவீகாரமாக வந்த சிவசிதம்பரத்துக்கு முதலியாரவர்கள் ஆஸ்தி சேரவேண்டுமென்று ஐயாபிள்ளையைக் கேட்டான். அது பலிக்கவில்லை. அதன்மேல் இவன் சிவசிதம்பரத்தை முன்னிலையாக்கிப் பல கெடுசூழ்ச்சிகள் செய்தான். அவற்றால் இவன் எண்ணம் நிறைவேறுவதுபோக இவனே* மோசக் குற்றஞ் சாட்டப்பட்டுச் சிறிதுகாலம் சிறைவாசங்கொண்டான்; சிறை நீங்கிச் சிறிது காலத்துக்கெல்லாம் கொடிய நோய்க்கு ஆளாகித் துன்பப்பட்டு இறந்தான். அப்பாற் கொஞ்ச காலத்தில் சிவசிதம்பரமும் இறந்தான். இவனுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்திருந்தது. அதை முன்னிலைப் படுத்தி அப் பெண்ணின் தந்தை முதலியார் ஆஸ்தியில் உரிமை பாராட்டிவந்தார். இவ்வாறிருக்கையில் அப் பெண்ணும் இறந்தது.

முத்தையா முதலி தன் மாமனுக்கு உரியவர்களில் தான் ஒருவனே உயிரோடிருக்கிறபடியால் தனக்கு அவர்

ஆஸ்தி சேரவேண்டுமென்று இன்னமும் வழக்காடிக்கொண்டிருந்தான். அவன் வழக்கு முடிவதற்குள் 1810ஆு ஆகஸ்டுமீ 11உ அவன் இறந்துபோயினன். அவன் இறப்பதற்கு ஒரு வருஷத்துக்கு முன்னமே 1809ஆு அக்டோபர்மீ ஐயாபிள்ளை அவர்கள் பரமபத முற்றனர். அது முதல் அவருடைய பொறுப்பையெல்லாம் அவர் குமாரர் அண்ணாசாமிப் பிள்ளை என்பவர் ஏற்றுக்கொண்டனர்.

முத்தையா முதலிக்குக் காமு என்னும் ஒரு பெண்ணும் ஐயாசாமி என்னும் ஒரு குமாரனும் உண்டு. இவர்கள் பச்சையப்ப முதலியார் ஆஸ்தியில் பாத்தியங் கொண்டாடி வழக்குத் தொடுத்தார்கள். அப்பொழுதுதான் முதலியாரவர்கள் ஆஸ்தியை யெல்லாம் ஒருங்கு சேர்த்து அண்ணாசாமிப் பிள்ளை அவர்கள் நியாய ஸ்தலத்தில் பொதுக் கட்ட நேர்ந்தது. அதுகாறும் ஒருவாறு நடந்து வந்த முதலியார் தர்மங்கள் அது முதல் அறவே நின்று போயின. சிதம்பர சிவாலய தர்மம் ஒன்றுமட்டும் சில காரணங்களால் நிற்காமல் நடைபெற்று வந்தது.

வழக்கு நீடித்து வந்தது. ஐயாசாமிக்குக் கடன் அதிகரித்து வந்தது. கடன்காரர்களால் அவன் சிறைப்படுத்தப் பட்டான். சிறை நீங்கி வந்த பின்னர், 1818ஆுகடைசியில் இறந்தான். அடுத்த மாதம் காமுவும் இறந்தாள். முத்தையா முதலிக்கு மனைவியர் ஐவர். அவர்களில் கடைசி மனைவியும் அண்ணாசாமிப் பிள்ளைமீது வழக்குத் தொடுத்தாள். அதுவும் காலஹரணமாய்க் கொண்டு வந்தது.

கடைசியில் முதலியார் அவர்கள் வைத்துப்போன பொருளுக்கு உரிமையாளர் எவருமில்லாமல் பொருள் நியாய ஸ்தலத்திலேயே இருந்தது. எல்லா விபரமும் அறிந்த ஒரு வக்கீல் துபாஷி, நியாய ஸ்தலத்திலிருந்த ஆஸ்தியை வெளிப்படுத்தித் தாம் பங்கிட்டுக்கொள்ளலாமென்று அண்ணாசாமிப் பிள்ளையை வசப்படுத்தப் பார்த்தார். அவர் அதற்கு இணங்காததால் துபாஷி அவர்மீது பகைகொண்டு பல சூழ்ச்சிகள் செய்தார். அவர் செய்த சூழ்ச்சிகள், ஒருவனைக் கொலை செய்து புதைக்க வெட்டிய பள்ளம் பலர்க்கும் பயன்படும் நீரூற்றாய் ஏற்பட்டதுபோ லாயிற்று. எவ்வாறெனில், அச்சமயம், 1828ஆு, ஜார்ஜ் நார்ட்டன் என்

னும் பரோபகார துரைமகனுர் சென்னை அட்வகேட் ஜெனரலாக வந்தார். அவர் நியாயஸ்தலத்தில் கட்டப்பட்ட பச்சையப்ப முதலியார் ஆஸ்தி காலநீட்டிப்பினுல் முதலி லும் பன்மடங்கதிகமாக வட்டி வளர்ந்திருப்பதைக்கண்டு, முதல் தொகையை முதலியார் அவர்கள் மரணசாசனத்திற் கண்டபடி ஆலயமாதிய தர்மங்களுக்கு வைத்துவிட்டு, எஞ் சியதைக் கொண்டு முதலியார் பேரால் கல்லூரி கட்டுவித் தார். ஆலய தருமங்களும் கல்லூரி விவகாரங்களும் நன்கு நடைபெறச் சட்டதிட்டங்களும் நிர்வாக சபையும் அவரே ஏற்படச்செய்தார். அம் மகான் செய்த இவ்வுத்தம கைங் கரியத்தால்,

கல்லாரைப் பாடிக் கடைவாசற் காத்துக் கருததழிவுற்
றில்லாரைப் போற்பல வற்றுக்கு மேக்கற் றிருந்தகவி
வல்லார் சதமகன் போல்வாழ்ந் தனருன் றன் மாண்பொருளால்
எல்லாரு மேத்துந் திருக்கச்சிப் பச்சையப் பேந்திரனே

என்று பாவலர் புகழும்படியும் நாவலர் உவக்கும்படியும் யாவரும் வியக்கும்படியும் முதலியாரவர்கள் பெயர் அழி யாப் புகழுடன் நிலை பெறுவதாயிற்று.

முதலியாரவர்கள் தமது மரண சாசனத்தில், வருஷம் ஒன்றுக்கு ஐயாயிரம் வராகன் வட்டி வரும்படியான தொ கையை, சிதம்பரம், சீர்காழி, திருவிடைமருதூர், கும்ப கோணம், திருவையாறு, ஜம்புகேசுவரம், ஸ்ரீரங்கம், தஞ்சை, திருவாரூர், மதுரை, அழகர்கோவில், ஆவுடையார்கோவில், இராமேசுவரம், திருப்பனந்தாள், திருவல்லிக்கேணி, பெரியகாஞ்சீபுரம், சின்னகாஞ்சீபுரம், திருவொற்றியூர், திரு முல்லைவாயில், காசி என்னும் இருபத்திரண்டு புண்ணிய ஸ்தலங்களில் தமது விருப்பப்படி மதசம்பந்தமான தருமங் கள் நடைபெறும்படி எழுதிவைத்திருந்தார்கள். இவ்வாறு முதலும் அழியாமல் தருமமும் அழியாமல் என்றும் நடை பெறும்படி வகைசெய்த தகைமையைக் குறித்தே,

முதலெழு வள்ளல் முதலெழுந் தாரொன் றிம் மூவுலகும்
றுதல்வ தறிந்து முதலோ எழாமல்முன் றூன்முறையே
நிதந்தரு மஞ்செய்யப் பொன்னைவைத்துப் பின்னுநீ ணிலத்தோர்
இதம்பெற நின்றனை யேகச்சிப் பச்சையப் பேந்திரனே

என்று பின் வந்தோர் புகழ்வா ராயினர்.

ஜார்ஜ் நார்ட்டன் துரையவர்கள், முதலியார் விருப்பத்தில் ஓர் எள்ளளவும் குறைவின்றி அந்த மத சம்பந்தமான தருமங்கள் நிறைவேறும்படியான முதலை அவைகட்கென்றே வைத்துவிட்டு எஞ்சியதைத்தான் முதலியாரவர்கள் பெயரால் கல்விவிருத்திக்குப் பயன்படுத்தினர். ஆயினும், அக் காலத்தில் பலர், 'முதலியார் மதசம்பந்தமான தருமத்துக்குக் கருதியதை அவர் கருதாத கல்விவகையில் செலவிடுவது நெறியன்று, இஃது அடாது' என்று நார்ட்டன் துரையவர்கள்மீது குறைகூறி அந்தப் புண்ணியோத்தமரை நிந்தித்தார்கள். துரையவர்கள் அதனால் மனம் சலித்துக் கருதிய கருமத்தைக் கைநெகிழ விட்டுவிடவில்லை. தமது உள்ளத்தூய்மையின் பலத்தால் தொடுத்த கருமத்தைச் சிறக்க முடித்தார்கள். அவ்வுறுதியை அவர்களுக்குத் தந்தது முதலியார் அவர்கள் புண்ணியமோ, அன்றி நம் நாட்டின் புண்ணியமோ யாரறிவார்? இன்று பச்சையப்ப முதலியாரவர்கள் புகழ்மணம் எங்கும் பரவியிருப்பது அவர்கள் மததர்மத்துக்கென்று வைத்த பொருளின் எதிர்பாராத மேல்விளைவைக்கொண்டு நார்ட்டன் துரையவர்கள் நாட்டிய வித்தியாதான கற்பகத் தருவாலே யன்றி, மததர்மத்துக்கு வைக்கப்பட்ட வைப்பா லன்று என்பதை எவரும் ஒப்புவர். 'அருவுடம்பு பெற்று மறைந்த முதலியார் அவர்கள் உருவுடம்பு பெற்று இஞ்ஞான்று நம்மிடையே தோன்றக் கூடுவாராயின், தமது நிதியிற் பெரும் பகுதியைக் கல்விச் சார்பிற் பயன்படுத்திய நன்மதியை அவரே முதன் முதற் கண்டு ஒப்பி மெச்சுவார் என்பது நிச்சயம்' என்ற கருத்தமைய 1855ஆ பச்சையப்பனார் வருடோற்சவத்தில் அக்கிராசனம் வகித்த ஜான் ப்ரூஸ் நார்ட்டன் துரைமகனார் கூறுவாராயினர். அவர் கூற்று ஒப்பத்தகுந்ததே யன்றோ?

சென்னையிலுள்ள பச்சையப்பனார் கல்லூரி கட்டி முடிவுபெற்றுத் திறப்புமகோற்சவம் கொண்டாடியபோது, அக் கட்டடம் ஏற்படுவதற்குக் காரணபூதராயிருந்து அதற்குத் தம் திருக்கரத்தாலே அஸ்திவாரம் இட்ட ஜார்ஜ் நார்ட்டன் துரைமகனார் "இவ்விடத்தில் கல்விகற்கும் அநேகர் அதனால் தாங்கள் அடைந்த பயன்களைப் பின்னர் உணர்ந்து தாங்களும் இப்படிப்பட்ட கல்விக்கு உபகாரிகளாய் வித்தியா

தானம் செய்பவர்களோடு கூட்டுறவு கொள்வார்கள். இந் நாட்டார் நாகரிகத்திலும் செல்வத்திலும் மேம்பட மேம் பட அம்மேம்பாட்டுக்குக் காரணம் இன்னதென்றறிந்து கொள்வார்கள். அப்போது நீங்களும் உங்கள் பின்னோர் களும் இத்தகைய கலாசாலைகளை அபிமானித்து, அவற் றின் விருத்திக்கு உங்கள் உள்ளத்தையும் செல்வத்தையும் பயன்படுத்துவீர்கள். தற்போது நானூறு மாணவர்க்குக் கூட முட்டின்றி வித்தியாதானம் செய்ய இயலாத இத் தரு மப் பள்ளிக்கூடம், இனி ஏறக்குறைய நாலாயிரம் பிள்ளை கள் படிக்கக் கூடிய ஒரு பெரிய கலாசாலைக்கு அடிப்படை யாகலாம். இருபதினாயிரம் கனவான்கள் கூடக்கூடியதாய், ராஜதானிக்கு ஏற்ற ஒரு விசாலமான கட்டடமாகலாம். அது எப்போதாமென்றால் தகுந்த காலம் வரும்போதாம். இந் நாட்டார் பலதுறைகளிலும் பெருமையுற்று இக்கட் டடம் போதாதென்று சொல்லும்படியான காலம் நேரினும் நேரும்'' என்றார். அவர் அன்று சொல்லிய வெல்லாம் இன்று நிறைவேறிவரக் காண்கிறோ மன்றோ? ஆதலின்,

பொருள்வாழி யப்பொருளைப்பாது காக்கும் புனிதர்களின்
தெருள்வாழி கல்விச் சபைவாழி யச்சபை சேர்ந்தசெல்வர்
உருவாழி நிற்புகழ்நாவலர் வாழி உனக்குதித்த
அருள்வாழி வாழி திருக்கச்சிப் பச்சையப் பேந்திரனே

என்று வாயார வாழ்த்தி மனமகிழக் கடவோம்.

# 16. மனோன்மணீயம்

## (முகவுரை.)

"மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றாரியத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.

"இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ ரியல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்த ரிசைபரப்பும்
இருமொழியு மான்றவரே தழீஇனா ரென்றாலிவ்
விருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ."

"கண்ணுதற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணிடைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோ
லெண்ணிடைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ.'

என்றெடுத்த ஆன்றோர் வசனங்கள் உபசாரமல்ல, உண்மையே யென்பது பரதகண்டம் என்னும் இந்திய தேசத்திலுள்ள பற்பல பாஷைகளைச் சற்றேனும் ஆராய்ந்து ஒப்பிட்டு நோக்கும் யாவர்க்கும் நிண்ணிதிற் றுணியத் தக்கதே. பழமையிலும் இலக்கண நுண்மையிலும் இலக்கிய விரிவிலும் ஏனைய சிறப்புக்களிலும் மற்றக்கண்டங்களிலுள்ள எப்பாஷைக்கும் தமிழ் மொழி சிறிதும் தலைகவிழ்க்கும் தன்மையதன்று. இவ்வண்ணம் எவ்விதத்திலும் பெருமை சான்ற இத் தமிழ்மொழி பற்பல காரணச் செறிவால், சில காலமாக நன்கு பாராட்டிப் பயில்வார் தொகை சுருங்க, மாசடைந்து நிலை தளர்ந்து, நேற்றுதித்த தெலுங்கு முதலிய பாஷைகளுக்கும் சமமோ தாழ்வோ என்று அறியாதார் பலரும் ஐயமுறும்படி அபிவிருத்தியற்று நிற்கின்றது. இக்குறைவு நீங்கத் தங்கள் தங்களுக்கியன்ற வழி முயல்வது, தங்களை மேம்படுத்தும் தமிழர் யாவரும் தலைக்கொள்ள வேண்டிய தவறாக் கடப்பாடன்றோ!

மேற்கூறிய முயற்சிக்கேற்ற வழிகள் பலவுள வேனும் அவற்றுள் இரண்டு தலைமையானவை. முதலாவது முன்னோரால் பொருட் சுவையும் சொற்சுவையும் பொலிய இயற்றப்பட்டிருக்கிற அருமையான நூல்களுள் இறந்தவை யொழிய இனியும் இறவாது மறைந்து கிடப்பனவற்றை வெளிக்கொணர்ந்து நிலைபெறச் செய்தலேயாம். இவ்வழியில் தற்காலம் உழைத்துவரும் பெரும்புகழ் படைத்த ம-า-า-ஸ்ரீ தாமோதரம் பிள்ளையவர்கள், பிரம்மஸ்ரீ சாமிநாத ஐயர் அவர்கள் முதலிய வித்வசிரோமணிகளுடைய நன்முயற்சிக்கு ஈடு கூறத்தக்கது யாது? தம் மக்கட்கு எய்ப்பில் வைப்பாக இலக்கற்ற திரவியங்களைப் பூர்வீகர்கள் வருந்திச் சம்பாதித்து வைத்திருக்க, அம் மக்கள் அவை யிருக்குமிடந்தேடி எடுத்தனுபவியாது இரந்துண்ணும் ஏழைமை போலன்றோ ஆகும், ஈடுமெடுப்பு மற்ற நுண்ணிய மதியும் புண்ணிய சரிதமுமுடைய நம் முன்னோர் ஆயிரக் கணக்

கான ஆண்டு உழைத்து ஏற்படுத்தியிருக்கும் அரிய பெரிய நூல்களை நாம் ஆராய்ந்து அறிந்து அனுபவியாது வாளா நொந்து காலம் போக்கல்! ஆதலால் முற்கூறிய உத்தம வித்துவான்களைப் பின் றொடர்ந்து நம் முன்னோர் ஈட்டிய பொக்கிஷங்களைச் சோதனைசெய்து தமிழராகப் பிறந்த யார்க்கும் உரிய பூர்வார்ஜித கல்விப்பொருளை க்ஷேமப்படுத்தி யனுபவிக்க முயல்வது முக்கியமான முதற்கடமையாம்.

பூர்வார்ஜித தனம் எவ்வளவு பெரிதாக இருப்பினும் அதனைப் பாதுகாப்பதோடு ஒவ்வொருவரும் தத்தமக் கியன்ற அளவு உழைத்துச் சொற்பமாயினும் புதுவரும்படி யைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்பது பொது வான உலக நோக்கமாக இருப்பதால், முற்கூறிய முயற்சி யோடு இரண்டாவதொரு கடப்பாடும் தமிழர் யாவருக்கும் விட்டுவிலகத் தகாததாகவே ஏற்படும். பூர்வார்ஜிதச் சிறப் பெல்லாம் பூர்வீகர்கள் சிறப்பு; அந்த அந்தத் தலைமுறை யார்களுக்கு அவரவர்கள் தாமே ஈட்டிய பொருளளவும் சிறப்பே யொழிய வேறில்லை. அத் தலைமுறையாரைப் பின் சந்ததியார் பேணுவதற்கும் அதுவேயொழிய வேறு குறியு மில்லை. ஆனதினால் எக்காலத்திலும் எவ்விஷயத்திலும் பூர்வீகர்களால் தங்களுக்குச் சித்தித்திருப்பவற்றை ஒவ் வொரு தலைமுறையாரும் பாதுகாப்பது மன்றித் தங்களாற் கூடிய அளவும் அபிவிருத்தி பண்ணவும் கடமை பூண்டவர் களாகின்றார்கள். 'பூர்வார்ஜிதம் மிகவும் பெரிதாயிருக்கின் றதே! நம் முயற்சியால் எத்தனை தான் சம்பாதிப்பினும் நமது பூர்வார்ஜிதத்தின் முன் அது ஒரு பொருளாகத் தோற்றுமா' என மனந்தளர்ந்து கைசோர்வார்க்கு அவர் பூர்வார்ஜிதப் பெருமையே கேடு விளைவிப்பதாக வன்றோ முடியும். அந்தோ! இக்கேட்டிற்கோ நம் முன்னோர் நமக் காக வருந்தி யுழைத்துப் பொருளீட்டி வைக்கின்றார்கள்! பிதிர்களாய் நிற்கும் அம்முன்னோர் இவ் விபரீத விளைவைக் கண்டால் நம்மை எங்ஙனம் வாழ்த்துவர்? ஈண்டுக்கூறிய உண் மை செல்வப் பொருளுக்கன்றி கல்விப்பொருளுக்கும் ஒரு குடும்பத்துள் வந்த ஒருவனுக்கன்றி ஒருதேசத்திற் பிறந்த ஒவ்வொரு தலைமுறையாருக்கும் ஒன்று போலவே பொரு த்த முடையதாதலால்,

"குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வ
மடிதற்றுத் தான் முந்துறும்."

என்னும் திருக்குறளை நம்பி நம் முன்னோர் யாதேனும் ஒரு வழியில் அபரிமிதமான சிறப்படைந்தாராயின் நாமும் அவர் போலவே இயன்ற அளவும் முயன்று பெருமை பெறக் கருதுவதன்றோ அம்முன்னோர்க்குரிய மக்கள் நாமென முன்னிற்றற் கேற்ற முறைமை!

"தீங்கரும் பீன்ற திரள்கா லுளையலரி
தேங்கமழ் நாற்ற மிழந்தாங்—கோங்கு
முயர்குடி யுட்பிறப்பி னென்னும் பெயர்பொறிக்கு
போராண்மை யில்லாக் கடை."

ஆதலால், அருமையாகிய பூருவநூல்களைப் பாதுகாத்துப் பயின்று வருதலாகிய முதற்கடமையோடு அவ்வழியே முயன்று அந்த அந்தக் காலநிலைக் கேற்றவாறே புதுநூல்களை இயற்ற முயலுதல் தமிழ் நாடென்னும் உயர்குடியிற் பிறக்கும் ஒவ்வொரு தலைமுறையாருக்கும் உரித்தான இரண்டாம் கடமையாய் ஏற்படுகின்றது.

மேற்கூறிய இரண்டாம் கடமையைச் சிரமேற்கொண்டு தமிழோர் என்னும் பெரிய குடும்பத்துள்ளே தற்காலத்துள்ள தலைமுறையாருட் கல்வி கேள்வி அறிவு முதலிய யாவற்றுள்ளும் கனிஷ்டனாகிய சிறியேன்,

"இசையா தெனினு மியற்றியோ ராற்று
லசையாது நிற்பதா மாண்மை."

என்னும் முதுமொழியைக் கடைப்பிடித்து நவீனமான பல வழிகளுள்ளும் என் சிறுமதிக் கேற்றதோர் சிறுவழியிற் சிலகாலம் முயன்று வடமொழி முதலிய பாஷைகளிலுள்ள நாடகரீதியைப் பின்றொடர்ந்து இயற்றிய "மனோன்மணீயம்" என்னும் இந் நாடகம், பூர்வீக இலக்கியங்களுடன் சற்றேனும் உவமிக்க இயையாதெனினும், ஆஞ்சனேயாதி வானரவீரர்கள் சேதுபந்தனஞ் செய்யுங் காலத்தில் கடனீரிலே தோய்ந்து மணலிற் புரண்டு அம் மணலைக் கடலில் உகுத்த சிறு அணிற்பிள்ளையின் நன்முயற்சி அங்கீகரிக்கப் பட்டவாறே, கல்வி கேள்வியால் நிறைந்த இத்தலைமுறைச் சிரேஷ்டர் அங்கீகரித்து எனது இச் சிறு முயற்சியும் தமிழ்

மாதாவுக்கு அர்ப்பிதமாம்படி அருள்புரியா தொழியார் என நம்பிப் பிரகடனம் செய்யப் படுகின்றது.

இந் நாடகம் வடமொழி ஆங்கிலேயம் முதலிய பாஷையில் உள்ள நாடக வழக்கிற் கிசையச் செய்திருப்பதால் இதனுள் அடங்கிய கதை அங்கங்கே நடந்தேறும் சம்பாஷணைகளாலும் அவாய் நிலைகளாலும் கோவைப்படுத்தி யறிந்துகொள்ள வேண்டியதா யிருக்கின்றது. இக் கதை புதிதாக இருப்பதினால் அவ்விதம் கோவைப்படுத்தி யறிந்து கொள்வோர்க்கு அனுகூலமாகச் சுருக்கி ஈண்டுக் கூறப்படுகின்றது.

(கதா சங்கிரகம்)

முற்காலத்தில் மதுரைமாநகரில் ஜீவகன் என ஒரு பாண்டியன் அரசு புரிந்து வந்தான்; அவன் பளிங்குபோலக் களங்கமில் நெஞ்சினன். அவன் மந்திரி குடிலன் என்பவன் ஒப்பற்ற சூழ்ச்சித்திறமை யுடையவனாயினும், தன்னய மொன்றே கருதும் தன்மையனா யிருந்தான்; அதனால் அரசனுக்கு மிகவும் உண்மை யுடைவன்போல நடித்து, அவனை எளிதிலே சுவாதீனப்படுத்திக் கொண்டான். அங்ஙனம் சுவாதீனப்படுத்திய பின்பு, தன் மனம் போனவாறெல்லாம் அரசனை யாட்டித் தன் செல்வத்தையும் செல்வாக்கையும் வளர்த்துக்கொள்ளத் தொன்னகராகிய மதுரை இடங்கொடாதென உட்கொண்டு, அந் நகரின்மேற் பாண்டியனுக்கு வெறுப்புப் பிறப்பித்து, திருநெல்வேலி யென்னும் பதியில், கோட்டை கொத்தளம் முதலியன இயற்றுவித்து, அவ்விடமே தலைநகராக அரசன் இருந்து அரசாளும்படி செய்தான். முதுநகராகிய மதுரை துறந்து, கெடுமதியாளனாகிய குடிலன் கைப்பட்டு நிற்கும் நிலைமையால் ஜீவகனுக்கு யாது விளையுமோ என இரக்கமுற்று அவனுடைய குலகுருவாகிய சுந்தரமுனிவர் அவனுக்குத் தோன்றாத்துணையா யிருந்து ஆதரிக்க எண்ணி, திருநெல்வேலிக் கருகிலுள்ள ஓர் ஆச்சிரமம் வந்தமர்ந்தருளினார்.

முனிவர் எழுந்தருளி யிருப்பதை யுணர்ந்து, ஜீவகன் அவரைத் தன் சபைக்கழைப்பித்து, தனது அரண்மனை, கோட்டை முதலியவற்றைக் காட்டி, அவை சாசுவதம்

என மதித்து வியந்துகொள்ள, அவ்விறுமாப்பைக் கண்ணுற்ற முனிவர், அவற்றின் நிலையாமையைக் குறிப்பாகக் கூறியும் அரசன் அறியாதொழிய அவன் குடும்பத்திற்கும், கோட்டை முதலியவற்றிற்கும் க்ஷேமகரமாகச் சில கிரியாவிசேஷம் செய்யும் பொருட்டு அவன் அரண்மனையில் ஓரறை தம் சுவாதீனத்து விடும்படி கேட்டு, அதன் திறவுகோலை வாங்கிக்கொண்டு தம் ஆச்சிரமம் போயினர். (தன் அரண்மனை முதலியவற்றை முனிவர் கேவலமாக மதித்துவிட்டனரே என்று ஜீவகன் மனம் வருந்தி யிருக்கையில் குடிலன், எரியும் தீயில் நெய்சொரிவதுபோல,

துறந்தார் முற்றுந் துறந்தா ரல்லர்;
மறந்தனர் சிற்சில: வறிதே தமக்கு
மனோகர மாகிய வினைகா மொன்றில்
உலகுள பொருளெலாம் உய்ப்பினும் பின்னும்
நிலைபெற நிரம்பா தவர்க்குள வாசை.
வசிட்டர் முன்னர் வாளாப் புகைத்தனர்
முசிப்பிலா மன்னர் திரவியம் முற்றும்;
கௌசிக ரிரக்கவோர் மௌலி வேந்தன்
பட்டபா டுலகில் யாவரே பட்டுளர்?
சிட்ட முனிவர்கள் செயலாற் பலகால்
புரந்தரன் தனதுருக் கரந்து திரிந்தனன்.
முனிவரே யாயினும் மனிதரே மீண்டும்
இச்சை யற்றவர் இச்சகத் தியாவர்?

என்று தன் இழிதகைமைக் கேற்ப முனிவரை இழித்துக் கூறினன். ஜீவகனும் அவன் உரைகளை நம்பும் இயல்பினனா யிருந்தான்.

ஜீவக வழுதிக்குச் சந்ததியாக மனோன்மணி என்னும் புத்திரி யொருத்திதான் இருந்தனள்; அவள் அழகிலும் நற்குண நற்செய்கைகளிலும் ஒப்புயர்வற்றவள்.

வையகத் தவள்போல் மங்கைய ருளரோ ?
அன்பே உயிரா அழகே யாக்கையா
மன்பே ருலகுசெய் மாதவ மதனோன்
மலைமகள் கருணையும் கலைமக ளுணர்வும்

*கமலையின் எழிலும் அமையஓர் உருவாய்ப்*
*பாண்டியன் தொல்குல மாகிய பாற்கடல்*
*ஈண்டெழு மதியென ஈண்டவ தரித்த*

அவளுக்கு அப்பொழுது வயது பதினாறாக இருந்தும், அவள் உள்ளம் குழந்தைகள் கருத்தும் துறவிகள் நெஞ்சும் போல யாதொரு பற்றும் களங்கமுமற்று நிர்மலமாகவே யிருந்தது. அவளுக்கு உற்ற தோழியாக இருந்தவள் **வாணி**; இவள் ஒழுக்கம் தவறா உளத்தள்; தனக்கு நன்றெனத் தெள்ளிதிற் றெளிந்தவற்றையே நம்புந் திறத்தள்; அல்லனவற்றை யகற்றும் துணிபு முடையவள். இவ் வாணி **நடராஜன்** என்னும் அழகமைந்த ஆனந்த புருஷனொருவனை யுற்றிய அவர்க ளிருவர் உள்ளமும் ஒருவழிப்படர்ந்து காதல் நேர்ந்தது. அதற்கு மாறாக, இவ் வாணியினது பிதா மிகப் பொருளாசை யுடையோனாதலால், குடிலனுடைய மகன் **பலதேவன்** என்னுந் துன்மார்க்கனுக்குத் தன் மகளை மணம் புரியின் தனக்குச் செல்வமும் கௌரவமும் உண்டாமென்ற பேராசைகொண்டு, அவ்வாறே அரசன் அநுமதிபெற்று விவாகம் நடத்தத் துணிந்தனன். அதனால் வாணிக்கு விளைந்த சோகம் அளவற்றதா யிருந்தது. இச்சோகம் நீங்க, மனோன்மணி பலவாறு ஆறுதல் கூறும் வழக்கமுடையவளா யிருந்தாள்.

இவ்வாறிருக்கும்போது, முனிவர் கோட்டை காண வந்த நாளிரவில் ஈடுமெடுப்பு மற்ற சேரதேசத் தரசனாகிய புருடோத்தம வர்மனைப் பூர்வகரும பரிபாகத்தால் மனோன்மணி கனாக்கண்டு அவன்மீது விருப்பங்கொள்ள அதுவே சுரமாக உடலை வருத்தியது. அந்நிலை கண்டு தோழியர் தெய்வ நொந்தனர்; செய்கடன் நேர்ந்தனர்; அயினிநீர் சுழற்றினர்; விபூதி அணிந்தனர். பொழுது விடிந்தது; வந்தன காக்கைகள்,

*'காகா இவளைக் கா' எனக் கரைந்து;*
*சேவலும் திகைத்துத் திசைதிசை கூவின.*

அப்பொழுதும் அவள் நோய் தணிந்திலது. அச் சுரம் இன்னதன்மையதென் றுணராது வருந்தும் ஜீவகனுக்கு, தெய்வகதியாய்த் தம் அறைக்கு மறுநாட்காலை வந்த முனிவர், மனோன்மணி நிலைமை இன்னது எனக் குறிப்பா

லுணர்ந்து அவள் நோய் நீக்கு மருந்து மணவினையே எனவும், அதற்கு எவ்விதத்திலும் பொருத்த முடையோன் சேரதேசத்துப் புருடோத்தமனே யெனவும், அவ்வரசனது கருத்தினை நன்குணர்ந்து அம் மணவினையை எளிதில் முடிக்க வல்லோன் நடராஜனே யெனவும் உபதேசித் தகன்றார். வாணியினது காதலனாகிய நடராஜன்மேல் அவள் பிதா ஆரோபித்திருந்த அபராதங்களால் வெறுப்புக்கொண்டிருந்த பாண்டியன், அக் குரு மொழியை உட்கொள்ளாத வனாய்க் குடிலனுடைய துன்மந்திர
குடிலனோ, தன்னயமே கருது
தாசன் மருமகனாக வரு
திற்கு எங்ஙனம் கெடு
ஒருகால் தன் மகனாகிய ப
அவட்குரிய அரசாட்சியும்
சையாலும், முனிவர் கூ
துணிந்து,

தருமந் தான மெ
கரும மனைத்தும் செ
காணில் நாணமாம்.
எண்ணிய எண்ணம்
பண்ணுவர் புண்ணி
தந்நயம் கருதி யன்
பின்னொரு வினையெ
புண்ணியஞ் சீவகா
பிதற்றுதல் முற்றும்

என்ற தீய சிறுமதி கொ
போர் விளைத்து விட்டால்,

போர்வந் திடிலிவண் நேர்வந் திடுமெலாம்
யாரிற வார்கள்? யாரறி வார்கள்?
முடிதன் அடிவிழில் யாரெடுத் தணியார்?
அரச வமிசக் கிரமம் ஒரின்
இப்படி யேமுதல் உற்பவ மிருக்கும்.
சிலதல முறையாய்ப் பலவரு டஞ்செலின்
இந்துவில் இரவியில் வந்தோ ரெனவே
மூட வுலகம் மொழியும். யாரே
நாடுவ ராதியை? நன்றிது! நன்றிது!
தோடம்—சடு! சடு!

தீது நன்றென ஓதுவ எல்லாம்
அறியார்க் கறையும் வெறுமொழி யலவோ!
பாச்சி பாச்சி யென்றழும் பாலர்க்குப்
பூச்சி பூச்சி யென்பது போலாம்.
மன்னரை யுலகம் வணங்கவும் பார்ப்பார்க்
கன்னங் கிடைக்கவும் அங்ஙனம் அறைந்து
மதியி லாரை மயக்குவர் வஞ்சமாய்.
அதனால் நமக்கென்? அப்படி நினைக்கில்
இதுவரை யித்தனை நன்மைஎப் படிவரும்.

ராம் தன் உள்ளத்திற் கருதி,
ட்டார் மணம்பேசிப் போதல்
பாராட்டி, புருடோத்தமன்
யத்தனிக்கவேண்டு மென்
சில விவாதங்களை மேற்
வேண்டு மென்றும், அ
களையும் விசாரித்து
னை யரசன் நம்பிக்
ஷயத்திற்குத்

த்தமன் தனக்கு
ல் மனோன்மணி
னை வெளிப்ப
னும் போர் சேர்த்
க் கொள்ளைகொள்ளும்
த்துடனிருக்கும் ச
வன் சென்று தன்
தனக்கு இரகசியமாகக் கற்பித் தனுப்பியபடி சொன்ன
யில் அகௌரவமான துர்வாதம் சொல்லவே, புருடோத்
மன் கோபங்கொண்டு, போர்க்கோலம் பூண்டு பாண்
நாட்டின்மேற் படையெடுத்துப் புறப்பட்டான்.

அச் செய்தி யறிந்து ஜீவகனும் போருக்கு ஆயத்தமா கவே, இரு படையும் திருநெல்வேலிக் கெதிரிலே கைகலந் தன. அப்படிப் போர் நடக்கும்போது பாண்டியன் சேனை யின் ஒரு வியூகத்திற்குத் தலைவனாக இருந்த பலதேவனை அவன் கீழிருந்த ஒரு சேவகன் தன் வேலாலே தாக்க,

அதனாலவன் மூர்ச்சிக்கவும் படைமுழுதும் குழம்பவும் சங்கதியாயிற்று. அப்படித் தாக்க நேரிட்ட காரணம் ஏதென்றால், பலதேவன் மனம்போனவழி நடக்கும் துன்மார்க்கனாதலின் அப் படைஞனது சகோதரியை இரகசியமாக மணக்கக் கருதியதனால் உண்டான வைரமே என்பது படைஞன் வேலாற் பலதேவனைத் தாக்கியபொழுது கூறிய வன்மொழியாலும், அவன் தங்கைக்கு அரண்மனையினின்றும் பலதேவன் திருடிப் பரிசாக அளித்த ஒரு பொற்றொடி அவன் கையில் அக்காலம் இருந்தமையாலும் வெளிப்பட்டது. படை நியதி கடந்த அச் சேவகனை அருகு நின்ற வீரர் அக்கணமே கொன்றுவிட்டார்கள். பலதேவனும் மூர்ச்சை தெளிந்துகொண்டான். ஆயினும் படையிற் பிறந்த குழப்பம் தணியாது பெருகி விட்டதனால் பாண்டியன் சேனை சின்னபின்னப்பட்டுச் சிதறுண்டு ஜீவகன் உயிர் தப்புவதும் அரிதாகும்படி தோல்வி நேர்ந்தது. சத்தியவாதியாகிய நாராயணன் என்னும் சுத்தவீரன் அக் காலம் வந்து உதவி செய்யாவிடில் அப் போர்க்களத்தில் ஜீவகன் மாண்டேயிருப்பான்.

இந் நாராயணன் நடராஜனுடைய நண்பன். குடிலனுடைய சூதுகள் தெரிந்தவன். அரசன் நிந்தித்துத் தள்ளியும் அவனைக் காப்பாற்றும் பொருட்டு அவனைவிட்டு நீங்காது, மதுரையினின்றும் அவனோடு தொடர்ந்துவந்த பரோபகாரி. குடிலன் இவன் திறமையையும் மெய்மையையும் அறிந்தவனாதலால், இந்நாராயணன் போர்முகத்திருப்பின் தான் எண்ணியபடி ஜீவகனுயிருக்குக் கேடு வரவொட்டான் எனக் கருதி, சண்டை யாரம்பிக்கு முன்னமே அவனைக் கோட்டைக் காவலுக்காக நியமித்தனுப்பினான். ஆயினும், போர்க்களமே கண்ணாக இருந்த நாராயணன், சேனையிற் குழப்பம் பிறந்தது கண்டு, சில குதிரைப்படைகளைத் திரட்டிக்கொண்டு திடீரென்று பாய்ந்துசென்று, அரசனையும் எஞ்சின சேவகரையுங் காப்பாற்றிக் கோட்டைக்குட் கொண்டு வந்து விடுத்தான். சுத்த வீரனாகிய அரசன் இங்ஙனம் தான் பகைவருக்கு முதுகிட்ட இழிவை நினைந்து நினைந்து, துக்கமும் வெட்கமுந் தூண்டவே, தற்கொலைபுரிய யத்தனிக்கும் எல்லை, நாராயணன் மனோன்மணிக்கு வேறு

ஆதரவின்மையை அரசனுக்கு நினைப்பூட்டி, அக் கொடுந் தொழிலிலிருந்து அவனை விலக்கிக் காத்தான்.

அவனது நயவுரையால் அரசன் ஒருவாறு தெளிவடைந்திருக்கும்போது, சேரன் விடுத்த ஒரு தூதுவன் வந்து, ஒரு குடம் தாமிரவர்ணி நீரும், ஒரு வேப்பந்தாரும் போரிலே தோற்றதற்கு அறிகுறியாகக் கொடுத்தால் சமர் நிறுத்துவதாகவும், அன்றேல் மறுநாட் காலையிற் கோட்டை முதலிய யாவும் வெற்றிட மாம்படி தும்பைசூடிப் போர்முடிப்பதாகவுங் கூறினான். போரில் ஒருமுறை தான் புறங்கொடுத்த புகழ்க்கெடுதியை உயிர்விடுத்தேனும் நீக்கத் துணிவுகொண்ட ஜீவகன், அதற் குடன்படாமல் மறுத்துவிட்டு, பின்னுஞ் சமருக்கே யத்தனித்துத் தனது அரண்களைச் சோதித்து நோக்குங்கால், அவை ஒருநாள் முற்றுகைக் கேனும் தகுதியற்றபடி அழிந்திருப்பதைக் கண்ணுற்று, அவ்வளவாகத் தன் படை முற்றும் தோற்க நேரிட்ட காரணம் யாதெனக் குடிலனோடு வினவலாயினான். தன் கருத்திற் கெதிராக அரசனைக் காப்பாற்றி வரும் நாராயணன் மேற் றனக்குள்ள பழம்பகை முடிக்க இதுவே தருணம் எனக்கண்டு, அரண்காவலுக்கு நியமிக்கப்பட்ட நாராயணன் காவல்விடுத்துக் கடமை மீறி யுத்தகளம் வந்ததே காரணமாகக் காட்டி, கோபமூட்டி, படையிற் பிறந்த குழப்பத்திற்கு ஏதுவாகப் பலதேவனை ஒரு சேவகன் வேலாற் றாக்கினதும் தெரிவித்து, அதுவும் வியூகத் தலைவனாக ஆக்கப் பெறாத பொறாமையால் நாராயணன் ஏவிவிட்ட காரியமே எனவும், அத் தொழிலிற்குப் பரிசாக அவன் அரண்மனையினின்றுந் திருடிக் கொடுத்ததே அவன் கையிலிருந்த அரண்மனை முத்திரை பொறித்த பொற்றொடி எனவும் குடிலன் ஒரு பொய்க்கதை கட்டி அதனை அரசன் நம்பும்படி செய்தான். அவ்வாறே களவு கொலை கட்டளைமீறல் முதலிய குற்றங்களை நாராயணன்மேற் சுமத்த, அவற்றிற்காக அவனைக்கழுவேற்றும்படி விதியும் பிறந்தது.

இத் தருணத்திற் சுந்தரமுனிவர் அத்தியந்த ஆவசியகமான ஓர் இரகசியாலோசனைக்கு அரசனை யழைப்பதாகச் செய்தி வந்தமையால், நாராயணனை அவ் விதிப்படி கழுவேற்றவில்லை. முனிவர் இப்போது வந்த காரணம் என்ன?

ஜீவகன் குடிலன் வசத்தனாய் நெல்வேலிக் கோட்டையே சாசுவதமென இறுமாந்திருந்தமை கண்டு பரிதாபங்கொண்டு, தமக்கென இரந்து வேண்டிக்கொண்ட அறை முதல் தம தாச்சிரம வெளிவரையும், ஆபத்காலத்து உபயோகமாக அதிரகசியமான சுருங்கை யொன்றுழைத்துச் சமைத்துக்கொண்டு, பற்றுக்கோடற்று நின்ற ஜீவகனையும் அவன் மகளையும் கேடுற்ற கோட்டையினின்றுந் தமது ஆச்சிரமத்திற்கு அச் சுருங்கை வழி யழைத்துச் செல்ல வுன்னியே சுந்தரர் இத் தருணம் எழுந்தருளினர். கோட்டையின் நிலையாமை யுணர்ந்தும், அதன்மேல் வைத்த அபிமானம் ஒழியாமையால், அதனுடன் தான் மடியினும் இன்னும் ஒருமுறை போருக்கஞ்சிப் புறங்கொடுத்தல் தகாதென ஜீவகன் துணிந்து மறுக்க, மனோன்மணி பாண்டியர் குலத்திற்கு ஏக சந்ததியாக இருப்பதனால் மற்றையர் எக்கேடுறினும் அவளையேனும் காப்பாற்றுதல் தம் கடமையென ஒரு தலையாக ஒழுத்து முனிவர்கூற, மன்னவன் அங்ஙனம் இயைந்து, நடுநிசியில் முனிவரோடு தன் மகளை ஆச்சிரமம் அனுப்புவதாக ஒப்புக்கொண்டான். முனிவரும் சம்மதித்து அகன்றார்.

உடனே நிசாமுகம் தோன்றிற்று. தன் அருமை மகளைப் பிரியும் வருத்தம் ஒருபுறமும், பிரியாதிருக்கில் அவட்குண்டாம் கெடுதியைக் குறித்த அச்சம் மற்றொரு புறமுமாக ஜீவகன் சித்தத்தைப் பிடித்தலைக்க, அவன் கலக்கமுற்று, குருமொழியிலும் ஐயம் பிறந்து, குடிலனை வரவழைத்து, முனிவர் அதி ரகசியமாகக் கூறிய சுருங்கை முதற் சகல சங்கதியும் தெரிவித்து, அவனது அபிப்பிராயம் உசாவுவானாயினன். அதற்கு அப் பாதகன் இதுவே தன் மனக்கோள் நிறைவேற்றற்கு ஏற்ற காலமெனத் துணிந்து கொண்டு மனோன்மணியை இடம் பெயர்ப்பது தற்கால நிலைமைக்கு எவ் விஷயத்திலும் உத்தமமெனவும், ஆயினும் மணவினை முடியா முன்னமே அனுப்புதலால், கன்னியாகிய அவளுக்குப் பழிப்புரை உண்டாக இடமாவதேயல்லால், அரசனுக்குச் சற்றும் சித்தசமாதானத்திற் கிடமில்லை யெனவுஞ் சொல்லி, அவன் நெஞ்சிற் சஞ்சலம் விளைவித்து, ஜீவகன் தானாகவே பலதேவனுக்கு மனோன்மணியைப்

அன்றிரவே கலியாணஞ் செய்துகொடுத்து முனிவர் ஆச்சிரமத்திற்கு மகளையும் மருமகனையும் சேர்த்து அனுப்புவதாகத் துணியும்படி தூண்டிவிட்டு, தான் நெடுங்காலமாகக் கொண்டிருந்த அபிலாஷத்தைப் பூர்த்திப்படுத்திக் கொண்டான்.

ஆயினும் அவ்வளவோடு நில்லாமல், தன்னையறியாமல் முனிவர் வகுத்த கள்ள வழியைக் கண்டறிய வேண்டுமென்று விருப்புற்று, அஃது அவர் வந்த அன்றே தமக்காகப் பெற்றுக்கொண்ட அறைக்குச் சம்பந்தப்பட்டிருப்பதே இயல்பென ஊகித்து, அவ்வறையிற் சென்று நோக்கி அச்சுருங்கையைக் கண்டுபிடித்து அவ்வழியே போய் வெளியேறிப் பார்க்குங்கால், சத்துரு பாசறை அருகே தோன்றிற்று. அன்று பகலில் தன் மகனுக்குச் சண்டையில் நேரிட்ட மோசடி போலத் தனக்கும் இனி வரக்கிடக்குங் கொடும்போரில் உட்பகையாலோ வெளிப்பகையாலோ யாதேனும் அபாயம் நேரிட்டுவிடலா மென்ற பயத்தாலும், மனோன்மணி விவாகம் எப்படியும் அன்றிரவே நடந்தேறு மென்ற துணிவாலும், நடந்தேறில் ஜீவகனது பிரீதியால் சித்திக்கத்தக்கது வேறொன்று மில்லை யென்ற உறுதியாலும் கோட்டைக்குத் திரும்ப வேண்டுமென்ற எண்ணம் விடுபட்டது. தான் வருந்திக் கண்டுபிடித்த கற்படையைச் சேரனுக்குக் காட்டி, அவ்வழியே அவனை அழைத்துச் சென்று, யாதொரு உயிர்ச் சேதத்திற்கு மிடமில்லாமல், பாண்டியனையும் அவன் கோட்டையினையும் சுலபமாகப் பகைவன் கையில் ஒப்பித்துவிட்டால், ஒரு குடம் ஜலத்திற்கும் ஒரு பூமாலைக்குமாகச் சமரை நிறுத்தித் தன்னூருக்குத் திரும்ப எண்ணிய சேரன், தன்னையே முடிசூட்டிச் சிங்காதனம் சேர்க்கா தொழிவனோ என்னும் பேராசை பிடர் பிடித் துந்தவும், ஊழ்வலி யொத்து நிற்கவும், அத்துரோகியாகிய குடிலன், மெள்ள மெள்ளப் பாசறை நோக்கிப் போகவே, கனவில் மனோன்மணியினது உருவங்கண்டு விருப்புற்ற நாள் முதலாக யாதொன்றிலும் மனஞ் செல்லாதவனாய் இரவெல்லாம் நித்திரை யற்றுத் தனியே திரிந்து வருந்தும் புருடோத்தமனை நடுவழியிலே சந்தித்துக்கொண்டான். அதுவும் தனது பாக்கியக் குறியாகவே மதித்து

மகிழ்ந்த குடிலன் எதிர்ப்பட்ட சேரனிடம் தனது துரோக சிந்தனையை வெளிப்படுத்த, தன்னயங் கருதாச் சதுரனாகிய புருடோத்தமன், தனது சேவகரைக் கூவிக் குடிலன் காலிலும் கையிலும் விலங்கிடுவித்து, "வீரமே உயிராக வுடைய வஞ்சிவேந்தருக்கு வெற்றியன்று விருப்பு, இவ்வித ராஜ துரோகிகளைக் காட்டிக்கொடுத்து மாற்றலராகிய மன்னவரையும் இரட்சித்துப் பின்பு வேண்டுமேற் பொருது தமது வீரம் நாட்டடலேயாம்" என அவனுக்கு விடை கூறி, அவன் கூறிய சுருங்கை வழியே ஜீவகன் சபைக்கு வழிகாட்டி வரும்படி கட்டளையிட்டான். இம்மொழி கேட்ட பாவி இடியொலி கேட்ட பாம்புபோற் றிடுக்கிட்டுத் திகைத்து நின்றான். ஆயினும் தானிட்ட கட்டளை மீறில் சித்திரவதையே சிக்ஷையாமென்று சேரன் சினந்து கூற, அதற்கு அஞ்சி அவ்வாறே கற்படைக்கு வழிகாட்டி நடப்பானாயினன்.

இப்பால் ஜீவகன் தன் மகளைப் பலதேவனுக்கு மணஞ்செய்வித்து, இருவரையும் முனிவர் ஆச்சிரமம் அனுப்புவதே தகுதியெனத் தெளிந்தவாறே இச்செய்தியை மனோன்மணிக் கறிவிக்க, அஃது அவள் செவிக்குக் காய்ச்சின நாராசம்போலிருந்த தாயினும் தன் பிதாவுக்கு நேர்ந்த ஆபத்காலத்தை நன்குணர்ந்து, அவனுக்கேற்றபடி நடந்து அவனைத் தேற்றுவதே தற்கால நிலைக்கேற்ற தனது கடப்பாடெனத் தெளிந்து அங்ஙனம் ஒப்புக்கொண்டது மன்றி, தன்பாடு எங்ஙனமாயினும், தன்னைச் சார்ந்தவர் சுகத்தைப் பாராட்டும் பெருங்குணத்தால், காதல்கொண் டிருக்கும் வாணி தன் கருத்திற் கிசைய நடராஜனை மணஞ்செய்து கொள்ளவும், நெடுங்காலமாகத் தன் குடும்ப ஊழியந் தலைக்கொண்டு நின்ற நாராயணன் செய்த தவறு யாதே யாயினும் அதனைப் பொறுத்து அவனைச் சிறை நீக்கவும், தன் பிதாவினிடம் விரும்பிக் கேட்டுக்கொண்டனள். அப்படியே ஜீவகன் அனுமதி கொடுத்து, அகமகிழ்ந்து, மணவினைக் காயத்தஞ் செய்யவே, நடுநிசி சமீபிக்க, முனிவரும் நடராஜனும் வந்து சேர்ந்தார்கள். தாம் போய் மீளுவதற் குள்ளாகக் குடிலன் செய்த துராலோசனையும் அதற் குடன்பட்ட மன்னவனுடைய ஏழைமையும் கருணைவிலாசம் இருந்

தமையுங் கண்டு வியந்து, அரசன் நிச்சயித்த வண்ணமே நடத்தச் சுந்தரர் இசைந்தார்.

கற்படைக் கருகில் உள்ள மணவறையை விவாக முகூர்த்தத்திற் கிசைந்தவாறு அலங்கரித்து, அதிற் குடிலன் ஒழிய மற்ற மந்திரி பிரதானிகளுடன் முனிவர் ஜீவகன் நடராஜன் பலதேவன் நாராயணன் முதலிய அனைவரும் கூடிக் குடிலன் வரவிற்குச் சற்று எதிர்பார்த்திருந்தும் வரக்காணாமையால், மணவினைச் சடங்குகள் தொடங்கி, பலதேவனுக்கு மாலைசூட்ட மனோன்மணியை வரவழைக்கும் எல்லை,

"நீர்நிலையின் முதலையின்வாய் நிலைகுலைந்த ஒருகரிமுன்
ஓர்முறையுன் பெயர்விளிக்க உதவினைவந் தெனவுரைப்பர்
ஆர்துயர அளக்கர்விழும் அறிவிலியான் அழைப்பதற்குன்
பேர்தெரியே னயினும் பிறகிடல்நின் பெருந்தகையோ!

"பாரரசர் துகிலுரியப் பரிதவிக்கு மொருதெரிவை
சீர்துவரை நகர்கருதிச் சிதைவொழிந்தா ளெனவுரைப்பர்;
ஆர்துணையும் அறவிருக்கும் அறிவிலியான் அழைப்பதற்குன்
ஊர்தெரியே னயினும் உறுதிதரல் உனக்குரித்தே!

"மறலிவர மனம்பதறு மார்க்கண்ட னுனதிலிங்கக்
குறிதழுவி யழிவில்வாம் கொண்டான்முன் எனவுரைப்பர்;
வெறிகழுமிப் பொறியழியும் வெம்பாவி விரவுதற்குன்
நெறியறியே னயினும் நேர்நிற்றல் நினதருளே!"

என்று வாணி பாடுவதுபோல, தெய்வத்தைப் பிரார்த்தித்தாள். அப்போது, குடிலன் வழிகாட்டக் கற்படை வழி வந்த புருடோத்தமனும் முனிவரறையில் வந்துசேர்ந்து அடுத்த அறையாகிய மணவறையில் நடக்கும் ஆகோஷம் என்னவென்று நோக்கவே, தன் திரைவிட்டு வெளிவந்து பலதேவ னெதிரே மணமாலையுங் கையுமாய்ச் சித்திரப் பிரதிமைபோல உணர்வற்றுச் செயலற்று நின்ற தன் காதலியாகிய மனோன்மணியைக் கண்ணிரண்டுங் களிக்கக் காணலும், பள்ளத்துட் பாயும் பெருவெள்ளம்போல் அவாப் பெருகியீர்த்தெழ, திடீரென்று கடிதிற் குதித்து யாரும் அறியாது சபையுட் புகுந்து, கரை யற்ற சோகத்தால் மன மிறந்து நின்ற மனோன்மணியின் கண்முன் சென்று நின்றனன். தன்னுள்ளத்திருந்த தலைவன் இங்ஙனம் பிரத்தியக்ஷப்படலும், அக்கணமே ஆநந்த பரவசப்பட்டு மனோன்

மணி, தான் கைக்கொண்ட மணமாலையை அவன் கழுத்தோடு சேர்த்து, தற்போதமிழந்து, அவன் தோள்மேல் வீழ்ந்து மூர்ச்சையாயினள். இங்ஙனம் அயலான் ஒருவன் சபையுட் புகுந்ததும், மனோன்மணி அவனுக்கு மாலை சூட்டி மூர்ச்சித்ததுங் கண்டு, ஜீவகனாதியர் திடுக்கிட்டுச் சூதெனக் கருதிப் பொருதற் கெழுங்கால், சுந்தரமுனிவர் கையமைத்துச் சமாதானம் பிறப்பிக்க, புருடோத்தமன், குடிலன் தன்னிடத்தில்வந்து கூறிய துரோக சிந்தனையும், தான் அதற்கிசையாது அவனையே கால்யாப் பிட்டு ஜீவகனிடம் ஒப்புவிக்கக் கொணர்ந்தமையுங் கூறிக் குடிலனை விலங்குங் காலுமாகச் சபைமுன் நிறுத்திவிட்டு, தனக்குயிர் நிலையாக நின்ற மனோன்மணியுடன் பாசறைக்கு மீள யத்தனிக்கு மளவில், சுந்தரமுனிவர் ஆஞ்ஞையால் ஜீவகன் மனந் தெளிந்து மகளையும் மருமகனையும் வாழ்த்த, அது கண்ட யாவரும் கண்படைத்த பெரும்பய னடைந்து அருட்டிறம் புகழ்ந்து ஆநந்தமடைந்தனர்.

# செய்யுள் பாகம்

## 1

## தமிழ்

**சுந்தரம்பிள்ளை இயற்றிய மனோன்மணீயம்)**

பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.

1. நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்,
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்;
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே!

2. பல்லுயிரும் பலஉலகும் படைத்தளித்துத் துடைக்கினும்ஓர்
எல்லையறு பரம்பொருள்,முன் இருந்தபடி இருப்பதுபோல்—
கன்னடமும், களிதெலுங்கும், கவின்மலையா ளமும்,துளுவும்
உன்உதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்,
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

(இவை தரவு)

(க) கடல்குடித்த குடமுனிஉன் கரைகாணக் குருநாடில்
தொடுகடலை உனக்குவமை சொல்லுவதும் புகழாமே.

(உ) ஒருபிழைக்கா அரனார்முன் உரையிழந்து விழிப்பாரேல்
அரியதுன திலக்கணமென் றறைவதுமற் புதமாமே.

(ங) சதுமறைஆ ரியம்வரும்முன் சகம்முழுதும் நினதாயின்
முதுமொழிநீ அனாதிஎன மொழிகுவதும் வியப்பாமே.

(ச) வேகவதிக்(கு) எதிர்ஏற விட்டதொரு சிற்றேடு
காலநதி நினைக்கரவாக் காரணத்தின் அறிகுறியே.

(ரு) கடைஊழி வரும்தனிமை கழிக்கஅன்றோ அம்பலத்துள்
உடையார்உன் வாசகத்தில் ஒருபிரதி கருதினதே.

(சா) தக்கவழி விரிந்திலகும் சங்கத்தார் சிறுபலகை
மிக்கநலம் சிறந்தஉன்தன் மெய்ச்சரித வியஞ்சனமே.

(எ) வடமொழிதென் மொழிஎனவே வந்தஇரு விழியவற்றுள்
கெடுவழக்குத்தொடர்பஏரேகிழக்கொடுமேற்(கு)உணராரே.

(அ) வீறுடைய கலைமகட்கு விழியிரண்டும் மொழியானால்
கூறுவட மொழிவலமாக் கொள்வர்குண திசைஅறியார்.

(கூ) கலைமகள்தன் பூர்வதிசை காணுங்கால் அவள்விழியுள்
வலதுவிழி தென்மொழியா மதியாரோ மதியுடையார்.

(க0) பத்துப்பாட் டாதிமனம் பற்றினார் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே.

(கக) வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி.

(கஉ) மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தின்மாண்டோர்கள்
கனஞ்சடையென் றுருவேற்றிக் கண்மூடிக் கதறுவரோ.

(இவை தாழிசை)

எனவாங்கு, (இது தனிச்சொல்)

நிற்புகழ்ந் தேத்தும்நின் நெடுந்தகை மைந்தர்
பற்பலர் நின்பெரும் பழம்பணி புதுக்கியும்
பொற்புடை நாற்கவிப் புதுப்பணி குயிற்றியும்
நிற்பவர் நிற்க, நீபெறும் புதல்வரில்
அடியேன் கடையேன், அறியாச் சிறியேன்
கொடுமலை யாளக் குடியிருப் புடையேன்;
ஆயினும், நீயே தாயெனும் தன்மையின்
மேயபே ராசையென் மீக்கொள ஓர்வழி

உழைத்தலே தருதிஎன்(று) இழைத்தஇந் நாடகம்
வெள்ளிய(து) எனினும் விளங்குநின் கணைக்காற்(கு)
ஒள்ளிய சிறுவிரல் அணியாக்
கொள்மதி அன்பே குறிஎனக் குறித்தே.

(இது சரிதகம்)

---

## 2

### புகழேந்திப் புலவர்

இயற்றிய

### நளவெண்பா

1. காமர் கயல்புரளக், காவி முகைநெகிழத்,
தாமரையின் செந்தேன் தளைஅவிழப்—பூமடந்தை
தன்னாட்டம் போலும் தகைமைத்தே, சாகரம்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு.

எனப் புகழப்பட்டுள்ள நிடத நாட்டுக்கு அரசனாயிருந்தான் நளன். அப்போது விதர்ப்பநாட்டு டரசனையிருந்தவன் வீமன். அவனுக்கு மகளாய்ப்பிறந்த தமயந்தி

2. நாற்குணமும் நாற்படையா,ஐம்புலனும் நல்லமைச்சா,
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா,—வேற்படையும்
வாளுமே கண்ணா வதனமதிக் குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு!

என்று சொல்லத்தக்க பெருங்குணமும் பேரழகும் வாய்ந்தவள். நளன் ஓர் அன்னப்பறவையால் அவள் சிறப்பை அறிந்து அவளைத் தான் விவாகஞ் செய்துகொள்ள விரும்பி, அவ் வன்னத்தையே அவள்பால் தூதாக அனுப்பினான். பிறகு அதன் வருகையை ஆவலோடு எதிர் பார்த்துக்கொண்டு,

3. 'இவ்வளவிற் செல்லுங்கொல்? இவ்வளவிற் காணுங்கொல்?
இவ்வளவிற் காதல் இயம்புங்கொல்?—இவ்வளவில்
மீளுங்கொல்?' என்றுரையா விம்மினான் மும்மதத்தின்
நாளுங்கொல் யானை நளன்.

சென்ற அன்னம் தமயந்தியைக் கண்டு

4. 'செம்மனத்தான்; தண்ணளியான்; செங்கோலான்; மங்கையர்[கள்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்;—மெய்ம்மை
நளன்என்பான்; மேனிலத்தும் நானிலத்தும் காப்பிக்கான்
உளன்என்பான்; வேந்தன் உனக்கு.

5. 'அறங்கிடந்த நெஞ்சும், அருளொழுகு கண்ணும்,
மறங்கிடந்த திண்டோள் வலியும்—திறங்கிடந்த
செங்கண்மால் அல்லனேல் தேர்வேந்தர் ஒப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு!'

என்று நளன் சிறப்புகளை எடுத்துக்கூறியது. அதுகேட்ட தமயந்தி நளன் மீது விருப்பம் உற்று அவனையே விவாகம் செய்துகொள்வதாக ஒப்புக்கொண்டாள். அன்னம் திரும்பிவந்து அச்செய்தியை நளனிடம் கூறி அவன் மனத்தைத் திருப்தி செய்தது. தமயந்திக்குச் சுயம்வர நாள் குறிக்கப்பட்டது. அப்பொழுது தேவர் மன்னர் யாவரும் அவளை விவாகஞ் செய்துகொள்ள வந்திருந்தனர். ஆனால் தமயந்தி நளனையே மனமார விரும்பியிருந்தாள். ஆதலால்,

6. விண்ணரசர் எல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்,
கண்ணகல் ஞாலங் களிகூர,—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்.

இங்ஙனம் தமயந்தியால மாலைசூட்டப்பெற்ற நளன், அவளை அக்கினி சாட்சியாய் விவாகஞ் செய்துகொண்டு, தன் நகர்வந்து, அவளோடிருந்து அரசு நடத்திக்கொண்டிருந்தான். பன்னிரண்டு வருஷத்துக்குப் பிறகு தமயந்தி ஓராண்குழந்தையையும் ஒரு பெண் குழந்தையையும் பெற்றாள். தமயந்தியை விவாகஞ்செய்துகொள்ள நினைத்திருந்து ஏமாறியதேவர்கள், நளன்மீது பொறாமைகொண்டு அவனைப் பற்றித் துன்புறுத்தும்படி கலிதேவனை அவனிடம் அனுப்பினார்கள். அவன் அதற்கிசைந்துவந்து, நளனைக் கெடுப்பதற்காக, புட்கரன் என்னும் ஒரு சிற்றரசனை ஏவி நளனைச்சூதாட அழைக்கச் செய்தான். புட்கரன் கலியின் வஞ்சனைக்கிசைந்து நளனைத் தன்னுடன் சூதாடிவெல்லும்படி அழைத்தான். நளன் அதற்கு ஒப்பினான். அப்போது மந்திரி முதலானோர்,

7. 'காதல், கவருடல், கள்ளுண்டல், பொய்ம்மொழிதல்,
ஈதல் மறுத்தல்: இவையைந்தாம்—போதில்
சினையாமை வைகும் திருவுடையாய்! செம்மை
நினையாமை பூண்டார் நெறி.

8. 'அறத்தைவேர் கல்லும் அருநரகிற் சேர்க்கும்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும்-மறத்தையே
பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
வேண்டுவரோ!' என்றார் தெரிந்து.

இவ்வளவு சொல்லியும் நளன் சூதாட ஒப்பியதை மறுக்கப் பில வாங்கவில்லை. அவர்கள்.

9. 'உருவழிக்கும்; உண்மை உயர்வழிக்கும்; வண்மைத்
திருவழிக்கும்; மானஞ் சிதைக்கும்;—மருவும்
ஒருவரோ டன்பழிக்கும்; ஒன்றல்ல! சூது
பொருவரோ தக்கோர் புரிந்து?'

என்று பின்னும் நன்மதி எடுத்துரைத்தார்கள். அப்பொழுதும் நளன் அவர்கள் சொல்லைக் கேட்கவில்லை.

10.'தீது வருக; நலம்வருக; சிந்தையாற்
சூது பொரஇசைந்து சொல்லினோம்:—யாதும்
விலக்கலிர்நீர்' என்றான் வராலேற மேதி
கலக்கலைநீர் நாடன் கனன்று.

அதற்குமேல்என்னசொல்வதென்றுஅமைச்சர்கள் அமைந்திருந்து விட்டார்கள். நளனும்புட்கரனும் சூதாடத் தொடங்கினார்கள். கலியின் வஞ்சனையால் நளன் தன் செல்வம் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாகப் பந்தயம் வைத்து இழந்துவிட்டான். தன் இராஜ்யமும் போய்விட்டது. 'போதும்' என்று சொல்லி நளன் தன் நாட்டையும் நகரையும் புட்கரனிடம் ஒப்புவித்துவிட்டு, மனையாளையும் மக்களையும் அழைத்துக்கொண்டு பரதேசியாக வெளிப் புறப்பட்டு விட்டான். அப்பொழுது நகரமாந்தரனைவரும் நளனை நோக்கி,

11. 'ஆருயிரின் தாயே! அறத்தின் பெருந்தவமே!
பேரருளின் கண்ணே! பெருமானே!—பாரிடத்தை
யார்காக்கப் போவதுநீ யாங்'கென்றார் தங்கண்ணின்
நீர்வார்த்துக் கால்கழுவா நின்று.

சிலர் தங்களுக்குள்,

12. 'வேலை கரையிழந்தால், வேதம் நெறிபிறழ்ந்தால்,
ஞால முழுதும் நடுவிழந்தால்—சீலம்
ஒழிவரோ! செம்மையுரை திறம்பாச் செய்கை
அழிவரோ செங்கோ லவர்!'

என்று சொல்லிக்கொண்டார்கள். சிலர்,

13.'வடியேறு கூரிலைவேன் மன்னவோ! உன்றன்
அடியேங்கட் காதரவு தீர்க்—கொடிநகரில்
இன்றிருந்து நாளை எழுந்தருள்க' என்றுரைத்தார்,
வென்றிருந்த தோளான்தாள் வீழ்ந்து.

தமயந்தியும் முகம்வாடி யிருந்தாள். நளன்,

14. மன்றலிளங் கோதை முகநோக்கி, மாநகர்வாய்
நின்றுருகு வார்கண்ணில் நீர்நோக்கி—'இன்றிங்
கிருத்துமோ?' என்றான், இளங்குதலை வாயாள்
வருத்தமோ தன்மனதில் வைத்து.

ஆனால் புட்கரன், 'நளனைக் கொண்டாடியவர்கள் கொல்லப்படு வார்கள்' என்று ஒரு கொடிய கட்டளையை முரசறைந்து தெரிவித்தான். அதைக் கேட்ட நளன் 'இனி எக்காரணத்தைக்கொண்டும் நாம் இந் நகரில் தங்குவது கூடாது' என்று தன் தேவியோடும் நகர்விட்டு நீங்கினான். சுரத்தில் நடந்தறியாத தமயந்தியும் குழந்தைகளும் வருத்தம் பொறுக்கமாட்டாமற் பதைத்தார்கள். நளன் அதுகண்டு வருந்தினான்.

15. தூயதன் மக்கள் துயர்நோக்கிச், சூழ்கின்ற
மாய விதியின் வலிநோக்கி,—யாதும்
தெரியாது சித்திரம்போல் நின்றிட்டான் செம்மை
புரிவான் துயராற் புலர்ந்து.

பிறகு தமயந்தியை நோக்கி,

16.'சாத விருவரையுங் கொண்டு கடுஞ்சுரம்போக்
கேத முடைத்திவரைக் கொண்டுநீ—மாதராய்!
வீமன் திருநகர்க்கே மீள்' என்றான் விண்ணவர்முன்
தாமம் புனைந்தாளைத் தான்.

அப்பொழுது தமயந்தி நளனை நோக்கி,

17.'குற்றமில் காட்சிக் குதலைவாய் மைந்தரையும்
பெற்றுக் கொளலாம். பெறலாமோ—கொற்றவனே!
கோக்கா தலனைக் குலமகளுக்' கென்றுரைத்தாள்
நோக்கான் மழைபொழியா நொந்து.

அதற்கு நளன்,

18. 'பொன்னுடைய ரேனும், புகழுடைய ரேனும்,மற்
றென்னுடைய ரேனும், உடையரோ—இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்?

19. 'சொன்ன கலையின் துறையனைத்தும் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தாம் இன்முகத்து—முன்னங்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி!'

என்றான். 'ஆனால், தாங்களும் எம்மோடு வந்து, நம் கஷ்டகாலம் நீங்கும் வரையில் என் தந்தையார் அரண்மனையில் வசித்திருங்கள்' என்றாள் தமயந்தி. அப்போது நளன்,

20.'சினக்கதிர்வேற் கண்மடவாய்! செல்வர்பாற் சென்றீ
எனக்கென்னும் இம்மாற்றங் கண்டாய்—தனக்குரிய
தானந் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
மானந் துடைப்பதோர் வாள்'

என்றான். அதுகேட்ட தமயந்தி,

21.'செங்கோலாய்! உன்றன் திருவுள்ளம் ஈதாயின்,
எங்கோன் விதர்ப்பன் எழில்நகர்க்கே—நங்கோலக்
காதலரைப் போக்கி அருள்'என்றாள், காதலருக்
கேதிலரைப் போல எடுத்து.

நளனும் அது நல்லதென்றே கருதித் தம்மைத் தொடர்ந்து வந்த ஒரு பிராமணனை அருகழைத்து, மக்களிருவரையும் அவன் வசம் ஒப்புவித்து, அவர்களை வீமன்பாற் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும்படி கூறினன். அப்பொழுது அறிவுடை மக்கள் இருவரும்,

22.'தந்தை திருமுகத்தை நோக்கித் தமைப்பயந்தாள்
இந்து முகத்தை எதிர்நோக்கி—'எந்தம்மை
வேறாகப் போக்குதிரோ!" என்றார், விழிவழியே
யாறாகக் கண்ணீர் அழுது.

நளனும் தமயந்தியும் அச்சொற்களைக்கேட்டு உள்ளமுருகி,மக்களை எடுத்து அணைத்து ஆறுதல் கூறி அவர்களை மறையவனிடத்தில் ஒப்புவித்தார்கள்.

23· இருவர் உயிருமிருகையான் வாங்கி
ஒருவன்கொண் டேகுவா னொத்து—வருமறையோன்
கோமைந்த ரோடிளைய கோதையைக்கொண் டேகினான்
வீமன் நகர்க்கே விரைந்து.

# ஒட்டக்கூத்தர்
இயற்றிய
# இராமாயணக் கருப்பொருள்

1. நாடு கோசல நாடு; மாநதி புனற்சரயு;
ஆடு திண்கொடி அயோத்தி மாநகர்; அதற்கிறைவன்
தேடு வண்புகழ்த் தயரதன் ; தேவியர் முதன்மை
சூடு கோசலை, கைகெசி, சுமித்திரை என்பார்.

2. மற்றுந் தேவியர் அறுபதி னாயிர மடவார்
சொற்ற மன்னவன் சுடர்புகழ் வேள்விகள் தொடங்கிப்
பெற்ற மைந்தர்கள் பிறங்குவேல் இராகவன், பரதன்,
எற்று நீள்புயத் திலக்குவன், இளையவன் என்போர்

3. தெள்ளமு தன்னவர்; சீதையை அன்பால்
வள்ளல் இராகவன் மன்னி மணந்தான் ;
முள்ளெயி றுயிதழ் மூவரையும் போர்
வெள்ளிலை வேலவர் மூவரும் வேட்டார்.

4. நெறியினில் யாவரும் நேரிடும் வேலை
எறிசுட ரார்மழு வேந்தனும் வந்தான்;
குறியவ னாகிய வன்வில் வளைத்து
வறுமையி லாதவ யோத்திபு குந்தார்.

பின்னர் தசரதன் இராமனுக்கு முடிசூட்ட நிச்சயித்தான்.

5. அன்னது கூனி அறிந்தனள் சொன்னாள் ;
கன்னன் மொழிக்குயில் கைகெசி கேட்டாள்;
'மன்னவ நீமுன் அளித்த வரத்தால்
என்மக னுக்கர சீந்தருள்' என்றாள்.

துகேட்டு,

6. வடிவுடை மன்னவன் மயங்கினன் வீழ்ந்தான் ;
இடுகழல் வீரன் இராகவன் இன்றே
நெடில்படு கானக மீபுகு கென்றே
கொடியவள் சீரை கொடுத்தன ளன்றே.

7. மலர்க்குழ லாளொடும் வார்சிலை வண்கை
இலக்குவ னோடும் இராகவன் அன்றே
அலக்கண் உறாமல் அயோத்தி கடந்தே
நலக்குறு கங்கை நறுங்கரை மேயான்.

8. சித்திர கூடம் அடைந்தனர்; சென்ற(து)
அத்தன் அறிந்தனன் ; ஆருயிர் விட்டான்.
வித்தக மாமுனி மெய்ப்பா தற்கே
உய்த்தனன் ஓலை உணர்ந்திவண் வந்தான்.

வந்தவன், நடந்ததுணர்ந்து இராகவனைத் தேடிச்சென்று கண்டு, தந்தை இறந்தது கூறியபின்,

9. ஆதி மாமுடி சூடென் றடிதொழப்
'போதி ஏழிரண் டாண்டு பொறுத்தி'யென்
றேத மின்றி இராகவன் கூறலும்,
பாது கங்கொள் பரதனும் போயினன்.

பின்னர், இராவணன் தன் தங்கை சூர்ப்பநகையால் சீதையின் அழகைக் கேட்டு அவளை வஞ்சித்துக் கொண்டுவர எண்ணித் தன் மாமன் மாரீசனை மாயமான் உருவாய்ச் சீதை கண்முன் திரியச் செய்தான். அந்த மாயமானை,

10. கண்டு சீதை கவர்ந்து தாவென
அண்டர் கோனும் அதன்பின்னர் ஏகினன் ;
கொண்ட மாயை அறிந்து கொலைசெய்தான்
'ஒண்டொடீ! இளையோய்!" என்றுரைத்ததே.

11. அன்ன மன்னவள் அவ்வுரை கேட்டலும்,
தன்ன நாயகன் தம்பியை ஏவினள்.
பன்ன சாலையிற் பார்ப்பன வேடமாய்
இன்னல் செய்யவ் விராவணன் எய்தினன்.

எய்தியவன் சீதையைத் தூக்கிக்கொண்டு, வழியில் தடுத்த சடாயுவைச்சிறகரிந்துவீழ்த்திவிட்டு,இலங்கைபோய்ச்சேர்ந்துவிட்டான்.

மீண்டுவந்து சீதையைக் காணமல் தேடிச்சென்ற இராமலட்சுமணர்கள் சடாயுவால் உண்மை உணர்ந்தபின், இறந்த சடாயுவைத் தகனஞ் செய்துவிட்டுச் சென்றனர். வழியில் கவந்தனையும் சவரியையும்கண்டு இருவர்க்கும் மோட்சமளித்தபின் அனுமானை எதிர்ப்பட்டு அவனல் சுக்கிரீவனைத் துணைகொண்டார்கள். அப்பால்,

12. மந்தர மெனத்திகழ் மராமரம தெய்தே,
துந்துபி களேபரம் எனச்சுவ டுறுத்தி,
இந்திரன் மகற்கியம லோக மருளி,
அந்தனுடை வாள்அவன் மகன்பெற அளித்தான்.

அப்பால் சுக்கிரீவனுக்கு முடிசூட்டினன் இராமன். மாரிகாலங் கழிக்கவும் சுக்கிரீவன் சேனைகள், இராகவன் ஏவலால் சீதாதேவி

யைத் தேடிக் கண்டுவர, பலதிசைகளுக்கும் அனுப்பப்பட்டனர். தென்றிசை நோக்கிச் சென்ற அனுமான், கடலைத் தாண்டி இலங்கையை அடைந்து,

13. எரிவிழி இலங்கைமா தேவியும் கெடக்
கருநிற அரக்கர்தங் கனக மாளிகைத்
தெரிவையை எங்கணும் தேடிக் காண்கிலான்
அரியலர்ச் சோலைகண் டாழி காட்டினன்.

14. மானவன் அறிந்தருண் மதுர மாமணி
சானகி அளித்தனள்: விடையும் தந்தபின்,
'யானிவண் வந்துவீ ணேகல் தீ'தெனாப்
போனமா மாருதி பொழிலை வாட்டினன்.

அதனை அறிந்த இராவணன் தன் சேனைகளை அனுப்பி அனுமானை எதிர்க்கச் செய்தான். அனுமான் அவர்களையெல்லாம் அடித்துத் துரத்தியதுமன்றிச் சிலரைக் கொன்றும் ஒழித்தான். அதன்மேல்,

15. மேக நாதன் வந்தெதிர்ந்து வேதநான் முகன்தரு
நாக பாசம் வீசினான நாதனைக் கொணர்ந்துதம்
ஓகை வாளி ராவணற் குரைத்தலும் உருத்தெழா
'வேக வாலின் அங்கியிட் டெரித்தி'ரென் றியம்பினான்.

அவ்வாறே அரக்கர் அனுமான்வாலில் நெருப்பிட, அவன் அதைக் கொண்டு இலங்கையில் எரிமூட்டி மாடமாளிகைகளை யெல்லாம் அழித்துவிட்டு, ஜானகியிடம் விடைபெற்றுத் திரும்பி இராமபிரானிடம் சென்று,

16. மன்ற லோதி தந்த கோல மணியைநல்கி மாருதி
நின்றுவாச கங்கள்கூற நீடுவேலி ராமனும்
'என்றின் மைந்த! இப்பதாதி எழுக'என் றெழுந்தபின்
தென்றிசைக் கருங்கடற் றிரைப்புறத்து மேவினான்.

இராமபிரான் படைதிரட்டிப் போருக்கு வந்திருப்பதறிந்த விபீஷணன், இராவணனுக்கு இராமபிரான் பெருமையை எடுத்துக்கூறி, சீதையை விட்டுவிடும்படி உபதேசித்தான்.

17. என்றலும் இராவணன் எரியும் சிந்தையான்
'நின்றனை யேல்நினை யடுவன் ஈங்'கெனத்
தன்றுணை நால்வரும் தானும் வீடணன்
வென்றிகொள் இராகவன் சரண மேவினான்.

அங்ஙனம் தன்னை அடைக்கலமாக அடைந்த விபீஷணனுக்குச் சரணாகதியளித்து, அவன்மூலமாக இராவணன் சேனாபலம் முத

வியவைகளை அறிந்துகொண்ட பின்னர், அங்கதனை இராவணன் பால் தூதாக அனுப்பி, 'சீதாதேவியை விட்டால் நின் சிரம் தப்பும். இல்லையேல், என் சரத்துக் கிரையாவாய்' என்று தெரிவிக்கச் சொன்னான். இராவணன் அதற்குச் சம்மதிக்கவில்லை. உடனே இராமற்கும் இராவணற்கும் போர் தொடங்கியது.

18. ஆளி ஆயிரம் பூண்டதேர் அரக்கன்வந் தடர்த்தான்;
காளை மாருதி தோளின்மேல் இராமனும் கடந்தான்;
மூளும் வார்சிலை பத்துடன் முடிபத்தும் ஒழித்து
'நாளை வாபோர' என்றனன்; நகர்சென்று புக்கான்.

இராவணன் மகன் இந்திரஜித்தும், கும்பகன்னன் முதலிய சுற்றத்தாரும், சேனாபதிகளும் ஒருவர்பின் ஒருவராய்ப் போரில் மாண்டனர். அப்பால் இராவணனே நேரில் வந்தான். இராமன் அவன் மீது அம்பு விடுத்தான். ஆனால்,

19. கிளைத்தன சிரமும் தோளும்
கேடிலன் எய்ய எய்ய.
விளைத்ததோர் வரமுண் டென்ன
விரிஞ்சன்மாப் படையை விட்டான்;
உளைத்தவன் தலத்து வீழ்ந்தான்.
உடன்பிறப் பென்னும் அன்பால்
இளைத்துவந் தடியில் வீழ்ந்தான்
இராவணற் கிளைய காளை

அப்பால் இராமன் விபீஷணன் துக்கத்தை ஆற்றி, அவனைக்கொண்டு இராவணனுக்குக் கரும கிரியைகளைச் செய்வித்துப் பின்னர் அவனுக்கு இலங்கை அரசைக் கொடுத்து முடிசூட்டினான். பிறகு, ஜானகியை அசோகவனத்திலிருந்து வரவழைத்து, அவளோடும் இலக்குவன், அனுமன் முதலியவர்களோடும் இலங்கையை விட்டு நீங்கி அயோத்திநாடி வந்தனன்.

20. வரதனும் அநுமன்றன் வான்முறை ஏவலோடும்
பரதனை எரிபுகாமற் பண்ணினான் மீண்டகாலை
எரிமணி விமானத்தேறி யாவரும் இளையகோவும்
அரிமலர்க் குழலினாளும் இராமனு மயோத்திசேர்ந்தார்.

# 4

## வில்லிபுத்தூராழ்வார்

இயற்றிய

## பாரதம்

சிறப்புப்பாயிரம்:

[நூலாசிரியர் குமாரர் வரந்தருவார் செய்தது.]

1. பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்துசங்கத்
திருப்பிலே யிருந்து வைகை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்.

### கிருஷ்ணன் தூது

**பாண்டவர்கள் பன்னிரண்டு வருஷம் வனவாசமும் ஒரு வருஷம் அஞ்ஞாதவாசமும் முடித்தபிறகு, தாம் இழந்த நாட்டைத் துரியோதனனிடமிருந்து பெறுவதெப்படி என்று கிருஷ்ணனோடு ஆலோசித்தார்கள். அப்போது,**

2. 'அரவுயர்த்தோ னுடன்மறுகு தாடிநீர்
வென்ற அந்நாள், அவன்றான் சொன்ன
விரதமொழி தவிராமல் வெங்கானம்
போய்மீண்டீர்: வெய்யோன் உங்கள்
குருநிலத்திற் பாதியினிக் கொடாதிருந்தால்,
ஆங்கவனைக் கொன்று போரில்
இருநிலத்தை ஆளஇனித் துணிவதே
கடன்' என்றான் எம்பி ரானே.

**அதற்குத் தருமர்,**

3. 'குரவரையும், கிளைஞரையும், குலத்துரிய
துணைவரையும் கொன்று போர்வென்
றரவநெடுங் கடலாடை அவனியெலாம்
தனியாளும் அரசு தன்னில்,
கரவுறையும் மனத்தாதை முனிக்குரைத்த
மொழிப்படியே கானந் தோறும்
இரவுபகற் பலமூல சாகநுகர்ந்
துயிர்வாழ்தல் இனிது நன்றே'

**என்றார்.**

4\. கோதிலான் இந்தமொழி கூறுதலும்
மாமாயன் கூற லுற்றான்:
'மோதமருக் கிளைத்துநீர் மொய்த்தபெருங்
கானகத்தே முடுகிச் சென்றால்
பூதலத்தோர் ஏசாரோ? புகன்றபெரு
வஞ்சினமும் பொய்த்தி டாதோ?
நீதியோ?' எனஉரைத்தான். ஆங்கதற்கு
நிகழ்தருமன் நிகழ்த்த லுற்றான்:
5\. "முந்தூர்வெம் பணிக்கொடியோன் மூதூரில்
நடந்து'மூவர் முன்றில் தோறும்
நந்தூரும் புனனாட்டின் திறம்வேண்டு;
நாடொன்று நல்கா னாகில்,
ஐந்தூர்வேண்'; டவையிலெனில், ஐந்திலம்வேண்';
டவைமறுத்தால் அடுபோர் வேண்டு:
சிந்தூரத் திலகநுதற் சிந்துரத்தின்
மருப்பொசித்த செங்கண் மாலே!"

இதைக்கேட்ட வீமன் வெகுண்டு, தருமரை நோக்கி,

6\. 'விரிகுழற்பைந் தொடிநாணி வேத்தவையின்
முறையிடுநாள் வெகுளேல் என்று
மரபினுக்கும் நமக்குமுல குள்ளளவும்
தீராத வசையே கண்டாய்!
எரிதழற்கா னகமகன்றும் இன்னமும்வெம்
பகைமுடிக்க இளையா நின்றாய்! [தோய்!
அரவுயர்த்தோன் கொடுமையினும், முரசுயர்த்
உனதருளுக் கஞ்சி னேனே!
7\. 'கானாள உனைவிடுத்த கண்ணிலா
அருளிலிதன் காதன் மைந்தன்
தானாளும் தரணியெலாம், ஒருகுடைக்கீழ்
நீயாளத் தருவன் இன்றே.
மேனாள்நம் உரிமையறக் கவர்ந்தபெருந்
துணைவனுனை வெறாத வண்ணம்
வானாள வானவர்கோன் தன்பதமற்
றவன்தனக்கே வழங்கு வேனே!'

என்றான். அப்பொழுது தருமர் அவனுக்குச் சில சமாதான வார்த்தைகள் கூற, வீமன் பின்னும் வெகுண்டு,

8.'மலைகண்ட தெனவென்கைம் மறத்தண்டின்
வலிகண்டும், மகவான் மைந்தன்
சிலைகண்டும், இருவர்பொரும் திறல்கண்டும்
எமக்காகத் திருமால் நின்ற
நிலைகண்டும், இவள்விரித்த குழல்கண்டும்,
இமைப்பொழுதில் நேரார் தம்மைக்
கொலைகண்டு மகிழாமல் அவன்குடைக்கீழ்
உயிர்வாழக் குறிக்கின் றாயே.'

என்றான். அப்பால் கிருஷ்ணன் அவனுக்கு நீதிமொழிகள் கூறி அமைந்திருக்கச் சொன்னான்.

9. மைக்கால முகிலூர்தி வானவர்கோன்
திருமதலை வணங்கி நின்று
முக்காலங் களுமுணரும் முகுந்தனுக்கும்
முதல்வனுக்கும் மொழிவான் மன்னோ:
'அக்காலம் பொறுத்தவெலாம் அமையாமல்
இன்னமிருந் தறமே சொன்னால்,
எக்காலம் பகைமுடித்துத் திரௌபதியும்
குழன்முடிக்க இருக்கின் றாளே?

10. 'தீண்டாத கற்புடைய செழுந்திருவைத்
துகிலுரியச் செயலொன் றின்றி
"நீண்டானே! கரியானே! நிமலா!" என்
றாற்றினளாய் நின்று சோர,
மாண்டார்போல் அதுகண்டு மன்னவையில்
யாமிருந்த மாசு தீர
வேண்டாவோ? வேண்டுவது மேம்படுநல்
அறமேயோ? வேந்தர் வேந்தே!'

என்றான். கிருஷ்ணன் அவனையும் அமைந்திருக்கச் சொல்ல, நகுலன் எழுந்து கண்ணனையும் தருமரையும் வணங்கிச்சொல்கின்றான்:

11. 'கானெறிபோய்க் கரந்துறைந்து கடவநாள்
கழித்ததற்பின் கான நீங்கி,
ஈனமிலா வகைவந்தார் நந்துணைவர்
எனச்சிறிதும் இரங்கா னாகில்,
மாநகரும் வளநாடும் உரிமையுந்தன்
மொழிப்படியே வழங்கா னாகில்,

4\. கோதிலான் இந்தமொழி கூறுதலும்
மாமாயன் கூற லுற்றான்:
'மோதமருக் கிளைத்துநீர் மொய்த்தபெருங்
கானகத்தே முடுகிச் சென்றால்
பூதலத்தோர் ஏசாரோ? புகன்றபெரு
வஞ்சினமும் பொய்த்தி டாதோ?
நீதியோ?' எனஉரைத்தான். ஆங்கதற்கு
நிகழ்தருமன் நிகழ்த்த லுற்றான்:
5\. "முந்தூர்வெம் பணிக்கொடியோன் மூதூரில்
நடந்து'மூவர் முன்றில் தோறும்
நந்தூரும் புனனாட்டின் திறம்வேண்டு;
நாடொன்று நல்கா னாகில்,
ஐந்தூர்வேண்'; டவையிலெனில், ஐந்திலம்வேண்';
டவைமறுத்தால் அடுபோர் வேண்டு:
சிந்தூரத் திலகநுதற் சிந்துரத்தின்
மருப்பொசித்த செங்கண் மாலே!"

இதைக்கேட்ட வீமன் வெகுண்டு, தருமனை நோக்கி,

6\. 'விரிகுழற்பைந் தொடிநாணி வேத்தவையின்
முறையிடுநாள் வெகுளேல் என்று
மரபினுக்கும் நமக்குமுல குள்ளளவும்
தீராத வசையே கண்டாய்!
எரிதழற்கா னகமகன்றும் இன்னமும்வெம்
பகைமுடிக்க இளையா நின்றாய்! [தோய்!
அரவுயர்த்தோன் கொடுமையினும், முரசுயர்த்
உனதருளுக் கஞ்சி னேனே!
7\. 'கானாள உனைவிடுத்த கண்ணிலா
அருளிலிதன் காதன் மைந்தன்
தானாளும் தரணியெலாம், ஒருகுடைக்கீழ்
நீயாளத் தருவன் இன்றே.
மேனாள்நம் உரிமையறக் கவர்ந்தபெருந்
துணைவனுனை வெறாத வண்ணம்
வானாள வானவர்கோன் தன்பதமற்
றவன்தனக்கே வழங்கு வேனே!'

என்றான். அப்பொழுது தருமர் அவனுக்குச் சில சமாதான வார்த்தைகள் கூற, வீமன் பின்னும் வெகுண்டு,

8. 'மலைகண்ட தெனவென்கைம் மறத்தண்டின்
வலிகண்டும், மகவான் மைந்தன்
சிலைகண்டும், இருவர்பொரும் திறல்கண்டும்
எமக்காகத் திருமால் நின்ற
நிலைகண்டும், இவள்விரித்த குழல்கண்டும்,
இமைப்பொழுதில் நேரார் தம்மைக்
கொலைகண்டு மகிழாமல் அவன்குடைக்கீழ்
உயிர்வாழக் குறிக்கின் றாயே.'

என்றான். அப்பால் கிருஷ்ணன் அவனுக்கு நீதிமொழிகள் கூறி அமைந்திருக்கச் சொன்னான்.

9. மைக்கால முகிலூர்தி வானவர்கோன்
திருமதலை வணங்கி நின்று
முக்காலங் களுமுணரும் முகுந்தனுக்கும்
முதல்வனுக்கும் மொழிவான் மன்னோ:
'அக்காலம் பொறுத்தவெலாம் அமையாமல்
இன்னமிருந் தறமே சொன்னால்,
எக்காலம் பகைமுடித்துத் திரௌபதியும்
குழன்முடிக்க இருக்கின் றாளே?

10. 'தீண்டாத கற்புடைய செழுந்திருவைத்
துகிலுரியச் செயலொன் றின்றி
"நீண்டானே! கரியானே! நிமலா!" என்
றரற்றினளாய் நின்று சோர,
மாண்டார்போல் அதுகண்டு மன்னவையில்
யாமிருந்த மாசு தீர
வேண்டாவோ? வேண்டுவது மேம்படுநல்
அறமேயோ? வேந்தர் வேந்தே!'

என்றான். கிருஷ்ணன் அவனையும் அமைந்திருக்கச் சொல்ல, நகுலன் எழுந்து கண்ணனையும் தருமனையும் வணங்கிச்சொல்கின்றான்:

11. 'கானெறிபோய்க் கரந்துறைந்து கடவநாள்
கழித்ததற்பின் கான நீங்கி,
ஈனமிலா வகைவந்தார் நந்துணைவர்
எனச்சிறிதும் இரங்கா னாகில்,
மாநகரும் வளநாடும் உரிமையுந்தன்
மொழிப்படியே வழங்கா னாகில்,

தானறியா தவன்பிறர்போய்க் கற்பித்தால்
அறிவனோ தரணி வேந்தே!'

12. நகுலனிவை உரைத்ததற்பின் நன்றெனக்கை
அமைத்தருளி 'நகுலன் சொல்லும்,
இகல்விசயன் தன்மொழியும், திறல்வீமன்
இயம்பியதும், யாவும் கேட்டோம்:
புகலரிய உணர்வுடையோய்! புகழுடையோய்!
திறலுடையோய்! புகல்நீ' என்ன
முகிலனைய திருமேனி முகுந்தனுக்கு
மனமுருக மொழிகின் றனே.

சாதேவன் கண்ணனை நோக்கிக் கூறுகிறான்:

13. 'சிந்தித்த படிநீயும் சென்றாலென்,
ஒழிந்தாலென்? செறிந்த நூறு
மைந்தர்க்குண் முதல்வனிலம் வழங்காமல்
இருந்தாலென், வழங்கி னாலென்?
கொந்துற்ற குழல் இவளும் முடித்தாலென்,
விரித்தாலென்? குறித்த செய்கை
அந்தத்தின் முடியும்வகை அடியேற்குத்
தெரியுமோ? ஆதி மூர்த்தி!

14. 'முருகவிழ்க்கும் பசுந்துளப முடியோனே!
அன்றலகை தன்பா லுண்டு,
மருதிடைச்சென் றுயர்சகடம் விழ உதைத்துப்
பொதுவர்மனை வளர்ந்த மாலே!
ஒருவருக்கும் தெரியாதிங் குன்மாயை
யானறிவேன் உண்மை யாகத்
திருவுளத்துக் கருத்தெதுவோ, அதுஎனக்கும்
கருத்தென்றான் தெய்வ மன்னன்.

15. இவ்வண்ணம் சாதேவன் இயம்புதலும்
நகைத்தருளி, இகலோர் சொன்ன
அவ்வண்ணம் புகலாமல் விரகுரைத்தான்
இவன் என்ன அவனோ டாங்கோர்
பைவண்ண மணிக்கூடந் தனிலெய்திப்
'பாரதப்போர் பயிலா வண்ணம்
உய்வண்ணம் சொல்லுகநீ உபாயம்'எனத்
தொழுதுரைப்பான் உரங்கொள் வேலான்.

16. 'நீபா ரதவமரில் யாவரையும் நீருக்கிப்
பூபாரம் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணு!
கோபாலா! போரேறே! கோவிந்தா! நீயன்றி
மாபா ரதமகற்ற மற்றூர்கொல் வல்லாரே?

17. 'பாராளக்கன்னன்; இகற்பார்த்தனே முன்கொன்றணங்கின்
காரார்குழல் களைந்து, காலிற் றளைபூட்டி,
நேராகக்கைப்பிடித்துநின்னையும்யான்கட்டுவனேல்,
வாராமற் காக்கலாம் மாபாரதம்' என்றான்.

18. முன்னம்நீ கூறியவை எல்லாம் முடித்தாலும்,
என்னைநீ கட்டுமா றெவ்வா' றெனமாயன்,
'உன்னைநீ தானும் உணராதாய்! உன்வடிவம்
தன்னைநீ காட்டத் தளைந்திடுவன் யான்'என்றான்

சகாதேவன்.

19. மாயவனும் அன்பன் மனமறிவான் 'கட்டுக'என்
றூயவடிவு பதினு றூயிரம் கொண்டான்.
தூயவனும் மூலமாம் தோற்றமுணர்ந் தெவ்வுலகும்
தாய அடியிணைகள் தன்கருத்தி னுற்பிணித்தான்.

உடனே, கண்ணன் சகாதேவனை நோக்கி,

20. 'அன்பாலின் றென்னை அறிந்தே பிணித்தமைநன்
றென்பாதந் தன்னை இனிவிடுக' என்றுரைப்ப,
'வன்பா ரதப்போரில் வந்தடைந்தோம் ஐவரையும்
நின்பார்வை யாற்காக்க வேண்டும், நெடுமாலே!'

21. என்றென் றிறைஞ்சி இருதா மரைத்தாளில்
ஒன்றும் கதிர்முடியாற் கோமென் றுரைத்தருளி,
'இன்றிங் கிருவேமும் இப்போ துரைத்தமொழி
ஒன்றும் பிறரறிய ஓதா தொழி'கென்றான்.

அப்பால் இருவரும் சபைக்குச் சென்றனர். அங்கே சகாதேவன் திரௌபதியை நோக்கி, 'கௌரவருடன் போர்புரியாமல் சமாதானத்தோடு வாழ்தலே நல்லது' என்றான். கிருஷ்ணன் 'தருமனுக்கும் அதுதான் கருத்து; எனக்கும் அதுதான் கருத்து' என்றான். அப்பொழுது திரௌபதி கண்ணன் அடிமீது புலம்பி விழுந்து,

22. 'கற்றைக்குழல்பிடித்துக்கண்ணிலான்பெற்றெடுத்தோன்,
பற்றித் துகிலுரியப் பாண்டவரும் பார்த்திருந்தார்.
கொற்றத் தனித்திகிரிக் கோவிந்தா! நீயன்றி,
அற்றைக்கும் என்மானம் ஆர்வேறு காத்தாரே!

23. 'மன்றில் அழைத்தெனக்குமா சளித்தமன்னவன்பால்
சென்றுதமக் கைந்தூர் திறல்வீரர் பெற்றிருந்தால்,
அன்று விரித்த அருங்கூந்தல் வல்வினையேன்
என்று முடிப்பதினி? எம்பெருமான்!' என்றழுதாள்.

அப்போது, கிருஷ்ணன் தம்பியாகிய சாத்தகி,

24. 'தண்டிருந்த திவன்கரத்தில், தனுவிருந்த தவன்கரத்தில்;
வண்டிருந்த பூங்குழன்மேல்மா சிருந்ததெனஇருந்தாள்.
கண்டிருந்தீர் எல்லீரும்; கருதலர்பால் ஊர்வேண்டி
உண்டிருந்து வாழ்வதற்கே உரைக்கின்றீர் உரையீரே!'

என்றான். அதுகேட்ட கண்ணன் திரௌபதியை நோக்கி,

25. 'தொல்லாண்மைப்பாண்டவர்க்குத் தூதுபோய்மீண்டதற்பின்
நல்லாய்! உன் பைங்கூந்தல் நானே முடிக்கின்றேன்.
எல்லாருங் காண இனிவிரிப்ப தெண்ணரிய
புல்லார்தம் அந்தப் புரமாதர் பூங்குழலே!'

என்று ஆறுதல் கூறினன். அப்பால் தருமர்,

26. 'துன்று பிணியோர், துறந்தோர், அடங்காதோர்,
கன்று சினமனத்தோர், கல்லா தவர், இளையோர்,
ஒன்றும் முறைமை உணரா தவர், மகளிர்:
என்றும்இவர் மந்தணத்தின் எய்தப் பெறுதாரே:

என்று கூறிவிட்டுக் கண்ணனைத் துரியோதனன்பால் தூதுபோய் வரும்படி வேண்டினார். கண்ணன் அதற் கிசைந்து அஸ்தினபுரிக்குச் சென்றான்.

---

# 5

## தேவராஜபிள்ளை
இயற்றிய
## குசேலோபாக்கியானம்

உத்தரமதுரைக்கருகிலுள்ள அவந்தி என்னும் அழகிய நகரில் அந்தணர் குலத்தில் தோன்றி, சுதாமா என்னும் இயற்பெயர்பூண்ட குசேலமுனிவர் என்பார் ஒருவர் இருந்தனர். அம்முனிவர் பெருமான்,

1. அடக்கமும் பொறையும் கருணையும் நண்பும்
அழுக்கறுத் திலாமையும் என்றும்
விடற்கருந் தவத்தோ டொருங்குற வளர்ப்போன்;
வெகுளியும் காமமும் மயக்கும்

கடக்கரும் தீமை நாடொறும் விளைக்கும்
கயவர்கள் தொடர்ச்சியும் தன்னைத்
தொடற்கரி தாக வடியறக் காய்ந்தோன்;
தூயர்க்கும் தூயவன் மாதோ.

இனிக் கிழிய இடமின்றிக் கிழிந்த கந்தையை மெல்லிழைச் சாட்டால் தைத்து, அதையே நல்லுடையாகப் புனைந்திருந்தனராதலின் அவரை யாவரும் குசேலர் என்று பெயரிட்டழைத்தனர். அம் முனிவர் மனைவி,

2\. மாசிலாக் குலத்து வந்தாள்;
வருவிருந் துவப்ப ஊட்டும்
நேசம்மிக் குடையாள்; கொண்கன்
நினைப்பறிந் தொழுகு நீராள்;
தேசுறு வாய்மை யுள்ளாள்;
சினந்திடல் என்று மில்லாள்;
பேசுதிண் கற்பு வாய்ந்தாள்;
பெற்றதே கொண்டு வப்பாள்.

தரித்திரத்தில் தமக்கு நிகரில்லாத இவ்வருங்குணச் செல்வச் சதிபதிகட்கு நட்சத்திரங்கள்போல் இருபத்தேழு குழந்தைகள் பிறந்திருந்தன. முனிவரர் என்செய்வார் பாவம்! சிறுவர்கட்கு உணவு வேண்டும். சீலமோ சிறிதும் தவறக்கூடாது. இரந்துபொருள்தேடி இளைஞர்களை ஊட்டி வளர்க்க அவர் மனம் இசையவில்லை; அவர்

3\. பல்லெலாம் தெரியக் காட்டிப்
பருவரன் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாம் சொல்லி நாட்டித்
துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலாம் அகல ஓட்டி
மானமென் பதனை வீட்டி
இல்லெலாம் இரத்தல்—அந்தோ!—
இழிவிழி வெந்த ஞான்றும்.

என்ற சிறந்த கொள்கையை உடையவர். ஆனால் குழந்தைகளுக்கென்ன தெரியும்! பாவம்! தாயைப் படாத பாடும் படுத்தின. அவள், உணவெடுத்து,

4\. ஒருமகவுக் களித்திடும்போ தொருமகவு
கைநீட்டும்; உந்தி மேல்வீழ்ந்
திருமகவும் கைநீட்டும்; மும்மகவும்
கைநீட்டும்; என்செய் வாளால்!

பொருமியொரு மகவழும்;கண் பிசைந்தழுமற்
றொருமகவு; புரண்டு வீழாப்
பெருநிலத்திற் கிடந்தழுமற் றொருமகவெவ்
வனஞ்சகிப்பாள்! பெரிதும் பாவம்!

5.'குண்டலமோ திரம்கடகம் சுட்டி,அயன்
மனையார்தம் குழவிக் கிட்டார்;
புண்டரீகக் கண்அன்னாய்! எனக்குநீ
இடாதிருக்கும் பொறுமை என்னே!
கண்டெடுத்திப் போதி'டெனக் கரைமதலைக்
கில்லாதான் கடன்தந் தானுக்
கெண்டபச்சொல் வார்த்தையென 'நாளைக்கு
நாளைக்'கென் றியம்பிச் சோர்வாள்.

எத்தனை நாளைக்கு இத்தரித்திரக் கொடுமையைப் பொறுத்துக் கொண் டிருக்கக் கூடும்? ஒருநாள் அக் கற்பரசி தன் பர்த்தாவின் பாதகமலங்களைத் தொழுதெழுந்து மிகவும் பணிவுடன், 'மூக் குறும் பெறிந்த முனிவா!

6. 'தரித்திரம் மிக்க வனப்பினை ஒடுக்கிச்
சரீரத்தை உலர்தர வாட்டும்;
தரித்திரம் அளவாச் சோம்பலை எழுப்பும்;
சாற்றரும் உலோபத்தை மிகுக்கும்;
தரித்திரம் தலைவன் தலைவியர்க் கிடையே
தடுப்பரும் கலாம்பல விளைக்கும்;
தரித்திரம் அவமா னம்பொய்பே ராசை
தரும்:இதிற் கொடியதொன் றிலையே.

'என்று தங்களையொத்த பெரியோர் சொல்கிறார்களன்றோ? அக் கொடிய வறுமைப்பிணியை நாம் ஒழிக்கவேண்டும்.

7.'யாதவர் குலத்திற் றோன்றிய அரசர்
யாவர்க்கும் அதிபனும் இணையில்
மாதவ னுடன்நீ பலகலைக் கடலை
வாய்மடுத் தனையென வகுப்பார்.
ஆதலின் அப்பீ தாம்பரன் மருங்கில்
அணைந்தவன் பாற்பெரும் செல்வம்
தீதறக் கொண்டு கொடுத்துநம் சிறுவர்
செல்லல்நோய் தவிர்க்குதல் வேண்டும்'

என்றாள். அதற்குக் குசேலர், 'பேதாய்! மக்களுக்கிரங்கிச் செல்வத்துக் கேங்கி வாடுகின்றாய்! செல்வமும் தரித்திரமும் தாந்தாம் முற்பவத்திற் செய்த வினைப்படி வந்து சேரும். அப்படி வரும் இரண்டில் செல்வம்மட்டும் என்ன, சிறந்ததா ?

8. 'சிறியரே மதிக்கு மிந்தச் செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி வாயுள்ளார் மூக ராவர்;
பறியணி செவியு ளாரும் பயிறரு செவிட ராவர்;
குறிபெறு கண்ணு ளாரும் குருடராய் முடிவரன்றே!

9. 'பல்கதிர் விரித்துத் தோன்றிப் பாடுசெய் கதிரே போல
மல்லனீர் உலகிற் றோன்றி மறைந்திடும் நும்மைவிட்டுச்
செல்வமென் றுறுவதற்குஞ்செல்வமென் றுரைக்கும்பேர்நன்
றல்லவே வினைப்பதாகா தரும்பெறற்செல்வம்பாவாய்.

'மேலும், இந்த நிலையற்ற செல்வத்தை நீ விரும்புவது எதற்காக? நம் மைந்தரைப் பாதுகாப்பதற்காக என்கிறாய். அந்தோ! வினை வழியே பிறந்து பிறந்து மாளும் உயிர்களை நம் மக்கள் நம் மைந்தர் என உரிமை பாராட்டி உளமகிழ்வது என்ன அறியாமை!

10. 'முன்னமெத் தனைபேர் மைந்தர்
முறைமைபா ராட்டி னாரோ?
இன்னமெத் தனைபேர் மைந்தர்
முறைகொள இருக்கின் றாரோ?
அன்னமைந் தரைத்தம் மைந்தர்
எனல்அறி யாமை யாகும்.
மென்னடைக் கரிய வாட்கண்
விரைக்கருந் தாழ்கு ழாலே!

'அன்றியும்,

11. 'மதலையைப் பெறுநாள் துன்பம்;
வளர்த்திடு நாளும் துன்பம்;
விதலைநோய் அடையில் துன்பம்;
வியன்பரு வத்தும் துன்பம்;
கதமுறு காலர் வந்து
கைப்பற்றில் கணக்கில் துன்பம்;
இதமுறல் எந்நாள் சேயால் ?
எற்றைக்கும் துன்ப மாகும்!

'மேலும்,

12\. 'அத்தகு மைந்தர் ஆர்?' நீ
யார்? இஃ துரைக்கும் நாளுர்?
இத்தரை யிடைக்காப் பற்றற்
கியான்திரு நெடுமா லல்லன்.
கொத்துறு மைந்த ராசைக்
கோட்பட்டு வருந்து கின்றாய்.
பித்துளார் செய்கை யீது.
பெரியர்இம் மயக்கம் பூணர்!

''தரித்திரம்' 'தரித்திரம்' என்று பலகாற் சொல்கிறாய்! செல்வத்தைப்போல அதுவும் நிலையற்றதுதான். 'தரித்து இரோம்' என்று அம் மொழியே சொல்கிறதே. நிலையில்லாத இத் தரித்திரமும் செல்வமும் தம் இஷ்டம்போல் வந்துபோகட்டுமே! இதற்காக மனம் கலங்கி, எம்பிரான் முன்சென்று தரித்திரத் துன்பத்தை ஒழித்துவிட்டுச் செல்வத் துன்பத்தைக் கொடு' என்று கேட்பது அறிவுடைமையா?

13\. 'பாற்கட லடுத்த மீன்அப் பால்விரும் பாது மற்ற [து
வற்குமா விரும் பிறுற்போல் எம்பிரான் திருமுன்சார்ந்
நாற்கதி கடக்கும் இன்பச் செல்வத்தை நண்ணிடாமல்
சேற்கருங்கண்ணாய்! துன்பச்செல்வமோ நண்ணுவேன்யான்

14\. 'நன்றியில்உடலைப்போற்றல்நன்றுளார்செய்கையன்று;
வன்றிகள் மலத்தழுந்தி மாசுகம் என்றாற்போல,[யான்,
ஒன்றும்இக் குடும்பச்சேற்றில் உழன்றிடேன் உழன்றிடேன்
என்றுரைத் திருத்தான்பற்றில் இருந்தவ ரேறுபோல்வான்.

அப்பொழுது அவர் மனையாள், முனிவர் உரைத்தன முற்றும் உண்மையென உணர்ந்தாளாயினும், மக்கள்பால் வைத்த ஆசை மயக்கமுறுதவளாய் அந்தணரை அடிபணிந்து,'கலைமுழுதோர்ந்து களிசெலாம் அறுத்த காந்தா! தெய்வம் காட்டுமேயொழிய ஊட்டுமா?

15\. 'செயத்தகு முயற்சி செய்திடில், செயிர்தீர்
செய்யவள் மணாளனும் இரங்கி
வியத்தக வேண்டும் யாவையும் அளிப்பன்;
விளம்புறு முயற்சிசெய் யானேல்,
நயத்தகு போகம் அளித்திடான் என்று
நாணிலத் தறிஞர்நன் குரைப்பர்.
உயத்தகு நெறிமா லடிஉன லென்றே
ஓர்ந்தமா தவப்பெருங் கடலே!

'தங்களையன்றி எனக்கு வேறு யார் புகல்? என்னையும் யான்பெற்ற மதலைகளையும் காத்தல் தங்கள் கடன். பலசொல்லி என்னே?

16. 'மடமையேன் தனக்குக் கடவுளும் நீயே!
வருக்கரும் இறைவனும் நீயே!
அடலுறு தானம் தவமுதல் யாவும்
ஆற்றுநின் பணிவிடை யன்றோ?
மடலவிழ் துளப மாலிகை புனைந்த
வாசுதே வன்பத மலரைத்
திடமுற நெஞ்சத் துன்னிவல் வினையைச்
சிதர்தரச் செகுத்தமா மறையோய்!'

என்றாள். இப் பணிமொழிகளைக் கேட்டபின் மறையவனும் மனமிளகி, 'நல்லது, நங்காய், உனக்காக நான் கண்ணனைச் சென்று கண்டு வருகிறேன். ஆனால்,

17. 'தெய்வம், குரவன், அரசன்திரு முன்னர்ச் செல்வோர்
மெய்வந்த அன்னோர் அருள்வேண்டி விரும்பு தேனும்
கைவந்த பெற்றுச் செலீஇக் காண்குவர் கண்ணன் முன்பு
மைவந்த கண்ணாய்! இனிதென்கொடு வல்லை செல்வல்?'

என்றனர். அதுகேட்ட அவர் மனைவி 'தாங்கள் கூறுவது நியாயமே' சின்னாளில் நான் கண்ணனுக்குக் 'கையுறையாகத் தின்பண்டம் ஏதேனும் செய்து தருகிறேன். கொண்டு செல்லுங்கள்' என்று கூறி, அன்றுமுதல் உபவாசமிருந்து தான் உண்ணும் பகுதியளவு நெல்லைச் சேர்த்துவைத்துப் போதுமான அளவு சேர்ந்த பின், அதனை நீரில் நனைத்து வறுத்தெடுத்து,

18. கறையிட்டு நனிகாண உலக்கைகொடு
மிக்கிடித்துக் கரிசு போக்கி
நிறையிட்ட அவலாக்கிக் குசேலமுனி
கந்தையினில் நேடி யோர்பான்
மறையிட்ட ஒழுங்குடையாள் முடிந்துகொடுத்
தினிதுபோய் வருக என்றாள்.
சிறையிட்ட பவநீங்கும் வழிகண்டோன்
வழிதேடிச் செல்ல லுற்றான்.

# 6

## நீதிச் செய்யுள்கள்

(பதுமனுர் அடைவுபடுத்திய நாலடியார்)

1. குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு.

(விளம்பிநாகனுர் இயற்றிய நான்மணிக்கடிகை)

2. கள்ளாமை வேண்டும் கடிய வருதலால்;
தள்ளாமை வேண்டும் தகுதி உடையன;
நள்ளாமை வேண்டும் சிறியாரோ(டு); யார்மாட்டும்
கொள்ளாமை வேண்டும் பகை.

(பூதஞ்சேந்தனுர் இயற்றிய இனியநாற்பது)

3. மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே;
தானம் அழியாமை தானடங்கி வாழ்வினிதே;
ஊனம் ஒன்றின்றி உயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லாம் இனிது.

(கபிலர் இயற்றிய இன்னுநாற்பது)

4. பொருள்உணர்வார் இல்வழிப் பாட்டுரைத்தல் இன்னு
இருள்கூர் சிறுநெறி தாந்தனிப்போக் கின்னு!
அருள்இல்லார் தஙகட் செலவின்னு; இன்னு
பொருள்இல்லார் வண்மை புரிவு.

(நல்லாதனுர் இயற்றிய திரிகடுகம்)

தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்;
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணுதான்;
கோளாளன் என்பான் மறவாதான்: இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது.

(பெருவாயின் முள்ளியார் இயற்றிய ஆசாரக்கோவை)

6. நன்றி யறிதல், பொறையுடைமை, இன்சொலோ(டு)
இன்னாத ஏவ்வுயிர்க்கும் செய்யாமை, கல்வியோ(டு)
ஒப்புர(வு) ஆற்ற அறிதல், அறிவுடைமை,
நல்லினத் தாரோடு நட்டல் இவை எட்டும்
சொல்லிய ஆசார வித்து.

(முன்றுறையரையர் இயற்றிய பழமொழி)

7. எமக்குத் துணையாவார் வேண்டுமென் றெண்ணித்
தமக்குத் துணையாவார்த் தாந்தெரிதல் வேண்டா.
பிறர்க்குப் பிறர்செய்வ துண்டோமற் றில்லை
தமக்கு மருத்துவர் தாம்.

(காரியாசான் இயற்றிய சிறுபஞ்சமூலம்)

8. நாணிலான சால்பும், நடையிலான் நல்நோன்பும்,
ஊணிலான் செய்யும் உதாரதையும்,—ஏணிலான்
சேவகமும், செந்தமிழ் தேற்றான் கவிசெயலும்
நாவகமே நாடின் நகை.

(கூடலூர்கிழார் இயற்றிய முதுமொழிக்காஞ்சி)

9. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
மக்கட் பேற்றிற் பெரும்பே றில்லை.
ஒப்புர வறிதலிற் றகுவர வில்லை.
வாய்ப்புடை வழக்கின் நல்வழக் கில்லை
வாயா வழக்கிற் றீவழக் கில்லை.
இயைவது கரத்தலிற் கொடுமை யில்லை
உரையில னாதலிற் சாக்கா டில்லை.
நசையிற் பெரியதோர் நல்குர வில்லை
இசையிற் பெரியதோர் எச்ச மில்லை.
இரத்தலி னூஉங் கிளிவர வில்லை.
இரப்போர்க் கீதலின் எய்துஞ் சிறப்பில்லை.

(கணிமேதாவியார் இயற்றிய ஏலாதி)

10. கொல்லான்,கொலைபுரியான்,பொய்யான்,பிறர்பொருண்மே
செல்லான், சிறியார் இனஞ்சேரான்,—பல்லார்
மறையிற் செவியிலன், தீச்சொற்கண் மூங்கை
இறையிற் பெரியார்க் கிறை.

(சிவஞானமுனிவர் இயற்றிய சோமேச வெண்பா)

11. செவ்வேளைப் பாலனென எள்ளித் திறலழிந்தான்
துவ்வாத வெஞ்சூரன் சோமேசா—அவ்வா(று)
உருவுகண்(டு) எள்ளாமை வேண்டும்; உருள்பெருந்தேர்க்(கு)
அச்சாணி அன்னார் உடைத்து.

(சாந்தகவிராயர் இயற்றிய இரங்கேச வெண்பா)

12. வஞ்சப் புறவினுடன் வான்றுலையில் ஏறினன்
இன்சொற் சிவிமுன் இரங்கேசா—எஞ்சாமல்
மன்னுயி ரோம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

(இராமபாரதி இயற்றிய ஆத்திசூடி வெண்பா)

13. தருமனுயர் வேள்வி தனிற்சிசுபா லன்பார்த்
தரியைநிந்தை சொல்லி அழிந்தான்—தெரிவதன்றோ
பார்புகழும் புன்னைவனப் பார்த்திபா! மேலோரைச்
சீர்மைதப்பி வெட்டெனப்பே சேல்.

(முனைப்பாடியார் இயற்றிய அறநெறிச்சாரம்)

14. காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகும் உவப்பதன்கண்
குற்றமுந் தோன்றாக் கெடும்.

(வேதநாயகம்பிள்ளை இயற்றிய நீதிநூல்)

15. முன்னமோர் பொய்யுரைக்க, அப்பொய்வெளி
ஆகாமல் மூடும் வண்ணம்
பின்னுமோர் பொய்யுரைக்க, அதையும்நிலை
நிறுத்திடவோர் பெரும்பொய் சொல்ல
இன்னவகை கைதவம்ஒன் றிருநூறு
கைதவத்துக் கிடமாம். வாய்மை
தன்னையே முன்பகரில், சங்கடம்ஒன்
றிலைஅதுவே தகைமை நெஞ்சே.

# 7

## கபிலர் அகவல்

உலகத் தீரே! உலகத் தீரே!
நாக்கடிப் பாக வாய்ப்பறை யறைந்து
சாற்றக் கேண்மின்! சாற்றக் கேண்மின்!
மனிதர்க்கு வயது நூறல்ல தில்லை:
ஐம்ப திரவில் அகலும் துயிலினால்;
ஒட்டிய இளமையால் ஒரைந்து நீங்கும்;
ஆக்கை இளமையில் ஐம்மூன்று நீங்கும்;
எழுபது போகநீக் கிருப்பன முப்பதே.
அவற்றுள்,
இன்புறு நாளுஞ் சிலவே; அதாஅன்று,
துன்புறு நாளுஞ் சிலவே: ஆதலால்,
பெருக்கா றொத்தது செல்வம்; பெருக்காற்
றிடிகரை யொத்த திளமை; இடிகரை
வாழ்மரம் ஒத்தது வாழ்நாள்; ஆதலால்,
ஒன்றே செய்யவும் வேண்டும்; ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும்; நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும்; இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்; இன்னும்
நாளை நாளை என்பீ ராகில்
நமனுடை முறைநாள் ஆவதும் அறியீர்,
நம்முடை முறைநாள் ஆவதும் அறியீர்.
எப்போ தாயினும் கூற்றுவன் வருவான்
அப்போ தந்தக் கூற்றுவன் தன்னைப்
போற்றவும் போகான்; பொருளொடும் போகான்;
சாற்றவும் போகான்; தமரொடும் போகான்;
நல்லார் என்னான்; நல்குர வறியான்;
தீயார் என்னான்; செல்வரென் றுன்னான்;
தரியான் ஒருகணம்; தறுக ணாளன்;
உயிர்கொடு போவான்; உடல்கொடு போகான்:
ஏதுக் கழுவீர் ஏழை மாந்தர்காள்!

உயிரினை இழந்தோ? உடலினை இழந்தோ?
'உயிரிழந் தழுதும்' என்றோதுவீ ராகில்
உயிரினை அன்றலா நின்றுங் காண்கிலீர்
உயிரினை இழந்த உடலது தன்னைக்
களவு கொண்ட கள்வனைப் போலக்
காலு மார்த்துக் கையு மார்த்துக்
கூறை களைந்து கோவணங் கொளுவி
ஈமத் தீயை எரியெழ மூட்டிப்
பொடிபடச் சுட்டுப் புனலிடை மூழ்கிப்
போய்த்தம ரோடும் புந்திநைந் தழுவது
சலமெனப் படுமோ? சதுரெனப் படுமோ?
மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ?
காற்றுஞ் சிலரை நீக்கி வீசுமோ?
மாநிலஞ் சுமக்க மாட்டேன் என்னுமோ?
கதிரோன் சிலரைக் காயேன் என்னுமோ?
வாழ்நான்கு சாதிக் குணவு நாட்டிலும்
கீழ்நான்கு சாதிக் குணவு காட்டிலுமோ?
திருவும் வறுமையுஞ் செய்தவப் பேறும்
சாவதும் வேறிலை தாரணி யோர்க்கே.
குலமும் ஒன்றே, குடியும் ஒன்றே.
இறப்பும் ஒன்றே, பிறப்பும் ஒன்றே,
வழிபடு தெய்வமும் ஒன்றே: ஆதலால்,
முன்னோர் உரைத்த மொழிதவ றாமல்
எந்நா ளாயினும் இரப்பவர்க் கிட்டுப்
புலையும் கொலையும் களவும் தவிர்ந்து
நிலைபெற அறத்தின் நிற்பதை அறிந்து
ஆணும் பெண்ணும் அல்லதை உணர்ந்து
பேணி யுரைப்பது பிழையெனப் படாது:
சிறப்புஞ் சீலமும் அல்லது
பிறப்பு நலந்தருமோ பேதை யீரே!

# 8

## புலவர் வறுமை

(இராமச்சந்திர கவிராயர் இயற்றியவை)

1. கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித்தானா?
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான்
கொடுத்துத்தான் இரட்சித்தானா?
அல்லைத்தான் சொல்லித்தான் ஆரைத்தான்
நோவத்தான்! ஐயோ எங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்
புவியிற்றான் பண்ணினானே.

2. வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற் புண்ணும்,
வாசல்தொறும் முட்டுண்ட தலையிற் புண்ணும்,
செஞ்சொல்லை நினைந்துருகும் நெஞ்சிற் புண்ணும்,
தீரும்என்றே சங்கரன்பால் சேர்ந்தேன் அப்பா!
கொஞ்சமல்ல; பிரம்படியின் புண்ணும், வேடன்
கொடுங்காலால் உதைத்தபுண்ணும்,கோப மாகப்
பஞ்சவரில் ஒருவன்வில்லால் அடித்த புண்ணும்,
பார்என்றே காட்டி நின்றான் பரமன் தானே!

(தனிப்பாடல்.)

3. எண்ணான்கு முப்பத் திரண்டுபல் காட்டி, இசையுடனே
பண்ணாகச்செந்தமிழ்பாடிவந்தாலும்இப்பாரில்உள்ளோர்
அண்ணாந்து கேட்பர்; அழகழ கென்பர்; அதன்பிறகு
சுண்ணாம்புபட்ட இலையும்கொடார்,கவிசொன்னவர்க்கே!

(பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் இயற்றியது)

4. ஒருபாதி மால்கொளமற்றொருபாதி உமையவள்கொண்(டு)
இருபாதியாலும் இறந்தான்புராரி; இருநதியோ
பெருவாரிதியில்; பிறைவானில்; சர்ப்பம் பிலத்தில்; கற்ப
தருவானபோஜ!கொடைஉன்கை,ஒ(டு)என்கைதந்தனனே!

(சத்திமுத்தப் புலவர் இயற்றியது)

5. நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயுநின் மனைவியும் தென்றிசைக் குமரியாடி

வடதிசைக் கேகுவீ ராயின்
எம்மூர் சத்திமுத்த வாவியுட் டங்கி
நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டே
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே.

## இந்திய மாதா

(பி. வி. இராமசாமி இராஜு இயற்றியது)

சீர்பெறும் இமயச் சிலைவட பாலாய்ப்
பேர்பெறும் விந்தியப் பெருமலை யோடு
கங்கை யமுனை நர்மதா சனமும்
பொங்கு மகாநதி புனிதநர் மதையும்
உஷ்ண தேசங்களில் ஊக்கம்உண் டாக்கும்
கிஷ்ணை கோதாவரி கீர்த்திகா விரியும்
காடுகள் வெளிகளும் கானல் ஓடைகளும்
நீடூழி காலம் நிற்கும்நற் பதிகளும்
செல்வப் பெருக்கும் செகம்புகழ் மாட்சியும்
கல்விக் கடலின் கரையறி நுண்மையும்
மக்கள் ஒழுக்கமும் மாதர்தம் அழகும்
தக்கநற் றந்தைதாய் தம்மவர் வாஞ்சையும்
கற்புடைப் பெண்டிர்தங் கணவர்கள் புகட்டும்
சொற்படி நடக்கும் தூய்மையோ(டு), இன்னும்
நற்புவி யுள்ளோர் நாடுநன் மைகள்எல்லாம்
அற்புத மாய்ப்பெறும் ஆரணங் கொருத்தி
ஆசிய கண்டத் தகன்றதென் திசையை
நேசித் திருப்பவள்; நித்திலங் கொழிக்கும்
புகழிலங் கையெனும் புத்திரியைப் பெற்றவள்;
இகபரம் இரண்டினுக் கினியன உடையவள்;

[1] ரோமக ஸீஜர்கள் [2] ருஷிய ஜாருகள்
காமுறு க்ரீக்குநற் காவலர் முதலாய்
ஏற்கும் புகழோ(டு) இனிதர சாண்ட
மேற்குத் திசையினர் மெச்சும்இச் செல்வியை
ஆதி காலத்தில் [3]அலெக்ஜாண்ட ரென்னும்
பாதகன் பிடித்துப் பாடு படுத்தினன்.
அவன்சென் றபின்னர், ஐயகோ! துருக்கர்
நவமணிக் கிசைந்தஇந் நடுநா யகத்தைப்
பற்றி யிழுத்துப் பதராய் அடித்துச்
சற்றும் இரக்கமும் சாந்தமும் இன்றி
அவளது மைந்தரின் அருமை குலைத்துத்
தவத்துடன் அவள்தரு தையல ரான
அங்கனா மணிகளை அருளின்றி மான
பங்கப் படுத்தியும் பலவாறு தூற்றிக்
கூரையிற் கொள்ளியாய்க் குலத்துக் கீனமாய்
ஊரைக் கொளுத்தி ஒழித்தனர் அன்றோ!
இப்படி நொந்தும் இகல்சிந்திப் பின்னர்
எப்படிப் பிழைப்போம் என்றுந் திகைத்துச்
சுற்றும் புறமும்அத் தோகையும் பார்க்க
நற்றிறம் படைத்தும் நற்குணம் பலவாய்ப்
பூண்டதன் பின்னர் புவியினுட் பலநிலம்
ஆண்டிட எண்ணி அருமைக் கலங்களில்
திரைகடல் கடந்துநற் றேசம் பலவெலாம்
விரைவினிற் கண்டோர், மேலோர்க் கினிய
மாது சிரோமணி மதிமயக் குடனே
ஆதர வன்றி அலைவதைக் கண்டு
கிட்ட நெருங்கிக் கிருபையுடன் அவளை
மட்டிலாத் துக்கமாம் மறிகடல் அதனின்
கரைமீதில் ஏற்றிக் கண்ணீர் துடைத்துத்
தெரிவைநீ இனிமேல் தெளிவுறு வாயென
அதுமுத லாகவே அச்சமற் றென்றும்
இதமுறு கருத்தே இயற்கையா யுள்ள
அன்னவர் தமக்குள் அறநெறிப் பெருக்கின்
இன்னல்தீர் மடைதனை இனிதுடன் திறந்த

[1] Roman Cæsars. [2] Russian Czars. [3] Alexander

55 புண்ணிய வசத்தினால் பொருளுயி ராதீஇ
எண்ணுஞ் சுதந்திர இன்பம் அனைத்தும்
தனதியல் பாகவே தகைமையோ டிப்போ(து)
அனுப விக்கின்றாள் அணியார் அணங்கே.

---

# 10

## அருஞ்செய்யுள் திரட்டு

(அகத்தியர் இயற்றிய போகத்தியம்)

1. இலக்கிய மின்றி இலக்கணம் இன்றே;
எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே;
எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல,
இலக்கி யத்தினின் றெடுபடும் இலக்கணம்.

(அதிவீரராமபாண்டியன் இயற்றிய நைடதம்)

2. அடைந்த மக்களைக் காண்டலும் அழுவிடு மெழுகின்
உடைந்த துள்ளநீர் ஊற்றிருந் தொழுகின நெடுங்கண்.
தொடர்ந்த மும்மல முருக்கிவெம் பவக்கடல் தொலையக்
கடந்து ளோர்களுங் கடப்பரோ மக்கண்மேற் காதல்.

(அந்தகக்கவி வீரராகவ முதலியார் இயற்றிய திருக்கழுக்
குன்றப் புராணம்)

3. இறைவர் ஞானமும் ஏதமி லாமையும்
பொறையும் பூண்ட புதல்வர்ப் பெறுவரேல்,
மறவ ரேனும் அவரைஅவ் வல்வினை
பிறவி ஏழினும் பின்தொட ராதரோ.

(அபிராமிபட்டர் இயற்றிய அபிராமியந்தாதி

4. வையந் துரகம் மதகரி மாமகு டஞ்சிவிகை
பெய்யுங் கனகம் பெருவிலை யாரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாளடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே.

(அரங்கநாத முதலியார் இயற்றிய கச்சிக் கலம்பகம்)

5. கத்தனார் மகிழ்ந்த கச்சிவெற் புடையாய்!
காமனும் மயங்குறு கவினார்
அத்த!நீ அளித்த மாந்தழை அரிவைக்(கு)
ஆருயிர் அளித்தகா ரணத்தால்,

சுத்தனும் அனுமன் சானகிக் களித்த
துணையமை யாழியோ? இந்த்ர
சித்தனுன் மடிந்த கவிக்குலம் பிழைப்பச்
செய்தசஞ் சீவியோ தானே?

(அரிபத்த நாவலர் என்னும் கவிகுஞ்சர பாரதியார் இயற்றிய அழகர் கலம்பகம்)

6. தேறாது வனம்போய் யௌவனமும் போனீர்;
சிறுகிழங்கைக் கொண்டுபெருங் கிழங்கைக் கொண்டீர்;
ஏறாத பலஞ்சுவைத்தோர் பலமுங் காணீர்;
இலைமேய்ந்தும் பேறிலையே! இதுவோ யோகம்!
மாறாது சருகுதின்று சருகு பட்டீர்;
வாயுநுகர்ந் தீர்வாயும் மௌன மானீர்;
ஆறாத தீயில்நிற்பீர்; தீய ரே! நும்
அருந்தவமே தவம்! அழகர்க் காட்ப டீரே.

(அருணசலக் கவிராயர் இயற்றிய சீகாழித்தலபுராணம்)

7. காசிற்ற புல்மைசான்ற காப்பியக் கலைகளெல்லாம்
வாசித்தும், இழுக்கொன் றில்லா மாசறு காட்சியானை
நேசித்தும், காழி மேய நிருமலக் கொழுந்தின் தாளைப்
பூசித்தும் பொழுதுபோமால், பொன்னகர் மாக்கட்கெல்லாம்.

(அவிரோதியாழ்வார் இயற்றிய திருநூற்றந்தாதி)

8. இரக்குந் தொழிலொழிந்தியாமே இனியிந்த ஏழுலகும்
புரக்கும் பொருளுடை யோம்; புலவீர்! வம்மின். பூமியெல்லாம்
நிரக்கும் பொருட்குவை யாவையும் நீர்நினை யாதவெலாஞ்
சுரக்கும் சுரபிகண்டீர் பிண்டி நாதன்றன் தொல்லறமே!

(அருணந்தி சிவாசாரியர் இயற்றிய சிவஞான சித்தியார்)

9. அருளது சத்தியாகும் அரன்றனக்(கு): அருளையின்றித்
தெருள்சிவ மில்லை; அந்தச் சிவமின்றிச் சத்தியில்லை; [(கு)
மருளினை அருளால்வாட்டி மன்னுயிர்க்(கு) அளிப்பன், கண்கட்
இருளினை ஒளியால் ஓட்டும் இரவியைப் போல ஈசன்.

(அழகியநம்பி இயற்றிய குருபரம்பரை)

10. சீரார் பொருநைத் திருநாடன் உன்தந்தை
நாராய ணன்குறுங்கை நம்பிதிருமுன் றினில்நின்(று)
ஏரார் தவம்அன் றியற்றியுனைப் பெற்றவரைப்
பாராயோ அப்பாநின் பங்கயக்கண் தான்விழித்தே.

(ஆரியப்பர் என்னும் செவ்வைச்சூடுவார் இயற்றிய பாகவதம்)

11. தழுவுறு கிளைஞர் தந்தை தாய்முதல் எவரும் நாளில்
கழிவது கண்டுங் கண்டுங் கண்டிலார் போல வாழ்வார்
ஒழிவற உள்ளத் துள்ளே உறைபரஞ் சுடரை ஓரார்
விழைவென நின்ற துன்ப வித்தினை விளைப்பா ரம்மா!

(ஆளவந்தார் இயற்றிய ஞானவாசிட்டம்)

12. மண்ணோடு மன்னவரும் அவர்தனமும்
மாண்டனநுண் மணலை யொக்கும்;
விண்ணோடும் இந்திரரும் அவர்வாழ்வும்
போயினவிண் மீனை யொக்கும்;
எண்ணோடும் பிரமருமண் டமும்பூதங்
களுமிறந்த எல்லை இல்லை;
கண்ணோடும் அவையெங்கே? நின்வாழ்க்கை
நிலையென்னே கவலும் நெஞ்சே!

(இடைக்காடர் இயற்றியது)

13. இல்லறமே யல்லலென் றோடு மயிலே;—பத்தி
இல்லவர்க்கு முத்திசித்தி யில்லை மயிலே;
நல்லறமே துறவறங் காணு மயிலே;—சுத்த
நாதாந்த வெட்டவெளி நாடு மயிலே.

(இரட்டையர் இயற்றிய தில்லைக்கலம்பகம்)

14. தென்புலியூர் அம்பலவர் தில்லைச் சிதம்பரத்தே
வெம்புலியொன் றெந்நாளும் மேவுங்காண் அம்மானை;
வெம்புலியொன் றெந்நாளும் மேவுமே யாமாகில்
அம்பலத்தை விட்டே அகலாதே அம்மானை?
ஆட்டைவிட்டு வேங்கை அகலுமோ அம்மானை!

(எல்லப்ப நாவலர் இயற்றிய தீர்த்தகிரிபுராணம்)

15. செப்பரிய தமிழ்களெல்லாம் அரியயனே முதலான
தேவர்க் கோதி
ஒப்புவிக்க அறியாமல் அரனிடத்தே வணதநுவளைத்
துரையா நின்றேன்;
மைப்பரவை தருவிடமும், ஆடரவும், நீறும், என்பும்
அன்பாய்க் கொண்டார்
அப்பெருமைஉடையவரொன்புன்கவியும்பொறுப்பரோ
அறிந்து தானே.

(கச்சியப்ப முனிவர் இயற்றிய விநாயக புராணம்)

16. எல்லார்க்கும் பயன்படுவார் என்செயினும் பொறுப்பரெனும்
நல்லார்கள் உரைப்பொருளை நாட்டியது கதிர்ச்செந்நெல்;
ஒல்லாரின், வளர்த்தவரே ஒறுத்துவரிந் தெடுத்தேகி
வெல்லாத களத்திட்டு மிதித்திரும்போர் செயப்பட்டே.

(கண்ணுடையவள்ளல் இயற்றிய ஒழிவிலொடுக்கம்)

17. தேடப் படும்பொருளைச் சிக்கனவா கப்புதைத்துக்
கோடிக் கொருநிமிடங் கொள்ளுகினும்—கூடாத
வாணாளை வீண்கழிக்கும் மானிடரைப் போன்மயக்கம்
பூணார்பொய் கண்டுதுறப் போர்.

(கம்பர் இயற்றிய இராமாயணம்)

18. அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றா றாக ஆரியர்க் காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக்கண் டயலாரூரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவனெம்மை அளித்துக்
[காப்பான்.

(காளமேகப்புலவர் இயற்றியது)

19. வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்.

(சடகோபதாசர் இயற்றிய அரிசமயதீபம்)

20. புகழ்வி ளங்குக; தருமமும் ஞானமும் பொலிக;
சகமும் மாதவன் தனிமுதற் சமயமும் தழைக்க;
நிகமம் நான்கும் அந்தணரும் ஆநிரைகளும் நிறைந்த
மகமும் ஓங்குக; வாழியம் முறைதவா மன்னன்.

(சயங்கொண்டார் இயற்றிய கலிங்கத்துப்பரணி)

21. யாவருங் களிசி றக்கவே! எழிலி
எங்கு மென்று முளதாகவே!
தேவருங் களிசி றக்கவே! உயிர்கள்
செய்த வப்பயன் விளைக்கவே!

(சிவப்பிரகாசசுவாமிகள் இயற்றிய பிரபுலிங்கலீலை)

22. ஓடும் பொன்னும் உறவும் பகையுமோர்
கேடுஞ் செல்வமுங் கீர்த்தியும் நிந்தையும்
வீடுங் கானமும் வேறற நோக்குதல்
கூடுந் தன்மை கொளுமனம் நன்மனம்.

(சொக்கநாதப்புலவர் இயற்றியது)

சொல்லரும் பொழில்புடைசூழ் புலியூரம்
பலவாண தேவா! உன்னைக்
கல்லாலும் வில்லாலும் செருப்பாலும்
பிரம்பாலும் கடிந்து சாடும்
எல்லாரும் நல்லவரென் றெண்ணி அருள்
ஈந்ததென்ன இகழ்ச்சி ஒன்றும்
சொல்லாமல் மலரால்விட் டெறிந்தவனைக்
காய்ந்ததென்ன சொல்லு வாயே.

(தத்துவராயசுவாமிகள் இயற்றிய அமிர்தசாரம்)

24. பெறவரிது மக்கட் பிறவிபெற் றாலும்
அறிவுநூல் ஆய்தல் அரிதே— அதினும்
துறவுடையன் ஆதல் அரிதே அதின்மெய்
அறிவுடையன் ஆதல் அரிது.

(தத்துவராய முனிவர் இயற்றிய பிரமகீதை)

25. எண்ணிலாக் கல்வியாலும் இலங்கிய கேள்வியாலும
திண்ணிதா மதியினாலும் தெளியவா ராது; தீரம்
நண்ணிய ஞானிதானே நயந்தன்பு செய்யில்ஞானக்
கண்ணினாற் காணலாகுங் காத்திலா மலகம்போல,

(தாண்டவமூர்த்தி இயற்றிய கைவல்ய நவநீதம்)

26. சென்றது கருதார்; நாளைச்
சேர்வது நினையார்; கண்முன்
நின்றது புசிப்பார்; வெய்யில்
நிலவாய்விண் விழுது வீழ்ந்து
பொன்றின சவம்வாழ்ந் தாலும்
புதுமையா ஒன்றும் பாரார்;
நன்றுதீ தென்னார் சாட்சி
நடுவான சீவன் முத்தர்.

(திரிகூட ராசப்பகவிராயர் இயற்றிய திருக்குற்றலப் புராணம்

27. இருவிழிகள் வாண்முகத்தில் இருந்தாலும்,
வானிரவி எழுந்தா லன்றிக்
கருதுநிலப் பல்பொருளுங் காண்டல்அரி
தாம்உலகில்; கண்போல் யாரும்

பெருகியசெல் வமும்அறிவும் பெற்றாலும்
நூற்கேள்வி பெறுவார்க் கன்றித்
திருவளர்புண் ணியபாவம் இம்மைமறு
மையும்வீடுந் தெரியா வன்றே.

(திருவள்ளுவர் இயற்றியது)

28. அடிசிற் கினியாளே! அன்புடை யாளே.
படிசொற் றவறாத பாவாய்—அடிவருடிப்
பின்றூங்கி முன்னெழுந்த பேதையே! போதியோ?
என்றூங்கும் என்கண் இனி.

(நத்தத்தனார் இயற்றியது. திருவள்ளுவமாலை)

29. ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

(தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியம்)

30. படையும் கொடியும் குடையும் முரசும்
நடைநவில் புரவியும் களிறும் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க் குரிய.

(பவணந்திமுனிவர் இயற்றிய நன்னூல்)

31. அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடம்ஆ டெருமை நெய்யரி
அன்னர்: தலையிடை கடைமா ணாக்கர்.

(பாண்டித்துரைத்தேவர் இயற்றிய இராஜராஜேஸ்வரி பதிகம்)

32. ஆரிய முதற்கலைகள் பலவுணர்ந் தாலும்என்?
ஆகம புராண விதிகள்
அநேகமுறை கற்றறிந் தாலும் என்? அரசராய்
அனைவரும் தொழுது போற்றப்
பார்புகழ் தனித்திகிரி கொண்டவனி ஆளில்என்?
பரிமேத மேசெயினும் என்?
பலசால வகைதெரிந் துலகமுழுதும் தமது
பணிசெயும் பெருமைபெறின் என்?

நேர்புரிதல் யாவுநற் பயனாக எளிமையினில்
நிறுவுநின் மலரடி தனின்
நீடுமன் பில்லாத மூடர்கள் செயுங்கருமம்
நிந்தையல தொன்று தருமோ?
சீரிய மறைக்குமுடி யாயிலகும் அன்னையே!
சீராஜ ராஜேஸ் வரீ!
திகழ்செழிய கழனிசூழ் முகவைவள நகரில்வாழ்
தேவி திரிசூலி யுமையே!

(பொய்யாமொழிப் புலவர் இயற்றியது)

33. பொன்போலும் கள்ளிப் பொறிபறக்கும் கானலிலே
என்பேதை செல்லற் கிசைந்தனளே—மின்போலும்
மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போம்
கானவேன் முட்டைக்குங் காடு.

(மணவாள மாமுனிகள் இயற்றிய திருவாய்மொழி நூற்றந்தாதி)

34. சொன்னாவில் வாழ்புலவீர்! சோறுகூ றைக்காக
மன்னாத மானிடரை வாழ்த்துதலால்—என்னாகும்?
என்னுடனே மாதவனை ஏத்தும் எனும்குருகூர்
மன்னருளால் மாறும்சன் மம்.

(மண்டலபுருடர் இயற்றிய சூடாமணி நிகண்டு)

35. புரவலன் ஈகையாளன் போற்றும்வே ளாளன்தியாகி
உரைகெழு வேள்வியாளன் உபகாரிகொடையுளோனும்;
வரைவறக் கொடுப்போன்வள்ளல் வள்ளியோன் என்றுகூறும்;
இரவலன் பரிசிலாளன் யாசகன் தீனன் ஏற்போன்.

(முருகதாச சுவாமிகள் இயற்றிய புலவர் புராணம்)

36. சந்தனமும் செந்தமிழும் தவமும்அர மகளிர்குழற்
சவரிக் காடும்
அந்தகனை வென்றசித்தர் ஆகமும்தோய் தருசிறுகால்
அதனை யேவி
மைந்தருடற் பிணிமுழுதும் ஆற்றிவட கடற்பருகும்
வடவைத் தீயை
எந்தமலை அவிப்பதுவோ அந்தமலை சொந்தமலை
எமக்கு மாதோ.

(வீரகவிராயர் இயற்றிய அரிச்சந்திர புராணம்)

37. ‘பதியி ழந்தனம்; பாலனை யிழந்தனம்; படைத்த
நிதியி ழந்தனம்; இனிநமக் குளதென நினைக்கும்
கதியி ழக்கினும் கட்டுரை இழக்கிலேம்’ என்றார்
மதியி ழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்.

(வீரசோழிய உரையிற் கண்டது)

38. இருட்பார வினைநீக்கி எவ்வுயிர்க்கும் காவலென
அருட்பாரந் தனிசுமந்த அன்றுமுத லின்றளவும்
மதுவொன்று மலரடிக்கீழ் வந்தடைந்தோர் யாவர்க்குப்
பொதுவன்றி நினக்குரித்தோ புண்ணியநின் திருமேனி.

(வீரமார்த்தாண்ட தேவர் இயற்றிய பஞ்சதந்திரப் பாடல்)

39. பொருளிலார்க் கின்பம் இல்லை;
புண்ணியம் இல்லை; என்றும்
மருவுறு கீர்த்தி யில்லை;
மாந்தருட் பெருமை யில்லை;
கருதிய கருமம் இல்லை;
கதிபெறு வழியும் இல்லை;
பெருநிலத் திடைந டக்கும்
பிணமெனப் படுவ ரன்றே.

(வேதாந்த தேசிகர் இயற்றிய தேசிகப் பிரபந்தம்)

40. மாளாத வினையனைத்தும் மாள நாம்போய்
வானேறி மலர்மகளார் அன்பு பூணும்
தோளாத மாமணிக்குத் தொண்டு பூண்டு
தொழுதுகந்து தோத்திரங்கள் பாடி யாடிக்
கேளாத பழமறையின் கீதங் கேட்டுக்
கிடையாத பேரின்பம் பெறுக நாளும்
மீளாத பேரடிமைக் கன்பு பெற்றோம்
மேதினியில் இருக்கின்றோம் விதியி னாலே.

# 11

## தோத்திரமாலை

(அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ்)

1. ஏறுமயி லேறிவிளை யாடுமுகம் ஒன்றே,
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே,
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே,
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே,
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே,
வள்ளியை மணந்துகொள வந்தமுகம் ஒன்றே:
ஆறுமுகம் ஆனபொருள் நீஅருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே.

(இராமலிங்க சுவாமிகள் இயற்றிய திருவருட்பா)

2. ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்;
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்;
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்;பொய்மை
பேசாதி ருக்க வேண்டும்;
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்;மத மானபேய்
பிடியாதி ருக்க வேண்டும்;
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டும்;உனை
மறவாதிரு க்க வேண்டும்;
மதிவேண்டும்; நின்கருணை நிதிவேண்டும்; நோயற்ற
வாழ்வினான் வாழ வேண்டும்;
தருமமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே!
தண்முகத் துய்யமணி! உண்முகச் சைவமணி!
சண்முகத் தெய்வ மணியே!

(இராமானுஜ கவிராயர் இயற்றிய பார்த்தசாரதி மாலை)

3. உலகெனும் கொடுவெங் கானில்
உணர்வெனும் அணிகோட் பட்டே
அலைசெய்கா மாதி வேடர்க்
கடிமையாய் அலக்க ணுற்றேன்;

நிலையுணர்ந் தெனைமீட் டில்லாய்;
நினக்கன்றோ அடிமை பூண்டேன்?
பலர்புகழ் அல்லிக் கேணி
பார்த்தசா ரதியம் மானே.

(உமாபதி சிவாசாரியார் இயற்றிய திருத்தொண்டர் புராண வரலாறு.)

4. வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
யானைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்.

(கச்சியப்ப சிவாசாரியார் இயற்றிய கந்தபுராணம்)

5. நாரணன் என்னும் தேவும் நான்முகத் தவனும் முக்கட்
பூரணன் தானு மாகிப் புவிபடைத் தளித்து மாற்ற
ஆரண முடிவுந் தேறா அநாதியாய் நங்கட் கெல்லாட
காரணன் ஆயமேலோன் கழலிணை கருத்துள்வைப்பாம்

(காரைக்காலம்மையார் இயற்றிய அற்புதத் திருவந்தாதி)

6. வாகைவிரிந்துவெண்ணெற்றொலிப்ப
மயங்கிருள் கூர்நடு நாளையாங்கே
கூகையோடாண்டலைபாட, ஆந்தை
கோடதன்மேற்குதித்தோடிவீசி,
ஈகைபடர்தொடர்கள்ளி நீழல்
ஈமமிடுசுடுகாட்டகத்தே
ஆகங்குளிர்ந்தனலாடும் எங்கள்
அப்பனிடந்திருவாலங்காடே.

(குலசேகராழ்வார் இயற்றிய பெருமாள் திருமொழி)

7. சுற்றமெல்லாம் பின்தொடரத்
தொல்கானம் அடைந்தவனே!
அற்றவர்கட் கருமருந்தே!
அயோத்தி நகர்க் கதிபதியே!
கற்றவர்கள் தாம்வாழும்
கணபுரத்தென் கருமணியே!
சிற்றவைதன் சொல்கொண்ட
சீராமா தாலேலோ!

(கோபாலகிருஷ்ணபாரதி இயற்றிய நந்தனார் சரித்திரக் கீர்த்தனை)

8. சாதி பேதமும் குணங்குறி யாவையும் தள்ளி
ஆதி யாகநான் கூவினேன்; திசைதனில் அணைந்தும்
மாத வம்புரி தொண்டர்கள் பணிதிரண் மறைக்கக்
கோதி லாவொரு தொண்டுமிப் பாவிக்குக் குறையோ!

(சிதம்பரசுவாமிகள் இயற்றிய திருப்போரூர்ச் சந்நிதிமுறை)

9. கருத்தே புகுந்து கதிகாட்டுங்
கண்ணே வருக! மெய்ஞ்ஞானக்
கரும்பே வருக! கருணைபொழி
காரே வருக! ஆனந்தப்
பெருக்கே வருக! யாங்கள்பெறும்
பேறே வருக! மறைசொல்கிளிப்
பிள்ளாய் வருக! பிறங்கு தெய்வப்
பெம்மான் வருக! குறமடந்தை
தருக்கே வருக! மிடியகற்றுந்
தருவே வருக! மன்பதைக்கோர்
தஞ்சே வருக! எமையளிக்குந்
தாயே வருக! பவப்பிணிக்கு
மருந்தே வருக! சமரபுரி
வாழ்வே வருக வருகவே!
மறையின் சிரமெய்ப் பொருளான
வள்ளல் வருக வருகவே!

(சுந்தர மூர்த்திசுவாமிகள் இயற்றிய தேவாரம்)

10. வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறஞ் செய்மின்தடங் கண்ணான்மல ரோனும்
கீழ்மேலுற நின்றான்திருக் கேதாரமெ னீரே.

(சேக்கிழார் இயற்றிய பெரிய புராணம்)

11. ஆதியாய் நடுவு மாகி, அளவிலா அளவு மாகி,
சோதியாய் உணர்வு மாகித், தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏக மாகி, பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியாநிற்குந்தில்லைப்பொதுநடம்போற்றி,போற்றி.

## 11. தோத்திரமாலை

### (சேந்தனார் இயற்றிய திருவிசைப்பா)

12\. ஏக நாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதனை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யாக நாயகனை அன்றிமற் றொன்றும்
உண்டென வுணர்கிலேன் யானே.

### (சேரமான் பெருமாணாயனார் இயற்றிய திருவிசைப்பா)

13\. சிந்தனை செய்ய மனமமைத்
தேன்;செப்ப நாவமைத்தேன்;
வந்தனை செய்யத் தலையமைத்
தேன்;கை தொழவமைத்தேன்;
பந்தனை செய்வதற் கன்பமைத்
தேன்;மெய் யரும்ப வைத்தேன்;
வெந்தவெண் ணீறணி யீசற்
கிவையான் விதித்தனவே.

### (ஆண்டாள் இயற்றிய திருமொழி)

14\. இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்,
நம்மை யுடையவன், நாரா யணன்நம்பி,
செம்மை யுடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீநான்.

### (தாயுமானவர் இயற்றியது)

15\. நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய்
நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறை
சுடராய் எல்லாம்
வைத்திருந்த தாரகமாய் ஆனந்த மயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப் பெருவெளியைச்
சிந்தை செய்வாம்.

(திருஞானசம்பந்தர் இயற்றிய தேவாரம்)

16. கண்காட்டு நுதலானும் கனல்காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டு நுதலானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புனலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டுங் கொடியானே.

(திருநாவுக்கரசர் இயற்றிய தேவாரம்)

17. சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவா ரவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்ல ராகில்;
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்குங் கடவு ளாரே.

(திருப்பாணாழ்வார் இயற்றிய அமலனாதிப்பிரான்)

18. ஆலமா மரத்தின் இலைமேலொரு
பாலகனாய்
ஞாலமேழும் உண்டான் அரங்கத்
தரவினணையான்
கோலமாமணி யாரமும் முத்துத்தாமமும்
முடிவில்லதோரெழில்
நீலமேனி ஐயோ! நிறைகொண்டதென்
நெஞ்சினையே!

(திருமங்கையாழ்வார் இயற்றிய திருச்சந்த விருத்தம்)

19. குலந்தரும்; செல்வம் தந்திடும்; அடியார்
படுதுய ராயின எல்லாம்
நிலந்தரம் செய்யும்; நீள்விசும் பருளும்;
அருளொடு பெருநிலம் அளிக்கும்;
வலந்தரும்; மற்றுந் தந்திடும்; பெற்ற
தாயினும் ஆயின செய்யும்;
நலந்தரும் சொல்லைநான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

(திருமழிசையாழ்வார் இயற்றிய திருச்சந்த விருத்தம்)

20. பண்டும் இன்றும் மேலுமாய் ஓர் பாலனாகி, ஞாலமேழ்
உண்டு மண்டி ஆலிலைத் துயின்ற ஆதி தேவனே!
வண்டு கிண்டு தண்டுழாய் அலங்கலாய்! கலந்தசீர்ப்
புண்டரீக பாவைசேரு மார்ப! பூமி நாதனே!

(திருமாளிகைத்தேவர் இயற்றிய திருவிசைப்பா)

21. உற்றாயென்னும்; உன்னையன்றி மற்றொன்
றுணரேன் என்னும்; உணர்வுகள் கலக்கப்
பெற்றாய ஐந்தெழுத்தும் பிதற்றிப் பிணிதீர
வெண்ணீ றிடப்பெற்றேன் என்னும்;
சுற்றாய சோதி மகேந்திரஞ்சூழ் மனத்திருள்
வாங்கிச் சூழாத நெஞ்சிற்
குற்றாய் என்னும்; குணக் குன்றே யென்னும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

(திருமூலர் இயற்றிய திருமந்திரம்)

22. நடுவுநின் றார்க்கன்றி ஞானமு மில்லை;
நடுவுநின் றார்க்கு நரகமு மில்லை;
நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர்;
நடுவுநின் றார்வழி நானுநின் றேனே.

(திருவரங்கத்தமுதனார் இயற்றிய இராமானுஜ நூற்றந்தாதி)

23. பொருந்திய தேசும் பொறையும் திறலும் புகழும்நல்
திருந்திய ஞானமும் செல்வமும்சேரும்; செறுகலியா
வருந்திய ஞாலத்தைவண்மையினால்வந் தெடுத்தளித்த
அருந்தவன் எங்கள் இராமா நுசனை யடைபவர்க்கே.

(தொண்டரடிப்பொடியாழ்வார் இயற்றிய திருமாலை)

24. குரங்குகள் மலையை நூக்கக்
குளித்துத்தாம் புரண்டிட் டோடி
தரங்கநீர் அடைக்க லுற்ற
சலமிலா அணிலம் போலேன்
மரங்கள்போல் வலிய நெஞ்சம்
வஞ்சனேன் நெஞ்சு தன்னால்
அரங்கனார்க் காட்செய் யாதே
என்செய்வான் தோன்றி னேனே!

(நக்கீரர் இயற்றியது. பதினோராந்திருமுறை)

25. மற்றும் பலபிதற்ற வேண்டா மடநெஞ்சே!
கற்றைச் சடையண்ணல் காளத்தி—நெற்றிக்கண்
ஆரா வமுதின் திருநாமம் அஞ்செழுத்துஞ்
சோராமல் எப்பொழுதுஞ் சொல்.

(நம்பியாண்டார்நம்பி இயற்றியது. பதினோராந்திருமுறை)

26. என்றும் அடியவர் உள்ளத் திருப்பன: இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன; நல்லசங்கத்
தொன்றும் புலவர்க ளியாப்புக் குரியன; ஒண்கலியைப்
பொன்றும் கவுணியன் சைவ சிகாமணி பொன்னடியே.

(நம்மாழ்வார் இயற்றிய திருவாய்மொழி)

27. யானும் தானா யொழிந்தானை,
யாதும் எவர்க்கும் முன்னோனை,
தானும் சிவனும் பிரமனும்
ஆகிப் பணைத்த தனிமுதலை,
தேனும் பாலும் கன்னலும்
அமுது மாகித் தித்தித்தென்
ஊனில் உயிரில் உணர்வினில்
நின்ற வொன்றை யுணர்ந்தேனே.

(பட்டினத்தார் இயற்றிய திருவேகம்பமாலை)

28. கல்லாப் பிழையும் கருதாப் பிழையும்
கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்நின்
அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும்
தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி
ஏகம்பனே!

(பத்திரகிரியார் இயற்றிய மெய்ஞ்ஞானப் புலம்பல்)

29. எங்கும் பரவடிவாய் என்வடிவு நின்வடிவாய்க்
கங்குல்பகல் இன்றியுனைக் கண்டிருப்ப தெக்காலம்!
மனதையொரு வில்லாக்கி வான்பொறியை நாணாக்கி
எனதறிவை அம்பாக்கி எய்வதினி எக்காலம்!

(பிள்ளைப்பெருமாளையங்கார் இயற்றிய திருவரங்கக்கலம்பகம்)

30. பாதியா யழுகியகால் கைய ரேனும்
பழிதொழிலும் இழிகுலமும் படைத்தா ரேனும்
ஆதியாய் அரவணையாய் என்ப ராகில்
அவரன்றோ யாம்வணங்கும் அடிக ளாவார்;
சாதியால் ஒழுக்கத்தால் மிக்கோ ரேனும்
சதுர்மறையால் வேள்வியால் தக்கோ ரேனும்
போதினன் முகன்பணியப் பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்றுதார் புலையர் தாமே.

(பூதத்தாழ்வார் இயற்றிய இரண்டாந் திருவந்தாதி)

31. யானே தவம்செய்தேன் ; ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன் ; எம்பெருமான்!—யானே
இருந்தமிழ்நன் மாலை இணையடிக்கே சொன்னேன் ;
பெருந்தமிழ னல்லேன் பெரிது.

(பெரியாழ்வார் இயற்றிய திருமொழி)

32. திக்குநிறை புகழாளன்
தீவேள்விச் சென்றநாள்
மிக்கபெருஞ் சவைநடுவே
வில்லிறுத்தான் மோதிரங்கண்(டு)
'ஒக்குமால் அடையாளம்,
அநுமான்!' என் றுச்சிமேல்வைத்
துக்கொண் டுகந்தனளால்
மலர்க்குழலாள் சீதையுமே.

(பேயாழ்வார் இயற்றிய மூன்றாந் திருவந்தாதி)

33. தேசும் திறலும் திருவும் உருவமும்
மாசில் குடிப்பிறப்பும் மற்றவையும்—பேசில்
வலம்புரிந்த வான்சங்கம் கொண்டான்பே ராத
நலம்புரிந்து சென்றடையும் நன்கு.

(பொய்கையாழ்வார் இயற்றிய முதற்றிருவந்தாதி)

34. வானாகித் தீயாய் மறிகடலாய் மாருதமாய்,
தேனாகிப் பாலாம் திருமாலே!—ஆனாய்ச்சி
வெண்ணெய் விழுங்க நிறையுமே முன்னொருநாள்
மண்ணை யுமிழ்ந்த வயிறு!

(மஸ்தான்சாயபு இயற்றிய மகமதுநபி பாடல்)

35. ஆதியா யநாதி யாகி, அரும்பொரு ளனைத்து மாகி,
சோதியாய்ச் சொரூப ஞானச் சுடரொளித் தீப மாகி,
நீதியாய்த் திறமை யாகி, நித்தியா னந்த மாகி,
மாதிரப் புயமு மான முகம்மதே வருகு வீரே.

(மதுரகவியாழ்வார் இயற்றிய கண்ணிநுண் சிறுத்தாம்பு)

36. கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன் என்னப்பனில்
நண்ணித்தென் குருகூர்நம்பி யென்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என்நாவுக்கே.

(மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகம்)

37. வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

(மீனாட்சிசுந்தரம்பிள்ளை இயற்றிய அகிலாண்டநாயகி
பிள்ளைத் தமிழ்)

38. பொன்னே வருக! மூவுலகும்
பூத்தாய் வருக! நாயேனைப்
புரந்தாய் வருக! வழுதியர்கோன்
புதல்வீ வருக! முகிற்கிளைய
மின்னே வருக! மெய்ஞ்ஞான
விளக்கே வருக! மறைநான்கின்
விரிவே வருக! பேரின்ப
விளைவே வருக! மிகுங்கருணை
அன்னே வருக! அகநெகுவார்க்
கணியாய் வருக! அலர்மடவார்க்
கரசே வருக! உரைப்பருஞ்சீர்
அம்மே வருக! அழற்கரத்து
மன்னோர் உடலம் பகிர்ந்தவிள
மயிலே வருக, வருகவே!
மதமா தங்க வனத்துமட
மானே வருக, வருகவே!

(முத்தமிழ்க்கவி-வீரராகவமுதலியார் இயற்றிய திருவேங்கடக் கலம்பகம்)

39. ஆனாத கீர்த்தித் திருவேங் கடத்துறை அச்சுத!நீ
தானாதரிக்கத் துதித்தேனல் லேன்;இந்தத் தாரணியில்
மேனாளின் மானிடம் பாடிய நாச்சுத்தம் மேவுதற்கு,
நானாசை யால்துதிசெய்தேன்உன் புண்ணியநாமத்தையே.

(வீரமாமுனிவர் இயற்றிய தேம்பாவணி)

40. அறக்கடல் நீயே; அருட்கடல் நீயே;
அருங்கரு ணாகரன் நீயே;
திறக்கடல் நீயே; திருக்கடல் நீயே;
திருந்துளம் ஒளிபட ஞான
நிறக்கடல் நீயே; நிகர்கடந் துலகில்
நிலையுநீ; உயிருநீ நிலைநான்
பெறக்கடல் நீயே; தாயுநீ; எனக்குப்
பிதாவுநீ; அனைத்துநீ யன்றோ ?

## 12

## சதகச்செய்யுள் திரட்டு.

(அம்பலவாணக்கவிராயர் இயற்றிய அறப்பளீசுர சதகம்)

1. வைதாலும் ஓர்கொடுமை செய்தாலு மேசீறி
மாறா திகழ்ந்தா லுமே
மனதுசற் றாகிலும் கோணாது நாணாது
மாதா பிதா வெனக்குப்
பொய்யாமல் நீயென்று கனிவொடு பணிவிடை
புரிந்து பொருள் உடலாவியும்
புனித!உன் றனதெனத் தத்தஞ்செய் திரவுபகல்
போற்றிமல ரடியில் வீழ்ந்து
மெய்யாக வேபாவி உபதேச மதுபெற
விரும்புவோர் சற் சீடராம்;
வினைவேர .றும்படி யவர்க்கருள்செய் திடுவதே
மிக்கதே சிகரது கடன்:
ஐயா!பு ரம்பொடி படச்செய்த செம்மலே
அணல்!எம தருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே!

[illegible]

[illegible] மிக்

[illegible] [தன

[illegible]

[illegible] பாட்சிக்குப்

[illegible]

முக்கணிரு தலையுஞ்ச மன்செய்த கோல்போன்
பொறிக்கிடில் தர்ம மதுகாண்!
முனையிப னுடல்பாதி மிருகந்த னக்கென்று
முன்தருமர் சொன்ன தலைவோ?
மைந்தனென அன்றுமை திருப்பால் கொடுத்திட
வளர்ந்தருள் குழந்தை வடிவே!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே!

(கோபாலகிருஷ்ணதாசர் இயற்றிய எம்பிரான் சதகம்)

3. பண்ணியிடும் பணிபலவே பொன்னொன்றேயாம் ;
பாண்டத்தின் பேர்பலவே மண்ணொன்றேயாம்;
வண்ணமிகும் பசுபலவே பாலொன்றேயாம்
வகையேழின் உடல்பலவே சீவனொன்றும்;
நண்ணுமறு சமயங்கள் பேர்வேறல்லால்
நாதன்நீ ஒருவனே அவர்கள் தம்மை
எண்ணியே செயுந்தொண்டர் பூசைக்கெல்லாம்
இரங்கிவரந் தருகின்றாய் எம்பிரானே.

(நாராயணபாரதியார் இயற்றிய நாராயண சதகம்)

4. பெற்றதாய் தந்தைதன் சுற்றமே முதலான
பெரியோரை முனிதல் வேண்டாம்;
பின்னொன்று முன்னொன்று பேசியே அவமான
பேர்கொண்டு திரிதல் வேண்டாம்;

உற்றவர்கள் போலவுட் பகையான வஞ்சகரை
ஒருநாளும் நம்பல் வேண்டாம்; [யில்
ஒருவருக் கிச்சையாய்ப் பொய்சொல்லி, பின்சபை
ஊமைபோல் நிற்றல் வேண்டாம்;
சற்றுமே பொறுமையில் லாதவர்கள் சண்டையில்
தான்போய் விலக்கல் வேண்டாம்;
தைரியந் தனில்விக்ர மாதித்தன் என்னினும்
தன்னையே புகழல் வேண்டாம்;
மற்றொன்றும் எண்ணாது செய்யவேண்டாம், என்பர்:
மணவாள நாரா யணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடரா யனே!

(நாராயணபாரதியார் இயற்றிய கோவிந்த சதகம்)

5. எடுத்தாலும் ஊறும்; இறைத்தாலும் ஊறும்;
ஜடைநடுவே
தடுத்தால் தடைபடு மோமணற் கேணித்தண்
ணீரதுபோல்,
அடுத்தாரை வாழ்விக்கும் செல்வமுண் டானவர்
அள்ளிச்செம்பொன்
கொடுத்தாற் குறைவரு மோ! அச்சு
தானந்த கோவிந்தனே!

(படிக்காசுப்புலவர் இயற்றிய தண்டலையார் சதகம்)

6. வைதிடினும் வாழ்த்திடினும் இன்பதுன்பம்
வந்திடினும் வம்பு கோடி
செய்திடினும் தண்டலைநீள் நெறியார்தஞ்
செயலென்றே தெளிவ தல்லால்,
மெய்தவிர அவர்செய்தார் இவர்செய்தார்
எனநாடி வெறுக்க லாமோ!
எய்தவர்தம் மருகிருக்க அம்பைநொந்த
காரியமென்ன? இயம்பு வீரே.

# செய்யுள் முதற்குறிப் பகராதி


| | | பக்கம். |
|---|---|---|
| அஞ்சிலே ஒன்று | ... | 133 |
| அடக்கமும் | ... | 116 |
| அடிசிற்கினியாளே | ... | 135 |
| அடைந்த மக்களை | ... | 130 |
| அத்தகுமைந்தரார் | ... | 120 |
| அரசனீ | ... | 21 |
| அரவுயர்த்தோன் | ... | 111 |
| அருளதுசத்தி | ... | 131 |
| அறக்கடல் நீயே | ... | 147 |
| அறங்கிடந்த | ... | 103 |
| அறத்தைவேர் | ... | 103 |
| அன்பாலின்றென்னை | ... | 115 |
| அன்னது கூனி | ... | 107 |
| அன்ன மன்னவள் | ... | 108 |
| அன்னமாவே | ... | 135 |
| ஆதிமாமுடி | ... | 108 |
| ஆதியாயனாதி | ... | 146 |
| ஆதியாய் நடு | ... | 140 |
| ஆயிரத்து முந்நூற்று | ... | 135 |
| ஆரிய முதற்கலை | ... | 135 |
| ஆருயிரின் | ... | 104 |
| ஆர்கலியுலகத்து | ... | 123 |
| ஆலமாமரத்தின் | ... | 142 |
| ஆளி ஆயிரம் | ... | 110 |
| ஆறாத கீர்த்தி | ... | 147 |
| இசையா | ... | 88 |
| இம்மைக்கும் | ... | 141 |
| இரக்குந்தொழில் | ... | 131 |
| இருட்பார | ... | 137 |
| இருமொழிக்கும் | ... | 85 |
| இருவர் உயிரும் | ... | 106 |
| இருவிழிகள் | ... | 134 |
| இலக்கியமின்றி | ... | 130 |
| இல்லறமே | ... | 132 |
| இவ்வண்ணம் | ... | 114 |
| இவ்வளவிற்செல் | ... | 102 |
| இறைவர் ஞானமும் | ... | 130 |
| உருவழிக்கும் | ... | 104 |
| உலகத்தீரே | ... | 125 |
| உலகெனுங்கொடு | ... | 138 |
| உற்றாயென்னும் | ... | 143 |
| எங்கும்பர | ... | 144 |
| எடுத்தாலு மூறும் | ... | 149 |
| எண்ணான்கு | ... | 127 |
| எண்ணிலா அரு | ... | 19 |
| எண்ணிலாக் கல்வி | ... | 134 |
| எப்பொருள் | ... | 61 |
| எமக்குத் துணை | ... | 123 |
| எரிவிழி இலங்கை | ... | 109 |
| எல்லார்க்கும் பயன் | ... | 133 |
| என்றலு மிராவணன் | ... | 109 |
| என்று மடியவர் | ... | 144 |
| என்றென்றிறைஞ்சி | ... | 115 |
| என்னனைய | ... | 17 |
| ஏக நாயகனை | ... | 141 |
| ஏறுமயிலேறி | ... | 138 |
| ஒரு பாதிமால் | ... | 127 |
| ஒரு மகவுக் | ... | 117 |
| ஒருமையுடன் | ... | 138 |
| ஒல்லும் | ... | 71 |
| ஓடும் பொன்னும் | ... | 133 |
| கண் காட்டும் | ... | 142 |
| கண்டு சீதை | ... | 108 |
| கண்ணிநுண் | ... | 146 |
| கண்ணுதற்பெரும் | ... | 86 |
| கத்தனார் மகிழ்ந்த | ... | 130 |
| கருத்தே புகுந்து | ... | 140 |
| கருப்பைக் | ... | 62 |
| கல்லாப் பிழையும் | ... | 144 |
| கல்லாரை | ... | 88 |
| கல்லைத்தான் | ... | 127 |
| கள்ளாமை வேண்டும் | ... | 122 |
| கறையிட்டுநனி | ... | 121 |
| கற்றதனால் | ... | 62 |

# செய்யுள் முதற்குறிப் பகராதி


| | பக்கம். | | பக்கம் |
|---|---|---|---|
| கற்றதுகை ... | 64 | சொல்லாரும் ... | 18 |
| கற்றைக்குழல் ... | 115 | சொன்னகலையின் ... | 10 |
| காகா ... | 91 | சொன்னுவில் ... | 13 |
| காசிற்ற புலமை ... | 131 | தண்டிருந்த ... | 11 |
| காதலிருவரையும் ... | 105 | தந்தை திருமுகத்தை ... | 10 |
| காதல் கவருடல் ... | 103 | தரித்திரம் ... | 11 |
| காமர் கயல்புரள ... | 102 | தருமந்தான ... | 9 |
| காய்தலுவத்தல் ... | 124 | தருமனுயர் வேள்வி ... | 12 |
| கானுள உளை ... | 112 | தருவனத்துள் ... | 1 |
| கானெறிபோய் ... | 113 | தழுவுறு கிளைஞர் ... | 13 |
| கிளைத்தன ... | 110 | தாளாளனென்பான் ... | 12 |
| குஞ்சியழகும் ... | 122 | திக்குநிறை ... | 14 |
| குடி செய்வல் ... | 88 | தீங்கரும் ... | 8 |
| குடை நிழல் ... | 80 | தீண்டாத ... | 11 |
| குண்டல மோதிரம் ... | 118 | தீதுவருக ... | 10 |
| குரங்குகள் ... | 143 | துறந்தார் ... | 9 |
| குரவரையும் ... | 111 | துன்று பிணியோர் ... | 11 |
| குலந்தரும் ... | 142 | தூயதன் மக்கள ... | 10 |
| குற்றமில் காட்சி ... | 105 | தெய்வம் குரவன் ... | 12 |
| கொல்லான் கொலை ... | 123 | தெள்ளமுதன்னவர் ... | 10 |
| கோதிலான் ... | 112 | தென்புலியூர் ... | 1 |
| சங்கநிதி ... | 142 | தேசும் திறலும் ... | 14 |
| சந்தனமும் ... | 136 | தேடப்படும் பொருளை ... | 1 |
| சாதிபேதமும் ... | 140 | தேறுது வனம்போய் ... | 1 |
| சித்திரகூடம் ... | 108 | தொட்டனை ... | |
| சித்திரமும் ... | 72 | தொல்லாண்மை ... | 1 |
| சிந்தனை செய்ய ... | 141 | நகுலனிவை ... | 1 |
| சிந்தித்தபடி ... | 114 | நடுவுநின்றார்க்கன்றி ... | 1 |
| சிறியரே மதிக்கும் ... | 119 | நன்றியறிதல் ... | 1 |
| சினக்கதிர் வேல் ... | 106 | நன்றியிலுடலை ... | 1 |
| சீரார்பொருளை ... | 131 | நாடு கோசல ... | 1 |
| சீர்பெறுமிமயச் ... | 128 | நாணிலான் சால்பும் ... | 1 |
| சுற்றமெல்லாம் ... | 139 | நாரணனென்னும் ... | 1 |
| செங்கோலாய் ... | 106 | நாராய் நாராய் ... | 1 |
| செப்பரிய ... | 132 | நாற்குணமும் ... | 1 |
| செம்மனத்தான் ... | 102 | நித்தியமாய் நிர்மல ... | 1 |
| செயத்தகு ... | 120 | நிலம்செய்த ... | |
| செவ்வேளைப்பாலன் ... | 124 | நீ பாரதவமரில் ... | 1 |
| சென்றது கருதார் ... | 134 | நீராரும் கடல் ... | 1 |

| | பக்கம் | | பக்கம். |
|---|---|---|---|
| நீர்நிலையின் | 49 | மன்றிலழைத்தெனக்கு | 116 |
| நெறியினில் யாவரும் | 107 | மாசிலாக் குலத்து | 117 |
| படையும் கொடியும் | 135 | மாயவனு மன்பன் | 115 |
| படையூற்றம் | 20 | மானாதவினை | 137 |
| பண்டுமின்றும் | 143 | மானமழிந்தபின் | 122 |
| பண்ணியிடும்பணி | 148 | மானவனறிந்தருள் | 109 |
| பதியிழந்தனம் பாலனை | 137 | முதலெழு | 83 |
| பல்கதிர் விரித்து ... | 119 | முந்தூர் வெம்ப | 112 |
| பல்லுயிரும்பல ... | 44 | முருகவிழ்க்கும் பசுர் ... | 114 |
| பல்லெலாம் தெரிய ... | 117 | முன்ன மெத்தனைபேர் | 119 |
| பாதியாயழுகிய ... | 145 | முன்னமோர் பொய் .. | 124 |
| பாராசர் ... | 99 | முன்னம் நீ கூறிபவை.. | 115 |
| பாராளக் கன்னன் ... | 115 | மேகநாதன் வந் | 109 |
| பாற்கடலடுத்தமீன் ... | 120 | மைக்கால முகலூர்தி . | 113 |
| புகழ் விளங்குக ... | 133 | யாதவர் குலத்தில் | 118 |
| புரவல னீகையாளன் ... | 136 | யாவருங்களி சிறக்கவே | 133 |
| பெறவரிது மக்கள் ... | 134 | யானும் தானும் | 144 |
| பெற்றதாய் ... | 148 | யானே தவம் | 145 |
| பொருந்திய தேசம் ... | 143 | யுகமேழுகோடி | 69 |
| பொருப்பிலே பிறந்து ... | 111 | வஞ்சகர்பால் | 127 |
| பொருளிலார்க்கு ... | 137 | வஞ்சப்புரி | 124 |
| பொருளுணர்வார் ... | 122 | வடியேறு | 104 |
| பொருள்வாழி ... | 85 | வடிவுடை | 107 |
| பொன் போலும்கள்ளி... | 136 | வந்த விவகார | 148 |
| பொன்னுடையரேனும் | 105 | வாதனும் | 110 |
| பொன்னே வருக ... | 146 | வாகை விரித்து | 139 |
| போர்வர் ... | 92 | வாழ்வாவது | 140 |
| மடமையேன் ... | 121 | வானுகித் தீயாய் | 145 |
| மண்ணுடு மன்னவரும்... | 132 | வானுகி மண்ணுகி | 146 |
| மதலையைப் பெறுநாள்... | 119 | வானுலகும் | 139 |
| மந்தரமெனத் திகழ் ... | 108 | விண்ணரசர் | 103 |
| மலர்க்குழலாளொடும் ... | 107 | விரிகுழற்பைந் | 112 |
| மலைகண்ட தெனவென் | 113 | [illegible] | 133 |
| மறலிவா ... | 99 | வேதநூல் | 24 |
| மறை முதற் ... | 85 | வேலைகரையிழந்தால் ... | 124 |
| மற்றுந் தேவியர் ... | 107 | வைதாலுமோர்கொடுமை | 147 |
| மற்றும் பலபிதற்ற ... | 144 | வைதிடினும் ... | 149 |
| மன்றலிளங் கோதை ... | 105 | வையகத்தவன் ... | 90 |
| மன்றலோதி தந்த ... | 109 | வையர்துரகம் ... | 130 |

## அனுபந்தம்—1.

### வசனபாகத்தில் வரும்
## செய்யுட்களின் அரும்பத உரை.

பக்கம்—12. 'தொட்டனைத்து' என வரும் செய்யுள். திருக்குறள். தொட்ட அனைத்து—தோண்டிய அளவாக; கற்ற அனைத்து—கற்ற அளவாக.

பக்கம்—17. 'நிலம்செய்த' 'என்னனைய' என வரும் செய்யுட்கள். (இது முதல் 20-ஆம் பக்கம் வரையில்வரும் விருத்தங்கள் யாவும் கம்பர் இயற்றிய ராமாயணத்தினின்று எடுக்கப்பட்டவை. ஆசிரியர் கூற்றாய் வரும் சொற்களிற் சில சந்தர்ப்ப துக் கிசையச் சிறிது மாற்றப்பட்டுள்ளன.)

நலம்—நல்வினை; தலம்—நகர்; கோசிகர்—கௌசிகர்—விசுவமித்திரர்; பல் நகம்—பல மலைகள்; நகு—பரிகசிக்கும்; வரை மலை; பதும பீடம்—தாமரையாசனம்; புகல்—புகுமிடம்; இகல்—பகை; கடந்த—வென்ற; புலவுவேல்—(பகைவர்) ஊன் (தங்கிய) வேல்.

பக்கம்—18. 'தருவனத்துள்' என வரும் செய்யுள். தரு—மரம் (நிறைந்த); வெருவர—அஞ்ச; நிருதர்—அரக்கர்; செரு முகத்து—போரிடத்தில்; காத்தி—காப்பாற்று.

பக்கம்—19.

'எண்ணிலா' என வரும் செய்யுள். மருமம்—மார்பு; புண்ண ஆம்—புண்ணில் உண்டான; புழை—துளை; உள் நிலா உள்ளேயிருந்த; துயரம் உழக்கின்றேன்—துயரம் (உ வருந்துகின்றேன்.

பக்கம்—20.

'படையூற்றம்' என வரும் செய்யுள். 'தொடையூற்றம் தே துளிக்கும் நறுந்தாரான் ஒருவண்ணம் துயர்நீங்கி' என்னு முதலடி நீக்கப்பட்டது. படை ஊற்றம்—படைத்தொ லில் மனம் பதிதல்; பணி—கட்டளை; புடை—(ஒரு) பக் தில்; புரந்தரன்—இந்திரன்.

பக்கம்—24.

'வேதநூல்' என வரும் செய்யுள். திருமாலை. 'ஆதலா பிறவிவேண்டேன் அரங்கமா நகருளானே' என்னும் இறு யடி நீக்கப்பட்டது.

'வேட்டன' என வரும் செய்யுள். சீவகசிந்தாமணி. 'எட்டெழுத் தறிதலின்றி என்னற்பா டுள்ளிட்டெல்லாம்—சூட்டணிந் திலங்கும் வேலோய் துன்பமே மாந்தர்க்கென்றான்' என்னும் இறுதி யிரண்டடிகள் நீக்கப்பட்டன. வேட்டன விரும்பியபொருள்களை; விழைநர்—(தமக்குப்) பிரியமுள்ளவர் (விழைதல்-விரும்புதல்); மோட்டு எழில்-மிக்க அழகு.

பக்கம்—69.

'யுகமேழும்' என வரும் செய்யுள். படிக்காசுப் புலவர் இயற்றிய தொண்டைமண்டல சதகம். மேழி—கலப்பை; வாகைப்பதாகை—வெற்றிக்கொடி; மகமேரு—பெரியமேரு (மலை).

பக்கம்—71.

'ஒல்லும்' என வரும் செய்யுள். திருக்குறள். ஒல்லும் - கூடும்; அறவினை—நல்ல காரியங்கள்; ஓவாது—இடைவிடாமல்; செல்லும் வாய்—இயலும் இடம்; செயல்—செய்க.

பக்கம்—83, 85.

'கல்லாரை' 'முதலெழு' 'பொருள்வாழி' என வரும் செய்யுட்கள். பொன்னம்பல கவிராயர் இயற்றிய பச்சையப்ப முதலியார் புகழ்மாலை. எக்கற்று—தாழ்ந்துநின்று; சதமகன்—இந்திரன். முதல் எழுவள்ளல்—முதன்மையான எழுவள்ளல்கள் (அவராவார், 1. குமுணன், 2. சகரன், 3. சகாரன், 4. செம்பியன். 5. துந்துமாரி, 6. நளன், 7. நிருதி;— 1. அக்குரன், 2. அந்திமான், 3. அரிச்சந்திரன், 4. கன்னன், 5. சந்திமான், 6. சிசுபாலன், 7. தந்த வக்கிரன்—இவர்கள் இடையெழு வள்ளல்கள். 1. எழினி, 2. ஓரி, 3. காரி, 4. நள்ளி, 5. பாரி, 6. பேகன், 7. மலையன்—இவர்கள் கடையெழுவள்ளல்கள்;) முதல் எழுந்தார்—முற்காலத்தில் தோன்றினார்கள்; முதல் எழாமல்—அசல் வெளிவராமல்; முன்-முற்பட; நூன்முறையே-தரும சாஸ்திரப்படியே; பின்னும்—பிற்காலத்தில்; தெருள்—ஞானம்.

பக்கம்—85. மனோன்மணீயம்

'மனோன்மணி' என்பது 'மனஸ்+உத்+மணி' எனப் பிரிந்து மனத்துக்குச் சிறந்த மணி எனப் பொருள்பட்டுக் குண சந்தியாக முடிந்ததென அறிக. மனோன்மணியின் கதை கூறும் நூல் 'மனோன்மணீயம்' எனப் பெயர் பெற்றது. ['மனோன்மணீயம்' என்பதை 'மனோன்மநீயம்' என்னும் வடமொழிப் பெயரின் திரிபாகக் கொள்வதும் உண்டு. 'மனோன்மநன்' என்பது பகைவரது மனத்தைக் கலக்குபவர் என்ற பொருளில் சிவபிரானுக்கு ஒரு பெயராம். ஆதலின் மனோன்மநீ' என்

பது அதன் பெண்பாலாய்ப் பார்வதி தேவிக்காகி இக்
கதாநாயகிக்கு ஆயிற்று என்பர்.]

(இந்நூல் செய்யுள் வடிவமான நாடகம். ஆசிரியர் எழுதிய கத
சங்கிரகத்தில் இடையே சேர்க்கப்பட்ட செய்யுள்கள் அ
நாடகத்தினின்றே எடுத்தவை)

பக்கம்-85.'மறைமுதல்'என வரும் செய்யுள்.சீகாளத்திப்புராண
'இருமொழி' என வரும் செய்யுள் காஞ்சிப் புராணம்.

முகிழ்மதி—இளஞ் சந்திரன்—பிறை; வேணி—சடை; இறைவ
சிவபெருமான்; அறைகடல்—ஒலிக்கின்ற கடல் (சூழ்ந்த
வரைப்பு-(பூலோக) எல்லை; உறழ் தரு - ஒப்புமையுடைய.

இருமொழி—(தமிழ் ஆரியம் என்னும்) இரண்டு பாஷைகள்; கு
வர்—ஆசிரியர்; இயல்— இலக்கணம்; வாய்ப்ப—பொருந்
வழிப்படுத்தார்—ஒழுங்கு செய்தார்; முனிவேந்தர்—மு
வர்க்கரசர் (எனத்தக்க அகத்தியர்); இசை பரப்பும்—புகழை
பரவச்செய்யும்; ஆன்றவர்—பெரியோர் (கல்வி கேள்விகளா
நிறைந்தவர்); தழீஇயினர்—தழுவினர்; நிகர்—சமம்.

பக்கம்—86.

'கண்ணுதல்' என வரும் செய்யுள்.திருவிளையாடற்புராணம். க
நுதல் பெரும் கடவுள்-(முக்கண்ணில்) ஒரு கண்ணை நெற்
றியிலே உடைய பெரிய கடவுள், (சிவன்); கழகம்—கல்விச்ச
கம்; பண் உற—தகுதி பொருந்த; ஆய்ந்த—ஆராய்ந்த; பசு
தமிழ்—அழகிய தமிழ்; மண்ணிடை—பூலோகத்தில்; எண்ண
டைப்பட்ட—நினைக்கும்படியாக.

பக்கம்—88.

'குடிசெய்வல்' என வரும் செய்யுள். திருக்குறள்.

குடிசெய்வல்—குடித்தனத்தை (உயர்வு பெறச்) செய்வேன்; ம
தற்று—ஆடையை இறுகக் கட்டிக்கொண்டு; முந்துறும்
முன்வரும்.

'தீங்கரும்பு' என வரும் செய்யுள். நாலடியார்.

தீம்—இனிமையான; திரள் கால்—திரண்ட தாள்; உளை அலரி
(குதிரை முதலியவற்றின்) பிடரிமயிர் (போன்ற)பூ; இழ
ஆங்கு—இழந்தாற்போல. [கரும்பு இனியதானாலும் அத
பூவுக்கு இனிய வாசம் இல்லை.]

'இசையாது' என வரும் செய்யுள். திருக்குறள்.

இசையாது—(எளிதில்) முடியாது; ஓர் ஆற்றால்—ஒருவகை
னும்; அசையாது-தளராமல்.

பக்கம்—90.

துறந்தார்—முனிவர்; முற்றும் துறந்தார் அல்லர்—(ஆசை) முழுவதும் நீங்கியவர்கள் அல்லர்; வறிதே—சும்மா; மனோகரமான—இன்பமான; சினகரம்—கோயில்; உய்ப்பினும்—சேர்த்தாலும்; முசிப்பு-மெலிவு.

பக்கம்—91.

வாயசம்—காக்கை; கா—காப்பாற்று. 'வாயசம் கரைந்து வந்தன' எனக் கொள்க. பால் பகா அஃறிணைப் பெயராதலால் பன்மை வினை கொண்டது.

பக்கம்—99.

'நீர் நிலை' என வரும் செய்யுள். நீர் நிலை—தடாகம்; கரி—யானை; விளிக்க—கூப்பிட; ஆர்—நிறைந்த; அளக்கர்—கடல்; பிறகிடல்—மறைதல்; பெருந்தகை—பெருந்தன்மை. இச் செய்யுளிற் சுட்டப்பட்டகதை 'கஜேந்திரமோக்ஷம்' எனப்படுவது.

'பாரரசர்' என வரும் செய்யுள். பார் அரசர்-பூமியை (ஆளும்) அரசர், இங்கே (துச்சாதனனாதியோர்); தெரிவை—பெண்; சிதைவு—(மான) பங்கம்; உறுதி—மனோதிடம். இச் செய்யுளிற் சுட்டப்பட்ட கதை 'துரோபதை வஸ்திராபஹரணம்' எனப்படுவது.

'மறலி' என வரும் செய்யுள். மறலி—யமன்; வெறிகமழ்—(மண) வெறி மிகுந்து; பொறி—அறிவு; விரவுதல்—சேர்தல். இச் செய்யுளிற் சுட்டப்பட்ட கதை 'மார்க்கண்டன் என்றும் பதினாறாக வரம் பெற்றது.'

# அனுபந்தம்—2.

## செய்யுள் பாகத்தின்

## அரும்பத விளக்க உரை

### 1. தமிழ்

பக்கம்—100.

1. நீர் ஆரும்—நீர் நிறைந்த; நிலமடந்தை—பூமிதேவி; எழில்—அழகு; சீர் ஆரும் — சிறப்புப் பொருந்திய; வதனம்—முகம்; திகழ்—விளங்குகின்ற; பிறைநுதல்—பிறை (போன்ற) நெற்றி; நறும் திலகம்—வாசனைப்பொட்டு; தெக்கணம்—தெக்ஷண தேசம் (தென்னிந்தியா); அணங்கு—தெய்வப்பெண்
2. அளித்து—காப்பாற்றி; துடைக்கினும்—அழித்தாலும்; ஓர் எல்லை அறு—ஒரு வரம்புக்கு உட்படாத; களிதெலுங்கு—இன்ப (ஓசையுடைய) தெலுங்கு; ஆரியம்—சமஸ்கிருதம்; சீர் இளமைத்திறம்—சிறப்புடைய இளமைத் தன்மை. வியந்து ஆச்சரியப்பட்டு.

[தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்பன கலிப்பாவின் உறுப்புகள். முன்னே தரப்படுவது தரவு. தாழ்ந்த ஓசை பெற்று வருவது தாழிசை. சுருங்கி முடிவது சுரிதகம்.]

க. கரையற்ற கடலைக் குடித்த அகத்தியர் உனது கரையைக் காண ஓர் ஆசிரியரைத் தேடினாரென்றால் சகரர் தோண்டிய அக் கடலை உனக்கு உவமானமாகச் சொல்வது புகழ் ஆகுமோ? ஆகாது என்பது கருத்து.

தொடுதல்—தோண்டுதல். சகரர் என்னும் சக்கரவர்த்தி பாதாளம் செல்லத் தோண்டிய பெரும்பள்ளமே கடலாயிற்றென்பது புராணகதை. அகத்தியர் சிவபிரானிடத்தும் முருகக் கடவுளிடத்தும் தமிழ் கற்றார் என்பது ஐதீகம்; அவலோகித முனிவர் பால் கற்றார் என்பர் ஜைனர். குடத்திலிருந்து தோன்றியதால் அகத்தியர் குடமுனி எனப் பெயர்பெற்றா ரென்பர்.

தமிழைக் கடல் என்பது பொருந்தாது; அது கடலினும் பெரிதாமென்பார் கடலினது சிறுமை காட்டத் 'தொடுகடல்' என்றும், குடத்துள் அடங்கியிருந்தவர் வயிற்றுள் அடங்கிய தென்பது படக் 'குடமுனி குடித்த கடல்' என்றும் கூறினார். குருநாடி கரைகண்டார் என்னுமல் 'கரைகாணக் குருநாடினார்' என்றதால் அகத்தியரும் தமிழ்க் கரை கண்டவர் ஆகார் என்பது தொனிப்பது காண்க.

உ. ஒரு பிழைக்காகச் சிவபெருமான் முன் ஒரு காலத்தில் பேச்சொழிந்து விழிப்பாராயினுர் என்ருல் உனது இலக்கணம் அறிதற்கரியது என்று சொல்லுவதும் ஆச்சரியமாமோ? ஆகாது என்பது கருத்து.

சிவபெருமான் பாடிய ஒருபாடலுக்கு நக்கீரர் என்னும் புலவர் குற்றங் கூற இறைவர் கோபித்துத் தம் நெற்றிக்கண்ணைத் திறந்து அவரை அடக்கத் தொடங்கினுர் என்பது புராணகதை. நெற்றிக்கண்ணைத் திறந்ததை, கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் விழித்ததாகப் பொருள்படும்படி அமைத்திருக்கும் திறத்தைக் கண்டு கொள்க. செந்தமிழ்ப் பரமாசிரியர் எனப்படும் அகத்தியர்க்கு ஆசிரியரான அரனுரே உனது இலக்கண அமைதியை அறியாமல் விழிப்பாரானுல் உன் இலக்கணம் மிகவும் அருமையானது என்பது ஆச்சரியமா என்ருர்.

ரூ. நான்கு வேதங்களையுடைய ஆரிய பாஷை தோன்றுவதற்கு முன் உலகமுழுவதும் உன்னுடையதாயிருந்த தென்ருல் பழைய பாஷையாகிய நீ (கடவுளைப் போல) ஆதியந்தம் இல்லாதாய் என்று சொல்வது ஆச்சரியமாகுமா? ஆகாது என்பது கருத்து.

சதுமறை ஆரியம் என்பதற்கு, 'சதுமறையும் அதையுடைய ஆரியமும்' என உம்மை விரித்தும் பொருள் கொள்ளலாம்.

'ஆரிய பாஷை பிரபலப்படு முன் தமிழ்போன்ற ஒரு மூல பாஷை ஐரோப்பாவிலும் ஆசியா கண்டத்திலும் பரவியிருந்த தென்பது, பல பாஷைகளையும் கற்றுணர்ந்த ஆங்கிலேய பண்டிதரின் துணிபு' என்பது ஆசிரியர் எழுதிய விளக்கக் குறிப்பு. பிற்காலத் தாராய்ச்சிகளும் இத் துணிபை வலியுறுத்துகின்றன.

நான்கு எனப் பொருள்படும் சதுர் என்னும் வடமொழி 'சதுமுகன்' என்பதிற்போல, சது என நின்றது.

வேதம் அனுதி என்றல் வழக்காதலால், அதனையுடைய ஆரிய பாஷையும் அனுதியாதல் சொல்லாமே அமையும். அவ்வாரிய பாஷைக்கும் முற்பட்டனை நீ என்ருல் உன்னை அனுதியென்றல் ஆச்சரியமா என்ருர். முதுமொழியாகிய நீ அனுதியெனப் படுவை என்றதால், முதுமொழி யென்றல் தமக்கு உடம்பாடாதலும் அனுதி யென்றல் வழக்காதலும் குறிப்பித்தார். ஆதியற்றது அனுதி; பாஷைகளெல்லாம் தோன்றி வளர்ந்தனவே யாதலால் எதுவும் ஆதியற்றதாகாது; ஆதியற்றதென்றல் உபசார வழக்கு; முதுமொழி யென்றலே பொருளுடையதாம் எனத் தம் துணிபு கூறினுர். 'சகமுழுதும் ஆதிகாலத்தில் உனதாக வாழ்ந்த நீ இப்பொழுது ஆதாரவற்ற 'அனுதி' என்று உரைக்கப்படும் நிலையில் நிற்கின்றனையே இஃதென்ன ஆச்சரியம்!' எனத் தமிழின் தற்கால நிலையை நினைந்து வருந்தும் தொனியும் உளதாதல் காண்க

௪. வைகையாற்றின் நீர்ப் பெருக்குக்கு எதிர்த்துச் செல்லும்படி விடப்பட்ட ஒரு சிறு ஏடானது, காலமாகிய வெள்ளம் உன்னை அகப்படுத்தாத காரணத்தைக் காட்டுவதோர் அடையாளமேயாம். வேகவதி—வைகைநதி. காத்தல்—ஒளித்தல்.

மதுரையில் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் விட்ட ஏடு நீரோட்டத்தை எதிர்த்துச் சென்றதென்பது புராணகதை. ஆற்று வெள்ளத்தில் மெய்ப்பொருளுடைய ஏடு அழியாமல் மூன்வந்தது காலநதியில் தமிழ் அழியாமல் முன்வந்ததற்கு அறிகுறிபோல்வதாயிற்று.

௫. சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபிரான் உனது (தமிழுக்குரிய) திருவாசகம் என்னும் நூலில் ஒருபிரதி எழுதி வைத்துக்கொண்டது கற்பாந்த காலத்தில் தமக்கு நேரும் தனிமைப் பொழுதைக் கழிக்க வன்றோ ? ஆம் என்பது கருத்து.

கடையூழி-ஊழிக்கடை. ஊழி-கற்பகாலம். உடையார்-அண்டபிண்ட சராசரங்களையெல்லாம் தமக்கு உடைமையாகக் கொண்ட தலைவர்.

சிவபெருமான் ஓர் அந்தணராகவந்து மாணிக்கவாசகர்பாடிய திருவாசகத்தை அவர்பால் கேட்டு எழுதிக்கொண்டனர் என்பது புராணகதை. அறிவாற் சிறந்த மேதையோர்க்குத் தனித்திருக்குங் காலையில் உற்றதுணையாவது உயர்ந்த நூல்களேயாதலின், சிவபெருமான் தமது தனிமை கழிக்கத் தெரிந்தெடுத்த நூல் திருவாசகமென்றார்.

௬. தகுந்த இடத்தில் விரிந்து விளங்குவதான சங்கத்தாரது சிறிய பலகையானது மிகுந்த அழகுசிறந்த உனது உண்மையான சரித்திரத்துக்கு ஓர் அறிகுறியாம்.

இலகுதல்-இலங்குதல் - விளங்குதல். வியஞ்சனம்-அறிகுறி.

சங்கப் பலகை தக்க புலவர்கள் வந்தால் ஒருமுழம் வளர்ந்து இடங்கொடுத்தது என்பர். தமிழ்மொழி தன்னைக் கற்பாருமு ஆதரிப்பாரும் உண்டானகாலத்தில் விரிந்து விளங்கியும் மற்றைக் காலத்துச் சுருங்கிக் குறைந்தும் வந்துள்ள சரித்திர உண்மையை நோக்கி அவ்வுண்மைக்குச் சங்கப்பலகையை உவமித்தார். இங்ஙனம் காலத்துக் கேற்றவாறு சுருங்கிக் குறைந்தும் விரிந்து விளங்கியும் வருவதன்றி அழிவதில்லை யென்பது தொனிக்கும்.

௭. வடமொழி தென்மொழி எனப்படும்(கலைமகளின்)கண்கள் இரண்டனுள் (வடமொழியே சிறந்ததென்று) அக்கிரமவாதஞ் செய்யத் தொடங்குவோரே கிழக்குமேற்கறியாதவர்கள்.

கண்ணிரண்டும் ஒன்றையே காணும் என்பதுபற்றி இரண்டுஞ் சமமெனக் கொள்வார் கொள்க. அவ்வாறன்றி வடமொழியே சிறந்ததென்று எவரேனும் குதர்க்கம் கூற வந்தால், யாம் அவை

மறுத்துத் தென்மொழியே சிறந்ததென்று நாட்டுவேம். எவ்வா றெனின், திசைகளிற் சிறந்த கிழக்கு நோக்கிக் கலைமகளிருந்தால் அவள் வலப்புறவிழி தென்திசையைச் சார்ந்திருக்கும். வலம் இடம் என்பவற்றுள் வலந்தானே சிறந்தது, ஆதலின் தென்மொ ழியே சிறந்ததாம். 'உத்தமமான கிழக்குத்திசையே முகமாகக் கலைமகளிருக்கில் அவள் வலப்புறவிழி தென்புறமாக இருக்கும் என்பதுபற்றி, வலவிழி தென்மொழியெனக் கற்பனையாகக் கூறப்பட்டது' என்பது நூலாசிரியர் குறிப்பு. இதனையே அடு த்த இரண்டு தாழிசைகளுக்கும் கொள்க. 'கிழக்குமேற்கறியாத வர்' என்பதனைத் 'தெற்கு வடக்கறியாதவர்' என்னும் வழக்கோடு ஒப்பிடுக. கிழக்கு மேற்கு என்பன கீழ் மேல் எனவும் பொருள் படுமாதலால் கீழ்மைமேன்மை அறியாதவர் என்னும் பொருளும் தொனிக்கும்.

அ. சிறப்புடைய கலைமகளுக்கு இரண்டு பாஷைகளும் இர ண்டு கண்களானால் (அவற்றுள் ஒன்றெனக்) கூறப்படும் வடமொ ழியை வலக்கண்ணாகக் கொள்வார்கள் கீழ்த்திசையின் பெருமை யறியாதவர்களே யாவர்.

வீறு-சிறப்பு.

'குணதிசை-கீழ்த்திசை. நன்மையானவழி என்பது தொனி' என்பது நூலாசிரியர் குறிப்பு. தொனிப்பொருட்கு தசை என் னும் வடமொழி திசை எனத் திரிந்ததாகக் கொள்க.

௯. கலைமகள் தனக்குரிய கிழக்குத் திசையை நோக்கி நிற் கையில் அவளதிரு கண்களில் வலக்கண் தென்மொழி யென்று அறியார்களோ அறிவுடையார்?

'பூர்வதிசை-கீழ்த்திசை. பழையநிலைமை என்பது தொனி' என்பது நூலாசிரியர் குறிப்பு.

மதியாரோ-பாராட்டாரோ எனினுமாம்; பாராட்டுவார் என் பது கருத்து.

௧௦. பத்துப்பாட்டு முதலிய சங்கத்தமிழ் நூல்களிலே கருத்தூன்றியவர்கள் எத்துணையும் பொருளிலக்கணத்துக்குப் பொருந்துவதல்லாத (வடமொழி) வருணனைகளைச் சிறப்பாகக் கொள்வார்களோ? கொள்ளார்கள் என்பது கருத்து.

பொருளிலக்கணம் தமிழ் மொழி ஒன்றில் மட்டுமே சிறந்து காணப்படுவதை இங்கே குறிப்பித்தார். பத்துப்பாட்டு முதலிய சங்க இலக்கியங்களில் இயற்கை வருணனை நிறைந்திருப்பதையும், வடமொழி இலக்கியங்களில் பெரும்பாலும் உயர்வு நவிற்சியே மிகுந்திருப்பதையும் சுட்டிக் கூறியதுமாகும்.

௧௧. திருவள்ளுவ நாயனார் செய்த திருக்குறளை (ஐயம் திரு புகளாகிய) குற்றமில்லாதபடி நன்றாக அறிந்தவர்கள் மனுதரும

சாஸ்திரம் முதலிய, ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு நீதியாக உள்ள, நூல்களை(ச் சிறப்பாக) எண்ணுவார்களோ? எண்ணார்கள் என்பது கருத்து.

மறு—குற்றம். உள்ளுதல்—எண்ணுதல்.

திருக்குறள் எல்லாச் சாதிக்கும் பொதுவாக ஒழுக்கம் கூறுவதும் மனுஸ்மிருதி முதலியவை ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு வகையாக ஒழுக்கம் கூறுவதும் கண்டறிக.

கஉ. மனத்தை உருக்கி அறியாமையைப் போக்கும் திருவாசகத்தில் ஈடுபட்டவர்கள், கனம் என்றும் சடை என்றும் (பலவாறு வடமொழி வேதத்தை) உருவிட்டுக் கண்மூடி ஆரவாரிப்பார்களோ? ஆரவாரியார் என்பது கருத்து.

மலம்—அறியாமை காரணமாக உள்ள ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்கள். மாண்டோர்—மாட்சிமைப் பட்டவர்கள் என்றாயினும் மீளாமல் ஆழ்ந்தவரென்றாயினும் கொள்க. முன்னதற்குப் பகுதி மாண், பின்னதற்குப் பகுதி மாள்.

சங்கிதை, பதம், கிரமம், ஜடை, கநம், வருணக்கிரமம் முதலியன வேதலக்ஷணங்கள்; அவற்றுள் ஜடை கநம் என்பன வேதத்தை மொழிமாற்றி உருவிட்டுக் கூறும் வகைகள். இவையெல்லாம் வேதத்தின் மூலபாடம் ஒருசிறிதும் எக்காலத்தும் பிறழாதிருத்தலை நோக்கி ஏற்பட்டனவே யன்றிப் பொருட்பயன் கருதி அமைந்தனவல்ல. 'கனஞ்சடை— வேதத்தை உருவிடும் விகற்பங்கள்' என்பது நூலாசிரியர் குறிப்பு.

கண்மூடிக் கதறுதல் என்பது உருவேற்றும் ஊக்கத்தில் கண்ணை மூடிக்கொள்ளுதலையும் வேத கோஷஞ் செய்தலையும் குறிக்கும். பொருள் உணர்ச்சி யின்றிக் குருட்டுத்தனமாய்க் கூச்சலிடுதல் என்ற அர்த்தமும் தொனிக்கும்.

என ஆங்கு-என்று இவ்வாறாக.

நிற்புகழ்ந்து—உன்னைப் புகழ்ந்து; பழம் பணி—பழைய ஆபரணம் (இங்கே பழைய இலக்கிய இலக்கணங்கள்); புதுப்பணி—புது ஆபரணம்—(இங்கே புதுவகை நூல்கள்); குயிற்றி—செய்து; கடையேன்—(காலத்தாற்) பிற்பட்டவன், தாழ்வுடையவன் என இருபொருள்படும்; கொடு மலையாளம்—கொடுந்தமிழ் நாட்டிற் சேர்ந்த மலையாளம்; ஆசிரியர் மலையாள நாட்டுள்ள திருவநந்தபுரத்தில் வசித்தமையால் இவ்வாறுகூறினர்; என்நாடும் செந்தமிழ்க்குரிய தன்றெனச் சாதுரியமாக அவையடக்கம் கூறியதுமாம். மேய—உண்டான; மீக்கொள—மிகுதியாக; இழைத்த—செய்த; வெள்ளியது—வெள்ளியாலாகியது,பொருட்செறிவற்று வெள்ளையானது என இருபொருள்படும்; ஒள்ளிய-பிரகாசமுடைய; கொள்மதி-கொள்; மதி-முன்னிலையசை: மதிகொள் என மொழிமாற்றி

மதியில் எற்றுக்கொள் என உரைப்பினும் ஆம். குறி—பிரதானம்; குறித்து- மனம் பற்றி.

И И இக் கலிப்பா, தமிழ்த் தெய்வவணக்கமாக நான்முகத்தே ஆசிரியராற் கூறப்பட்டது.

## 2. நளவெண்பா.

**பக்கம்—102.**

செ—1. காமர் கயல்—அழகிய கயல் மீன்கள்; காவி முகை—நீலோற்பல அரும்புகள்; நெகிழ—மலர; செந்தேன் தளை அவிழ—நல்ல தேனோடுகூடிய கட்டுத் தளர; நாட்டம்—கண்; தகைமைத்து—தன்மையை உடையது.

செ—2. நால் குணம்—(நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும்) நான்கு குணங்கள்; நால் படை—(தேர், யானை, குதிரை, காலாள் என்னும்) நான்கு படைகள்; ஐ புலன்—(சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும்) ஐந்து புலன்கள்; அமைச்சு—மந்திரி; ஆர்க்கும்—சப்திக்கும்; அணி—அழகிய; வதனம் மதி குடை—முகமாகிய சந்திரவட்டக் குடை.

செ—3. கொல் - இங்கே வினைப்பொருளைக் குறிக்கும். இயம்பும்—சொல்லும்; கொல்யானை—(பகைவர்களைக்) கொல்லும் (ஆற்றலையுடைய) யானை.

செ—4. தண் அளியான்—குளிர்ச்சியான கிருபையுடையவன்; வாங்கும்—இழுக்கும்; தடம்—விசாலமான; மேல் நிலம்—மேல் உலகம் (தெய்வலோகம்); நால் நிலம்—(குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும்) நான்கு (பகுப்புகளுடைய) பூமி.

**பக்கம்—103.**

செ—5. கிடந்த—தங்கிய; மறம்—வீரம்; செம்கண்மால்—செவ்விய கண்களையுடைய விஷ்ணுமூர்த்தி; அம்கண்மா ஞாலத்து—அழகிய இடம் அகன்ற பூமியிடத்து; அவற்கு—அவனுக்கு.

செ—6. விண் அரசர்—தேவலோகத்து அரசர்; வெள்கி—வெட்கமுற்று; கண் அகல்—இடம் அகன்ற; வல் மாலை—வலிய மயக்கம் (பொறாமை); சூட—பொருந்த; வயம்—வலிமை; பொன்மாலை—பொன்னலாகிய (மண) மாலை; பொன்—இலக்குமி (போன்ற தமயந்தி).

செ—7. கவறு—சூது; போதில்-(தாமரை)மலரில்; வைகும்-தங்கும்.

செ—8. வேர்கல்லும்—வேரோடு பேர்க்கும்; மறம்—கோபம்.

**பக்கம்—104.**

செ—9. வண்மை திரு--ஈகையாகிய செல்வத்தை; மருவும்-சினேகிக்கும்; பொருவரோ—ஆடுவரோ (பொருதல்--யுத்தஞ் செய்

தல். சூதாட்டமும் அப்படிப்பட்டதாதலால் 'சூது பொருவரோ' எனப்பட்டது); தக்கோர்-யோக்கியர்;புரிந்து—விரும்பி.

செ—10. வரால்—ஒருவகை மீன்; மேதி—எருமை; கனன்று—கோபித்து.

செ—12. வேலை—சமுத்திரம்; நெறி பிறழ்ந்தால்—(சத்தியமான) மார்க்கத்தினின்று தவறினால்; நடு—நடுவு நிலைமை (நியாயம்); சீலம்—நல்லொழுக்கம்.

செ—13. வடி ஏறு கூர் இலை வேல்—வடித்ததும், இடிபோன்றதும், கூர்மையானதும், இலைபோன்றதுமான வேல்.

பக்கம்—105.

செ—14. மன்றல் இளம் கோதை-கலியாணம் (செய்துகொண்ட) இளம் பெண், (தமயந்தி); இருத்துமோமா—இருப்போமா.

செ—15. தூய—பரிசுத்த (மான); புலர்ந்து—வாடி.

செ—16. ஏதம்—துன்பம்; தாமம் புனைவாளை—(தனக்கு) மாலை சூட்டியவளை.

செ—17. கோ காதலனை—மேன்மையான கணவனை; நோக்கால்-கண்ணால்;மழைபொழியா-(கண்ணீர்)மழையைப்பொழிந்து.

செ—18. இன் அடிசில்—இனிய சோறு; புக்கு அளையும்-புகுந்து துழாவும்.

செ—19. குறுகுதலை கிண்கிணி—சிறு தலைகளுடைய சதங்கை; கோமக்கள்—சிறந்த குமாரர்கள்.

பக்கம்—106.

செ—20. சினம் கதிர்—உக்கிரமும் பிரகாசமுமுள்ள; மாற்றம்—சொல்.

செ—21. எழில்—அழகிய; கோல—அழகுள்ள; காதலர்—அன்புடையவர்( இங்கே குழந்தைகளைக் குறிக்கும்;)ஏதிலர்-அந்நியர்.

செ—22. பயந்தாள்—பெற்றவள்; இந்து—சந்திரன்.

செ—23. மறையோன்—பிராமணன்; கோமைந்தன்—ராஜகுமாரன்; இளையகோதை—இளையபெண் (ராஜ குமாரி).

### 3. இராமாயணக் கருப்பொருள்.

பக்கம்—107.

செ—1. மாநதி—பெரிய ஆறு; புனல்—நீர்; திண்கொடி—உறுதியான கொடி; இறைவன்—அரசன்; தேடு வண் புகழ்—தேடிக்கொண்ட தர்மகுணமும் கீர்த்தியுமுடைய.

செ—2. சொற்ற—சொன்ன; பிறங்கு—விளங்குகின்ற; எற்று—(பகைவர்களை) எதிர்க்கின்ற; இளையவன்—இங்கே சத்ருக்நனைக் குறிக்கும்.

செ—3. மன்னி-(உள்ளம்) நிலைபெற்று; முள் எயிறு—முள்ளைப் போன்ற பற்களையும்; ஆய் இதழ்-குற்றமற்ற இதழ்களையும் (உடைய); மூவரையும்—(ஊர்மிளை, மாண்டவி, சுதகீர்த்தி என்னும்) மூவரையும்; வெள் இலை வேலவர்—வெற்றிலை போன்ற) வேலைத் தாங்கியவர்கள் (இலக்ஷ்மணர், பரதர், சத்ருக்நர்.)

செ—4. நெறி—வழி; எறி—(பகைவர்களை) வெட்டுகின்ற; சுடர் ஆர் மழு வேந்தன்—பிரகாசம் பொருந்திய மழுவாயுதத்தை யுடைய தலைவன் (பரசுராமன்); குறியவன் ஆகியவன்—குட்டையனாக (வாமனாவதார) வடிவெடுத்தவன் (விஷ்ணு—இராமன்).

செ—5. கன்னல் மொழி குயில்—கரும்பின் (சுவையைப்போன்ற இனிய) சொல்லையும் குயிலின் (குரலைப்போல் இனிய குரலை யும் உடைய).

செ—6. இடுகழல்—(வீரகண்டை) தரித்த பாதங்களையுடைய; நெடில்படு—விசாலமான; சீரை-மரவுரி; 'மீபுகுது' என்பதில் மீ இசைநிறைக்க வந்தது. 'நீ புகுது' என்பதும் பாடம்.

செ—7. அலக்கண்—துன்பம்; நலக்கு உறு (நலம்+கு+உறு)-(பாவத்தைப் போக்குவதாகிய) நன்மைக்குப் பொருந்திய; ['நலக்குரு' என்று பாடங்கொண்டு (நலம்+குரு) நன்மையும் தலைமையுமுடைய என்று பொருள் கொள்வதுமுண்டு]; நறும் கரை-(புஷ்ப) வாசனை (வீசும்) கரை; மேயான்-சேர்ந்தான்.

பக்கம்—108.

செ—8. அத்தன்-தந்தை; வித்தகம்-ஞானம்; உய்த்தல்-அனுப்பல்.

செ—9. ஏதம் இன்றி-வருத்தம் இல்லாமல்; பாதுகம்-பாதரட்சை.

செ—10. அண்டர்கோன்-தேவர் தலைவன் (இராமன்); ஒண்தொடி இளையோய்—பிரகாசிக்கும் வளையலை அணிந்தோய் (சீதா!) இளையவனே (இலட்சுமணா!).

செ—12. மந்தரம் என திகழ்—மந்தரமலை என்று சொல்லும் படி விளங்கிய; களேபரம்—உடல்; இந்திரன் மகன்—வாலி; அம்—அழகிய

பக்கம்—109.

செ—13. இலங்கைமாதேவி—இலங்கணி என்பவள்; அரக்கர்—ராக்ஷதர்; தெரிவை—பெண் (இங்கே சீதை); அரிமலர்—வண்டுகள் (மொய்க்கும்) மலர்களை (யுடைய); ஆழி—மோதிரம்.

செ—14. மானவன்-பெருமையுடையவன் (இங்கே இராமன்); மதுர மாமணி-(கண்ணுக்கு) இனிமை (தருகின்ற) சிறந்த (சூடா)

மணி; ஏகல் தீது எனு—போதல் நல்லதன்று என்று; மாருதி-அனுமான்; பொழில்—சோலை; வாட்டினன்—அழித்தான்.

செ—15. மேகநாதன்—இந்திரஜித்து; ஞானநாதன்—அனுமான்; ஓகை—உவகை—சந்தோஷத்துக் குரிய; உருத்து எழா—கோபித்து எழுந்து; அங்கி—நெருப்பு; எரித்திர்-எரியுங்கள்.

செ—16. மன்றல் ஓதி—(இயற்கை) மணம் (வீசும்) கூந்தலையுடையவள்—(சீதை); நல்கி—கொடுத்து; என்றின் மைந்த-சூரிய புத்திரனே; பதாதி—காலாட்சேனே; திரைப்புறத்து-அலைகள் (வீசும் கரை) யோரத்தில்.

செ—17. அடுவன்—கொல்லுவேன்; துணை—மந்திரிகள்.

பக்கம்—110.

செ—18. அடர்த்தான்—எதிர்த்தான்; பொர—யுத்தம் செய்ய.

செ—19. கேடிலன்—அழிவில்லாதவன் (இராமன்); விளைத்தது-விளையச் செய்தற்குக் (காரணமான); விரிஞ்சன் மாப்படை-பிரமாஸ்திரம் (விரிஞ்சன்—பிரமன்); உளை—வருந்து.

செ—20 வரதன்—வரங்களைத் தருபவன்; வரன்முறை—(நடந்த) வரலாறு (யாவும் அறிவிக்குமாறு); அரிமலர் குழலினள்-வண்டுகள் (மொய்க்கும்) மலர் (அணிந்த) கூந்தலையுடையவள்—சீதை.

## 4. பாரதம்.

பக்கம்—111.

செ—1. மலை—(பொதிய) மலை; தென்னன்—பாண்டியன்; ஏன மருப்பு—பன்றிக்கொம்பு; பாவை-பெண் (இங்கே பூமியைக் குறிக்கும்).

செ—2. அரவுயர்த்தோன்—பாம்பு(க்கொடியை) உயர்த்தியவன்-துரியோதனன்.

செ—3. குரவர்-பெரியோர்; கிளைஞர்—பந்துக்கள்; துணைவர்—சகோதரர்; அரவம் நெடும் கடல் ஆடை அவனி—ஆரவாரமுடைய பெரிய கடலை ஆடை (யாகவுடைய) பூமி; கரவு உறையும்—வஞ்சனை உள்ள; முனி—இங்கே சஞ்சயமுனிவரைக் குறிக்கும்; பலம், மூலம், சாகம் நுகர்ந்து—பழம், கிழங்கு, இலை (இவைகளை) உண்டு.

பக்கம்—112.

செ—4. கோதிலான்—குற்றமில்லாதவன் (இங்கே இது தருமனைக் குறிக்கும்); மோது அமருக்கு இளைத்து-தாக்கிச் (செய்யும்) போருக்குப் பின்வாங்கி; மொய்த்த—அடர்ந்த; முடுகி-விரைந்து; வஞ்சினம்—சபதம்; நிகழ்த்தலுற்றான்—சொல்லலானான்.

செ—5. மூர்ந்து ஊர் வெம் பணி கொடியோன்-விரைந்து ஊர்ந்து (செல்லும்) கொடிய பாம்புக்கொடியை யுடையவன்; மூது (முதுமை) ஊர்—பழைய ஊர்; முன்றில்-வீடுகளின் முன் பக்கம்; நந்து ஊரும் புனல்-சங்குகள் தவழும் நீர் (வளப்ப முடைய); திறம்-பாகம்; நல்காஞகில்—கொடுக்காவிட்டால்; அடுபோர்—கொல்லுதற்(குரிய) யுத்தம்; சிந்தூரம்—சிந்தூரம் என்னும்ஒருவகைச் செம்பொடியாலாகிய; திலகம் நுதல்—திலகத்தை யணிந்த நெற்றியையுடைய; சிந்துரத்தின்(குவலயாபீடம் என்னும்) யானையினது; மருப்பு ஒசித்த—கொம்பை ஒடித்த; செம் கண் மால்—சிவந்த கண்களையுடைய திருமால்.

செ—6. விரிகுழல் பைந்தொடி-விரிக்கப்பட்ட கூந்தலையும் பசிய வளையல்களையும் (உடைய திரௌபதி); அவையின்—வேந்தர் சபையில்; வெகுளேல்—கோபியாதே; இளையாநின்ருய்-பின் வாங்குகின்ருய்; முரசு உயர்த்தோய்-முரசக்கொடியை உயர்த்தியவனே (இங்கே தருமனைக் குறிக்கும்).

செ—7. கண் இலா—கண்ணில்லாத (தாட்சண்ய மில்லாத என்ற பொருளும் தொனிக்கும்); அருளிலி—இரக்கமில்லாதவன் (இங்கே திருதராஷ்டிரனைக் குறிக்கும்); மேல்நாள்-முன்னுள்; வானவர்கோன்—இந்திரன்; வழங்குவேன்—கொடுப்பேன்.

பக்கம்—113.

செ—8. மறம் தண்டு-கொடுமையான கதாயுதம்; மகவான் மைந்தன்—இந்திர குமாரன்—அருச்சுனன்; சிலை-வில்; இருவர்-இங்கே நகுலனையும் சகாதேவனையும் குறிக்கும்; நேரார்-பகைவர்; குறிக்கின்ருய்—கருதுகின்ருய்.

செ—9. மை காலம் முகில் ஊர்தி—கரிய (கார்) காலத்து (மழை பொழிகிற) மேகத்தை வாகனமாக உடைய; முகுந்தன்-கிருஷ்ணன்; முதல்வன்—தமையன்; மன் ஓ அசைகள்; அமையாமல்—போதாமல்; பகைமுடித்து—பகைதீர்த்து.

செ—10. தீண்டாத (அந்நிய புருஷரால்) தீண்டத்தகாத; அரற்றுதல்—புலம்புதல்; மாசு-குற்றம்; மேம்படு—மேன்மையுடைய.

செ—11. கான் நெறி—காட்டு வழி; கரந்து உறைந்து—மறைவாக வசித்து; கடவநாள்—(கழிக்க) வேண்டிய நாட்களை; ஊனம்—குறைவு.

பக்கம்—114.

செ—12. இகல்—திறல்—வலிமையுடைய.

செ—13. செறிந்த—நெருங்கிய; முதல்வன்—மூத்தவன்; வழங்கு

தல்—கொடுத்தல்; கொந்து உற்ற—(பூங்) கொத்துகள் பொருந்திய. ('கொந்து' மெலித்தல் விகாரம்).

செ—14. முருகு அவிழ்க்கும்—வாசனையைப் பரப்புகின்ற; அலகை—பேய்மகள்; சகடம்—வண்டி (இங்கே வண்டிமீது ஆவேசித்திருந்த சகடாசுரன்); பொதுவர்—இடையர்.

செ—15. இகலோர்—வலிமையுடையர் (ஆன மற்ற நான்கு சகோதரர்களும்); விரகு-தந்திரம்; பை வண்ணமணி கூடம்-பச்சை நிறமுள்ள (மரகத) மணிகளால் அமைக்கப்பட்ட மண்டபம்; பயிலாவண்ணம்—நடக்காதபடியும்; உய்வண்ணம் — (எல்லோரும்) பிழைக்கும்படியும்; உரம்—வலிமை.

பக்கம்—115.

செ—16. நீறு ஆக்கி—அழியச்செய்து; புரிந்தாய்—விரும்பினாய்; போர் ஏறு—யுத்தத்தில் ஆண்சிங்கம் (போன்றவன்).

செ—17. இகல் பார்த்தன்—பகைமையுடைய அருச்சுனன்; அணங்கு—தெய்வப்பெண் (போன்ற திரௌபதி); களைந்து—நீக்கி தளை—விலங்கு.

செ—18. தளைந்திடுவன்—கட்டுவேன்.

செ—19. தூயவன்—பரிசுத்தன் (இங்கே சகாதேவன்); தாய—தாவிய—அளந்த.

செ—20. பிணித்தமை-கட்டியது; வன்-கொடிய.

செ—21. இறைஞ்சி-வணங்கி; ஒன்றும்-பொருந்திய; கதிர் முடியாற்கு-பிரகாசமுடைய கிரீடத்தையுடைய(சகாதேவ)னுக்கு ஓம்-அப்படியே, (சம்மதம் உணர்த்தும் சொல் ).

செ—22. சற்றை—தொகுதியாய் அடர்ந்த; கொற்றம்தனி திகிரி வலிமையுடைய ஒப்பற்ற (சக்கரம்); அற்றைக்கும்-அன்றைக்கும் (வலித்தல் விகாரம்).

பக்கம்—116.

செ—23. மன்றில்—சபையில்; வல்வினையேன்—கொடிய விதியுடைய நான்.

செ—24 கருதலர்—பகைவர்.

செ—25. தொல் ஆண்மை-பழமையான (=இயற்கையான)பராக்கிரமமுடைய; எண் அரிய—கணக்கற்ற; புல்லார்—பகைவ

செ—26. துன்று—மிகுந்த; கன்று சினம்—மிகுந்த கோபம்; மந்தணம்—ஆலோசனை செய்யுமிடம்.

## 5. தூசேலோ பாக்கியானம்.

செ—1. அழுக்கறுத்தல் இலாமை-பொறாமை இல்லாதிருத்த விடற்கு அரும்—விடுவதற்கு அருமையான (விடக்கூடாத ஒருங்கு உற—ஒன்றாய்ப் பொருந்த; வெகுளி—கோபம்; மய

செ—9. ஆர்கலி-கடல் (சூழ்ந்த), பேறு - செல்வம்; தகு-தக்க; வாய்ப்புடை-தகுதியுடைய; வாயா - தகுதியல்லாத; இயைவது-(சக்திக்குக்) கூடியதை; கரத்தல் - மறைத்தல்; உரையிலன்-பேசச் சக்தியற்றவன்; நசை-ஆசை; நல்குரவு-தரித்திரம்; இசை-புகழ்; எச்சம்-சந்ததி; இரத்தல்-பிச்சை ஏற்றல்; ஊங்கு-அதிக; இளிவரவு - இழிவு; எய்தும்-அடையும். (பேற்றில்,அறுதலில்முதலிய பதங்களில் உள்ள இல்உறழ்வுப் பொருளில் வந்தது).

செ—10. மறையில்-அந்தரங்கங்களில்; செவியிலன் - செவியில்லாதவன் (போல மனம் செலுத்தாதவன்); மூங்கை—ஊமை (போல் பேசாதிருப்பவன்); இறையில்-தலைமையில்.

பக்கம்—124.

செ—11. செவ்வேள்—முருகக்கடவுள்; எள்ளி—பரிகசித்து (இகழ்ந்து); துவ்வாத—அனுபவமில்லாத; வெம் சூரன்—கொடிய சூர(பத்ம)ன். (இப்பாட்டின் கடை யிரண்டடி குறள்).

செ—12. புறவு-புறா; வான்துலை-பெரிய தராசு; சிவி-சிபிச்சக்கரவர்த்தி; எஞ்சாமல்-குறையாமல்; மன்உயிர் ஓம்பி-(உலகத்தில்) நிலைபெற்ற உயிர்களைக் காப்பாற்றி; வினை-செய்கை. (இப்பாட்டின் கடை இரண்டடி குறள்).

செ—13. அரி—கிருஷ்ணமூர்த்தி; சீர்மை—முறைமை.

செ—14. காய்தல்—வெறுத்தல்; ஆய்தல்—ஆராய்தல்; கண்ணதே—இடத்தில்தான்; உற்ற—பொருந்திய.

செ—15. இன்னவகை—இப்படியாக; கைதவம்—பொய்.

## 7. கபிலர் அகவல்.

பக்கம்—125.

வரி—2. நாகடிப்பாக—நாக்கே அடிக்குங்கோலாக. (கடிப்பு=பறையறையும் கோல்) 3. சாற்ற—சொல்ல; கேண்மின்—கேளுங்கள். 11. பெருக்கு ஆறு—வெள்ளங்கொண்ட ஆறு. 17. இன்னே—இப்பொழுதே. 21. கூற்றுவன்—யமன். 23. போற்றவும்-வணங்கினாலும்; பொருளொடு-பொருளுடன். 24. தமர்-தம்மவர் (பந்துக்கள்). 25. நல்குரவு—தரித்திரம். 27. தறுகணாளன்—கொடியன். 28. கொடு—கொண்டு. 35. ஆர்த்து-கட்டி. 36. கொளுவி—தொடுத்துக்கட்டி. 37. ஈமம்—சுடுகாடு. 39. புந்தி நைந்து—புத்தி கெட்டு. 40. சலம்—பொய், சதுர்—சாமர்த்தியம். 41. வரைந்து—அளவு குறித்துக்கொண்டு. 54. தவிர்ந்து-நீங்கி. 58. சீலம்-ஒழுக்கம்.

## 8. புலவர் வறுமை.

பக்கம் — 126.

செ—1. பதுமத்தான் — பிரமன்.

செ—4. இரு பாதி — இரண்டு பாதி—இரு உபாதி, எனப் பிரித்து 'இரண்டு வியாதி' என்றும் பொருள் கொள்வதுண்டு; புராரி—சிவன்; இரு நதி—பெரிய ஆறு (கங்கை); பிலம் — புற்று.

செ—5. பழம்படு-பழந்தரும்; பிளந்தன்ன — பிளந்தது போன்ற; வாவி — குளம்; கனைகுரல் — அரவம் செய்யும் குரலையுடைய; பாடு—வேலை; மாறன் வழுதி — மாறனாகிய பாண்டியன்; கூடல் — மதுரை; வாடையில் — வாடைக்காற்றால்; தழீஇ— தழுவி; பேழை — பெட்டி; உயிர்க்கும் — மூச்செறியும்.

## 9. இந்திய மாதா.

பக்கம் — 127.

வரி — 1. இமயச்சிலை — இமயமலை. 4. புனித — பரிசுத்தமான. 7. கானல் — காடு. 15. நாடு — விரும்புகின்ற. 16. ஆர் அணங்கு — அழகிய தெய்வப்பெண். 48. நித்திலம் — முத்து; கொழிக்கும் — (கரையில்) ஒதுக்கும். 20. இகபரம் — இம்மை மறுமை. 22. காமுறு — விரும்பத்தக்க; காவலர் — அரசர். 33. அங்கனை மணிகள்—ஸ்திரீ ரத்தினங்கள்; அருள்-இரக்கம். 37. இகல் சிந்தி — வலிகுறைந்து. 32. இதம் உறு — நன்மை பொருந்திய. 53. அணி ஆர் — அலங்காரம் பொருந்திய.

## 10. அருஞ் செய்யுள் திரட்டு.

பக்கம் — 130.

செ — 2. காண்டலும் — பார்த்த உடனே; முருக்கி — கெடுத்து.

செ—3. இறைவர் ஞானம் — கடவுளைப்பற்றிய அறிவு; ஏதம்— துன்பம்; பொறை — பொறுமை; மறவர் — பாவியர்; வல் வினை — கொடிய கன்மம்; அரோ — அசை.

செ — 4. வையம் — பூமி; துரகம் — குதிரை; மதகரி — மதமுடைய யானை; மா மகுடம் — பெருமையுடைய கிரீடம்; சிவிகை-பல்லக்கு; பெய்யும் — (மழைபோல் தொடர்ந்து) பொழியும்; கனகம் — பொன்; ஆரம் — மாலை; ஐயன் — கடவுள் (சிவன்).

செ — 5. கத்தனார் — கர்த்தனார் — கடவுள்; வெற்பு — மலை; கவின் ஆர் — அழகு பொருந்திய; அத்த—ஐயனே; துணை அமை — (உயிர்த்) துணையாக (சானகிக்குப்) பொருந்திய; ஆழி-மோதிரம்; கவிக்குலம் — குரங்குக் கூட்டம்.

பக்கம் — 131.

செ — 6. தேருது — யோசியாது; பெரும்கிழம் — பெரிய கிழத்தன்மை; ஏருத பலம் — ஏறிப் பறியாத பழம்; பலமும்-பயனும்; இலேமேய்ந்தும் — கீரைகளேயே தின்றும்; பேறு இலேயே — பெற்றது (ஒன்றும்) இல்லேயே; நுகர்ந்தீர் -- புசித்தீர்.
செ — 7. காசு அற்ற — குற்றம் தீர்ந்த; சான்ற — நிறைந்த; இழுக்கு — குற்றம்; காட்சியார் — (ஞானப்) பார்வையுடையவர்; காழிமேய — சீர்காழியில் (மூர்த்தங்கொண்டு) பொருந்திய.
செ — 8. புரக்கும் — காப்பாற்றும்; வம்மின் — வாருங்கள்; நிரக்கும்-நிறையும்; குவை — குவியல்.
செ — 9. தெருள் — அறியத்தக்க; மருள் — மயக்கம்; இரவி — சூரியன்.
செ — 10. ஏர் ஆர் — சிறப்புப் பொருந்திய ; பங்கயம் — தாமரை.

பக்கம் — 132.

செ — 11. ஓரார் - அறியார்; விழைவு — ஆசை.
செ—12. விண்மீன்—நட்சத்திரங்கள்; கண் நாடும்—கண் தேடும்.
செ—14. வெம்புலி—கொடியபுலி; மேவும்—பொருந்தும்; ஆட்டைவிட்டு வேங்கை அகலுமோ—ஆட்டைவிட்டுப் புலி நீங்குமோ 'நடராஜர் ஆடும்நடனத்தைவிட்டுப் புலிவடிவாயிருக்கும் வியாக்கிரபாதர் அகலுவரோ' என்பது சிலேடைப்பொருள்).
செ—15. மை பரவை—கரியகடல் ; ஆடு அரவு—ஆடுகின்ற பாம்பு; என்பு—எலும்பு; புன்கவி—அற்பக்கவி.

பக்கம்— 133.

செ—16. ஒல்லார்—பகைவர்; ஒறுத்துவரிந்து — தண்டித்துக்கட்டி; வெல்லாத களம்—(யுத்தத்தில்) ஜயிக்காத களம்—நெற்போர்க்களம்; போர் செயப்பட்டு—(நெற்) போர் இடப்பட்டு.
செ—17. சிக்கனவு—செட்டு; கோடிக்கு—கோடி(ப்பொன்னு)க்கு; கொள்ளுகினும்—வாங்க விரும்பினுலும்; பூணர்-கொள்ளார்.
செ—18. அஞ்சு—(வாயு, நீர், ஆகாயம், பூமி, நெருப்பு என்னும் பூதங்கள்) ஐந்து; அனுமான்-வாயுவின் புதல்வன்; அவன் தாண்டியது நீர் (அதாவது கடல்); சென்ற ஆறு(=வழி) ஆகாயம்; பூமி பெற்றபெண் சீதை; அயலார் ஊராகிய இலங்கை கையில் அனுமான் வைத்தது நெருப்பு.
செ—19. பணி—ஆபரணம; அரியாசனம்—சிங்காசனம.
செ—20. பொலிக—விளங்குக; தனிமுதல்—ஒப்பற்ற ஆதியான; நிகமம்—வேதம்; ஆ நிரை—பசுமந்தை; மகம்—யாகம்; முறை தவா—நீதி தவருத.
செ—21. களிசிறக்க—மகிழ்ச்சி பெருக; எழிலி—மேகம்; என்றும்—எப்பொழுதும்; விளே(க்)க—வளரக்கடவது.

செ—22. வேறற—வேற்றுமையின்றி.

பக்கம்—134.

செ—23. சொல் ஆரும்—(புகழ்ச்சி) வாசகம் (பெறத்தக்க சிறப்புப்) பொருந்திய; பொழில்—சோலை; புடை—பக்கம்; கடிந்து சாடும்—கோபித்து அடிக்கும்; காய்ந்தது—கோபித்தது. கல்லால் எறிந்தவர் சாக்கியநாயனூர்; வில்லால் எறிந்தவன் அருச்சுனன்; செருப்பால் எறிந்தவர் கண்ணப்பர்; பிரம்பால் எறிந்தவன் பாண்டியன்; மலரால் எறிந்தவன் மன்மதன்.

செ—24. அறிவுநூல்—ஞானசாஸ்திரங்கள்; ஆய்தல்—ஆராய்தல்; மெய் அறிவு—உண்மை ஞானம்.

செ—25. எண் இலா—அளவில்லாத; இலங்கிய—(அறிவு) விளங்கிய; திண்ணிதாம்—வல்லமையுடையதான; தீரம்நண்ணிய—திடநெஞ்சம் பொருந்திய, அல்லது (ஞானக்)கரைடைய அமைந்த; நயந்து—விரும்பி; கரத்தில் ஆமலகம்போல—கையில் நெல்லிக்கனிபோல.

செ—26. விண் விழுந்து வீழ்து—ஆகாயத்திலிருந்து விழுது இறங்கி; பொன்றின—அழிந்துபோன.

பக்கம்—135.

செ—28. அடிசில்—உணவு; படிசொல்—படிந்த சொல் (வணக்க வார்த்தை); என் தூங்கும்—என்ன (தூக்கம்) தூங்கும்.

செ—29. ஒருத்தர் வாய்—ஒருத்தரிடம்; மன்னு—சிறந்த; கேட்க—(பலர் தம்மை வந்து அரும்பொருள்) கேட்கும்படி.

செ—30. நடை நவில்-நடையிற் (சிறந்ததாய்க்) கூறப்படும்; களிறு—யானை; நேர்வன பிற—பொருந்திய மற்றவை; தெரிவுகொள்—சிறப்புடைய.

செ—31. நெய்யரி—பன்னுடை; அன்னர்—போன்றவர்.

செ—32. பரிமேதம்—அஸ்வமேதயாகம்; பணி—ஏவல்.

பக்கம்—136.

செ—33. கானல்—பாலைநிலம்; பேதை—பெண்; இயைந்தனள்—சம்மதித்தாள்; மான வேல்முட்டை—சிறந்த வேலாயுதத்தையுடையமுருகன்;மாறுய—விரோதமான;தெவ்வர்—பகைவர்; கானவேல் முள் தைக்கும் — காட்டு வேலமரத்து முள் (காலில்) குற்றும்.

செ—34. சொல் நாவில் வாழ்—(கவிக்கிசைந்த) சொற்கள் (எப்பொழுதும்) நாவிலேயே வாழப்பெற்ற, அல்லது (கவி) சொல்லத்தக்க நாவன்மையாலே (ஜீவியம் செய்து) வாழும்;

மன்னாத—நிலையற்ற; எனும்—என்று கூறும்; குருகூர்மன்—சடகோபர்.

செ—35. உரைசெழு—(நல்ல) சொல் பொருந்திய; வரைவற—நியதியில்லாமல்.

செ—36. அரமகளிர்-தேவஸ்திரீகள் அந்தகன்; யமன்; கால்-காற்று

பக்கம்—137.

செ—37. நிதி-செல்வம்;கதி-நற்கதி(மோட்சம்);கட்டுரை-சத்தியம்

செ—39. மருவுறு—பொருந்துகின்ற.

செ—40. தோளாத—தொளைக்கப்படாத; மறை—வேதம்; அடிமைக்கு—அடிமையாய் இருப்பதற்கு; அன்பு—கிருபை.

## 11. தோத்திரமாலை.

பக்கம்—138.

செ—1. குன்றுஉருவ-மலையைஊடுருவிச்செல்ல;மாறுபடு-பகைத்த

செ—2. பெருநெறி — பெருந்தன்மையான ஒழுக்கம்; தண்முகம்—குளிர்ந்த முகம்; தூய்ய—பரிசுத்த; உள் முக சைவ—(சைவ உள் முக) சைவத்தின் உண்மைச் சொரூபமான.

செ—3. கொடு வெம் கான்—கொடிய வெப்பமான காடு; கோள்பட்டு—கொள்ளப்பட்டு; அலைசெய்—வருத்துகின்ற;காமாதி-காமம் முதலிய (தீக்குணங்களாகிய); அலக்கண்—துன்பம்.

பக்கம்—139.

செ—4. பான்மைதரு—தகுதியுள்ள; நால்வாய்-தொங்குகிற வாய்; பரவி—போற்றி; அஞ்சலிசெய்கிற்பாம்-நமஸ்கரிப்போம்.

செ—5. நான் முகத்தவன்—பிரமா; முக்கண் பூரணன்—சிவன்; அளித்து—காப்பாற்றி; மாற்றி—அழித்து; ஆரணம்-வேதம்; தேறு—அறியாத; கழல் இணை—பாதங்கள் இரண்டையும்.

செ—6. வாகைவிரிந்து — வாகை (மரங்கள் இலைகள்) விரிந்து; வெண் நெற்று ஒலிப்ப—வெண்மைநிறமான நெற்றுக்கள் சப்திக்க; மயங்கு இருள்கூர்—(நண்எதையும் பார்க்க முடியாமல்) மயங்குதற்குக் காரணமான இருள் மிகுந்த; நடுநாள்—நடுச்சாமம்; ஆங்கு — அவ்விடத்தில்; கூகை—கோட்டான்; ஆண்டலை—(காட்டுக்) கோழி; கோடு அதன்மேல்—(மரக்) கொம்பின்மேல்; குதித்து ஓடி வீசி (ஓடி குதித்து வீசி)—(தாவி) ஓடிக் குதித்து (இறகுகளை) வீசி; ஈகைபடர் தொடர் கள்ளி நீழல்—இண்டங்கொடி படர்ந்த தொடர்ச்சியாய்(மண்டிவளர்ந்த) கள்ளிச் செடிகளின் நிழல் (நெருப்பொளியினால் தரையில் தோற்ற); ஈமம் இடு சுடு காட்டு அகத்தே—விறகுகளை இட்டுப்) பிணங்களைச்) சுடும் காட்டின் இடையே; ஆகம்—சரீரம்;அனல் ஆடும்—நெருப்பில்(தாண்டவம்)ஆடும்.

செ—7. தொல் கானம்—பழமையான காடு (நெடுநாளாய் மனித சஞ்சாரமற்ற காடு); அற்றவர்கட்கு—(உலகப்பற்று) இல்லாதவர்களுக்கு; அருமருந்து—அமிர்தம் (போன்றவன்); சிற்றவை—சிறியதாய்.

செ—8. குறி — பெயர்; ஆதி ஆக — மூலப்பொருளே என்று; திசைதனில் அணைந்தும்—(எதிர்த்) திசையில் வந்தும்; பணி திரள்—வணங்கும் கூட்டம்; கோது இலா—குற்றமில்லாத; ஒரு தொண்டும்—ஒரு நமஸ்காரமும்.

பக்கம்—140.

செ—9. பெருக்கு—வெள்ளம்; பேறு—செல்வம்; மறை சொல்—வேதத்தைச் சொல்கின்ற; பிறங்கு—விளங்குகின்ற; பெம்மான்—பெருமான்; குறமடந்தை-(வள்ளியான) குறப்பெண்; தருக்கே—மகிழ்ச்சி(க்குக் காரணமானவனே); மிடி—தரித்திரம்; தரு—(கற்ப) தரு; மன்பதை—உலகினர்; தஞ்சே—பற்றுக்கோடானவனே; பவப்பிணி—பிறவிநோய்; மருத்து—மருந்து; சமரபுரி—திருப்போரூர்; மறையின் சிரமெய்ப்பொருள்—வேதத்திற்குத் தலைமையான உண்மைப்பொருள்.

செ—10. திண்ணம்—நிச்சயம்; பாழ்போவது—சூன்யமாகப்போவது; பறி—வலை; தாழாது—தாமதியாது; கீழ்மேல் உற—கீழும்(மேலும் முறையே தேடி) அடைய; நின்றான்—(அடி முடி தோன்றாது) நின்றவன் (எழுந்தருளியிருக்கும் இடம்).

செ—11. பேதியா—விகாரப்படாத.

பக்கம்—141.

செ—12. புயல்வணன்—மேக நிறத்தன்—(விஷ்ணு).

செ—13. பந்தனை-கட்டு; அரும்ப-சிலிர்க்க; விதித்தன-அமைத்தவை.

செ—14. இம்மை—இப்பிறவி; பற்றுவான்—கதியாவான்; நம்பி—சிறந்த புருஷன்; தாள்பற்றி—காலைப்பிடித்து.

செ—15. நிட்களம்-உருவில்லாமை; நிர் ஆமயம்-நோயில்லாமை; துரியம்—சுத்தநிலை (சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்து நிலைகளுள் நான்காவது); தாரகம்—ஆதாரம்; சித்உரு—அறிவுருவம்.

பக்கம்—142.

செ—16. காட்டும்—இங்கே ‘பொருந்திய’ என்று பொருள்படும்.

செ—17. சங்கநிதி—சங்கு வடிவாயுள்ள ஒரு செல்வம் (இது கேட்டதெல்லாம் தரும் என்பது ஐதீகம்); பதுமநிதி—தாமரை வடிவமான ஒரு செல்வம் (இது பாற்கடலிற் பிறந்த பொருள்களுள் ஒன்றென்பர்); காந்தர்—காதலர் (அன்பர்); தொழுநோய்—குஷ்டநோய்; கரந்தார்—ஒளித்துவைத்தவர்.

செ—18. ஞாலம்—உலகம்; அரவின் அணையான் —பாம்பாகி (சேஷ) சயனமுடையவன்; கோல மா மணி ஆரம்—அ கிய பெரிய மணிமாலை; தாமம்—மாலை; முடிவு இல்லது ஓ எழில்—அளவு இல்லாததான ஒப்பற்ற அழகு; நிறைகொள டது என் நெஞ்சினை—என் நெஞ்சினை நிறைந்து கொள டது (அல்லது என் மனத்தின் உறுதிப்பாட்டைக் கவர்ந் கொண்டது)—என்னை மறந்தேன் அவன் வயமானேன் எ பது கருத்து.

செ—19. நிலந்தரம் செய்யும்—மறையச்செய்யும்; நீள் விசும்பு-நீண்ட (காலம் நிலைத்திருக்கும்) மேல் உலகம்; அருளும்-கொடுக்கும்; வலம்—பலம்; ஆயின—(மனத்துக்கு விருப்பம் ஆனவற்றை.

பக்கம்—143.

செ—20. பண்டும் இன்றும் மேலுமாய்—சென்ற காலமும், நிக கின்ற காலமும், வரும் காலமுமாகி; மண்டி—நெருங்கி தண் துழாய் அலங்கலாய்—குளிர்ந்த துளபமாலையுடையாய் புண்டரீக பாவை—தாமரையில் (வசிக்கும்) பெண்—இலக் மிதேவி; சேரும்—உறையும்.

செ—21. உற்றாய்—உறவானவனே;சூழாத-(உன்னைச்) சிந்தியாத

செ—22. நடுவு நின்றார்—பக்ஷபாதமின்றி நின்றவர்கள்.

செ—23. செறு—வருத்துகிற.

செ—24. நூக்க—தள்ள; தரங்கம்—சமுத்திரம்; சலம் இலா—வஞ்சம் இல்லாத; போலேன்—போல்பவனல்லேன்.

பக்கம்-144.

செ—25. ஆரா அமுதம்-பருகாத அமுதம்; சோராமல்-மறவாமல்.

செ—26. ஒன்றும்—பொருந்திய; யாப்பு—பாட்டு: ஒண் கலி—மிகுதியான வருத்தம்; பொன்றுவிக்கும்—அழிக்கும்.

பக்கம்—145.

செ—27. பணைத்த—கிளைத்த; கன்னல்—கரும்பு அல்லது சர்க்கரை; ஊன்—மாமிசம் (இங்கே உடலைக் குறிக்கும்),

செ—29. கங்குல்—இரவு; வான்பொறி—சிறந்த இந்திரியங்கள் (அவை—மெய், வாய், கண், செவி, மூக்கு என்பன).

செ—30. பழிதொழில்— (பெரியோரால்) பழிக்கப்படும் தொழில்; இழிகுலம்—இழிந்த (தாழ்ந்த) குலம்; அரவு அணையாய்—சர்ப்ப சயனத்தாய்; மிக்கோர்—மிகுந்தோர்; சதுர் மறை—நான்குவேதம்; வேள்வி—யாகம்; தக்கோர்—சிறந்தோர்; போதில் நான்முகன்—(தாமரை) மலரில் (உள்ள) பிரமதேவன்.

செ—31. இரும் தமிழ்-- (இலக்கிய இலக்கண அளவில்) விசால மான தமிழ்.
செ—32. திக்கு நிறை —(எட்டுத் திக்குகளிலும்) நிறைந்த; சவை-சபை; வில் இறுத்தான்—வில்லை முறித்தவன்; ஒக்கும்-பொருந்தும்; ஆல், அசை; உச்சி—சிரம்.
செ—33. தேசு—அழகு; திறல்—வலிமை; திரு—செல்வம்; மாசு இல்—குற்றம் இல்லாத; வலம்புரிந்த வான்சங்கம்—வலமாகச் (சுழித்தலைச்) செய்த சிறந்த சங்கு—வலம்புரிச் சங்கு.
செ—34. வான்—ஆகாயம்; மறி—(அலைகள்) மடங்கும்; மாருதம் காற்று; ஆன் ஆய்ச்சி—பசு (வளர்க்கும்) இடைச்சி—அசோதைப் பிராட்டியார்.

பக்கம்—146. செ—37. வளி—காற்று; கோன்—தலைவன்.
செ—38. புரந்தாய்-(ஆட்கொண்டு) காப்பாற்றினவளே; வழுதியர் கோன்—பாண்டியர் தலைவன்; முகில்—மேகம்; அகம் நெகு வார்—மனம் இளகுவார்; அணியாய்—சமீபமானவளே; அலர் மடவார்—மலரில் (வசிக்கும்) நங்கையர் (அவராவார் வெண்டாமரை மலரில் வீற்றிருக்கும் சரஸ்வதியும், செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்ஷ்மியும்); உரைப்ப அரும்—சொல்வதற்கு அருமையான; அழல் கரத்து மன் ஏர் உடலம் பகிர்ந்த—அனல் (ஏந்திய) கையையுடைய (சிவபெருமானாகிய தலைவனது அழகிய சரீரத்தில் (அரைப்பாகம்) பங்கிட்டு (உறையும்).

பக்கம்—147. செ—39. ஆறாத—கெடாத; அச்சுதன்—விஷ்ணு மூர்த்தி; ஆதரிக்க—விரும்ப ; மேல்நாள்—முற்காலத்தில் மேவுதற்கு—அடைதற்கு.
செ—40. அறக்கடல்—தர்மசாகரம்.

## 12. சதகச் செய்யுள் திரட்டு.

செ—1. புனித—பரிசுத்தனே; தேசிகர்—குரு; நினை தரு—நினை

பக்கம்—148. செ—2. பரிதானம்—லஞ்சம்; லிகித புத்தி—சாஸ்திர அறிவு; சபாசமதம்—சபையார் (க்குச்) சம்மதம்; இருதலையும்—இரண்டு பட்சமும்.
செ—3. பணி—ஆபரணம்; வண்ணம்—நிறம்.
செ—4. முனிதல்—கோபித்தல்; அலர்மேலுமங்கை — (தாமரை) மலரின்மேல் (வீற்றிருக்கும்) மங்கை (யாகிய இலக்ஷ்மி).
பக்கம்—149.
செ—5. கேணி—கிணறு.
செ—6. மெல் தவிர—உண்மை தவறும்படி.

## அநுபந்தம்—3

### வசன பாகத்தின்

# அரும்பத விளக்க அகராதி

அஞ்சலி-கும்பிடு.
அபிலாஷம்-விருப்பம்.
அவத்தினர்-வீணர்.
அவாய்நிலை - ஒன்று மற்றொன்றை வேண்டி நிற்றல்.
ஆகோஷம்-பேராரவாரம்.
ஆன்மவிசாரணை - ஆத்மாவைப் பற்றி ஆராய்தல் - ஞானசாஸ்திர ஆராய்ச்சி.
இதிகாசம்-பழங்கதை (இராமாயணமும் மகா பாரதமும்.)
உயிர்ப்பு-மூச்சு.
உல்லங்கனம்-அவமதிப்பு.
உற்பாதம் - கொடுமை, துன்னிமித்தம்.
ஏழைமை-அறிவின்மை.
ஒருதலையாக-உறுதியாக.
ஒறுத்து-நிர்ப்பந்தித்து.
கஞ்சுகம்-சட்டை.
கருணை விலாசம் - (கடவுளின்) அருட்சிறப்பு.
கர்ணகடோரம்-காதுக்குக் கொடுமையானது (கர்ணம்-காது, கடோரம்—கொடுமை.)
கவளி-கட்டு.
களர்நிலம்-உப்புப் பூமி.
கற்படை—கோட்டையிற் கள்ள வழி.
கற்பனை-சாதுரியம். [பெயர்.
காதி - விசுவாமித்திரர் தந்தை
கிருதார்த்தன் - பேறு பெற்றவன்-மகிழ்ச்சியடைந்தவன்.
குசாக்கரபுத்தி - அதிக கூர்மையான அறிவு.
கொத்துச் சரப்பணி - ஒருவகை ஆபரணம்.
கோசிகன் - கௌசிகன்-விசுவாமித்திரன்.
சந்நத்தன் - (போருக்கு) ஆயத்தமானவன்.
சற்சன நேயம்-நல்ல குணமுடையவர் நேசம்.
சுருங்கை-கோட்டையிற் கள்ள
சுவாதீனம்-சொந்தம். [வழி.
சூக்ஷ்மகிராகிகள்-நுண்ணிய அறிவோடு எதையும் மனத்தில் கிரகித்துக் கொள்ளக்கூடியவர்
ஸ்மிருதி-தர்மசாஸ்திரம். [கள்.
தற்போதம்-தன்னறிவு.
துணுக்குற்று-அச்சப்பட்டு.
துபாஷி-(துவிபாஷி) இரண்டு பாஷை யறிந்தவன்.
துய்த்தல்-அனுபவித்தல்.
தைத்தியர்-அசுரர்.
நகு-இகழ் (கின்ற).
நாராசம்-இருப்புச்சலாகை.
நிகண்டு-சொற்பொருள் விளக்கும் நூல்.
நிசாமுகம்-இரவின் ஆரம்பம்.
நிணம் - கொழுப்பு.
நிருதர்-இராக்ஷசர்.
நோன்பு-விரதம், தவம்.
பரத்துவ நிச்சயம்-கடவுள் இயல்பை நிச்சயித்தல்.